தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்

ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழ்
வாழ்க்கைவரலாற்றிலக்கியம்

ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்
நுட்பப்பயிலக வளாகம், தரமணி, சென்னை-600113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamiḻ vāḻkkaivaralāṟṟilakkiyam
Author	:	Dr. S. Sivakami Professor (Red.) International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	A114
Language	:	Tamil
Edition	:	Second; First 1985
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	x+376
No. of Copies	:	1000
Price	:	Rs.170/- [Rupees One hundred and seventy only]
Printed by	:	United Bind Graphics 43/95, Millers Road, Kilpauk Chennai - 600 010
Subject	:	Criticism on Tamil Biographies

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

தமிழ்ச் சமூகத்தில் வாழ்க்கை வரலாற்றியங்கள் தமிழாய்வு உலகு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கவனிப்பு குறைந்திருந்த நிலையில் டாக்டர் ச. சிவகாமி அவர்கள் எழுதியுள்ள **தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்** எனும் நூல் வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனையைத் தூண்டுகிறது. **Biography** என்னும் வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் இன்று பல நிலைகளில் விரிந்த ஒன்றாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். இந்நூல் வாழ்க்கை வரலாறு குறித்த விளக்கத்தை முதலில் முன் வைக்கிறது. தன் வரலாறு (Auto-biography) குறித்தும் பேசுகிறது. எப்படி வாழ்க்கை வரலாறு என்பது இலக்கியமாகிறது என்பதையும் விளக்குகிறது இந்நூல். உலக அரங்கில் வாழ்க்கை வரலாறு தோன்றிய குறிப்புகளையும் இந்நூல் ஆசிரியர் தொகுத்துக் காட்டுகிறார்.

இந்திய மொழிகளில் முகிழ்ந்த வாழ்க்கை வரலாறு இருபதாம் நூற்றாண்டில் தோன்றியது. பொதுவாக பெருந்தலைவர்கள், சமயத் தலைவர்கள், படைப்பாளிகள் பற்றிய வரலாறுகளே வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களாக உள்ளன. 1868இல் சோமசுந்தர அடியவரால் எழுதப்பட்ட 'அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு' எனும் நூலே வாழ்க்கை வரலாற்று நூல் வரிசையில் முதல்நூலாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். விரிந்த அளவிலான நிலையில் தமிழில் அன்று முதல் இன்று வரை வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கிய நூற்பட்டியலை ஆசிரியர் தந்திருப்பது ஆய்வாளர்களுக்கு மிகுந்த பயன் அளிக்கும் செயலாகும். பேரா. முனைவர் கே.ஏ. குணசேகரனின் 'வடு' எனும் தலித்திய தன் வரலாறு, அரவாணிகள், சின்ன அரையத்தி எனும் தமிழில் பெயர்க்கப்பட்ட மலையாளப் பழங்குடிகளின் வாழ்வியல். ஒடுக்கப் பட்ட மக்களின் தன் வரலாறுகள் இன்று பரவலாக எழுதப்பட்டுவரும் சூழலி ல் தமிழில் ஏற்கெனவே வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட்டு வந்த மரபு இருந்திருக்கிறது என்பதையும் இந்நூல் வழி புரிந்துகொள்ள முடிகிறது. இந்த வாழ்க்கை வரலாற்று நூல் எழுதுதல் தனித்த செயல்பாடாகக் கொண்டு வந்திருக்கும் இந்நூலாசிரியருக்கு எனது வாழ்த்துக்கள். இந்நூலை இந்நிறுவனம் மறுபதிப்பாக வெளியிடுவதில் மிகுந்த பெருமை கொள்கிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

நூன்முகம்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள் 236)

வெகு அழகாக, தெளிவாகத் தமிழரின் வாழ்க்கைக் கொள்கையை, எப்படி வாழவேண்டும் என்ற சிந்தனையை ஈரடிகளில் இயம்பிவிட்டார் வள்ளுவர். வாழ்க்கையானது எவ்வகையிலேனும் பிறருக்குப் பயனுடையதாக அமைதல் வேண்டும். அவ்வாறு அமையும் வாழ்வே புகழ்பெறுகிறது.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல் (குறள் 233)

ஆதலின் புகழுடை வாழ்வே வாழ்வாகக் கருதப்பட்டது - கருதப்படுகிறது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் தோன்றிய ஒல்காப் புகழ்த் தொல்காப்பியரின் தொல்காப்பியத்துள்ளேயே செம்மை சார்ந்த வாழ்க்கை விளக்கம் பெறக் காணலாம். உலகின் மிகப் பழமை வாய்ந்த இனங்களுள் தமிழினமும் ஒன்று. உலகில் தோன்றும் ஒவ்வொரு மானிடரும் நாம் பிறரால் புகழப்படுதலை, போற்றப்படுதலை விரும்புதல் இயல்பு. அப்புகழையும் போற்றலையும் பெறல் யாங்ஙனம் என்பதனை நம் தமிழ்ச் சான்றோர் தம் பாடல்களில் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளனர். அவற்றைத் தமிழர் தம் வாழ்வியற் கொள்கைகளாகக் கொள்ளலாம்.

காமம் சான்ற கடைக்கோள் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (பொருள். 192)

என்பர் தொல்காப்பியர். தலைவனும் தலைவியும் இணைந்த இல்வாழ்க்கை அறவாழ்க்கையாக அமைதலை வேண்டுவர் தமிழர் என்பதனை, இந்நூற்பா உணர்த்துகிறது. தன்னலம் எனும் குறுகிய மனப்பான்மையை ஒழித்துப் பிறர் நலம் என்னும் பொதுநலம் மனத்துள் ஊடுருவி நிலைத்து நிற்றலுக்கு இல்வாழ்க்கையும் அடித்தளம் அமைத்துத் தருதலை, தரவேண்டுதலை இதனுள் காணலாம். பிறவியின் பயனே பிறர் நலன் பேணுதல் என்னும் உண்மையைத் தமிழர் அன்றே தம் வாழ்வியற் கொள்கையாகக் கொண்டிருந்தமை உள்ளுந்தொறும் இன்பம் தருவதாகும்.

வாழ்க்கை வரலாறுகள் உலகில் தோன்றிய அனைவருக்கும் எழுதப் படுவதுமில்லை; அனைவரும் எழுதுவதுமில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே இப்பேற்றிற்கு உரியவராகின்றனர். ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட வரலாறுடைய தமிழ் வாழ்க்கைக் கொள்கைகள், வாழ்க்கை வரலாற்றிலக்கியத் தலைவர்களின் வாழ்க்கையில் விளக்கம் பெற்று நிற்றலைக் காணமுடிகிறது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே (*புறம். 182*)

எனும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாட்டு, படித்துச் சுவைப்பதற்கு மட்டுமே பொருந்துவது; நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாதது என்ற பொதுவான கருத்திருப்பினும், நடைமுறையில் வாழ்ந்துகாட்ட முடியும் என்று வாழ்ந்தவர்களை அன்னாரின் வரலாறுகள் நமக்குக் காட்டுகின்றன. காவியத் தலைவர்கள் மட்டுமல்ல நாங்களும் அவர்களுக்கேற்ற ஒப்புடை பெருமையுடையாரே என்று தம் வாழ்வால் உணர்த்திய அத்தகு மேன்மக்கள் இன்று வாழ்க்கை வரலாற்றிலக்கியத் தலைவராய்ச் சிறப்புறுகின்றனர். புலவர்தம் கற்பனைப் படைப்புகளிலும் இடம்பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்றனர்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே (*புறம். 312: 1-2*)

என்றபடி பலர் வாழ்வின் வெற்றிக்கு வித்திட்ட பெருமையை அவர்தம் பெற்றோர் கொள்ளக் காண்கிறோம். 'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்து சால்பூன்றிய தூண்' (*குறள் 983*) எனும் இவையே உன்னதமான வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை, இவ்வரலாறுகள் சுட்டுகின்றன.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன் கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வெளவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

எனும் கலித்தொகை வரிகள் (*133: 6-14*) இல்வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களில் ஒளிவிடக் காண்கிறோம். பல நூற்றாண்டுகட்கு முன்பே நல்லந்துவனார் உணர்ந்து ஓதியுள்ள இவ்வாழ்வியற் கொள்கைகள் நம்மை வியக்க வைக்கின்றன. இலக்கியங்கள் வெறுமனே பொழுது போக்குதற்குதவும் கருவியாக மட்டும் நின்றுவிடாது வாழ்விற்கு வழி காட்டியாகவும் விளங்குதல் வேண்டும் எனும் தமிழர் எண்ணத்தை இவை போன்றன எடுத்துக்காட்டுகின்றன. இம்மண்ணில் பிறந்த அனைவரும்

சான்றோராக, தத்தமக்கு ஏற்ற, விரும்பிய வழியில் புகழுடையோராக உருவாக வேண்டும் என்பதையே தமிழ்ச்சான்றோர்தம் பாடல்வழி புகட்டியுள்ளனர். மற்றும், ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கைச் சான்றோராக ஒவ்வொருவரும் மிளிர்வதற்கு வழிகாட்ட வென்றே தமிழில் பலவாக அறநூல்கள் எழுந்துள்ளன என்பதும் இவண் எண்ணத்தக்கது.

இவர்கள் தரும் எண்ணங்கள் பல, அவ்வத்துறையில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களிலும் இடம்பெற்றிருப்பாரோடு ஒத்திருக்கக் காண்கிறோம்.

> *சான்றவிர் வாழியோ! சான்றவிர் என்றும்*
> *பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி அறன் அறிதல்*
> *சான்றவர்க்கு எல்லாம் கடன்* (*கலி. 139:1-3*)

என்பதை நோக்குங்கால், தம் வாழ்க்கை இலக்காகச் சமுதாயப் பணியைக் கொண்டு தொண்டாற்றும் சமுதாயப் பணியாளரின் வாழ்க்கை வரலாறுகள் இதற்கு விளக்கமும் உயிரும் கொடுத்திருக்கப்பார்க்கலாம். 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' (குறள் 72) எனும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கு இலக்கணமாக இவர்கள் திகழ்வதை இவர் தம் வாழ்க்கை வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன. உள்ளிலோர்க்கு வலியாகுவன், கேளிலோர்க்குக்கேளாகுவன் (புறம். *396: 10-11*) எனத் திகழ்கின்றனர். அனாதைகளாய் ஆதரவற்று, உயிர் வாழ்க்கையைச் சுமையாகக் கருதி அல்லலுறுவார்க்கு இவர்கள் தம் உதவிக்கரம் நீட்டி அணைத்துச் சென்று அவர்தம் வாழ்விலும் இருளகற்றி ஒளிவிளக் கேற்றுவதைக் காணும்பொழுது,

> பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
> மண்புக்கு மாய்வது மன் (குறள் 996)

எனும் பொய்யா மொழியின் உண்மையை, கருத்தாழத்தை முழுவதுமாக உணர்ந்துகொள்ள முடிகிறது. 'இன்பம் விழையான் இடும்பை இயல் பென்பான் துன்பம் உறுதல் இலன்' (குறள் 628) எனும் வாக்கினையும் மெய்ப்பிக்கின்றனர். பிறர் வாழ்விற்காகத் தம் வாழ்வை நடத்தும்பொழுது அங்கு அவர்கள் தமக்கு இன்பம் தரக்கூடியது இது எனும் எண்ணத்தையே மறக்கின்றனர். பிறர் வாழ்வில் காணும் அவலங்களைக் கண்டு துன்பத்தை இயல்பாகக் கருதும் மனநிலையைப் பெறுகின்றனர். எனவே இவர்களிடத்து இன்பமும் துன்பமும் அற்ற சமநிலை கொண்ட மனது இயல்பாகிறது. ஏட்டில் இருப்பதை வாழ்க்கையாக்கிப் பிறரை மகிழ்வித்து அதனால் தாமும் மகிழ்கின்றனர். இவர் தம் வாழ்க்கை வரலாறுகளைக் கற்பாரும், தம் வழி நடக்க ஊக்கம் கொள்ளச் செய்கின்றனர்.

'செல்வத்துப் பயனே ஈதல்' (புறம். *189: 7-8*) என்பதை உணர்ந்தவர் தமிழர். 'செறாஅது ஈதல், இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின் சாதலும் கூடுமாம் மற்று' (கலி. *61: 11-12*). ஆம், தம்மை அண்டிவந்து உதவி நாடி நின்றோர்க்கு உதவ இயலாது, உயிர் வாழ்வதை விடச் சாவதே மேல் எனும் தன்மையே, வரையாது வழங்கும் வள்ளல்களின் இயல்பாக நிற்றலை அவர்தம் வரலாறுகள் உணர்த்துகின்றன. கைம்மாறு கருதாது அவர்கள் செய்யும் ஈதலறம்,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே (புறம். 134)

என்று முடமோசியார் ஆய் அண்டிரனைப் பாராட்டியதை நினைவூட்டுகிறது. அவர்களுக்கும் இது சாலப் பொருந்தும். "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" (குறள் 215) எனும் வான்மறை மொழி இவர்தம் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்படுதலை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காணலாம்.

'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை' (புறம். 76: 1-2) என்பதனையும் பண்டைப் போர் மறவர், இன்றைய அரசியலார் வாழ்க்கை வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன. உலகையாளும் அரசர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைச் சங்கப் புலவர், மதுரை மருதனிள நாகனார் தம் புறநானூற்றுப் பாடலில் சுட்டியுள்ளார்.

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணம் கொல்லாது
ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெரும் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி யில்லோர் கையற
நீ நீடு வாழிய (55: 10-17)

எனும் இதனை இவர்தம் வரலாறுகளிலும் காணமுடிகிறது. செம்மைசான்ற அரசாட்சி நிகழும்பொழுது, அவர் கீழ் வாழும் குடிமக்கள் அவரைத் தம் உயிராகக் கொள்வர்; மன்னன் முதற்றே மலர்தலை யுலகம் (புறம். 186:2) என்பதில் மிகையில்லை. 'குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னனை அடிதழீஇ நிற்கும் உலகு' (குறள் 544) என்பதனை இவர்களின் வரலாறுகளும் நவில்கின்றன.

'உள்ளது சிதைப்போர் உளரெனப்படாஅர்' (குறுந். 283: 1) ஆதலின் எத்தகை செல்வந்தராயினும் தமக்கென்று, ஒரு வருவாய்க்குரிய தொழிலை மேற்கொள்ளுதலைத் தமிழர் விழைகின்றனர். உழைப்பு என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்பதே இதற்கு அடிப்படை. இதனை வலியுறுத்த எழுந்ததே வள்ளுவரின் 'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலா தார்' (குறள் 26) எனும் வாய்மொழியும், தன்னம்பிக்கையும் முயற்சியையும் கைக்கொண்டு விடாப்பிடியாக முயன்று தம் வாழ்வில் வெற்றிகொண்ட பலரை வாழ்க்கை வரலாறுகள் காட்டுகின்றன. தொழிலதிபர், அறிவியலறிஞர் போன்றோர் பலரின் வாழ்வுகள் வள்ளுவரின் 'வினை செயல் வகை' அதிகாரத்திற்கு ஈடிணையற்ற இனிய சான்றுகளாகின்றன. இவர்கள் 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தாற் செயின்' (குறள்484); 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பனவற்றைத் தம் வாழ்க்கையால் உறுதிப்படுத்தி, தம் வரலாறு கற்பாரை அவற்றின் மூலம் அவர் தம் பணியை முறைப்படி நடத்த, ஊக்கம் கொள்ளத் தூண்டுகின்றனர்.

செயல்திறன் மட்டுமே ஒருவருக்குப் போதுமானதன்று. அதனுடன் நற்பண்புகளும் இணையும் பொழுதுதான் உலகம் போற்றும் உயர்ந்தநிலை வந்தடைகிறது. தம்முடைய வாழ்க்கையைப் பிறருக்குப் பயன்படுத்த இயலாக் காலையிலும் முறையுடன் வாழும் வழியையும் காட்டியுள்ளமை இவண் குறிப்பிடற்பாலது.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியும் ஆரதுவே (புறம். 195: 6-9)

ஆயிரம் விண்மீன்களுக்கிடையே ஒரே நிலவுதான் காணப்படுகிறது. அதுபோன்றே மனிதராய்ப் பிறந்த அனைவரும் பேரும்புகழும் பெற்றுச் சிறத்தல் அரிது. ஒவ்வொருவரின் இயல்பு, சூழல், வசதி எனப் பலவற்றை உள்ளடக்கியதாக இஃதமைதலின், குறைந்தது ஒவ்வொருவரும் மனிதன் எனும் தன் பண்பிலிருந்து கீழிறங்காதவாறாவது வாழவேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே மேற்கண்ட கூற்று. நரிவெரூஉத் தலையாரின் இம்மொழி மாக்களாகவன்றி மானிடராக வாழவிரும்பும் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டியதொன்றாம். தம்மால் இயலாது என்று யாவராலும் கூறவியலாத ஒன்றுமாம்.

இங்ஙனம் பல நல்ல வாழ்வியற் சிந்தனைகளை உலகிற்கு, வழங்கிய தமிழில், எழுந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் இயல்பு, சிறப்புக் குறித்து நிகழ்ந்த ஆய்வே இந்நூல். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மாதந்தோறும் நிகழ்த்தும் தமிழ் இலக்கியக் கொள்கைக் கருத்தரங்கில் 103ஆவது கட்டுரையாக 6-4-1983 அன்று 'வாழ்க்கை வரலாற்றிலக்கியம்' படிக்கப்பட்டது. அதன் விரிவாக இந்நூல் அமைந்துள்ளது.

வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றிய பொதுநிலை ஆய்வாக அமையும் இந்நூலின் பின்பகுதியில், இதுவரை வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் பற்றிய தொகுப்பும் உண்டு. நூல் அச்சு ஆகுங்கால் கிடைத்த நூல்களும் பின்னிணைப்பாக அமைந்துள்ளன.

இந்நூல் எழுதும்படி என்னைப் பணித்து, தேவையான உதவிகளை நல்கிய இந்நிறுவன இயக்குநருக்கு என் பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நூல் தொகுப்பிற்குத் துணைநின்ற மறைமலையடிகள் நூலகத்தாருக்கும் நிறுவன நூலகர் திருமதி இரா. பார்வதி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச. சிவகாமி

வாழ்க்கை வரலாறு — விளக்கம்

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே' (புறம் : 165)

என்பது பண்டைத் தமிழ்ச் சான்றோர் கூற்று. நிலையாமையைத் தன் இயல்பாகக் கொண்ட இவ்வுலகில், நிலைபேற்றை விரும்பிய ஆன்றோர் அதற்காகத் தம் புகழை நிலை நிறுத்தித் தாம் மறைந்தனர். இது வழி வழி வரும் உண்மையாகும். அவர்கள் இலக்கியங்களில் ஏற்றம் பெற்றும் வாய்மொழிக் கதைகளில் இடம் கொண்டும், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் காட்சியளித்தும், தமது அரிய பெரிய கண்டுபிடிப்புகளின் வழித் தம்மை நினைவூட்டிக் கொண்டும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்றனர். இவை அனைத்தினையும்விட 'வாழ்க்கை வரலாறு' சற்று விரிந்த அல்லது முழுமை நிலையில் இவர்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பொழுது போக்கு இலக்கியமாக மட்டுமே அமைந்து விடாது, கற்பாருக்கு ஏதேனும் ஒரு விதத்திலாவது பயன் படுவது இதன் சிறப்பு. எழுதப்படிக்க மட்டுமே அறிந்த எளிய கல்வியறிவுடைய பாமரர் முதல், சிறுவர், இளைஞர், மாணாக்கர், பெரியோர் என எத்திறத்தோர்க்கும் ஏற்புடையதாக அமையும் பெருமையும் கொண்டது இவ்விலக்கியம். நோக்க நிலையில் அறவிலக்கியத்துடன் தொடர்பு கொள்ளும் புகழும் படைத்தது. தமிழிலக்கியத்துள் வாழ்க்கை வரலாறுகள் இன்று உயர்ந்த இடம் கொண்டுள்ளன. புதினம், சிறுகதை போன்று பலரின் சிந்தையையும் ஈர்த்துள்ளன.

இன்று மிக விரைவாக வளர்ந்துவரும் உரைநடையுள் ஒன்றாக வாழ்க்கை வரலாறு அமைகிறது. உரைநடை இலக்கியத்தை அதன் பொருள் தன்மையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இயல்பியல், புனைவியல், இயல்புபுனைவியல் என அவற்றைச் சுட்டலாம். உண்மை நிகழ்வுகளின் தொகுப்பினை, இலக்கியச் சுவைபடத் தருவன இயல்பியலாகும், படைப்பாளர்,

தம் கற்பனை நிகழ்வுகளால் ஒரு கதையைப் படைத்தல் புனைவியலாகும். உண்மை நிகழ்வுகள் அல்லது கற்பனை நிகழ்வுகள் அல்லது இரண்டும் இணைந்தவற்றைப் படைப்பாளர் தம் புனைவாற்றலுடன் இலக்கியமாகப் படைத்தல் இயல்புபுனைவியலாகும். வாழ்க்கை வரலாறும் பயண இலக்கியமும் முதல்வகையைச் சார்கின்றன.

வாழ்க்கை வரலாறு - சொற் பொருளாய்வு

இருத்தல், முறைமை எனும் பொருள்களையுடைய வாழ்[1] எனும் சொல்லினைப் பகுதி (வேர்ச் சொல்)யாகக் கொண்டது வாழ்க்கை. இது வாணாளைக்[2] குறிக்கிறது. இதனுடன் தொடர்புடைய வாழ்வு எனும் சொல் நல்வாழ்க்கை, உயர்ந்த பதவி, செல்வம், முறைமை போன்ற பொருள்களைக் கொண்டமைகிறது.[3] வரலாறு என்பது நிகழ்ச்சிமுறை, பூர்வ சரித்திரம், விவரம், உதார்ணம் எனப் பொருள்படுகிறது.[4] இவற்றை நினைவிற் கொண்டு வாழ்க்கை, வரலாறு'எனும் சொற்களின் இணைவில் தோன்றியுள்ள வாழ்க்கை வரலாறு எனும் தொடருக்குப் பொருள் காணின், பிறருக்கு எடுத்துக்காட்டாக அமையும், வாணாளை முறைமையாகக் கழித்த ஓர் நல்வாழ்க்கையின் கடந்த கால சரித்திரத்தினை முறைப்படுத்தியுரைத்தல் எனக் கொள்ளலாம். சமுதாய முன்னேற்றத்தினைத் தம் உணர்வில், செயலில் கொண்டுப் பிறருக்கு எவ்வகையிலேனும் உதவியாக அமையும் வாழ்க்கையினை நல்வாழ்க்கை எனலாம். இத்தகைய வாழ்க்கைகளே வரலாறு படைக்கின்றன என்பதில் தவறில்லை.

ஆங்கிலச் சொல்லான Biography என்பதன் நேர் பொருளைக் கொண்டதாக 'வாழ்க்கை வரலாறு' என்பது அமைகிறது.[5] எனினும் இவ்வகை இலக்கியங்கள் வாழ்க்கை வரலாறு என்பதனுடன் வரலாறு, சரிதை, சரிதம், சரித்திரம், வாழ்வு, வாழ்க்கை, வாழ்க்கைக் குறிப்புகள், வாழ்க்கைக் காவியம்,

1. Tamil Lexicon vol. vi ;Madras; University of Madras.
2. Ibid
3. Ibid
4. Ibid
5. "'Bio' is a prefix from greek word 'Bios' which means life, and 'graphein' means to write, and therefore Biography is a written record of the life of an individual. Grace Selvaraj; Literary Heritage of the Tamils; S. V. Subramanian, N. Ghadigachalam (ed); Madras; International Institute of Tamil Studies; 1981; p. 760.

'விளக்கம், வைபவம், கதை, அனுபவங்கள், விஜயம், சிந்தாமணி, ஜீவியம், லீலை, தரிசனம், நினைவுகள், நிகழ்ச்சிகள், புராணம் போன்ற சொற்களாலும் தொடர்களாலும்'[6] குறிப்பிடப்படுகின்றன. வாழ்க்கைக் காவியம், லீலை, சிந்தாமணி, தரிசனம் போன்ற சொற்கள் வரலாற்றுத் தலைவரின் இணையற்ற பெருமையை, சிறப்பினைச் சுட்டுவதாக அமைகின்றன. நினைவுகள் என்பது வாழ்க்கை வரலாற்று நூலாக்கத்திற்கு ஆசிரியருக்குத் துணையாக அமையும் காரணியை, நினைவாற்றலைச் சுட்டுகிறது. நிகழ்ச்சிகள், அனுபவங்கள் போன்றன நூலின் அடிப்படைத் தேவையை உணர்த்துகின்றன. பழமையையும், புனைவினையும் அறிவுறுத்துவதாகப் புராணம், கதை எனும் சொற்கள் அமைகின்றன.

---

6. பங்கிம் சந்திரர் வாழ்க்கை வரலாறு - கோதண்டராமன்.
சுப்பிரமணிய பிள்ளை வரலாறு - ஈசுவரமூர்த்தியா பிள்ளை.
தமிழ் நாவலர் சரிதை
அய்யாப் பிள்ளையின் மெய்யான சரிதம் - சாமிதாஸ் பிள்ளை.
கிளைவ் சரித்திரம் - கதிர்வேலுப்பிள்ளை.
மேதைகள் வாழ்விலே - ஆர். சண்முகம்.
ரவீந்திரநாத டாகுர் வாழ்க்கையும் கவிதையும் - கி. சந்திர சேகரன்.
திரு. வீ. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் - திரு. வி. க.
அம்மா (அன்னை சாரதாதேவி வாழ்க்கைக் காவியம்) - ரா. கணபதி.
இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி - வாழ்க்கை விளக்கம் - புரவலன்.
ஸ்ரீராமாநுஜ வைபவம் - கே. எஸ். நாராயண ஐயங்கார்.
பன்னிரண்டு உத்தமிகள் கதை - வி. கிருஷ்ணமாச்சாரியார்.
வாழ்க்கை அனுபவங்கள் - ரா. பாலகிருஷ்ணன்.
சங்கர விஜயம் - தொ. வேலாயுத முதலியார்.
உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி - இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.
சண்முகநாத கவிராயர் ஜீவிய விருத்தாந்தம் - எஸ். டி. இரத்தினம்.
பாரதி லீலை - க. சக்திதாசன் சுப்பிரமணியன்.
தாகூர் தரிசனம் - கல்கி
இளமையின் நினைவுகள் - அ. மு. பரமசிவானந்தம்.
சுவையான நிகழ்ச்சிகள் - அன்புப்பழம் நீ.
புலவர் புராணம் - தண்டபாணி சுவாமிகள்.

ஏனைய சொற்கள் வாழ்க்கை என்பதனோடு தொடர்புடைய சொற்களாகவே அமைகின்றன.

வாழ்க்கை எனும் சொல்லை நாம் தொல்காப்பியத்திலேயே காண்கின்றோமாயினும்[7] தொடக்க காலத்தில் சரிதை, சரித்திரம் எனும் சொற்களாலேயே மிகுதியாக இவ்விலக்கியம் குறிக்கப்பட்டுள்ளது. மொழிப்பற்றின் விளைவாக 'வாழ்க்கை வரலாறு' என மாற்றம் கொண்டது எனலாம். எனினும் அவற்றின் பயிற்சி குன்றியுள்ளதே தவிர முற்றிலுமாக மறைந்து விடவில்லை. கிடைக்கும் நூல்களைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் பக்கீர் மொஹிதீன் என்பார் 1893இல் எழுதி வெளியிட்டுள்ள **முகமதின் வாழ்க்கைச் சுருக்கம்** என்பதனுள் வாழ்க்கையையும் 1868 இல் சோமசுந்தர அடிகள் எழுதிய '**அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு**' எனும் நூலுள் வரலாற்றினையும் முதலாவதாகக் காண்கின்றோம். இவற்றின் மூலமாக இவர்களால் வாழ்க்கை வரலாறு என்பது கருத்தளவில் தோற்றுவிக்கப் பட்டதாக ஊகிக்கலாம். 1961 இல் வெளிவந்துள்ள கோதண்ட ராமனின் '**பங்கிம் சந்திரர் வாழ்க்கை வரலாறு**' எனும் நூலே முதலில் இவ்விரு சொற்களும் இணைந்த நிலையில் தன் தலைப்பினைக் கொண்டுள்ளது. ஆயினும் இத்தொடராட்சி வழக்கில் இதற்குப் பல ஆண்டுகட்கு முன்பே வந்துவிட்டது என்பதனை உ. வே. சா. கூற்றால் அறியலாம்.[8]

வாழ்க்கை வரலாறு - விளக்கம்

வாழ்க்கை வரலாற்றிலக்கியம் சுமார் 120 ஆண்டுகளில் நன்கு வளம் கொண்டுள்ள போதிலும் தமிழில் அது பற்றிய ஆய்வு மிக அருகியே காணப்படுகிறது; எனவே வாழ்க்கை வரலாறு என்றால் என்ன என்பதற்குரிய விளக்கமும் ஒருசிலரிடம் மட்டுமே அமைகிறது. 'ஜாதகம் முதல் இரங்கற்பாட்டு வரையில் ஒன்று விடாமல் எழுதுவதுதான் சரித்திரம் என்ற நினைப்பு மாறிவரும் காலம் இது' எனும் கி. வா. ஜகந்நாதனின் கூற்றில்[9] இவ்விலக்கியத்திற்கு விளக்கம் அளிக்கும் நிலை தெரிகிறது. ''நாட்குறிப்பும் பிறவும் ஒழுங்கு முறையில் அமையாத

---

7. வருத்தமிகுதி சுட்டுங்காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம் (1172)

8. ''இவர் புகழ் பரவியுள்ள இத்தமிழ் நாட்டில் இவர் வாழ்க்கை வரலாறு விரிவாக வழங்க வேண்டுமென்பது என் அவா.'' உ. வே. சாமிநாதையர்; வித்துவான் தியாகராச செட்டியார்; 1942; பக். 3.

9. முன்னுரை; வ. வே. ஸு. ஐயர்; தி. சே. சௌ. ராஜன்

ஒன்றை வரலாறு அல்லது சரிதம் என்று எப்படிக் கூறுதல் கூடும்?'' எனும் வினாவிலும்[10] வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனை அமைகிறது.

'உண்மை நிகழ்ச்சிகளையும் அவைகளின் புதிய வடிவங்களையும் கொண்டு மனிதாபிமான நோக்கோடு கோத்து அமைக்கப்படும் ஒரு தனிமனிதக் கதையே வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது' என்பது ஆய்வாளர் ஒருவரின் கருத்து.[11] 'செய்திகளை முழுமையாகவும் சரியாகவும் நுணுக்கமாகவும் சுவைபடவும் சொல்வதே சரியான வாழ்க்கை வரலாற்று நூலாகும்' என்பது மற்றொருவரின் மதிப்பாகும்,[12] ''இயன்றவரையில் உண்மைத் தன்மையுடன் எழுதப்படும் ஒரு தனிமனிதனின் கதை''[13] என்றும் ''தனிமனிதனின் வாழ்க்கையை, அவனுடைய செயல்களையும் பண்புகளையும் உண்மை மாறாது, இலக்கியத் தன்மையுடன் அளித்தல்''[14] என்றும் இதற்கு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. ஆயின் முழு நிலை விளக்கத்தை இவை எதிலும் காண இயலவில்லை.

இக்கருத்துகள் அனைத்தினையும் ஒருங்கிணைத்துப் பார்க்குங்கால் வாழ்க்கை வரலாறு என்றால் என்ன என்பதற்கு ஒரு முழுமையான விளக்கம் பெறமுடிகிறது. ''ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தினையும் அவற்றின் சிறப்புத் தெளிவாகப் புலப்படும்படியும் காலக் குறிப்புகளுக்குப் பெருமையளித்தும் உண்மைக்கு முதன்மையளித்தும் கோவைப் படுத்தி, இலக்கிய நயம்பட உரைக்க வேண்டும். அக்காலை

---

10. திரு. வி. க; திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்; 1969; முன்னுரை.
11. சாலினி இளந்திரையன்; வாழ்க்கை வரலாற்று இலக்கியம்; சென்னை; தமிழ்ப்புத்தகாலயம்; சூலை 1974; ப. 62.
12. சி. சு. செல்லப்பன்; அணிந்துரை - இலக்கிய ஜோதி; மது. ச. விமலானந்தம்,
13. ''Biograpy is a branch of history. it's pu pose is to relate, as faithfully as possible, the life of an individual'' — Cassells, Encyclopaedia of World Literature; J. Buchanan Brown (Ed) London; Gassell & company Ltd; 1972; 72.
14. Biography, a narrative which seeks consciously and artistically, to record the actions and recreate the personality of an individual life''—Encyclopaedia Britannica-vol. 3; Chicago; William Benton 1972; p. 636.

அவற்றினூடே வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பண்புமிளிரும் படியும் செயல்கள் விளக்கம் பெறும்படியும் படைக்க வேண்டும்.'' இதன்படி அமையும் பொழுது வாழ்க்கை வரலாற்றிலக்கியம் மலர்கிறது எனலாம்.

தன் வரலாறு - விளக்கம்

வாழ்க்கை வரலாறுகள், எழுதுவோர் அடிப்படையில் இரு வகைப்படுகின்றன. பிறரின் வாழ்க்கையை ஒருவர் எழுதும் பொழுது அது (பிறர்) வாழ்க்கை வரலாறு என்றும், தன் வாழ்க்கையைத் தானே எழுதும் போது தன் வரலாறு என்றும் அவை வழங்குகின்றன. இவ்விரண்டினையும் அடிப்படையில் இவ்வேற்றுமையே பிரித்து நிற்கின்றது. வாழ்க்கை வரலாற்றிற்கு அளித்த விளக்கம் தன்வரலாற்றிற்கும் பொருந்தும். ஆங்கிலத்தில் 'autobiography' என்பதன் மொழி பெயர்ப்பாகத் 'தன் வரலாறு' அமைகிறது. 'auto' என்பது கிரேக்கச் சொல். 'தன்னுடைய' என்று பொருள்படுவது. எனவே ஒருவரின் வரலாறு அவரால் எழுதப்படும் பொழுது 'autobiography' எனலாயிற்று.[15] பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை இச்சொல் தோற்றுவிக்கப்படவில்லை. இச்சொல்லின் பொருளை உணர்த்தும் வகையில் 'memoirs' என்பதுவே இதன் தோற்றத்திற்கு முன்புவரை குறிக்கப்பட்டு வந்தது என்பர்.[16]

வாழ்க்கை இலக்கியம்

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தை வாழ்க்கை இலக்கியம் எனச் சுட்டுதல் காணப்படுகிறது.[17] இச்சுட்டு ஏற்புடைத்தா என்ற ஐயம் எழுகின்றது. சுட்டாளரே ''வாழ்க்கை-வரலாறு என்ற இருகரைகளைக் கொண்ட ஆறு; இரு தண்டவாளங்களைக் கொண்ட இருப்புப்பாதை. இரண்டும் உரிய அளவில் உன்னத முறையில் மிடையப் பெறுவதே வாழ்விலக்கியம். அது போன்றே, தனிமனிதனது வாழ்க்கைப் பகுதி-பண்புப்பகுதி என்ற இரு

15. ''Autobiography is a very different medium. Auto comes from the greek for 'self', 'one's own'. An auto biography is the story of a person's life written by himself''—The New Book of knowledge-Vol. 2; New York; Grolier incorporated; 1973; p. 186.
16. Encyclopaedia Britannica vol. 2; p. 855.
17. மது. ச. விமலானந்தம்; வாழ்க்கை இலக்கியம்-ஒரு வளர் கலை; தஞ்சாவூர்; விஜய் வெளியீட்டகம்; மு. ப. 1981.

பகுதிகளும் போதிய வகையில்-போற்றத்தக்க முறையில் இணைந்து பிணைந்து இலங்குதல் வேண்டும். உண்மையும் கலையும் ஒன்றுவதே வரலாறு. வெறும் உண்மைகள் மட்டும் போதா. உண்மை என்பது காற்று போன்றது; அதுவன்றி நாம் உயிர் வாழ முடியாது. கலை என்பது, பயிர் போல்வது-அது காற்றினை உட் கொண்டு வாழ்வது-வளர்வது. அது போன்றே வரலாற்றிலக்கியம், உண்மைகளை உட்கொண்டது, ஆனால் உண்மை, கலை நலத்துடன் உணர்த்தப் பெற வேணும். அதுவே அரிய வாழ்க்கை வரலாறாகும்'' என்று[18] மொழிந் திருப்பதும் நோக்கத்தக்கது. எனவே வாழ்வியலும், வரலாற்றிய லும் இணைந்த ஒன்றினை 'வாழ்க்கை இலக்கியம்' எனல் பொருந் தாது; வாழ்க்கை வரலாற்றிலக்கியம் என்றே அழைத்தல் பொருத்தமாகத் தோன்றுகிறது.

பொது நிலையிலும் இக்கூற்றை மறுத்துரைக்க வியலும். எல்லாவகை இலக்கியங்களிலும் பொதிந்து கிடப்பன வாழ்க்கைக் கூறுகளே. வாழ்வியலின் மீது கட்டப்படுவதுதான் இலக்கியம். மற்றும் வாழ்க்கைக்குப் பயன்படும், துணை நிற்கும் அறவிலக் கியம் போன்றவற்றிற்கும் 'வாழ்க்கை இலக்கியம்' என்பது பொருந்தும். இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி. அது, அதன் எழுந்த கால மக்கள் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்பதும் இலக்கியம் பற்றியதொரு பொதுகருத்து. பிற இலக்கிய வகைகளினின்றும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைத் தனித்து இனம் பிரித்துக்காட்டுவது, அதனுள் சிறப்பிக்கப்படும் வரலாற்றி யல்பே. எனவே வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தை 'வாழ்க்கை இலக்கியம்' அல்லது 'வாழ்வு இலக்கியம்' எனல் ஏற்புடைத் தன்று.

வாழ்க்கை வரலாறு இலக்கியமாதல்

இலக்கியம் படைப்பாளரின் கற்பனைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொழுது, உண்மைக்கே சிறப்பளிக்கும் வாழ்க்கை வரலாறு இலக்கியம் ஆகுமா என்ற வினா எழலாம். 'இலக்கியமே வாழ்க்கை ஆராய்ச்சி, 'literature is the criticism of life' என்னும் பொழுது வாழ்க்கை ஆராய்ச்சியும் இலக்கியம் ஆகும் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமின்று[19] எனும் வாழ்க்கை வரலாறு படைப்பாளர் கருத்து இவ்வினாவிற்கு விடைதருகிறது.

ஆய்வு நெறியிலும் இதற்கு விடையளிக்கலாம். இலக்கியத் தினைக் கூறப்புகு முன் இலக்கியப் புலவர்கள் காப்பு, கடவுள்

18. மேற்படி நூல்; ப.17.
19. சி. இலக்குவனார்; என் வாழ்க்கைப் போர்.

வணக்கம், ஆசிரியர் வணக்கம் முதலானவற்றை நவில்வது போன்று இவ்வகையிலும் அமைத்தல் உண்டு. இதனை உ. வே. சாமிநாதையரின், 'கோபால கிருஷ்ண பாரதியார்' தி. ஏ. ராஜரத்னம் பிள்ளை படைத்த 'சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்' போன்ற ஒரு சில நூல்கள் தருகின்றன.

இயற்கை வருணனை, நாட்டுவளம், நகர்வளம் காட்டல் என்பது இலக்கியப் பொதுச் சிறப்பு. ''பாரதத்தின் தென் கோடியில் இருக்கும் கன்னியாகுமரி, பண்டைக்காலம் தொட்டு ஒரு புகழ் பெற்ற புனிதஸ்தலமாகும். இமவான் பெற்ற மகள் பார்வதிதேவி, கன்னிப் பெண் கோலத்தில் தவமிருக்கும் இடமாதலால், அதற்குக் கன்னியாகுமரி என்று பெயர் வழங்கலாயிற்று. எல்லாவற்றிற்கும் மேலாக, இயல்பிலேயே அமைந்துள்ள இயற்கைக் காட்சி ஒன்றை,கன்னியா குமரியைத் தவிர இப்பூமண்டலத்தில் மற்றெங்கும் காண்பதரிது. கதிரவனின் உதயக்காட்சி காலையில் கண்கொள்ளாக்காட்சி. அதன் வர்ண ஜாலங்களைக் கண்டுகளிக்கக் கண் கோடி வேண்டும். இந்த உதயசூரியனின் அழகைக் கண்டு ரசித்துவிட்டு, அதே இடத்தில் நின்றபடி மாலைச்சூரியன் மேல் திசைக் கடலிலே போய் மறையும்காட்சியைக் காலமெல்லாம் கண்டு இயற்கை அழகைப் பருகிக் கொண்டே இருக்கலாம்'' என்பது போன்று[20] இதனுள்ளும் நிறைந்திருக்கக் காணலாம். மற்றும் வருணனை[21]

20. அம்புஜம்மாள்; நான் கண்ட பாரதம்; ப. 1.

21. ''அங்கே மின்மினி போன்ற விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் கிழவருடைய முகமும் அவர் நெற்றியில் அணிந்திருந்த விபூதியும் பளிச்சென்று தெரிந்தன. அவர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். அந்தக் கண்ணாடியும் கிழவரைப் போலவே பருவம் முதிர்ந்து பல வருஷங்களாக உபயோகப்பட்டு வந்தது. அக்கண்ணாடியின் இரண்டு பக்கங்களிலும் கயிறுகளைக் கோத்து அவற்றைப் பின்புறத்திலே குடுமியிலே அவர் கட்டியிருந்தார். அவர் குனிந்து குனிந்து சுவடியைப் பார்ப்பதும் பிறகு நிமிர்ந்து நிமிர்ந்து பிரசங்கம் செய்வதுமாக இருந்தார். அப்படி நிமிர்ந்து வாயைத் திறந்த போது அதில் இருந்த பற்களில் பல முன்பே விடை பெற்றுக் கொண்டனவென்று தெரிந்தது.'' உ. வே. சாமிநாதைய்ர்; வித்துவான் தியாகராச செட்டியார்; ப. 47.

எண்சுவைகள்[22] படைப்பாளர் இடையீடு[23] என்பன போன்ற பல இலக்கிய நயம் தரும் கூறுகள் இதனுள்ளும் பரந்திருக்கக் காணலாம். நூலின் தொடக்கம், வெளியீடு போன்றவற்றிலும் இலக்கிய உத்திகள் பலவற்றைக் காணலாம். (இவை பின்விரிக்கப் படும்) ''தக்கான் ஒருவனின் வாழ்க்கையானது நடுநிலை நோக்குடைய எழுத்துக் கலைஞன் ஒருவனின் கவனத்துக்கு உள்ளாகும்போது வாழ்க்கை வரலாறு என்னும் இலக்கியப் படைப்பு உருவாகிறது'': எனும் கூற்றும்[24] இவண் சுட்டற்பாலது. இவற்றிற்கெல்லாம் மேலாக வாழ்க்கை வரலாற்றினை அரங்க. சீனிவாசன், 'மனித தெய்வம் காந்தி கதை' என, காந்திஅடிகளின் வரலாற்றைக் காப்பியமாகப் படைத்திருப்பதும் வைரமுத்து பாரதியின் வாழ்க்கையை,

---

22. ''பிரிட்டிஷ் மக்கள் நல்கும் ஆதரவு மூலம் இடுக்கண் எதுவும் இன்றி வாழலாம் என்னும் கருத்தில் அவர்களிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். சர்வதேச சட்டதிட்டங் களை மதியாது அவர்கள் என்னைக் கைதியாக்கி விட்டார் கள். நான்கு வல்லரசுகள் தனி ஒரு மனிதன் மீது தங்கள் வல்லமையைக் காட்டுகின்றன. இந்தப் பாறையில் என்னை அவர்கள் சிறை வைத்தது எவ்வளவு நாணப்படத்தக்க செயல்! எந்தெந்த வகையில் எல்லாம் என்னைச் சித்திர வதைக்கு உள்ளாக்க வேண்டுமோ அந்த வகையில் உள் ளாக்கி விட்டார்கள். திட்டம் போட்டு மெல்ல மெல்லச் சித்திரவதை செய்து என்னைக் கொன்று விட்டார்கள். கொலைகாரக் கவர்னர் ஒருவனை என்னைக் கொல்லும் பொருட்டு உங்கள் அமைச்சர்கள் நியமித்து விட்டார்கள்.'' ஆ. லெ. நடராசன்; மாவீரன் நெப்போலியன்; பக். 321-32.

23. ''அண்ணன் தம்பிகள் ஏழுபேர் இருந்தாலும் எழுவரையும் தாய் நாடே, உன் பலி பீடத்தில் ஏற்ற நான் தயார்! என்று சாவர்கர் பாடினார் அல்லவா? தாய் நாட்டுக்காக அண்ணனையும் தம்பியையும் சிறைக்கு அனுப்பிவிட்டு அவரும் சிறைபுகுந்து விட்டார். அத்தாய்நாடு அப்போது அவருடைய குடும்பத்தைக் கவனித்த அழகைப் பார்ப் போமா?''

எம். வி. வெங்கட்ராம்; நாட்டுக்கு உழைத்த நல்லவர்-வீரசாவர்கர்; ப. 53.

4. சாலினி இளந்திரையன்; முன்சுட்டியது; பக் 23-24.

''செட்டியாரின் உறுதிமொழி
சகராவில் ஒரு
நைல் நதியானது
பாரதி சிலிர்த்தான்
''பலே பாண்டியா!
சிலந்தி வலையில்
வீழ்ந்து விடுமோ
வேங்கைகள்?
இனி—
ஐயமுண்டு பயமில்லை மனமே
ஐயமுண்டு பயமில்லை மனமே''
மூன்று மணிக்குள்
முத்திரைக் கையெழுத்துக்கள்
மொத்தமும் முடிந்தன!
காவல் நிலையத்தில்
பத்திரத்தை நீட்டிப்
பதிவும் செய்தார்கள்
பாரதி மீது
எல்லோரும்
ஆச்சர்யப் பூச்சொரிந்து
ஆனந்தித்தார்கள்
தலைமீது விழ
இறங்கிவந்த இடியை
முட்டி எறிந்தது
முண்டாசு'' (31)

எனப் புதுக் கவிதையாகப் படைத்திருப்பதும்[25] பாரதியின் சுயசரிதையும் (பாரதி அறுபத்தாறு) எண்ணத்தக்கன. எனவே, இவற்றால் வாழ்க்கை வரலாற்றினை ஓர் இலக்கியமாகக் கொள்வதில் இடர்ப்பாடில்லை.

வாழ்க்கை வரலாறும் பிற துறைகளும்

தன் பண்பாலும், பொருளாலும் வாழ்க்கை வரலாறு, வரலாறு, அறவிலக்கியம் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டமைகிறது. அவற்றினின்றும் வாழ்க்கை வரலாறு தனித்து வேறுபட்டு நிற்குமாறு இங்கு விளக்கப்படு கிறது.

---

25. கவிராஜன் கதை

வாழ்க்கை வரலாறும் வரலாறும்

உண்மை நிகழ்வுகளின் விளக்கமாகவும், காலக் குறிப்புடனும், குறிப்பிட்ட ஒருவரின் செயல்களை உள்ளடக்கியதாகவும் மிளிர்வது வரலாறு-எனும் நிலையில் இரு வரலாறுகளும் ஒன்றுபடுகின்றன. வரலாற்றில் அரசியல் பணியில் ஈடுபட்டோர் வரலாறுகள் மட்டுமே இடம் பெறுகின்றன. வாழ்க்கை வரலாற்றில் எத்துறையைச் சார்ந்தவரும் தலைவராகலாம். அங்குத் தனிப்பட்ட மனிதன் செய்த போர்ச் செயல்கள், அறச் செயல், நாட்டு முன்னேற்றத்திற்குரிய அவன் பணி போன்றன மட்டுமே இன்றியமையாத இடம் பெறுகின்றன. அவனது அரசியல் எனும் பொது வாழ்வுடன் அவனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் கொண்டதாக அமையும் தனிமனித வாழ்க்கை, வாழ்க்கை வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

வரலாற்றில் அவனுடன் பொதுவாழ்வில் துணை கொண்டோர் பற்றிய குறிப்புகள் காணப்படலாம். ஆயின் வாழ்க்கை வரலாற்றில் அவனின் ஒவ்வொரு செயலிலும் துணை நின்றோர், தொடர்புடையோர் பற்றிய குறிப்புகள் பரவலாக இடம் பெறுகின்றன. நிலையான சின்னங்கள், உண்மைக் குறிப்புகளாக அமையும் ஆவணங்கள் போன்றவற்றிலிருந்து வரலாறு வடிக்கப் பெறுகிறது. தலைவனின் நாட்குறிப்புகள், உடன் உறைந்தோர் தரும் எண்ணங்கள், தகவல்கள், அவனைப் பற்றிப் பிறர் எழுதி வைத்துள்ள கருத்துகள், அல்லது தானே உடன் பழகி அவனது பெருமை, சிறுமைகள் உணர்ந்தது போன்ற பலவற்றின் துணையுடன் வாழ்க்கை வரலாறு உருவாகின்றது.

வரலாற்றாசிரியனுக்கு நிகழ்ச்சிகளைக் காலக்குறிப்புக்கு ஏற்ப வரிசைப்படுத்தி, அவற்றில் குழப்பமின்றித்தருதலே வேலை. வாழ்க்கை வரலாற்று ஆசிரியனோ அவற்றைச் சிறப்புறத் தருவதிலும், சுவைபடத் தருவதிலும் தன் புலமையை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. கால வரிசையில்தான் நிகழ்வுகளைத்தொடுக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

வாழ்க்கை வரலாறும் அறவிலக்கியமும்

ஒருவரின் வாழ்க்கை செம்மையுறுவதற்கான வழி முறைகளைத் தந்து எப்படி வாழ்க்கை அமைய வேண்டும் எனப் போதிப்பதையே தன் பெருமையாகக் கொண்டது அறவிலக்கியம்.

இதனைத் தன் நோக்கங்களுள் ஒன்றாக வாழ்க்கை வரலாறும் கொண்டுள்ளது.[26] அறவிலக்கியம் தன் கூற்றை,

> 'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்த பின்
> தன் நெஞ்சே தன்னைச் சுடும்' (குறள். 303)

என்பது போன்று வற்புறுத்தலாக அமைக்கின்றது. வாழ்க்கை வரலாறு பெரும்பாலும் கூறிச் செல்லும் விதத்தில் அவ்வுணர்வினைக் கற்பார் பெறும்படிச் செய்கிறது. அங்கே வாழ் நெறி நேரிடையாக அறிவுறுத்தப் படுகிறது. இங்கே வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கையின் சிறப்பு கொண்டு உணர்த்தப்படுகிறது. அங்கு அறிவுறுத்தலே இயல்பாக அமைய இங்கு அது ஒரு கூறாக மட்டுமே அமைகிறது. பல் சுவைகளும் இணைந்ததாக வாழ்க்கை வரலாறு அமைவதினால் கற்பாரின் சிந்தனையைத் தம்பால் ஈர்ப்பதில் அறவிலக்கியத்தை விட முன்னிற்கிறது. இந்நிலையில் அறம் புகலும் காப்பியங்களுடன் வாழ்க்கை வரலாறு ஒத்தமைகிறது.

வாழ்க்கை வரலாறும் புதினமும்

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைப் புதினத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கும் காணப்படுகிறது. 'நாவலுக்கும் வாழ்க்கை வரலாறுகட்கும் இடையே வேற்றுமைகள் மேலெழுந்தவாரியாகக் காணப்படுவது போல் தோன்றினும், உண்மையில் அவ்வளவாக இல்லை; பெருவாரியாக ஒன்றே போல உணரத்தோற்றுகிறது. வாழ்க்கை வரலாறு என்பது 'நாவலாக்கப்பட்ட நல்வாழ்வு' என்றே நவிலாம்' என்பர்.[27] புதினம் உள்ளிட்ட எந்த ஒரு இலக்கியவகையினை எடுத்துக் கொண்டாலும் அங்கு வாழ்க்கை நிகழ்வுகள் இடம் பெறுதலானும், அவை முற்றிலும் கற்பனைக்கே இடமளித்தலானும் இவ்வொப்பாய்வின் தேவை வினாவிற்குரியது.

---

26. எனது வாழ்க்கை பல இயக்கியங்களிலும் தொண்டுகளிலும் ஈடுபட்டது. அவைகளில் நல்ல நிகழ்ச்சிகளும் இருக்கும். தீய நிகழ்ச்சிகளும் இருக்கும். நல்லன கொண்டும் தீயன விலக்கியும் மற்றவர் வாழ்வதற்கு என் வாழ்க்கை குறிப்புக்கள் ஓரளவிலாதல் துணைபுரியும் என்ற நம்பிக்கை இதை எழுதுமாறு என்னை உந்தியது. மற்றவர் வாழ்க்கைக்குத் துணை போகும் நிகழ்ச்சிகள் என வாழ்க்கையில் நல்ல வழியிலோ தீயவழியிலோ உறாதிருப்பின் இந்நூலை எழுதும் முயற்சியில் யான் தலைப் பட்டிரேன்.
    திரு. வி. க; முன்சுட்டிய நூல்; ப. 7
27. மது. ச. விமலானந்தம்; முன் சுட்டிய நூல்; ப. 11

ஆய்வாளரின் கருத்தும் பொருந்துமாறில்லை. எந்தக் கதையிலக்கியத்துள்ளும் தலைவன், தலைவி என இருவரும் சேர்ந்த நிலையில் அவர்களைச் சுற்றிக் கதை பின்னப்பட்டிருக்கும். சான்றாகச் சிலப்பதிகாரம் என எடுத்துக் கொண்டால் அங்குக் கோவலன்-கண்ணகி தலைவன்-தலைவியாக அமைகின்றனர். இது போன்றே கல்கியின் சிவகாமியின் சபதத்தை எடுத்துக் கொண்டால் மாமல்லனும், சிவகாமியும் கதைத்தலைவன் தலைவியராக உள்ளனர். ஜெய காந்தனின் 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' போன்ற மிகச் சிலவற்றிலேயே தலைவன் அல்லது தலைவி மட்டும் அமைந்திருக்கக் காணலாம். ஆனால் வாழ்க்கை வரலாறுகளில் தலைவன் அல்லது தலைவி மட்டுமே அமைவர். மற்றவர் கதைகளில் வரும் துணைப் பாத்திரங்கள் போன்று வேண்டிய நிலையில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பர். உ. வே. சாமிநாதையரின் 'என் சரித்திரம்' கற்றால் அதனுள் அவரது வாழ்க்கைத் துணைவியார் பற்றிய ஓரிரு குறிப்புகள் தவிர வேறு சிறப்புச் செய்திகள் எதனையும் பெற இயலாது. மற்றும் கிளைக் கதைகள், முதன்மையான பாத்திரங்கள், (Main Characters) துணைப் பாத்திரங்கள் (Sub Characters) எனும் பாகுபாட்டினையும் இதனுள் பின்பற்றுதல் பொருந்தாது. இவற்றாலும் இவை போன்ற பிறவற்றாலும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைப் பிறவற்றைப் போன்று தனித்த இலக்கிய வகையாகத் தான்கொள்ள முடியுமே தவிர புதினத்துடன் தொடர்புடையதாகக் கருதுதல் ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை.

தன் வரலாற்றுடன் நாட் குறிப்புகள், நினைவுக் குறிப்புகள், போன்றன தொடர்புடையனவாக அமைகின்றன.

தன் வரலாறும் நாட் குறிப்பும்

ஒருவர் தன்னைப் பற்றியும் தன் செயல்கள் பற்றியும் எழுதுதல் என்ற நிலையில் இரண்டும் ஒன்றுபடுகின்றன. நாட்குறிப்பானது (Diary) அந்தந்த நாளுக்குரிய செய்திகளை அவற்றின் கீழ் தருதலாக அமைதலினால் அவற்றினிடையே ஒரு தொடர்பு நிலையைக் காணலரிது. மற்றும் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகின்ற அளவு, பிறரைப் பற்றியும், தன்னுடன் நேரடித் தொடர்பற்ற செய்திகளைப் பற்றியக் கருத்துரைகளும் இடம் பெறலுண்டு. இவற்றின் தேவை தன் வரலாற்றில் மிகக்குறைவே. மற்றும் இலக்கியப் பண்பாக அமையும் கூறுகளையும் நாட்குறிப்புகளில் பெற முடியாது. ஒருவர் தம்மைப் பற்றியுரைத்தல் என்ற நிலையில் இவை இரண்டும் ஒன்றுபட்டு, அதனைத் தருகின்ற முறையில் வேறுபட்டு நிற்கின்றன. கூறிவருகின்ற செய்தியில்

இலக்கிய நயத்துடன் ஒரு வளர்ச்சி நிலையையும், முழுமைத் தன்மையையும் தன் வரலாற்றில் காண இயலும்.[28]

தன் வரலாறுகள் வளர்ந்துள்ள அளவு நாட்குறிப்புகள் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சி பெறவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆனந்தரங்கம் பிள்ளை யெழுதிய நாட்குறிப்பு[29] தனிச்சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

தன் வரலாறும் நினைவுக் குறிப்புகளும்

ஒருவர் தன் கடந்தகாலத்தில் நிகழ்ந்தவற்றைப்பின்னோக்கி நின்றுரைப்பது நினைவுக்குறிப்பாக (Memoirs) மலர்கின்றது. இதனுள் ஆசிரியர் தம்மைப்பற்றி நினைப்பதைவிட அதிகமாகத் தம்மோடு தொடர்புடையப் பிறரைப் பற்றியும், பல பொது நிகழ்வுகளையும் நினைவு கொள்கிறார். அவற்றிற் கிடையேயும் ஒரு தொடர்பினைக் காணல் அரிது. தன்னைவிடத் தன்னைச் சுற்றியுள்ள வற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதால் தன் வரலாற்றினின்றும் விலகி நிற்கிறது[30]. சிறுகதைகளின் தொகுப்பு

---

28. The diary is a record of daily experience the preservation of the day-by-day process of one's own life. With out regard to patterned development, narrative continuity or dramatic movement toward a climax,......Auto bio graphy sees separate occurences even in early life as moving toward and completing a pattern finally achieved in later life.

    Encyclopaedia Americana-vol. 2; Americana corporation; Newyork; p. 803.

29. பிரத்தியேகமான ஆனந்தரங்கம் பிள்ளையவர்களின் சொஸ்த லிகித தினப்படி சேதிகுறிப்பு (8 தொகுதிகள்). புதுவை ரோமன் ரோலண்டு நூலகம்; புதுவை; 1948-1978

30. The memoir devotes more attention to occurencss around and outside the writer himself .... From the memoir we learn a great deal about the society in which the subject of the memoirs moved, but little about the writer himself.
    Ibid; p. 803.

    Memoirs proper may be defined as the more personal or private aspect of public affairs...........without aiming at a self portrait, the memorist gives an account both of circumstances and himself, thus enriching as well as disorting the historical situation.

    Cassells' Encyclopaedia of World literature; J. Buchnan Brown (ed ; Gassell & company ltd. London,p. 76.

போன்று இவை அமைகின்றன. ஒவ்வொரு நிகழ்வும் நிகழ்ந்த இடம், காலம், இயல்பு, இடம் பெற்றோர் முதலானவற்றில் தொடர்பின்றித் தனித்து நின்று தம்முள்ளேயே தொடக்கமும் முடிவும் கொண்டமைகின்றன.

நாட்குறிப்புகள் போன்றே இவையும் இன்னும் தமிழ் மொழியில் மிகுந்த வளர்ச்சி காட்டவில்லை. எனினும் ஜெயகாந்தனின் நினைத்துப் பார்க்கிறேன், டாக்டர் உ. வே. சாமிநாதைய்யரின் 'நினைவு மஞ்சரி' போன்ற[31] ஒரு சில நூல்கள் எதிர்காலத்தில் இதன் வளத்தை முன்னறிவிக்கின்றன. இத்தகு நினைவுக் குறிப்புகள் அரசியல்வாதிகள், உயர்பதவியில் இருந்தோர் போன்றோரால் எழுதப்படும் பொழுது, அவை வரலாற்றாய்வாளருக்குப் பெரிதும் துணை நிற்கின்றன.[32] இதே பயன் வரலாற்றுத் தலைவர் வாழ்க்கை வரலாற்றுத் தலைவராகுங்காலும் தோன்றுகிறது. இந்நிலை நாட்குறிப்புகளுக்கும் பொருந்தும்.

இவைதவிர தனி மனிதரின் குறிப்பேடுகளும் (Journals) மடல்களும் (letters) தன் வரலாற்றுத் தொடர்புடையனவாகக் கருதப்படுகின்றன.[33] இவை அனைத்தும் வாழ்க்கை வரலாற்று மூலங்களாக அமை ்லும் குறிப்பிடத்தக்கது.

---

31. நினைத்துப் பார்க்கிறேன்; ஜெயகாந்தன்; கிறிஸ்தவ இலக்கிய சங்கம்; சென்னை; மு.ப. 1973.
நினைவு மஞ்சரி; உ. வே. சாமிநாதையர். கலைமகள் காரியாலயம்; சென்னை; 1944.

32. Since political decisions are of so complex a character and so for reaching an importance, the memoirs of Statesmen, high officials, generals etc, are an almost obligatory complement to their office and an important source for the historian.
I bid.

33. The Journal Concentrates largely on the interior life of the writer, often excluding events outside the reveries or meditations of the author's memory and imagination.
Encyclopaedia Americana-Vol. 2; P. 803.
Though letters have in recent times been replaced in part by other means of Communication, nothing Can replace their function; The fusion of Sportaneity, Self projection, and response to the other.
Cassells, Encyclopaedia of World literature; P.76.

வாழ்க்கை வரலாற்றுப் புதினம்

வாழ்க்கை வரலாற்றுடன் ஒருங்கிணைத்து எண்ணத்தக்க தாக மேனாட்டார், 'வாழ்க்கை வரலாற்றுப் புதினம்' (The Biographical Novel) எனும் ஒன்றையும் கூறுகின்றனர். ஒருவரின் வாழ்க்கையை, உண்மை மாற்றாது புதின இலக்கியப் பண்புகளான உரையாடல், கதைக்கரு, எதிர்பார்ப்பு நிலை போன்றவற்றின் மூலம் உருவாக்குதல் இதன்பாற்படும். தமிழில் இம்முயற்சி நாடக வடிவில் அமைந்துள்ளதைக்[34] காண முடிகிறது. எனினும் அவற்றில் உண்மைகளுடன் கற்பனைகளும் விரவியுள்ளமை வெளிப்படை. சமுதாயத்தின் புறக்கணிப்புக்கு ஆளானோர் பற்றிய உண்மைக் கதைகளை அவ்வாறே பெயர், இடம் மட்டும் மாற்றித்தரும் பாங்கினை[35] இவண் ஒப்பு நோக்கலாம். இந்நிலையும் சிறுகதை வடிவிலேயே மிகுதியாகக் காண முடிகிறது.[36] வாழ்க்கை வரலாற்றுப் புதினங்களை விளக்கும் பொழுது அதற்குறியாரைத் தேர்ந்து கொள்ளுதலின் தேவையும் வலியுறுத்தப்படுகிறது.[37] புதினம் போன்று ஏதேனும் ஒரு

---

34. பச்சையப்பர்; மு. வரதராசனார்; பாரி நிலையம்; சென்னை; 1951.
    கவிச்சக்கரவர்த்தி கம்பர்; இரா. பழனிச்சாமி; மல்லிகைப் பதிப்பகம்; சென்னை; மு. ப. 1965.
35. என் பெயர் கமலா; புஷ்பா தங்கதுரை; பூம்புகார் பிரசுரம்; சென்னை; மு. ப. 1982.
36. உண்மைக் கதைகள்; சிவசங்கரி; திருமகள் நிலையம்; சென்னை; 1982.
37. In recent years a third biographical form has become increasingly popular and important. It is called the biographical novel. This is biography presented in the form of a novel, with dialogue, suspense, and plot structure. The biographical novelist can use his creative imagination to develop these aspects of the novel. But he must do so only with in the frame work of truth. The novelist will have found the truth in documents, diaries, letters, journals, notes, recorded deeds......The Biographical novelist tries to catch up his readers in the emotions of his hero. Not every life will fit in to the form of the biographical novel. Dramatic elements must be present, along with an overall pattern into which the parts can be filled. Many lives, important in their achievement, do not land themselves to the nature of the novel.
    The NewBook of knowledge-Vol. 2; P. 186.

சிக்கலின் வளர்ச்சியும், உச்சமும், கதைத் தலைவர் அதனை திறம்பட வீழ்த்துவதுமான தன்மையைக் கொண்ட வாழ்க்கைகளை, வாழ்க்கை வரலாற்றுப் புதினமாக்குதல் எளிதாகும். வரலாறு மற்றும் அறிவியல் அறிஞர் தம் வரலாறு மிகுதியும் ஏற்புடைத்தாகும். 'ஜே. ஜே. சில குறிப்புகள்' எனும் சுந்தர ராமசாமியின் புதினத்தை[38] இவ்வகையில் அடக்க இயலாவிடினும், தமிழில் எதிர்காலத்தில் மலரவிருக்கும் இத்துறையில் ஒரு முன்னோடி எனக் கொள்வதில் தவறில்லை.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர்

இவ்வுலகில் வாழ்ந்த, வாழ்கின்ற மனிதர்களே இவ்விலக்கியத்துள் தலைவராதலின் அவர்தம் பொது இயல்பு யாது என்பது பற்றிய வினா எழுகிறது.

புகழ் பெற்றோர் (ஆறுமுக நாவலர் சரித்திரம்-த. கைலாசபிள்ளை) மட்டுமின்றிப் புகழுக்கு உரியோரும் தலைவராகின்றனர் (திருப்பத்தூர் திரு. கா. அ. ஷண்முக முதலியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு—கா. அ. ஷ. பத்மனாபன், கா. அ. ஷ. ரகுநாயகன்). குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மட்டுமே அறிந்த இவர்களைப் பிறரும் அவர் தம் பண்பு, சிறப்பு முதலியன குறித்து அறிய வேண்டும் என்ற நினைவில் இவ்வாழ்க்கை வரலாறுகள் எழுகின்றன.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் மறைந்தபின் எழுதுதல் (புதுமைப் பித்தன் வரலாறு-ரகுநாதன்); வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே எழுதுதல் (அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரசா-கே. பி. நீலமணி) எனும் இரு நிலைகளையும் காணலாம். தம்செயற்கரிய செயல்களால் மக்களின் சிந்தை கவரும் பொழுதும் சாதனைகள் பாராட்டுப் பெறும் பொழுதும் அவர் தம் வாழ்நாளிலேயே வரலாறுகள் எழுந்து விடுகின்றன.

எத்துறையைச் சார்ந்தவர்களாயினும் அவர்கள் தலைவர் ஆகின்றனர். சான்றாக,

1. அரசியல்—அமரர் சத்திய மூர்த்தி (வாழ்க்கைக் குறிப்புகள்) - டி. பார்த்த சாரதி.
2. சமயம் — தவத்திரு ஞானியார் அடிகள் - வெள்ளையாம்பட்டு சுந்தரம்.

---

38. ஜே. ஜே. சில குறிப்புகள் சுந்தர ராமசாமி; க்ரியா சென்னை; மு. ப. நவ. 1981.

3. புலவர் — பாவலர் சரித்திர தீபகம் - அ. சதாசிவம் பிள்ளை.
4. அறிவியல் — தமிழ் நாட்டு விஞ்ஞானிகள் - எம். எஸ். உதயமூர்த்தி.
5. சமூகத் தொண்டு — நான் கண்ட பாரதம் - எஸ். அம்புஜம்மாள்.
6. கலை — இரவிவர்மா - வித்தகன்.
7. மருத்துவம் — டாக்டர் ரங்காசாரி வரலாறு - ராஜம் கிருஷ்ணன்.
8. தொழில் — தொழில் மேதை ஜி. டி. நாயுடுவின் கதை - மெர்வின்.
9. விளையாட்டு — கால்பந்து மன்னன் பிலே - ஜே. எம். சாலி.
10. செயற்கரிய செயலாற்றியோர் — கடல் வீரன் கொலம்பஸ் - நாரா. நாச்சியப்பன்.

எனப் பல துறைகளைச் சுட்டலாம்.

ஒரு மொழியில் எழும் வாழ்க்கை வரலாற்றிற்குத் தலைவர் அம்மொழியைச் சார்ந்தவராகத்தான் இருக்கவேண்டும் என்பதும் தேவையில்லை. அவர் எந்நாட்டவரைச் சார்ந்தவராகவும் (அறநெறி பாடிய வீரகாவியம்-டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் - திலகவதி பால்) எம் மொழியினராகவும் (தாகூர்-மெய்யப்பன்) எம்மதத்தினராகவும் (காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற்றுப் பேழை-காரை. இறையடியான், மு. சாயபுமரைக்காயர்); எந்த இனத்தின் பாற்பட்டவராகவும் (டாக்டர் சண்முகம் செட்டியார்-சங்கரன்) இருக்கலாம். இவ்வேறுபாடுகள் கடந்த நிலையில் அவர்களின் பண்பும் திறமையும் பெருமையுமே இவ்விலக்கிய வகைக்குத் தலைவராகும் பெருமையை நல்குகின்றன.

இத்துறைகளில் அரசியல், சமயம், புலமை ஆகிய துறைகளைச் சார்ந்த அறிஞர்களே மிக அதிகமான நூல்களில் தலைவராகும் பெருமை பெற்றுள்ளனர். ஒருவரைப் பற்றிப் பலர் எழுதுவதற்கும் இத்துறைகளைச் சார்ந்தோர் அதிகமாக இடம் அளிக்கின்றனர். சான்றாகப் புலமைத் துறையை எடுத்துக் கொண்டால் பாரதியார் வரலாற்றை, ச. சோமசுந்தர பாரதி (பாரதியார் சரித்திரம்-1928); ஆக்கூர் அனந்தாச்சாரி (சுப்பிரமணிய பாரதி சரித்திரம்-1935); சுத்தானந்த பாரதி (பாரதி விளக்கம்-1937); சக்திதாசன் சுப்பிரமணியன் (பாரதி லீலை-1937); தி. ஜ. ர (புதுமைக்கவி பாரதியார் 1940)

செல்லம்மா பாரதி (பாரதியார் சரித்திரம்-1941); வ. ரா. (மகாகவி பாரதியார்-1944); ரா. கனக லிங்கம் (என் குருநாதர் பாரதியார்-1947); தி. இராமானுசன் (வரகவி பாரதியார்-1950); ரா. அ. பத்மநாபன் (சித்திர பாரதி-1954); யதுகிரி அம்மாள் (பாரதி நினைவுகள்-1954); கல்கி (பாரதி பிறந்தார்-1954) எனப்பலர் எழுதியுள்ளனர். இவர்களைத் தவிர இன்றும் பலர் பாரதி வரலாற்றை எழுதியுள்ளனர். காந்தி, காமராஜ், அண்ணாதுரை போன்றோர் அரசியல் துறையிலும், விவேகானந்தர் போன்றோர் சமயத் துறையிலும், பலரால் வரலாறு படைக்கப்படும் பெருமை கொண்டுள்ளனர். சமுதாயத்தில அவர்கள் கொண்டுள்ள புகழின் உச்சமே இதற்குக் காரணமாகும். மற்றும் அதனை அளவிடற்குரிய கருவியாகவும் இவ்வெண்ணிக்கை அமைகிறது. மக்கள் நடுவில் இவர்கள் பெற்றுள்ள செல்வாக்குப் பலரையும் வரலாறு படைக்கத் தூண்டுகிறது. நூல்களும் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றன. அதிலும் வரலாற்றுத் தலைவரே தம் சொற்களில் உணர்த்தும் பொழுது அவ்வரலாறு மேலும் பெருமை பெறுகிறது.

ஒரு நூலுக்கு ஒருவர்தான் தலைவர் (புரட்சி வீரர் நீலகண்ட பிரம்மச்சாரி—ரா. அ. பத்மநாபன்) எனும் பொதுநிலை மட்டுமன்றிப் பலர் தலைவராக அமைதலும் உண்டு. (என் பெருந் தலைவர்களின் இளமை வரலாறுகள்-பூவை அமுதன்). இவ்வாறு பலர் இணைந்த நிலையில் வரும் பொழுது அவர்களுக்குள்ள ஒரு பொதுத்தன்மை அதாவது அவர்கள் சிறப்புப் பெற்ற துறை (உலகக் குத்துச்சண்டை வீரர்கள் - கே. எம். சாலி); செயல் (புதுமை கண்டவர் — ஜெயா அருணாசலம்) போன்றன அமைந்து நூலை ஒருவழி இட்டுச் செல்கின்றன. இவையின்றி வெவ்வேறு துறையினைச் சார்ந்தோரும் ஒரே நூலில் இடங் கொண்டு தனித்தனியே நிற்றலும் உண்டு (மேதைகள் வாழ்விலே-ர. சண்முகம்) தமிழ் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இத்தகைய நூல்கள் பரவலான இடத்தைப் பெற்றுள்ளன.

வாழ்க்கை வரலாற்றாசிரியர்

இலக்கியத் தலைவருடன் எவ்வகையிலேனும் தொடர்பு கொண்டோர் நூலின் ஆசிரியராகும் சிறப்பினை இவ்விலக்கியம் கொண்டுள்ளது.[39] தொடர்பு என்பது வாழ்க்கை வரலாற்றுத்

39. Lives in this type (Biography) can be best written by relatives, close friends or dependents.

Dictionary of world literary terms; Joseph T. Shipley (ed); George Allen & unwin Ltd; London; 1970; P. 31.

தலைவரின் சுற்றமாக, நட்பாக அல்லதுவேறு ஏதேனும் ஒரு வகையில் உறவு கொண்டதாக அமைகிறது. சான்றாக, செல்லம்மா பாரதி (பாரதி சரித்திரம்) சீதாலட்சுமி குமாரசாமி (யோகாசன பேராசிரியர் வி. என். குமாரசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு) போன்றோர் தம் துணைவரின் வரலாற்றினைப் படைத்துள்ளனர். மறைமலையடிகளின் வரலாற்றை அவர் மகன் மறை. திருநாவுக்கரசு (மறைமலையடிகள் வரலாறு) எழுதியுள்ளமை குறிப்பிடற்பாலது. இது போன்றே தன் தந்தையார் வரலாற்றை என் தந்தையார் எனும் பெயரில் எஸ். அம்புஜம்மாள் எழுதியுள்ளார். தமையனாரைப் பற்றித் தம்பி எழுதுவதை மணி. திருஞான சம்பந்த முதலியாரின் 'வித்துவான் மணி. திருநாவுக்கரசு முதலியார் சரித்திரச் சுருக்கத்துள் காணலாம்.' தமிழிசைச் செல்வம் தந்த தமிழன்பன் ஆபிரகாம்' எனும் நூல்அவர் பேரன் ஆபிரகாம் தவப்பாண்டியனாலும், 'குணங்குடி மஸ்தான் வரலாறு' அவருடைய கொள்ளுப் பேரன் குணங்குடிதாசனாலும் வரையப்பட்டுள்ளன. சங்கரதாஸ் சுவாமிகளின் வரலாற்றை அவர் மாணவர் டி. கே. சண்முகம் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' எனும் பெயரில் இயற்றியுள்ளார். தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பற்றி உ. வே. சா எழுதியுள்ள நூல் இவ்வகையில் மிக்க புகழ் பெற்ற நூலாகும். இளமை முதல் இறுதிவரை நட்புடன் பழகிய முருக. தனுஷ் கோடி தன் நண்பர் காமராசருக்குக் 'காமராஜ் சரித்திரம்' வரைந்து சிறப்பளித்துள்ளார். பண்டிதமணியின் வரலாற்றை எழுதிய சோமலே அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் ஒருவராவார்.

''நெருங்கிப் பழகியவர்கள் ஒரு நூலைஎழுதும்போது அது சந்தேகத்துக்கு இடமில்லாததாக இருக்கும். சரியான சாட்சியங்களோடு இருக்கும். அதில் மிகைப்படுத்தப்பட்ட கற்பனைகள் இருக்க மாட்டா'' எனும் கூற்றில்[40] ஓரளவு உண்மை இருப்பினும் அவர்கள் பாலுள்ள பற்றின் காரணமாக மிகைப்படுத்திப் புகழ்தற்கும் வழியேற்படுகிறது என்பதையும் சுட்ட வேண்டியதாகிறது. குறைபாடுகளுக்கு அமைதி கூறும் பாங்கும் இவற்றில் அமைகின்றன. ரகுநாதன் தன் நண்பர் புதுமைப் பித்தனைப் பற்றி, 'புதுமைப் பித்தன் வரலாறு' நூலில், ''தமிழில் புதுமைப் பித்தன் மட்டும் கதைகள் எழுதவில்லை. எத்தனையோ பேர்கள் எழுதித்தான் வருகிறார்கள். ஆனால் மற்றவர்களின் கதைகளில் பெரும்பாலானவை இல்லாத ஊரின் இலுப்பைப்

40. கண்ணதாசன்; காமராஜ் சரித்திரம்; முருக தனுஷ்கோடி; முகப்புத் தோரணம்-ப. 9.

பூச்சரக்குகள் தாம். புதுமைப்பித்தனோ அப்படியில்லை. அவரது கதைகளோ பிறர் எழுதிய கதைகளைவிடப் பன்மடங்கு உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் போல் நிமிர்ந்து நிற்கின்றன (ப. 191). நானறிந்த வரையில் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல; ஆசியாக் கண்டத்திலேயே புதுமைப்பித்தனுக்கு ஈடான எந்தச் சிறுகதை ஆசிரியனும் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது''. (ப. 192), என்று கணித்திருப்பது மிகைப்படுத் தப்பட்ட புகழுக்குச் சான்றாம். இது மட்டுமின்றி அவரைப் புகழ வேண்டும் என்பதற்காகப் பிறரைத் தாழ்த்தியுள்ளமையும் சுட்டத்தக்கது.

இது போன்றே காணும் குறைபாட்டிற்கு அமைதி கூறுவதையும் இவரிடம் காண்கிறோம். ''ஒரு பொழுது அன்பர் ஒருவர் புதுமைப் பித்தனிடம் தமிழ் நாட்டின் சிறந்த பன்னிரண்டு சிறுகதைகளை, ஆங்கிலம், ஹிந்தி போன்ற மொழி களில் மொழி பெயர்ப்பதற்காகத் தேர்ந்தெடுத்து தரும்படி வேண்டினார். அதற்குப் புதுமைப்பித்தன் 'சிறந்த சிறுகதை களைப் பொறுக்கி எடுக்கவா? என்னுடைய கதைகள் பன்னிரண் டைத்தான் பொறுக்க வேண்டும்', என்று பதிலளித்தார் என்று கூறியபின் ஆசிரியர் 'புதுமைப்பித்தனின் இந்தப்பதில் அவரை மட்டும் திடுக்கிட வைக்காது பல எழுத்தாளர்களையும் உங்களை யுமே திடுக்கிட வைக்கலாம். ஆனால் தம்மிடமுள்ள நேர்மை யான திறமையை நேரடியாகச் சொல்வதற்குப் புதுமைப்பித்தன் எப்போதும் கூசமாட்டார்' என்று (பக் 188-189) அமைதி காட்டு கிறார். இத்தகைய போக்குகள் வாழ்க்கை வரலாற்றினின்றும் நீக்கப்பட வேண்டியனவாகும்.

நேரடியாக அறியாதவரைத் தலைவராகக் கொண்டு நூல் படைத்தலும் பரவலாகக் காணப்படுகிறது. (கௌதம புத்தர்- அ. லெ. நடராஜன்) இவ்வகையில் நூல் எழுதும் பொழுது பரந்த ஆய்வின் பயனாகக் கற்பனை எது, உண்மை எது எனப்பிரித் தறிய வாய்ப்பு உண்டு. செவிவழிச் செய்திகளுக்கு முக்கியத் துவம் அளிக்கும் பொழுது கற்பனை கலக்கவும் வாய்ப்பேற்படு கிறது. புலவர் புராணம், வாழ்க்கை வரலாற்றிலக்கியம் அன்று கற்பனைப்படைப்பே என ஓதுக்கும் பாங்கிருப்பினும் அதன் ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள்,

> இன்னம் வெகுவாய் அவர்தம் பெருமை சொல்ல
> எனக்காசை விவரமொன்றும் எய்தவில்லை
> என்னது கற்பனையாச் சிலபுலவரே போன்று
> இயம்பிடுதல் என் தகுதிக்கு ஏற்றதன்றே
> (புலவர் புராணம் 23:11)

என உண்மைக்கு இடம் வேண்டுதல் இவண் நினைத்தற்பாலது. பொது நிலையில் வாழ்க்கை வரலாற்றாசிரியர், தலைவனை நேரே அறிந்திருப்பினும் அல்லது பிறவழிகளில் அறிந்திருப்பினும் காய்தல் உவத்தல் இன்றி உண்மையை உரைத்தல் வேண்டற்பாலதாம். ஆயின் இறைவனுக்குச் சமமாக வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் போற்றியுரைக்கும் புகழ்மொழி நூல்களும் பல எழுந்துள்ளன.

இது போன்றே தன் வரலாறு எழுதுவோரும் தம் நோக்கில் தமக்கு விருப்பமற்ற அல்லது வெறுப்பு தருகின்ற நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிடுதல் கூடும். ''சில படங்களைப் பாதியில் நிறுத்தி, சில படங்களில் அதிகம் செலவழித்து, நான் பட்ட தொல்லைகள் ஒரே அனுபவத்தின் இரண்டாம் பதிப்பு. ஆகவே மீண்டும் அந்த அனுபவங்களை விவரிப்பதில் அர்த்தமில்லை,'' என்று கண்ணதாசன் தனது 'எனது சுய சரிதம்' எனும் நூலில் கூறியிருப்பதைச் சான்றாக்கலாம். இந்நூல் முழுமையும் அவரது முதல் தன் வரலாறான 'வனவாசத்தின் விட்டுப்போன பகுதிகள்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

''பெயர் தான் சுயசரிதமே தவிர அப்பெரியவர்களுடைய வாழ்க்கைப் பொதுநலப் பணியிலே தன்னை மறந்து உலகத்துக்கு எப்பவும் பாடுபடுவதிலே இன்பத்தைக் காணும் மனப்பாங்குப் பெற்றுள்ளது. மிகச் சில பேர்தான் சுயசரிதம் எழுதத் தகுதி பெற்றவர்கள்,'' என்ற கருத்து[41] தன் வரலாற்றாசிரியரின் இயல்பு குறிக்கிறது.

''இந்த சென்ற கால நினைவுகளைச் சீர்படுத்தி, ஒளிவு மறைவும், அச்சமும் அவாவும், பட்சபாதமும், அழுக்காறும் பொய்மையும் இன்றி வாய்மை குன்றாது, குறைத்தும் மிகைப்படுத்தியும் கூறாது, உள்ளது உள்ளபடியே எழுதுவதென்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதறிந்து மலைப்பெய்தினேன். எதைக் கூறுவது எதைக் கூறாமல் விடுவது என்று யோசித்து யோசித்து என் மண்டை புண்ணாகி விட்டது'' என்று கோவை. அ. அய்யாமுத்து 'எனது நினைவுகளில்' (ப. VII) கூறியிருப்பது தன் வரலாறு எழுதிவதில் ஆசிரியருக்குள்ள இடர்ப்பாட்டைத் தெளிவாக்குகிறது. இதே நிலை பிறர் வாழ்க்கை வரலாறு படைப்பதிலும் உண்டு.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் சார்ந்த துறையில் உள்ளவரே அவரது வரலாற்றினைப் படைக்கும் பொழுது அத்துறை-

---

41. வசுமதி ராமசுவாமி; நான் கண்ட பாரதம்; எஸ். அம்புஜம்மாள்; அணிந்துரை.

பற்றிய விரிந்த விளக்கங்கள் பெறல் ஏதுவாகிறது. ஓவியக் கலைஞரான இரவிவர்மாவைப் பற்றி ஓவியர் வித்தகன் எழுதியுள்ளமை இதற்குச் சான்றாகும். அரசியலில் ஈடுபாடு கொண்டோர் அரசியல் தலைவர் பற்றியும் இலக்கியத்துறை சார்ந்தோர் புலவர் பற்றியும் சமய நாட்டம் கொண்டோர் சமயத் தலைவர் பற்றியும் நூல் படைத்தல் ஓரளவு குறிப்பிடத் தக்க அளவில் காணப்படுகிறது. படைப்பாற்றல் கொண்டோரால் படைக்கப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் பிறவற்றினின்றும் இலக்கிய நயம் மிகுந்து நிற்றல் இயல்பு.

உடன் காலத்தவர் பற்றிய வாழ்க்கை வரலாறு படைக்கும் பொழுது, அவர் பற்றிய செய்திகளைத் தொகுத்தல் வரலாற்றாசிரியருக்கு எளிதாக இருக்கிறது. வரலாற்றுத்தலைவருக்கும் ஆசிரியருக்கும் உள்ள கால இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க இப்பணியும் கடினமுடையதாகிறது. கிடைக்கும் செய்திகளிலும் நம்பத்தகுந்தவை எவை, கற்பனை கலந்தவை எவை என்பதனை நன்குணர்ந்து பிரித்தல் இன்றியமையாததாகவும் சிக்கலானதாகவும் அமைகிறது. எனவே உடன்காலத்தவர் பற்றிய நூல்களே மிகுதியாக எழுவதற்கு இதுவும் ஓர் முக்கியமான காரணமாகும்.

வாழ்க்கை வரலாற்றுத் தலைப்புகள்

வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் தம் நூலுக்குப் பெயரிடும் முறையிலும் பல வேறுபாடுகளை நல்குகின்றனர். ஓரிலக்கியத்திற்கு அதன் தலைப்பும் சிறப்புத் தருகின்றது. கற்பாரைப் படிக்கவும், படித்தபின் அது பற்றிச் சிந்திக்கவும் தூண்டுதலாகத் தலைப்புகள் அமைதலுண்டு. எனவே அவை பற்றிய கருத்தும் இங்கு நோக்கப்படுகிறது. இதில் காணும் இயல்புகளாவன:

1. தலைவன் பெயர் மட்டும் சுட்டல் (தேசிக விநாயகம் பிள்ளை - சுத்தானந்த பாரதியார்); 2. தலைவரின் சிறப்புப் பெயர் மட்டும் தரல் (பண்டிதமணி-திருநாவுக்கரசு); 3. தலைவரின் இயற்பெயரைச் சுருக்கித்தரல் (வ. வே. ஸு. ஐயர் - தி. சே. சௌ. ராஜன்); 4. சிறப்புப் பெயருடன் இயல்புப் பெயரையும் இணைத்துக் காட்டல் (கலைவாணர் என். எஸ். கே - சுப்பு ஆறுமுகம்) 5. தலைவரின் பெயரின்றி, சார்ந்த துறையை மட்டும் குறித்தல் (தேசபக்தர் மூவர் - நாமக்கல் கவிஞர்); 6. தலைவரின் பெயருடன் பதவியையும் இணைத்து நிறுத்தல் (யோகாசனப் பேராசிரியர் - சீதாலட்சுமி குமாரசாமி) 7. தலைவர் பெயருடன் நூலில் முக்கியமாக வெளிப்படும் கருப்

பொருளையும் இணைத்தல் (ஆடோல்ப் ஹிட்லர் அல்லது திறமையின் வெற்றி - ஹ. பைதான் சாஸ்திரியார்); 8. தலைப் பிலேயே தலைவர் யார் என்பதனை அறிமுகப் படுத்தல் (இராம நாடகக் கீர்த்தனை இயற்றிய அருணாசலக் கவிராயர் சரித்திரம்); 9. நூலின் காலவரையறையைப் புலப்படுத் துதல் (அண்ணாவின் கடைசி நாட்கள் - நாகை தருமன்); 10. தலைவர் பெயருடன் அவர் சார்ந்த துறை குறித்தல் (இசை யுலகில் மகாவைத்தியநாத சிவன் - வி. எஸ். கோமதி சங்கர ஐயர்); 11. நூலின் இயல்பு தெரிவித்தல் (அன்னி பெஸன்ட் அம்மையார் சரித்திரச் சுருக்கம் - ப. நாராயண ஐயர்; இளமையின் நினைவுகள் - அ. மு. பரமசிவானந்தம்); 12. குறியீ டாக வைத்தல் (சரவிளக்கு - அப்துற்றஹீம்); 13. தலை வருடன் தொடர்புடைய ஊர்ப் பெயரால் சுட்டுதல் (காசி முதல் தாஷ்கண்ட வரை - மு. நமசிவாயம்); 14. யாருக்காக எழுதப்பட்டது என்பதை உணர்த்தல் (சிறுவர்களுக்கு விவே கானந்தர் - வெ. பார்த்திபன்); 15. தலைவருக்கும் ஆசிரிய ருக்கும் இடையே உள்ள உறவைக் காட்டல் (என் தந்தையார் - எஸ். அம்புஜம்மாள்); 16. வாழ்க்கை வரலாற்றுடன் தொடர் புடைச் சொற்களை இணைத்தல் (அடிக்குறிப்பு - 6 காண்க) எனப்பலவாக அமைகின்றன. நூல் பற்றியதொரு முன்னறிமுக மாகஇவை நிற்கின்றன.

உரை நடை இலக்கிய வகைகளுள் இயல்பியல் உரை நடை யாக, புனைவிலியாக அமையும் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றிய பொது நிலை விளக்கம் இங்கு அமைந்துள்ளது. பிற இலக்கியவகைகளின்றும் தனித்து சிறப்புற்றிருக்கும் பாங்கும் புலப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாற்றின் வரலாறு

ஒருவரின் வாழ்க்கை நிகழ்வுகளை வெளியிடுதல் என்பது தொன்று தொட்டு வரும் மரபாகும். இன்று மிகப் பெரிய ஆல மரமாகச் செழித்தோங்கி நிற்கும் வாழ்க்கை வரலாற்றின் வித்தினைத் தொல்காப்பியத்துள் காணமுடிகிறது. எவ்வகை இலக்கியத்திற்கும் அதன் மூலத்தைத் தொல்காப்பியத்துள் உள்ளதாகக் கூறுதல், காணுதல் ஒரு மரபாக அமைகிறது. இந்நிலை பொருந்துமா என்ற வினா எழலாம். சுமார் ஒரு நூற்றாண்டினது வளர்ச்சியை மட்டுமே கொண்டுள்ள இலக்கிய வகையின் தோற்றத்தை, ஏறத்தாழ 25 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஒரு இலக்கண நூலில், அதுவும் செய்யுள் இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுக்கும் நூலில் காணல் இவ்வினாவிற்குக் காரணமாகிறது. ''இலக்கிய வரலாற்றை உற்று நோக்கிடும் போது, பல்வேறு காலங்களின் சமுதாயத் தேவைகளையும் உந்தல்களையும் ஒட்டிப் புதிய பொருள் பழைய வடிவங்களிலும், பழைய பொருள் புதிய வடிவங்களிலும் பார்க்க முடிகிறது'' எனும் கைலாசபதியின் கூற்று[1] இங்கு விடையாக அமைகிறது.

அகம், புறம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த தமிழிலக்கியப் பொருண்மை, பிற்காலத்தில் படிப்படியே அறம், பக்தி, சமுதாயம், படைப்பாளர், போற்றல், வாழ்த்து, வசை, அரசியல், தேசியம், மொழி, காட்சிப் பொருள், நிகழ்ச்சி, வரலாற்றுப் புனைவு, புதிய கொள்கைசார் கற்பனை எனப் பலவாறாக விரிவடைந்துள்ளமை வெளிப்படை. பல பிரபந்தங்களின் தோற்றம் அக, புறப் பொருண்மைகளிலிருந்து மலர்ந்துள்ளமையைக் காண்கிறோம். கோவை,[2]

---

1. ந. தெய்வ சுந்தரம்; கைலாசபதி; தமிழ் இலக்கியக் கொள்கை-9; ச. வே. சுப்பிரமணியன், ச. சிவகாமி (பதி); உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; மு. ப. 1984; ப. 286.
2. கோவை என்பது கூறுங்காலை
மேவிய களவு கற்பு எனும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறு என்ப. (பன்னிருபாட்டியல். இ. 137)

பரணி[3] போன்றன சான்றாகும். அன்று செய்யுள் இலக்கியங்கள் பெற்ற செல்வாக்கை இன்று உரைநடை இலக்கியம் பெற்றுள்ளது. வடிவத்தில் வேறுபடினும் பாடு பொருளில் தம்முள் ஒற்றுமையும் காட்டுகின்றன. ஒன்று மற்றொன்றின் தோற்றத்திற்கு, வளர்ச்சிக்கு வழிவிடுதல் இயல்பு. இவற்றால் புத்திலக்கியங்களின் சாயல்களை, அவற்றுடன் ஒன்றுபட்டு அமையும் கூறுகளைத் தொல்காப்பியத்துள் காணல் ஏற்புடையதே. காண்பவற்றை இவற்றின் வித்தாகக் கொள்வதிலும் தடையில்லை.

ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புகள் வாய்மொழியாக அவரைச் சார்ந்தோரால் பேசப்படல் உலகியல்பு. மற்றும் வாழ்க்கையின் பல்வேறு கோணங்களே இலக்கியத்துள் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. புலவர் தம்மைப் புரந்தவர்களைப் பாராட்டி நூல் படைக்கும்பொழுது அவர் பற்றிய உண்மைக் குறிப்புகள் வெளிப்படல் இயல்பு. ஒருவரின் புறவாழ்க்கையைப் பேசுதலைப் புறப் பொருளாகக் கொண்டுள்ளமையின் தொல்காப்பியத்துள் பல கூறுகளில் வாழ்க்கை வரலாற்றின் இயல்பினைக் காணமுடிகிறது.

> காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று வகையில் கல்லொடு புணர
>
> (பொருள்:60)

எனச் சொல்லப்பட்ட நடுகல்லானது நமக்குக் கிடைக்கும் முதல் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு பற்றிய செய்தியாகும். இதனுள் மறைந்த வீரனது பெயரும் செயலும் பொறிக்கப்படுதலை,

> நல்லமர் கடந்த நாணுடை மறவர்
> பெயரும் பீடும் எழுதி, அதர் தொறும்
> பீலி ஆட்டிய பிறங்கு நிலை நடுகல்
>
> (அக நானூறு:67)

---

3. மயக்கு அறு கொச்சகத்து ஈரடி இயன்று
நயப்பு உறு தாழிசை உறுப்பில் பொதிந்து
வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்
தும் பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்பு சின மாற்றான் தானை வெங்களத்தில்
குருதிப்பேராறு பெருகுஞ் செங்களத்து
ஒரு தனி ஏத்தும் பரணியது பண்பே. (ப. பா. இ· 58)

என்பதால் பெறலாம். இவ்வுண்மையை நமக்குக் கிடைக்கும் நடுகற்கள்[4] உணர்த்தி நிற்கின்றன.

புறத்திணையின் எழுவகைத் திணைகளுள் ஒன்றாய் நிற்கும் பாடாண்திணைப் பண்பும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது. இத்திணைக்குப் பாடப்படுகின்ற ஆண்மகனின் பெருமை யுரைத்தல் எனப் பொது நிலையில் பொருள் கொள்ளலாம்.

ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்று இவை ஆய்ந்து உரைத்தன்று
(நூற்பா 9:1)

எனப் புறப்பொருள் வெண்பா மாலை விளக்கமளிக்கிறது. பாட்டுடைத் தலைவன் தம் வாழ்நாளில் ஆற்றிய அரும் பெரும் செயல்களைப் பாராட்டியுரைத்தலாக இஃதமைகிறது. இன்று, வாழ்க்கை வரலாற்று நூல்களில் பலவும் புகழ்மொழிகளாக அமைந்திருத்தலும் இம்மரபுத் தொடர்ச்சியைச் சுட்டுகிறது. இருநூற்பாக்களில் தொல்காப்பியர் பாடாண் திணையுள் அமையும் துறைகளுக்கு விளக்கமளிக்கிறார்.

கொடுப்போர் ஏத்திக் கொடா அர்ப் பழித்திலும்
அடுத்தூர்ந் தேத்திய இயல் மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீடவாயில்
காவலர்க் குரைத்த கடை நிலையானும்

---

4. அரிமிதைய மாவலி வாணராயரின் தகடூர் நடுகல்:
ஸ்வஸ்ஸ்ரீ அரிமிதைய மாவலி வாணராயர்
கங்க நாடும் புறமலைநாடும் கோயினூர் நாடும் கோவூர்
நாடும் தாயனூர் நாடும் பற்ற நாடும்......ம.......
அவர்க்குத் தாநாகிப் பிள்ளைய் கொண்டுள் புகுந்து
வஞ்சித்து நாடு கொண்டானுலிம்பன்
அவர் போரிற்றுஞ்சின பின்னைத்
தேவிமார் கருப்பிணி யருளராக
அவளைக் காத்திருந்தான் பிள்ளைப்பெறுவதுந்
தகடூர் புகுந்து நுளம்பன் பலத் தோடே துணிந்து
நாடு பாவிநார் சங்கர குட்டியார்
அவரோடுடன் புகுந்து
தகடூரில் பட்டார்
நாகந்தை சிறு குட்டியார்
கல் நாடு.
கல்வெட்டு (ஓர் அறிமுகம்); நடன. காசி நாதன், கு. மா. தாமோதரன் (தொகு); தமிழ் நாடு அரசு தொல் பொருள் அய்வுத்துறை; சென்னை; மு. ப. 1973.

கண்படை கண்ணிய கண்படை நிலையும்
காலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம்
ஆவயின் வரூஉம் புற நிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகை இத்
தொக்க நான்கும் உளவென மொழிப.

(பொருள். 87)

இங்கு விளக்கம் பெறும் இயல் மொழி வாழ்த்து, கண்படை நிலை, வேள்வி நிலை, விளக்கு நிலை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து, கைக்கிளை முதலியன பாட்டுடைத் தலைவர் வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தலைக் காணலாம். இவற்றுள்ளும் இயன் மொழி வாழ்த்து, செவியறிவுறூஉ என்பன, வாழ்க்கை வரலாற்றுடன் மிக அண்மைத்தாய் அமைகின்றன. இத்துறைகளுள் அமையும் சங்க இலக்கியப் பாக்களும் இக்கருத்தினை வலியுறுத்தக் காணலாம். பதிற்றுபத்தின் ஏழாம் பத்துள் கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதான் மீது பாடியுள்ள ‘பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே’ (63) எனும் பாடலைச் சான்றாக்கலாம். இதுபோன்றே தொடரும் நூற்பாவும் அமைகிறது.[5] ‘புறத்திணை

---

5. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயில் எடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெரு வளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள் வயின் பெருமங்கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்
நடை மிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள் மங்கலமும்
மன் எயில் அழித்த மண்ணு மங்கலமும்
பரிசில் கடைஇய கடைக் கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே (பொருள் : 88)

யின் பிறத்திணைப் பாடல்கள் பாட்டுடைத் தலைவரின் போர் வாழ்க்கைக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. இத்திணையே அவர் வாழ்க்கையின் பிற பகுதிகளையும் காட்டுகிறது.மன்னைக் காஞ்சி, அரசவாகை போன்ற துறைகளிலும் வாழ்க்கை வரலாற்றுக் கூறுகளைக் காண்பர்."

சங்கத் தமிழில் புறப்பாடல்கள் பரவலாகத் தன் வரலாற்றுக் குறிப்புகளையும், பிறர் வரலாற்றுக் குறிப்புகளையும் தருகின்றன.

யாண்டு பல ஆக, நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே (புறநானூறு191)

எனும் பிசிராந்தையாரின் பாடல் அவர் தம் இன்ப வாழ்க்கையை அவர் மொழியாகத் தருகின்றது. இதன் கண் அவரது வளமார்ந்த வாழ்க்கையும், இல்வாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் எவ்வித சிக்கலுமின்றி அமைதியான, மன நிறைவான வாழ்க்கையும் வெளிப்படுகின்றன. அரசியலில் ஈடுபாடு கொண்டவர் என்பதும், நல்லோர் பலருடன் நட்புக் கொண்டிருந்தவர் என்பதும் நாட்டுப்பற்று மிகுந்தவர் என்பதும்பாடலின் பின்பகுதியில் புலனாகிறது. தன் வரலாற்றின் முன்னோடியாகும் பெருமை கொள்கிறது.

பிறர் வரலாற்றுக் குறிப்புகள் மிகப் பரவலாகக் காணப்படுகின்றன. புரவலரைப் போற்றுதலும், அவர் தம் செயல்களை விமர்சித்தலும் புறப்பாடல்களின் இயல்பாதலின் புரவலரின் வாழ்க்கைக் குறிப்புகள் இடம் பெறுதலுக்கு ஏதுவாகிறது.

''வென்வேல்
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப,
....
இரு பெரு வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித்தாக்கிய வெருவரு நோன்தாள்
கண் ஆர் கண்ணி, கரிகால் வளவன்''

(பொருநராற்றுப்படை; 129-145)

6. சாலினி இளந்திரையன்; முன் சுட்டிய நூல்; பக். 94 - 97.

எனும் முடத்தாமக் கண்ணியாரின் கூற்றில் சோழன் கரிகாற் பெருவளத்தான் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைக் காணலாம். இவன் தந்தை இளஞ்சேட் சென்னி பல தேர்களை உடைய பெருமை கொண்டவன்; மிகுந்த கோபத்தையுடையவன் கரிகாலன்; மிகச் சிறுவயதிலேயே அரசுரிமை பெற்றவன்; ஆத்திமாலையை அணிந்தவன்; வெண்ணி என்கின்ற ஊரிலே சேர, பாண்டியரை வென்ற சிறப்புடையவன் போன்ற செய்திகளை இதில் உணர்த்துகிறார். சங்கப் பாடல்களின் இத்தகு குறிப்புகளே இந்நாளில் நம் பழந்தமிழர் பலரின் வாழ்க்கையினை ஓரளவு அறிய உதவுகின்றன.

சங்கப் பாடல்கள் பிறிதொரு நிலையிலும் வாழ்க்கை வரலாற்றிற்குப் பெரிதும் உதவுகின்றன. சங்கப்புலவர்கள் பலர் தம் புரவலர் என்ற நிலையினும் மேலான ஒருவித பற்றுதலின் காரணமாக ஒருவரைப் பற்றியே பல பாடல்களைப் பாடியுள்ளனர். இவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது குறிப்பிட்டவரின் வரலாற்றுக் குறிப்புகள் பல கிடைக்கின்றன. அதியமான் பற்றிய ஔவையார் பாடல்கள், பாரி பற்றிய கபிலர் பாடல்கள், ஆய் ஆண்டிரன் பற்றிய முடமோசியார் பாடல்கள் போன்றவற்றைச் சான்றாக்கலாம். இக்குறிப்புகளைக் கொண்டு தற்காலத்தில் முழுமையான வாழ்க்கை வரலாற்றிலக்கியம் படைக்க முயன்றுள்ளமையையும் இங்கு இணைத்து நோக்கலாம்.[7] இது போன்றே ஒரே புலவரின் பாடல்களைத் தொகுக்கும் பொழுது அவரின் தன் வரலாற்றுக் குறிப்புகளைப் பெறல் இயலும். பெருஞ்சித்திரனார், கபிலர் பாடல்களைக் சான்றாக்கலாம்.

சங்கப்பாடல்களில் 'பதிற்றுப்பத்து' வாழ்க்கை வரலாற்றுத் துறையில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பெறுகிறது. சேரமன்னர் பதின்மர் மீது பத்துப் புலவர் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுப்பான இந்நூலை ஆய்வாளர், 'பதிற்றுப்பத்தின் (கிடைத்துள்ள எட்டுப்) பத்துக்களில் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன என்று கொள்ளலாமே தவிர, அவை பெரிதும் முழுமை பெற்ற வாழ்க்கை வரலாற்று இலக்கிய முயற்சிகள் என்று கொள்ள இடமில்லை' என்பர்.[8] ஆயின் சேரர் வரலாற்றை அறிதற்குரிய மிகச்சிறந்த நூலாக இந்நூல் அமைதல் மறுக்கவியலாதது. மற்றும் ஒரு குலத்தவர் பற்றித் தொடர்ந்து அவர் காலப் புலவர் பத்துப்பாடல்களில் போற்று

7. பி. ஸ்ரீ; ஔவையார்; அல்லயன்ஸ்கம்பெனி; சென்னை; மு. ப. மார்ச் 1976;
8. சாலினி இளந்திரையன்; முன் சுட்டியது; ப. 117.

தலையும், மாறாக அவர் இவருக்கு மிக உயர்ந்த பரிசில்களை நல்குவதையும் உணரும் பொழுது அன்றைய அளவில் இதனை வாழ்க்கை வரலாற்றின் ஒரு முயற்சியாகக் கொள்வதில் தவறில்லை எனத் தோன்றுகிறது. பிற்காலத்தில் எழுந்த மெய்க் கீர்த்திகளுக்கு முன்னோடியாகவும் இதனை ஏற்கலாம்.

பதிற்றுப்பத்துள் அமையும் பதிகங்களும் இங்குக் குறிப்பிடத் தக்கன.

குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வே எள்
ஆவிக் கோமான் றேவி யீன்றமகன்
தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்கு
கபிலையொடு குடநாட்டோரூரீத்து
வான வரம்பனெனப் பேரினது விளக்கி
ஏனை மழவரைச் செருவிற்சுருக்கி
மன்னரை யோட்டிக்
குழவி கொள்வாரிற் குடிபுறந்தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யு ளடங்கிய கொள்கைக்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடினார் பத்துப் பாட்டு, என்பது போன்று ஒவ்வொரு பத்திற்கும் அவை அமைகின்றன. பாட்டுடைத் தலைவரின் பெற்றோர் மற்றும் அவரின் ஆட்சி சிறப்புப் போன்றவற்றைச் சுட்டும் இப்பதிகங்கள் தொடர்ந்து வரும் பத்துப்பாடல்களுக்கு முழு வடிவம் அளிக்கின்றன. பதிகத்தின் உரைநடைப் பகுதியில் பாடியோர், பெற்ற பரிசில், பாட்டுடைத் தலைவர் ஆட்சி செய்த மொத்த ஆண்டுகள் ஆகியனவும் அறிய வருகின்றன.

'சுட்டி ஒருவர் பெயர் கொளா' மரபினவாக அகப்பாடல்கள் அமைதலின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் அதில் இடம் பெறல் இயலாது. இருப்பினும் அருகிய நிலையில் ஒரு சில காணக் கிடைக்கின்றன.[9]

---

9. மண்ணிய சென்ற எண்ணுதல் அரிவை
புனல் தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள் நிறை
பொன் செய் பாவை கொடுப்பவும் கொள்ளாமல்
பெண் கொலை புரிந்த நன்னன்

குறுந்தொகை 292:1-5

தொடர்ந்து சிலம்பிலும், நாயன்மார், ஆழ்வார் பாடல் களிலும் தன் வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. இளங்கோ வடிகள் தம் காவியத்தின் இறுதிக் காதையில்,

வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடை
நுந்தை தாள் நிழல் இருந்தோய், நின்னை
அரசு வீற்றிருக்கும் திருப் பொறி உண்டு என்று
உரை செய்தவன் மேல் உருத்து நோக்கி
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட்டுவன் தன் செல்லல் நீங்க,
பகல் செல் வாயில் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேண் நெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து

(30:173-182)

என்று தம் துறவிற்குக் காரணம் உரைக்கிறார். பொதுவாகப் பக்திப் பாடல்களில் தன் அனுபவத்தை, இறைவன் தனக்கு அருளியதைக் காட்டும்பொழுது தன் வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற வழியேற்படுகிறது.[10] இதுபோன்றே பிரபந்தங்கள், புரவலர், அரசர்மீது எழும்பொழுது அவர்களைப் புகழ்தலின் வழி அவர்களின் அருஞ்செயல்கள் குறிக்கப்படுகின்றன.[11] அப்

---

10. உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர் தலை காவலிலாமையினால்
வயந்தேயும் உமக்காட் செய்து வாழலுற்றால் வலிக் கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றினகம்படியே பறித்துப் புரட்டி அறுத் தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே.

-திருநாவுக்கரசர்.

11. பாடிய பொய்கை களவழி கேட்டு
படிப்படியே அட்டு எறிந்து
வாடிய பொறையனைச் சிறைமீட்ட
மன்னவன் ஒரு திருமருகன்.

-குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் 103.

போதைய சூழல், மனநிலை கொண்டு புலவர் பாடிய தனிப் பாடல்களிலும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெறு கின்றன. ஔவையின் பாடல்களைத் தன் வரலாற்றிற்கும், சீதக்காதியின்மீதுள்ள பாடல்களைப் பிறர் வரலாற்றிற்கும் சான்று காட்டலாம்.[12]

இடைக்காலத்தில் எழுந்த மெய்க்கீர்த்திகள் அரசனது பிறப்பு, அவன் தேவியர் செய்த அறச் செயல்கள், பெற்ற வெற்றிகள்போன்றவற்றைத் தருதல் முன்னவற்றின்றும் சற்று விரிந்த நிலையில் அமைதலைக் காணலாம். பன்னிரு பாட்டியல் இதற்கு,

சீர் நான்கு ஆதி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன் வரலாறு சொல்லியும்
அவனுடன் வாழ்க எனச் சொல்லியும் மற்று அவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டு எனத்
திறம்பட உரைப்பது சீர் மெய்க் கீர்த்தி (இ. 114)

என இலக்கணம் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேந்தனின் மெய்ப்புகழுடன், இறுதிவரையிலான வரலாறு நவின்றும், அவன் வாழ்க்கைத் துணையுடன் சிறப்புற்று வாழ்க என வாழ்த்தியும் நிற்றலை மெய்க்கீர்த்தியின் இலக்கணம் வேண்டுகிறது. மெய்ப்புகழ், வரலாறு போன்ற சொற்களும், இதன் பொருண்மையும் தமிழில் வாழ்க்கை வரலாற்றிலக்கியத் திற்கான முழுநிலை உணர்வு, வித்து ஊன்றப்பட்டு விட்டது என்பதைக் காட்டுகின்றன. எனவே, தம்மைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எழுந்த மெய்க் கீர்த்திகளைத் தமிழில் முதன்மை வாழ்க்கை வரலாற்று நூல்கள் எனக் கொள்வதில் தவறில்லை. இவற்றிலிருந்து வளர்ந்த நிலையாக, அரசர்களுக்கு மட்டுமே வரலாறுபடைத்த நிலை

கலிங்கத்துப்பரணி-இராசபாரம்பரியம், அவதாரம் பகுதிகள்

12. கூழைப்பலாத் தழைக்கப் பாடக் குறமகளும்
முழக்குழக்குத் தினைதந்தாள்-சோழா, கேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம். -ஔவையார்
ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்சகாலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டு வாராமலே அன்னதானத்துக்கு
மார் தட்டிய் துரை மால் சீதக் காதி வரோதயனே.
-படிக்காசுப்புலவர்

சமய, இன, தொழில் வேறுபாடின்றி யாவருக்குமாயிற்று; குறுகிய வடிவில் அமைந்தவற்றை விரித்து, தெளிவாக, ஒருவர் வாழ்வின் முக்கியத்துவம் பெற்ற அகப்புற நிகழ்வுகள் அனைத்தினையும் சுவைபடத்தரல் எனலாயிற்று எனவும் எண்ணலாம். மெய்க்கீர்த்திமாலை எனவும் இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை[13] போன்றன உரைக்கக் காண்கிறோம். 'சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுள்' என இதனைக் குறித்திருப்பதும் சுட்டற்பாலது.

''கி. பி. 768 முதல் பாண்டிய நாட்டைச் சிறப்புற ஆண்டவனாகிய பராந்தகன் நெடுஞ்சடையன் அளித்த வேள்விக்குடிச் செப்பேடு, சீவிரமங்கலச் செப்பேடு, சின்ன மன்னூர்ச் சிறிய செப்பேடு ஆகிய மூன்றிலும் உள்ள மெய்க்கீர்த்திகளை முதலில் தோன்றிய மெய்க்கீர்த்திகளாக அறிய முடிகிறது.........பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் சோழ நாட்டை ஆண்ட பிற்காலச் சோழர் காலத்தில்தான் மெய்க்கீர்த்திகள் என்ற பெயருக் கேற்ப உண்மையான வடிவம் பெற்றுள்ளன.'' என்பர்.[14]

நடுகல் என்ற வடிவில் வீரர் தம் பெயரும் பீடும் பொறிக்கப் பட்ட நிலையில் தோன்றி, மன்னரின் வரலாறு முழுமையும் கூறும் அளவில் வளர்ந்துள்ள மெய்க்கீர்த்தியில்[15] வெற்றிச் செயல்கள் மட்டுமே அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இன்றைய நிலையிலும் வாழ்க்கை வரலாறு படைப்போர் வரலாற்றுத் தலைவருக்கு இழுக்குத் தருவனவற்றை முற்றிலுமாக ஒதுக்கி விடுதலைக் காண்கிறோம். மெய்க்கீர்த்தியுள் இணையும் வாழ்த்துப் பகுதி தமிழர் மரபாக அமைகிறது. 'குரிசில் வெற்றி பாடுதலே திக்குவிசையந்தான்' எனச் சுவாமி நாதம் கூறும் (171) பிரபந்த வகையும் இதன் சார்பு காட்டுகிறது.

இராச ராசன் காலத்தில் 'இராச ராசேச்சுர நாடகம்' என்ற நாடகநூல் ஒன்று இருந்ததாகப் பெரிய கோயில் கல் வெட்டு ஒன்று கூறுகிறது. அந்நூல் முதல் இராசராச சோழன் வெற்றி வரலாறு. இராசராசேச்சுரம் என்னும் கோயில் எழுப்

13. மருவு சொற்சீரடி எனும் கட்டுரைச் செய்யுள்
மரபு வழியில் செய்திடு
மற்புயன் கீர்த்தியை வித்தெடுத்து ஓதலே
வளரும் மெய்க்கீர்த்தி மாலை (பிரபந்த தீபிகை 13)

14. பூ. சுப்பிரமணியன்; மெய்க்கீர்த்திகள்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; ப. 15, 17.

15. மேற்படி ப. 19.

பித்த வரலாறு முதலானவற்றைத் தன்பாற் கொண்டதாகும் என்பர்.[16] இது சோழமன்னர் காலத்தில் அக்கோயிலின் வைகாசிப் பெருவிழாவில் நடை பெற்று வந்ததாகவும் அறிகிறோம்.[17] இவற்றை நோக்கத் தமிழின் முதல் வாழ்க்கை வரலாற்றிலக்கியமாக, இராசராசனின் வரலாறு கூறும் இந் நூல் அமைந்திருக்குமோ என எண்ண வேண்டியுள்ளது. மற்றும் வாழ்க்கை வரலாற்றைப் பிற கதை இலக்கியங்கள் போன்று அமைத்து தரும் பண்பிற்கும் இஃது முன்னோடியாகத் திகழ்கிறது எனலாம்.

வாழ்க்கை வரலாற்றிலக்கிய வரலாற்றுள் குறிப்பிடதக்க அடுத்த நூலாகச் சேக்கிழாரின் பெரிய புராணம் அமைகிறது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை நம்பியாண்டார் நம்பி திருத் தொண்டர் திருவந்தாதியாக விரித்தார்.

> புலமன்னிய மன்னைச் சிங்கள நாடு பொடி படுத்த
> குல மன்னிய புகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
> நல மன்னிய புகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்
> வல மன்னிய எறிபத்தனுக் கீந்ததோர் வண்புகழே (50)

என்பது போன்று ஒவ்வொரு பாடலிலும் ஒரு நாயனாரின் குலம், ஊர், செய்த அரிய செயல் ஆகியவற்றைச் சுருக்கமாகத் தருகிறார். இதுவே பின்னாளில் சேக்கிழாரின் சிந்தனையைத் தூண்டிச் சிவனடியாரின் வாழ்க்கையைப் பாட வேண்டுமென்ற விழைவை உண்டாக்கியது. சிவபக்தியைப் பரப்புதற்கு அடியவர்களின் வாழ்க்கையை ஒரு உத்தியாகக் கையாண்டுள்ளார். அடியவரின் பக்தி வாழ்க்கை எனும் ஒரு முக வரலாற்றை இதனுள் காணலாம். இதனை வாழ்க்கை வரலாற்றியலக்கியமாகக் கொள்வதில் கருத்து வேறு பாடுகளிருப்பினும்[18] ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இவ்விலக்கியத்தால் செயலாக்கப் பட்டது என்பதில் தடையில்லை. இன்னும் ஒருவரின் உண்மை வாழ்க்கையின் துணை கொண்டு படைப்பாளர் தம் கற்பனையையும் இணைத்துப் படைக்கும் வாழ்க்கை வரலாற்றுப் புனைவிற்கு வழிகாட்டி எனலாம்.

---

16. தி. பட்டுச்சாமி ஓதுவார் (தொகு); தஞ்சைப் பெருவுடையார் பெரிய கோயில் வரலாறு; மௌனகுரு வழிபாட்டுக் கழகம்; திருச்சி; 1968; ப. 21.
17. மேற்படி; ப. 15
18. சாலினி இளந்திரையன்; முன் சுட்டிய நூல்; பக் 141 - 144.

15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் கடவுள் மாமுனிவரின் 'திருவாதவூரடிகள் புராணம்' இங்குச் சுட்டப்பட வேண்டிய பிறிதொரு நூலாகும். காப்புடன் 545 செய்யுட்களில் சிவனருட் செல்வரான மாணிக்கவாசகரின் வாழ்க்கை விரித்துரைக்கப்படுகிறது. மந்திரிச்சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் என 7 பிரிவுகளில் மாணிக்கவாசகர் பற்றிப் பிற நூல்கள் தரும் செய்திகளுடன் செவிவழிச் செய்திகளையும் சிறப்பித்து நூலை யாத்துள்ளார். ஒருவரின் வரலாற்றைத் தரல் வேண்டும் என்ற உணர்வுடன் பெரிய புராணத்தைத் தொடர்ந்து இந்நூல் எழுந்துள்ளது. முழுமையும் ஒருவர் பற்றியதாக அமையும் முதல் நூலாக இஃதமைகிறது. மீவியல்புக் கூறின் மிகுதியால் இவ்வரலாற்றிலும் அதன் உண்மை அளவு வினாவிற் குரியதாகிறது. பெரியபுராணத்துள் விடுபட்டுள்ள சிவனடியாரின் வரலாறாக இந்நூல் நிற்பதும் சுட்டற்பாலது, பிற்காலத்தில் ஔவையார், திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர், எனப் புலவர் வரலாறுகள் எழுவதற்கு இந்நூலும் ஓர் உந்துதல் எனலாம்.

தொடர்ந்துவரும் தமிழிலக்கிய வரலாற்றில் தலபுராணங்களும் இத்துறைக்குத் தம் பங்கினைக் குறிப்பிடத்தக்க அளவு நல்கியுள்ளன. குறிப்பிட்ட தலத்திற்கு வந்து வழிபட்டுத் தம் குறை தீர்ந்தோரைப் பாராட்டு மாற்றால் ஒருசில வரலாறுகளின் சில உண்மைகள் அறிய வருகின்றன. சான்றாக, திருவாமாமாத்தூர் தலபுராணத்துள் அதன் ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள் சுந்தரர், சம்பந்தர், நாவுக்கரசர் போன்றோர் திருவாமாத்தூர் வந்து இறையருள் பெற்றதாகச் சுட்டுவதைக் காட்டலாம். இடையே அவர் பதிகங்களின் தோற்றச் சூழலும் சுட்டப்படுகிறது. ''புராணங்களில் சொல்லப்பட்ட வரலாறுகள் முழுமையும் உண்மை என்று கொள்ளா விட்டாலும், அவை ஆங்காங்கு வழங்கிய உண்மை வரலாறுகளைப் புனைந்து புராணமாகப்பாடியுள்ளமையால் உண்மை வரலாறும் சிறிது விளக்கமாகிறது. கோயிற் புராணத்தில் இரணிய வர்மன் என்ற அரசன் அந்நகரைக் கண்டான் என்பது புராணம். சிம்மவர்மன் பெயரும் அங்குக் காணப்படுகிறது. பெரிய புராணம் பாடும் திருஞான சம்பந்தர் வரலாற்றால் பாண்டியன் நெடுமாறன் சரிதையும் சிறுத்தொண்டர் வரலாற்றால் நரசிம்மவர்ம பல்லவன் வரலாறும் தெரிகின்றன. திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதிமுனிவர் பாண்டியர் பரம்பரையை விரிவாகக் கூறுகிறார். மாணிக்கவாசகர்

வரலாறும் அதனாலேயே நமக்கு விரிவாய்த் தெரிகின்றது'' எனும் கூற்றும்[19] இதனை உறுதிப்படுத்தக் காணலாம்.

தெளிவான காலவரையறைக்கு இயலாத பிற்காலத்தில் தோன்றிய தமிழ் நாவலர் சரிதை முழுக்க முழுக்க, தமிழ்ப் புலவரின் வரலாற்றினை உலகிற்கு அளிக்க வேண்டும் என்ற நினைவில் எழுந்தது. தனக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புலவரின் வரலாற்றினை அவரின் படைப்புகளின் துணை கொண்டும், செவிவழிச் செய்திகளைக் கொண்டும் வரையறுக்க வேண்டியிருந்தமையால் அதனுள் தெளிவான காலக்குறிப் பின்மை, முழுமையின்மை, கற்பனையின் தோற்றம் போன்ற குறைபாடுகளிருப்பினும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் கன்னி முயற்சியாக இதனைக் கொள்வதில் தவறில்லை. இதனுள் இறையனார் முதலாக அந்தகக்கவி வீரராகவ முதலியார் ஈறாக ஐம்பத்தொருவர் வரலாறு இயம்பப்படுகிறது.

18ஆம் நூற்றாண்டில் எழுந்த ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு 1736ஆம் ஆண்டு முதல் 1760ஆம் ஆண்டு வரையிலான செய்திகள் பலவற்றைத் தருகிறது. பலரைப்பற்றிய அறிமுகங்களையும் காணமுடிகிறது. வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலையில் இந்நூல் மிகச் சிறந்ததொரு இடத்தைப் பெறுகிறது. இதனுள் ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றி அறிந்து கொள்வதைவிட மிக அதிகமாக அக்கால அரசியலே இடம்பெறக் காணலாம்.

> ''1752 ஷு ஆகொஸ்து மீ 30உ ஆங்கிரசு ஷு ஆவணி மீ 18உ புதவாரம்.
>
> இத்தனாள் சாயங்காலமான பிறகு மமுதல்லிகான் மனுஷர்கள் நம்முட கும்பனீர் கிராமங்களை கொளுத்துகிறதும் கொள்ளையிடுகிறதுமான சமாச்சாரங்கள் அடிக்கடி ஆணையப் பிள்ளை குமாரன் றங்கப்பிள்ளை யெழுதியனுப்புகிறசேதியின் பேரிலே துரையவர்கள் மனது கிலேசம் தோத்தி அதுக்கு சானசாமி பண்ணியனுப்புகிற அலுவலின் பேரிலேயிருந்தது மல்லாமல் வெகுயோசனையின் பேரிலே யிருந்தார்''

என்பது போன்றே நூல் முழுமையும் அமைந்துள்ளது.

இலக்கியங்களில் மட்டுமின்றி இலக்கண நூல்களிலும் வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனை இருந்தமையை அறிய

---

19. மு. அருணாசலம்; தமிழ் இலக்கிய வரலாறு - பதினாறாம் நூற்றாண்டு முதல்பாகம்; காந்திவித்தியாலயம்; திருச்சிற்றம்பலம்; 1977; ப. 39.

முடிகிறது. பாட்டியல் நூல்களால் பிரபந்தங்களுள் ஒன்றாக 'வரலாற்று வஞ்சி' குறிக்கப்படுகிறது. அரசனின் வழி மரபு வரலாற்றை உரைத்தலை வஞ்சி வரலாறு என வெண்பாப் பாட்டில் (செ. 37) கூற அதனை வரலாற்று வஞ்சியெனப் பிரபந்த மரபியலும் (18) சிதம்பரப் பாட்டியலும் (6. 13) தருகின்றன. முத்து வீரியமும் (யா. ஒ. 111), பிரபந்த தீபிகையும் (15) இதனைச் சற்று விரித்துக் குலமரபுடன் தலைவனின் பிறப்பு, சிறப்பு, புகழ் போன்றவற்றை வஞ்சிப்பாவில் கூறுதல் முறை என நவில்கினறன. பிரபந்த தீபம் இதனையும் விரித்து,

> வரலாற்று வஞ்சியே, வனப்பு, ஆற்றல், கல்வி
> மரபு, குணம், குடி., வஞ்சியால் வழுத்தலே (44)

எனக் காட்டுகிறது. இவ்வகையில் எந்த இலக்கியமும் நமக்கு இன்று கிடைக்காவிடினும், இன்றைய வாழ்க்கை வரலாற்றின் முன்னுருவமாக இஃது அமைந்திருத்தல் வேண்டும் என்பது துணிபு. வாழ்க்கை வரலாற்றில் தலைவரின் பெருமையும் சிறுமையும் ஒருங்கே காண்டல் வேண்டப்படுகிறது. ஆயின் இங்குத் தலைவரின் புகழும் பெருமையும் மட்டுமே சிறப்பித்தல் தேவை என்பது வேறுபாடாகின்றது. இந்நிலை ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து வருகின்ற இலக்கிய மரபாதலானும், புலவர் பெரும்பாலும் தம் காலத்தில் உறைகின்ற வள்ளலையே பாட்டுடைத் தலைவராகக் கொள்வதாலும், அவர் முன் நூலரங்கேறல் வழக்காதலானும், புலவர் அவரிடம் பெரும்பாலும் உதவி எதிர் பார்த்து இத்தகு இலக்கியங்களைப் படைத்தலானும் இங்குச் சிறப்பு மட்டுமே சுட்டப்படுகிறது எனலாம். இவ்வகை மட்டுமின்றிச் சாதகம் [20], பெயர் இன்னிசை [21]

---

20. ஓரை திதி நிலை யோகம் நாள் மீன் நிலை
வாரம் கரண நிலை வருகிரக
நிலை ஏழு அவயவ நிலையையும் உணர்வுற்று
அவற்றை அமைத்த வற்றால் தலை மகனுக்கு
அடைவன அறைதல் சாதகம் என மொழிப.

—முத்து விரியம் யா. ஒ. 77

21. முதல்வன் ஊரின் பேரான் மொழிவன வெண்பா
அதனைத் தொண்ணூறு எழுபான் ஐம்பான் - மதர்விழி யாய்
இன்னிசை வெண்பாவிற்கும் ஒக்கும்; இயர்பெயர்
அன்னவற்றாற் கட்டுரைத்தார் ஆய்ந்து

—வெண்பா பாட்டியல் செ. 14

பெயர் நேரிசை[22], கையறு நிலை,[23] இயன் மொழி[24] ஆகிய வகைகளும் வாழ்க்கை வரலாற்றிலக்கியக் கூறுகளைத் தம் இயல்பாகக் கொண்டிலங்கக் காண்கின்றோம்.

இவ்வெண்ணங்களைத் தொகுத்து நோக்குழி, தமிழருக்கு வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனை தொல்காப்பியர் கால முதல் இருந்தது. மெய்க்கீர்த்தியில் முகம் காட்டிக் குறிப்பிடத் தக்க வகையில் அதுபெரிய புராணத்தால் வளர்ந்தது. தமிழ் நாவலர் சரிதையும், ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பும் வாழ்க்கை வரலாற்றின் வளர்ச்சி நிலையின் அடுத்த நிலையில் தம்மைக் காட்டிப் பெருமை கொண்டுள்ளன-எனும் இவை பெறப்படுகின்றன. இவற்றின் பின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மணம் கமழ ஆரம்பித்த வாழ்க்கை வரலாற்றிலக்கியம் இந்நூற்றாண்டில் நன்கு வளர்ச்சி பெற்று வீறுடன் திகழ்கிறது. ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தால் தான் தமிழில் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் தோன்றியது எனும் பொதுவான வழக்குத் தவறுடையது என்றும் தமிழின் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைச் சீர்படுத்தவும், அதிக அளவில் உருவாக்கவும் துணை நின்றது என்பது மட்டுமே உண்மை என்பதும் ஐயத்திற் கிடனின்றிப் புலனாகிறது.

---

22. இன்னிசை போல இறைவன் பெயர் ஊர் தன்னின் இயல்வதுதான் நேரிசையே—இலக்கணவிளக்கம் 830.

23. கணவனொடு மனைவி கழிந்துழி அவர்கள்
பட்ட அழிவுப் பாக்கியம் எல்லாம்
பிறருக்கு எடுத்து அறிவுறுத்தித்தாமும்
இறந்து படாது ஒழிந்த ஆயத்தாரும்
வேண்டுவன பெறும்விற லியர்குழாமும்
தனிப்படர் உழந்த செயலறுநிலையை
நிகழ்த்துவது கையறுநிலை ஆகும்மே.
—முத்துவீரியம். யா. ஒ. 139.

24. இக்குடிப் பிறந்தோர்க்கு எல்லாம் இக்குணம்
இயல்பு என்றும், நீயும் அவற்றை உடையை
என்றும், இன்னோர் போல் நீயும் இயல்பாக
வீயென்றும், உயர்ந்தோர் எடுத்து மற்று அவனை
வாழ்த்துவதாக வழுத்தல் இயன்மொழி
வாழ்த்தாம் என்ன வழுத்தினர் புலவர்.
—முத்துவீரியம். யா. ஒ. 197.

முதன்மை இலக்கியங்கள்

வாழ்க்கை வரலாற்றுத் துறை தோற்றத்தின் பின்னணி தமிழ் மொழியில் அமைந்த வரலாறு முன்னோக்கப்பட்டது. இவண் அத்துறையின் முதல் இலக்கியங்களாக, முதன்மைச் சிறப்புடையனவாகத் திகழ்வன பற்றிய குறிப்புகள் நவிலப்படு கின்றன.

உலக அரங்கில்

பைபிளில் காணப்படும் இறைத்தூதர், ஞானியர் வரலாறுகள் கொண்டு, அதனை முன்னோடியாகக் கொள்வர். தனி நிலையில் கிரேக்க மொழியில் ஜினோபோன் (Xenophon) எழுதிய சாக்ரடீசு (Socrates) முதலாவதாக அமைகிறது. இந்நூல் கி. மு. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கி. பி. முதல் நூற்றாண்டளவில் எழுந்த புளூடார்கின் (Plutarch) 'இணை வாழ்க்கைகள்' (Parallel lives) மிகவும் புகழ் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. லத்தீன் மொழியில் வாழ்க்கை வரலாற்று வரைவில் மிக்க பெருமையுடையவராகத் திகழும் சூடோனியசு (Suetonius) கி. பி. 120இல்சீசரின் வரலாற்றைப் படைத்துள்ளார். தாசிடசு (Tacitus) தன் மாமனார் அக்ரி கோலாவின் (Agricola) வரலாற்றைக் கி. பி. 97-98 இல் எழுதியுள்ளார். தொடக்க கால கிரேக்க, ரோமானிய வாழ்க்கை வரலாறுகளில் தனிமனித வரலாற்றை விட ஒரு பரம்பரை அல்லது போரின் வரலாறே மிகுதியாகக் காணப்படுகிறது; அல்லது ஒரு நீதி அல்லது தத்துவம் பற்றிய ஆய்வே திகழ்கிறது என்பர்.[25]

ஆங்கிலத்தில் முதன் முயற்சியில் குறிப்பிடத்தக்க நூல்களாக மூன்று நூல்கள் காணப்படுகின்றன. 'மூன்றாம் ரிச்சர்டின் வரலாறு' (The History of Richard III) என்பது இவற்றுள் முதலாவதாகும். 1543 இல் வெளியிடப்பட்ட இவ்வரலாறு சர்தாமஸ் மூர் கட்டுரைகளுள் (The papers of Sri Thomas More 1478-1535) ஒன்றாக அமைகிறது. இதன் படைப்பாளர் உண்மையில் யார் என்பது அறியப்படாத போதிலும், மிகத் திறமையாக வாழ்க்கை வரலாற்று நூல் அமைய வேண்டிய முறையில் கலையழகுடன் பண்பு விளக்கம் பெறும்படி இதனை அமைத்துள்ளார். தாமஸ்மூரின் வரலாற்றை அவரது மருமகன் வில்லியம் ரோபர் (William Roper) என்பார் சிறப்புற படைத் துள்ளமை (1496-1578) இரண்டாவதாகும். வரலாற்றுத் தலைவருடன் மிக நெருங்கிப் பழகியவராலும் பாராட்டப்

25. The New Book of knowledae: P. 185.

பெற்றவராலும் ஆங்கிலத்தில் எழுந்த முதல் நூலாக இது கொள்ளப்படுகிறது. இந்நூல் ஒரு நூற்றாண்டு கழிந்த பின்பே (1626) வெளியிடப்பட்ட பொழுதிலும், அவ் விடைவெளியில் கையெழுத்துப் பிரதியாகவே வாசகரிடையே சுற்றில் இருந்தது. ஜியார்ஜ் காவெண்டிஷ் (George Cavendish 1500-61) எழுதிய கர்டினல் ஒல்சேயின் வரலாறும் (The Life of Cardinal wolsey) இச்சிறப்பினைப் பெறுகிறது. மேரி அரசியாரின் (Queen Mary) காலத்தில் எழுதப்பட்டது இந்நூல். தாமஸ் கர்டினல் ஒல்சேயின் புகழின் உச்சத்தினையும், இறுதியில் ஏற்பட்ட துயரம் நிறைந்த வீழ்ச்சியையும் நேரில் கண்டே ஆசிரியர் இந்நூலைப் படைத்துள்ளார்.[26]

பதினெட்டாம் நூற்றாண்டில் வெளி வந்த (1779-1781) 'கவிஞர்களின் வாழ்க்கை' என்ற நூல் மிக்க சிறப்புடன் போற்றப்படுகிறது. இதையெழுதிய சாமுவேல் ஜான்சன் வாழ்க்கை வரலாற்று ஆசிரியருள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார். அவருக்கு முன்னர் எழுந்த வாழ்க்கை வரலாறுகள், வரலாற்றுத் தலைவரை அளவிற்கு மீறிப் புகழ்ந்து எழுதியதாக அமைந்தன. ஜான்சன் இதனை மாற்றி அமைத்தார். அவரே கூறியது போல் 'பூவிதழ் வாழ்க்கை' எழுத அவர் முற்படவில்லை. முழுமையான, விளக்கமான சித்திரமாக வாழ்க்கை வரலாற்றைப் படைப்பதையே அவர் விரும்பினார். அவரால் எழுதப்பெற்ற 'சேவேஜின் வாழ்க்கை' சிறந்த சான்றாகும் என்பர்.[27]

ஆங்கில இலக்கியத்துள் மற்றும் சில குறிப்பிடத்தக்க வாழ்க்கை வரலாறுகள் உள.[28] 1791 இல் வெளிவந்த 'ஜான்சனின் வாழ்க்கை' அவற்றுள் ஒன்று. இதைப்படைத்த பெருமைக் குரியவர் ஜேம்ஸ் பாஸ்வெல். இவர் ஜான்சனின் நட்பை நாடிப் பெற்று அவருடன் இருந்தே அவர் பேச்சுகளை அப்படியே குறித்து வைத்துக் கொண்டு, அவருடைய நுண்ணிய அறிவு, ஆராய்ச்சித்திறன், வேடிக்கையான பழக்கவழக்கங்கள், மதம், இலக்கியம், அரசியல் மற்றும் பல சிக்கல்களில் எழுந்த தத்துவ விளக்கங்கள் முதலிய அனைத்தையும் ஒன்று விடாது இணைத்து, முறைப்படுத்திச் சீரிய வாழ்க்கை வரலாற்றுக்கு வழிகாட்டியாக அமைந்தார். இந்நூல் ஜான்சனின் பேச்சுத் திறனைக் காட்டுகிறது எனினும் வரலாற்று ஆசிரியனுக்கு

---

26. Encyclopaedia Britannica - vol. 3; P.637
27. A Dictionary of Literary Terms; J. A Cuddon; Clarion Books; Delhi: Re. Ed. 1980.
28. கருத்து உதவி. திரு. பா. தேவேந்திரன்; ஆங்கிலப் பேராசிரியர்; செந்தில் குமார நாடார் கல்லூரி; விருதுநகர்.

இருக்க வேண்டிய செவ்விய முறைப்படி பாஸ்வெல் தன்னை எந்த இடத்திலும் புகுத்திக் கொண்டு பெருமை தேடிக் கொள்ள வில்லை. சிற்சில இடங்களில் பாஸ்வெல் தானே விவாதங்களை எழுப்பி ஜான்சனைப் பேசும்படிச் செய்கிறார். ஜான்சன்பால் மிகுந்த, ஆழ்ந்த பற்றுகொண்டிருப்பினும் தன்னுடைய விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடுக்காது திறமையாக, முறையோடு எழுதி ஆங்கில இலக்கிய வரலாற்றில் நிலையான இடம் பெற்றுக் கொண்டார். இவர்களே தனி மனிதர் வாழ்க்கை வரலாற்றை எழுதும் முறையை வகுத்தனர் எனலாம்.

ஆங்கில இலக்கியம் போற்றிப் புகழும் மற்றொரு நூல் சர்வால்டர் ஸ்காட்டின் வாழ்க்கை வரலாறாகும் (1838). புதினம் எழுதுவதில் உலகப்புகழ் பெற்ற வால்டர் ஸ்காட் தனது சுய சரிதையை எழுத ஆரம்பித்தார். ஆனால் தொடங்கிய சிறிது காலத்திற்குள்ளாகவே இயற்கை எய்தினார். அவர் விட்டுச் சென்ற கடனை அடைப்பதற்கென்றே அவருடைய வாழ்க்கை வரலாற்றை அவருடைய மருமான் லாக்காட் என்பவர் பல பாகங்களாக எழுதினார். பாஸ்வெல்லைப் போலவே இவரும் தன்னைப் புகுத்திக் கொள்ளாது இதை எழுதி முடித்தார். இதிலும் வால்டர் ஸ்காட்டின் குடும்பத்தைப் பற்றிய செய்தி களை விட அவரது நூல்கள், நண்பர்கள் பற்றியே அதிகம் உள்ளது.

1918 இல் லிட்டன் ஸ்ட்ரேச்சி எழுதிய 'விக்டோரியா காலத்துச் சான்றோர்'[7] (Eminent victorions) எனும் நூலும் வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகையைச் செம்மைப் படுத்துவதில் பெரும் பங்கு கொண்டுள்ளது. ஒருவரின் வாழ்க்கைச் செய்திகள் அனைத்தையும் குறிக்காது, தேர்ந்தெடுத்தவற்றை மட்டுமே பயன்படுத்தி இந்நூலை யாத்துள்ளார். இவருடைய நோக்கமே, பிறரைக் குத்திக் காட்டிக் குறை கூறுவதாக இருக்கின்றது. எள்ளல் நிறைந்திருப்பினும் நுண்ணிய அறிவுப்பார்வையும் அழகும் இவர் நூலில் இழைந்தோடுகிறது.

பிரெஞ்ச் மொழியுள் எமில்லெக்வி, அனடேல் பிராஸ், ரோமைன் ரோலண்டு, ஆன்ரே மோரிஸ் போன்றவர்கள் குறிப் பிடத்தக்க வாழ்க்கை வரலாற்றாசிரியர்களாக உள்ளனர். மோரிஸ், ஆங்கில இலக்கிய ஆசிரியர்களான டிஸ்ரெலி, பைரன், ஷெல்லி, டிக்கன்ஸ் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படைத்துள்ளார். ரோமைன் ரோலண்டு மகாத்மா காந்தியின் வரலாற்றைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தன் வரலாற்றில் காலத்தால் மிக முற்பட்டதாக ஞானி அகஸ்டசின் (Saint Augustine 354 - 430) 'ஒப்புக் கொள்கை'

(The Confessions) அமைகிறது. கி. பி. 399 இல் எழுதிடப்பட்ட இந்நூலுள் அவரது இளமைப் பருவம்; தாயிடத்துக்கொண்ட பற்று; சிற்றின்பத்திற்கும், குற்றங்களுக்கும் எதிராகக்கொண்ட போராட்டம்; உண்மைத் தத்துவத்தைக் கண்டறியச் செய்த முயற்சிகள் போன்றன மிக அழகாக நாடகக் கலைத் திறனுடன் நவிலப்பட்டுள்ளன. அதனால் இன்றும் குறிப்பிடத்தக்க சிறப்புடைய தன் வரலாற்று நூல்களுள் ஒன்றாகப் புகழப்படுகிறது. அகஸ்டஸ் தன் மரணத்திற்குச் சில காலங்களுக்கு முன் எழுதிய 'Retractions', அவரது நூல்களுக்குரிய மதிப்பீடாகும்; தன் வரலாற்று நூலிற்குச் சிறந்ததொரு பின்னிணைப்பாகவும் (Supplement) அமைகிறது.[29]

15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மர்கெரி கெம்ப் (Margery Kempe) எழுதிய நூலே ஆங்கிலத்தில் தன் வரலாறறின் முதல் நூலாகத் தோன்றியுள்ளது. லங்காஷயரில் உள்ள தனியார் நூலகம் ஒன்றில் இதன் கையெழுத்துப் பிரதி 1934 இல்தான் கண்டு பிடிக்கப் பட்டது. இறையடியார் ஒருவரின் துன்பமும், துணிவும் நிறைந்த தெய்வீக வாழ்க்கையைக் காட்டுகிறது இந்நூல். ஞானி பிரிட்கெட்டின் (St. Briget) அடியார் குழாத்துள் இணைந்ததைச் சிறப்பிக்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக 1414 இல் இவர் ரோமிற்கு மேற்கொண்ட புனிதப் பயணமும் விளக்கப்பட்டுள்ளது. இவர் மேற்கொண்ட பிற புனிதப் பயணங்களையும் சுட்டும் இந்நூல் இடைக்காலத்தில் அமையும் பயணியின் வாழ்க்கையை விளக்கமாகக் காட்டுவதுடன் பலதரப்பட்ட பண்புகள் இணைந்தவரின் வாழ்க்கையைச் சுவையுடனும் உண்மையுடனும் படம் பிடித்துக் காட்டுகிறது.[30]

மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய மனித மையத் தன்மை நோக்கு (Anthropocentric humanism மாந்தர்களைத் தங்களைத் தாங்களே ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்ள உதவியது; இவ்வாறு தோன்றிய தன்னுள் சிந்தனை (Subjectivity) தன் வரலாற்று இலக்கியம் தோன்றிடக் காரணமாயிற்று; எனவே 17 ஆம் நூற்றண்டில் நாட்குறிப்பு எழுதும் கலை வளர்ந்தது; இதுவே பின்னர் தன் வரலாறு எழுதிட, வழிவகுத்தது; அரசியல், மதம் முதலியவற்றால் போற்றப்பட்ட தன் வரலாறுகள் பின்னர் புதினங்களாகவும் உருவெடுத்தன. (டேனியல் டீபோ - ராபின்சன் குருஸோ) கவிதையிலும் படைக்க முடியும் என்பதைக் கவிஞர் வேர்ட்ஸ் ஒர்த் தன் 'நுன்முகம்' (The brelude) மூலம் காட்டினார்; உலகப்போருக்குப் பின்னர் பலதுறைகளிலும்

29. Encyclopaedia Britannica-vol. 2; P. 856
30. Ibid.

பெயர் பெற்றோர் தன் வரலாறு எழுதத் தலைப்பட்டனர் என்று ஜே. ஏ. கூட்டன் தம் நூலுள் குறிப்பிடுகிறார். (A Dictionary of literary Terms)

இந்திய மொழிகளில் வாழ்க்கை வரலாறு

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத் துறையுள் வாழ்க்கை வரலாறு குறிப்பிடத்தக்க துறையாக அமைகிறது. அன்று காப்பியங்கள் உலக மொழிகளில் பொதுமை வகித்தது போன்று இன்று புதினம், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, பயண இலக்கியம், கடிதம் போன்றன பொதுமை பெறுகின்றன. இந்திய மொழிகளில் இவற்றின் வளர்ச்சிக்கு மேனாட்டுக் கல்வி பெரிதும் துணை நின்றுள்ளது.[31]

வடமொழி, வங்காளம் போன்றவற்றில் தமிழ் மொழியைப் போன்று மிக முற்பட்ட காலத்திலேயே வாழ்க்கை வரலாற்றிலக்கிய உணர்வு தோன்றிவிட்டமையைக் காண்கிறோம். காவியங்களாகவும், நாடகங்களாகவும் அவை மலர்ந்துள்ளன. வங்க மொழியில் சைதன்னியரின் வரலாறு பலரால் பலவாறாகப் போற்றப்படும் நிலையைக் காண்கிறோம். பிருந்தாவன் தாஸ் எழுதிய 'சைதன்ய மங்கள்' எனும் நூலே முதன்முதலாக எழுந்த நூலாகும். 1540 இல் எழுதப்பட்ட இது 'சைதன்ய பாகவதம்' என்றும் அழைக்கப்படுகிறது. 3 காண்டங்களையும் 52 படலங்களையும் கொண்ட நீண்ட வரலாற்றுக் காப்பியமாக இஃதமைகிறது. கிருஷ்ணதாஸ் கவிராஜ் எழுதிய சைதன்ய சரிதாம்ருதம் (1575 - 1595) மிக்க புகழ் வாய்ந்தது. தொடர்ந்து சூடாமணி தாசர் - கௌராங்க விஜயம்; ஜயானந்தர் - சைதன்ய மங்கள்; பிரேமதாசர் - சைதன்ய சந்த்ரோதய கௌமுதி; பகீரத பந்து- சைதன்ய ஸம்ஹிதா எனப் பல நூல்கள் எழுந்தமை குறிப்பிடற்பாலது. பொது மக்கள் திரளாகக் கூடிய இடத்தில் இறையடியாரின் வரலாற்றுக் காவியங்கள் படிக்கப்பட்டன என்பதை

---

31. In spite of the earlier indignant attitude of Urdu Writers towards the western culture, the great changes that came about as a result of stimulus diffusion and the English impact in the field of poetry, literary criticism, biography, history, noval, drama, journalism and essay, ushered in a revolution unparalleled in Urdu literature. English influence on Urdu before 1857, K. A. Faruqi; indian literature (Proceedings of a seminar); Arabinda poddar (ed); Indian Institute of advanced study; Simla; March 1972; P. 221.

அறியும்பொழுது வங்க மொழியில் வாழ்க்கை வரலாற்றி லக்கியம் பெற்ற செல்வாக்குப் புலனாகிறது. அக்ஷயகுமார் மைத் திரேய படைத்த ஸிராட்ஜட் டௌலா (1867). மீர்காஸிம் (1904) நூல்களும் குறிப்பிடத்தக்கனவாம்.[32]

வடமொழியில் சங்கரர், (ஸ்ரீ சங்கர திக்விஜயம்); சைதன்யர் (பரமானந்தஸேன்—சைதன்ய சந்த்ரோதயம், சைதன்ய சரிதாம்ருதம்) போன்ற மகான்களின் வரலாறுகள் படைக்கப்பட்டுள்ளன. சிந்தி மொழியில் ஹகீம் படேக் மொகமது எழுதிய பைசி, அபுல் பசல் (Fiazi and Abu-al-Fazl) எனும் சகோதரர் வரலாறு மிக்க சிறப்பு வாய்ந்ததாகும். ஹீகிம் இவ் வரலாற்றை உரை நடையில் வடிப்பதறகாக அவர்கள் வாழ்ந்த சூகன் (Sewhan) எனும் இடத் திற்குச் சென்று குறிப்புகள் திரட்டினார். வாழ்க்கையை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் அணுகியிருக்கும் இந்நூல் உரை நடையிலும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது. இந்து-இசுலாமியர் ஒற்றுமைக்கும் துணை நிற்பதாக அமையும் இந் நூல் இதனால் கூடுதல் புகழ் பெறுகிறது. 1936 இல் வெளியிடப் பட்ட இந்நூல் இந்து இசுலாமியர் தம் வேறுபாடுகளைந்து ஒரு வராக ஒன்றுபட்டு நிற்றலை வேண்டுவதுடன் நிறைவுறுகிறது. இறைத்தூதர் ஒருவரின் வாழ்வையும் போதனையையும் ஹகிம் மற்றொரு நூலில் படைத்துள்ளார்.[33]

குணபிசாம் பருவாவின், ஆனந்தராம் தீகியால் பூகனின் வாழ்க்கை வரலாறும் (1880) பூயனின், அசாமின் வடமொழி வல்லுநரான ஆனந்தராம் பருவாவின் வரலாறும் அசாமிய மொழியின் குறிப்பிடத்தக்க வாழ்க்கை வரலாறுகளாக அமை கின்றன. பின்னது படைப்பாற்றலால் தலைசிறந்து விளங்கு கிறது.[34] குஜராத்தி மொழியில் காகா காலேல்கர் மிகச் சிறந்த வாழ்க்கைவரலாற்றாசிரியராகத் திகழ்கிறார். எண்ணற்ற வாழ்க்கை வரலாறுகள் எழுந்துள்ள பொழுதிலும் ஒரு சிலவே

---

32. பெ. நா. அப்புஸ்வாமி (மொழி); வங்க இலக்கிய வரலாறு; சுகுமார் ஸென்; சாகித்திய அக்காதெமி; சென்னை; 1965; பக். 148, 149, 155, 482.

33. L. H. Ajwani; History of Sindhi literature; Sahitya Akademi; New Delhi; 1970; P. 191.

34. Birinchi Kumar Barua; History of Assamese literature; Sahitya Akademi; New Delhi; 1964. P. 189.

குறிப்பிடத்தக்க சிறப்புடன் விளங்குகின்றன என்பர்.[35] இந்தியத் தலைவர் மகாத்மா காந்தியின் பிறப்பிடமான இங்கு அவர் தம் வரலாறு பலரால் படைத்துப் போற்றப்பட்டுள்ளது. காகா காலேல்கரின் 'பாபுனி ஜன்ஹிச; மஹுபஹன் காந்தியின்' 'பாபுஜியின் ஜீவன் பிரசங்கா' போன்றன சான்றாகும்.

மராத்தி மொழியில் வாழ்க்கை வரலாற்றிலக்கிய நூல்கள் பல தோன்றியுள்ள பொழுதிலும் இன்னும் சிறந்த வளர்ச்சியை அவை எதிர்நோக்குகின்றன. தின் தயால் ஒஜ்க்ஹா என்பவர் ராஜஸ்தானியில் சிறுவர்களுக்காகப் பல வாழ்க்கை வரலாறு களைப் படைத்துள்ளார். அவை இந்தியாவின் வரலாற்றுத் தலைவர்களைப் பற்றியனவாக அமைந்துள்ளன. ஸ்ரீலால் நத்மால் ஜோஜி என்பவரும் பல வாழ்க்கை வரலாற்று நூல்களை இம்மொழியில் படைத்துள்ளார்.[36]

உலகளாவிய புகழ் பெற்ற தன் வரலாறுகளும் இந்திய மொழிகளில் தோன்றியுள்ளன. காந்தியடிகள் தம் தாய் மொழியான குஜராத்தியில் படைத்த தன் வரலாறு (சத்யன பிரயோக அதாவ ஆத்ம கதா) சிறந்த சான்றாம். இந்திமொழி யில் ராஜேந்திர பிரசாத் படைத்த 'ஆத்மகதா'; ராகுல சாங் கிருத்தியாயனின் சுய சரிதை, வங்க மொழியில் ரவீந்திரநாத் தாகூர் அளித்த 'இளமைப்பருவம்' எனப் பல அமைகின்றன. ''மராத்தி மொழியில் வாழ்க்கை வரலாற்றில் தன் வரலாறுகள் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளன. கடந்த அறுபதாண்டுகளில் அவை பலவாக வெளிவந்துள்ளன. அவற்றுள் சிறப்பானவையாக இருப்பவை, முறையான கல்வியறிவு பெறாத பெண்களால் படைக்கப்பட்டவை'' என்பது குறிப்பிடத்தக்கது.[37]

திராவிட மொழிகளில் வாழ்க்கை வரலாறு[38]

தெலுங்கு மொழியில் தொடக்க காலத்தில் செய்யுள் நடை யில் பிரபந்த வகையில் அரசர் பற்றிய வாழ்க்கை வரலாறுகள்

---

35. C. K. Mehta; Modern Gujarati literature (Indian literature-Proceedings of a Seminar). Arabinda Poddar (ed); Indian Institute of advanced study; Simla; 1972; P. 75.
36. W. L. kulkarni; Western forms' in Modern Marathi literature; Ibid; P.424.
37. Ibid. P. 424.
38. ச. வே. சுப்பிரமணியன்; திராவிட மொழி இலக்கியங்கள்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; 1983; பக். 316-322.

அமைந்தன. குமாரதுர்ஜதியின் கிருஷ்ணராய விஜயம் விஜய ராகவ நாயக்கின் ரகுநாதாப் யுதயம்போன்றனசான்றுகள். மொழி பெயர்ப்பாக முதலில் ஜான்பனியனின் வாழ்க்கை வரலாறு 1856 இல் தோன்றியது. தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டில் பல எழுந்துள்ளன. குருஜாடா ஸ்ரீராம மூர்த்தியின் 'கவிஜீவிதமுலு' இவற்றுள் சிறப்புடையது. வாழ்க்கை வரலாற்றுத் துறையில் பல நூல் படைத்த பெருமைக் குரியவராக வாவில்ல வெங்கடேஸ்வர சாஸ்திரி திகழ்கிறார். இவர் கோகலே, திலக், நவ்ரோஜ், ரானடெ, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அன்னி பெசன்ட், அரவிந்தர் என இந்திய வரலாற்றுத் தலைவர், சமயத்தலைவர் வரலாறுகளைக் கொடுத்துள்ளார். ராயசம் வெங்கட சிவுடுவின் புகழுடை பெண்கள் (1900) பந்தாரு அச்சா மாம்பாவின் அபல சத்சரித்ர ரத்னமாலா (1901), வாவில்ல வெங்கட சிவாவதானியின் வித்யாரண்யசுவாமி (1901) என்பன இந்நூற்றாண்டின் தொடக்கால நூல்களில் சுட்டத்தக்கன. சிவாஜியைப் பற்றிய சிருங்காரகவி சர்வராய கவியின் நூலும் ஆபிரகாம் லிங்கனைக்குறித்த ஹரிசர்வோத்தமராவின்படைப்பும் மஹாகவி ரவீந்திரர் எனும் அட்டிலி சூர்ய நாராயணாவின் ஆக்கமும், மண்டபக பார்வதீஸ்வர சாஸ்திரி குறித்துப்புண்டள ராமகிருஷ்ணய்யா எழுதியதும் தேசிராஜு பெத்தபாப்பய்யாவின் வாழ்வினைக் காமராசு ஹனுமந்தராவ் இயற்றியதும், சின்னய்ய சூரி பற்றி நிட்டவொலு வெங்கடராவ் வரைந்ததும் மேலும் குறிப்பிடத்தக்க பிற நூல்களாகும்.

கேரளவர்மாவின் 'மஹத் சரித்ர சங்கிரகம்' மலையாள மொழியின் முதல் வாழ்க்கை வரலாற்றிலக்கியமாக அமைகிறது. தொடர்ந்து ராமராயர் லக்ஷ்மணராயர் படைத்த திருவிதாங் கூர் திவானான சர். டி. மாதவராயரின் வாழ்வு (1891) என்பதும் ஆங்கிலம் வழி வந்த பெரியோர் வரலாறும் (1895) அமைகின்றன. 'ஒய்யாரத்து சந்து மேனோனின் வாழ்க்கை வரலாறு'; பி. கே. பரமேஸ்வரன் நாயரின்' 'ஸாஹித்ய பஞ் சானன் சி. வி. ராமன் பிள்ளை; என். பாலகிருஷ்ணன் நாயரின் 'ராஜா ரவிவர்ம'; புத்தேழத்தின்; 'சக்தன்தம்புரான்' போன்றன புகழ் வாய்ந்தவையாக விளங்குகின்றன. இலக்கிய வாதிகள் பற்றி அமையும் வாழ்க்கை வரலாறுகள் பெரும் பாலும் இலக்கிய வரலாறு, திறனாய்வு போன்றே அமைந்தன எனவும் கூறுவர். பி. அனந்தன் பிள்ளையின் கேரளபாணினி, கிட்டுண்ணி நாயரின் 'வள்ளத்தோளின் வாழ்க்கை'போன்றன இத்தகையன.

வாழ்க்கை வரலாற்றில் பேனாமுனைச் சித்திரங்கள் (Sketches) என வாழ்வுக் குறிப்பு-சுருக்கவகையை மலையாளத்

தில் தனியே சுட்டுகின்றனர். இதன் முதல் முயற்சி ஈ. வி. கிருஷ்ண பிள்ளையிடம் அமையினும் அவர் இயற்றியன கேலிச் சித்திரங்களாகும். வைக்கம் அப்துல்காதரின் 'தூலிகா சித்ரங்ஙள்' டாக்டர் எஸ். கே. நாயரின் 'நான் கண்ட சாகித்யகாரன்மார்' ஸுகுமாரன் பொற்றக் காட்டின் 'வயக்திமுத்ரகள்' போன்றன எடுத்துக் காட்டுகள்.

இலக்கிய வரலாறு, இலக்கியத்திறன் காணல் எனும் நிலையில் புலவரை இணைத்து தருவதாகவழங்கும் வரலாறுகள் பல கன்னட மொழியில் எழுந்துள்ளன. பம்பமஹாகவி, ரன்ன கவி, ஹரிஹரதேவ, முத்தண்ணா என அவை அமைகின்றன. மற்றும் அரசியலிலும் பிற துறைகளிலும் பெருமை பெற்ற மக்கட் சித்திரங்கள் காணப்படுகின்றன. த. பா. குலகர்ணியின் ஹக்கி நோட, ஜி. பி. ராஜரத்தினத்தின் ஹத்து வருஷ; காரந்தரின் ஹுச்சுமனஸின ஹத்து முக; நவரத்ன ராமராயரின் கெலவு நெனபுகளு போன்றன இம்மொழியில் சிறப்புடை ஒரு சிலவாம்.

தெலுங்கிலும் மலையாளத்திலும் பல தன்வரலாறுகள் எழுந்துள்ளன. கந்துகுரி வீரேசலிங்கம் பந்துலுவின் ஸ்வய சரித (1910, 1917) தெலுங்கில் இவ்வகையில் முதல் நூலாகும். கே. என். கேசரியின் நாசின்னனடி முச்சதலு மிக்க சிறப்புடையது. அய்ய தேவர காலேஸ்வர ராவின் நா ஜீவித கதநவ்யாந்ரமு; தரிசி செஞ்சய்யாவின் நேனுநாதேசம் என்பன அரசியல் சமூக, பண்பாட்டு வரலாறும் வழங்குவன. பீதாபுரம் தாசரி லக்ஷ்மண சுவாமியின் வாழ்க்கை வரலாறு ஹரிகதைக் கலைஞனை வெளிப்படுத்துகிறது. எல். வீரபத்ரய்ய சௌதுரியின் வரலாறும் இவ்வகையில் புகழ்பெற்றது. வைக்கம் பாச்சு மூத்ததின் சுருக்கமான சுயசரிதைக் குறிப்பு (1890) மலையாளத்து தன்வரலாறுகளில் முதலில் தோன்றிய பெருமை கொள்கிறது. பி. கல்யாணி அம்மாவின் 'வியாழவட்ட ஸ்மரணகள்' இரண்டாவதாகத் தொடர்கிறது. மற்றும் ஈ. வி. கிருஷ்ண பிள்ளையின் ஜீவித ஸ்மரணகள்; பி. கே. நாராயண பிள்ளையின் 'ஸ்மரண மண்டலம்'; கே. எம். பணிக்கரின் ஆத்மகத; ஸி. கேசவனின் ஜீவித ஸமரம்; கே. பி. கேசவ மேனனின் 'கழிஞ்ஞகாலம்' என்பன சுட்டத்தக்கன.

திராவிட மொழிகள் உள்ளிட்ட இந்திய மொழிகள் அனைத்திலும் எழுந்துள்ள வாழ்க்கை வரலாறுகளை அறிந்த வகையில் ஒப்பு நோக்கும்பொழுது சில பொதுச் செய்திகள் அறிய வருகின்றன. இம்மொழிகள் அனைத்திலும் மூலமாகவோ அல்லது மொழி பெயர்ப்பாகவோ இந்தியப் பெருந்தலைவர், சமயத்

தலைவர், இலக்கியப் படைப்பாளர் போன்றோர் வரலாறுகள் சாதி, மதம், மொழி கடந்து வழங்கும் பெருமை கொள்கின்றன. இதுபோன்றே உலகப் பெரியார் வாழ்வும் அமைகின்றன. இந்நிலைக்கு மொழிபெயர்ப்புத் துறையும் சாகித்திய அக்காதெமியும் உறுதுணையாகின்றன.

தமிழில் முதல் இலக்கியங்கள்

1868இல் சோமசுந்தர அடியவர் எழுதிய 'அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு' முதல் வாழ்க்கை வரலாற்றிலக்கியமாக அமைகிறது. மாறாக ஜே. ஏ. கதிர்வேலுப் பிள்ளை படைத்த 'லார்ட்கிளைவ் சரித்திரம்' எனும் நூலை முதலாவதாகக் கொள்வாரும் உண்டு.[39] ஆயின் அந்நூல் 1871இல் தான் வெளிவந்துள்ளது என்பதும், மூல நூலாகவன்றி மொழிபெயர்ப்பாக அமைகிறது என்பதும் இவண் சுட்டற்பாலது. இந்நூலே உரைநடை வடிவம் கொண்டுள்ளது, எனவே முதனூலாகும் என்று உரைக்கினும் இதற்கு முன்பே 1869இல் திருத்தணிகை. சரவணப் பெருமாளையர் 'திருவள்ளுவர் சரித்திரம்' எனும் நூலை வெளியிட்டுள்ளார். அது பல தனிப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு உரைநடையில் அமைந்துள்ளது. மற்றும் 1870இல் சிற்றூர் வேங்கட தாசர் என்பார் 'மஹா பக்த விஜயம்: முதலாவது ஜெயதேவஸ்வாமிகளின் சரித்திரம்' எனும் வரலாற்றும் வரைந்துள்ளார். 76 பக்கங்களில் உரைநடையில் அமையும் இந்நூல் தமிழ் மரபுப்படி பாயிரத்துடன் தொடங்கி 12 அத்தியாயங்களில் ஜெயதேவரின் வரலாற்றைக் கூறிச் செல்கிறது. எனவே கதிர்வேலுப்பிள்ளையை இத்துறையின் முன்னோடியாகக் கொள்ளல் பொருந்தாதாம்.

அச்சுதானந்த சுவாமிகளின் வரலாற்றைப் படைத்தவர் அவரது சீடராவார். எனவே இவ்வரலாற்றில் குறித்த செய்திகள் ஆசிரியரால் நேரில் அறிந்து எழுதப் பெற்றவை எனக் கொள்ளலாம். 86 செய்யுட்களைக் கொண்ட சுருக்கமான நூலாக இஃதமைகிறது. கலாநிதி அச்சுக் கூடம் இதனை வெளியிட்டுள்ளது. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரான அச்சுதானந்த சுவாமிகளும் நூலாசிரியராகத் திகழ்கிறார். குருவின் பெருமையையும், தத்துவங்களையும் விளக்கும் முகமாக 896 செய்யுட்கள் கொண்ட 'தியானானுபூதி' எனும் நூல் இவரது படைப்பாகும். தமிழின் முதல் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் புலவராக, இறையடியாராகத் திகழும் ஒருவரைத் தலைவராகக் கொண்டு செய்யுள் வடிவில் இயற்றப்பட்டுள்ளது. உடன் காலத்

39. சாலினி இளந்திரையன்; முன்சுட்டிய நூல்; ப. 160.

தவரால்-நெருங்கிப் பழகிய சீடரால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தன் குருவின் வரலாற்றைப் படைத்து சோமசுந்தர அடியவர் இத்துறைக்கு முன்னோடியாகிறார்.

தமிழின் முதல் தன் வரலாறும் செய்யுள் வடிவமே பெற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து எண்ணற்ற இலக்கியங்களைப் பக்திப் பொருண்மையுள் தோற்றுவித்துள்ள வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் வரலாற்றையும் 'குருபரதத்துவ நூல்' ஆக வடித்துள்ளார். கிறித்தவக் கம்பர் கிருஷ்ண பிள்ளை 1893 இல் எழுதிய, 'பாளையங் கோட்டை எச். ஏ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரான வரலாறு' எனும் நூல் தன் வரலாற்று நூல்களில் முதன்மையானது என்றும் 19 ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய ஒரே தன்வரலாற்று நூல் இஃது என்று கருதலாம் என்றும் நவில்வர் அதன் பதிப்பாசிரியர்.[40] ஆயின் குருபரதத்துவ நூல் 1882 இல் இயற்றப்பட்டமை நூலாசிரியரால்,

> தாவில் கலியுகத்து ஆண்டு ஐயாயிரத்துட்
> பதினெழு தள்ளித் தோன்றும்
> மாவிசுவிற் புரட்டாசித் திங்கள் பத்தாம்
> தேதி, திரவார(து) அத்தம்
> மேவிய நாள், வேதாந்த, சித்தாந்த
> சமரசமே விளக்கும் மார்க்கம்
> மூவிரண்டும் களிகூரும் குருபரதத்துவத்
> திருநூல் முடித்திட்டேனே

எனக் குறிக்கப்பட்டிருப்பதால் இதுவே முதல் நூல் என்பது வெளிப்படை. உரைநடை அமைப்பிலேயே அந்நூல் முதலில் தோன்றியுள்ளது எனலாம். மற்றும் தன் வாழ்வின் ஒரு நிகழ்ச்சியையே அது முதன்மைப் படுத்தி மொழிந்து முழுமை பெறாமையும் நோக்கத்தக்கது.

குருபரதத்துவ நூல், வரலாற்றுச் சருக்கம் முதலாகச் சமயாதீதச் சருக்கம் ஈறாக 29 சருக்கங்களில் 1240 பாடல்களால் இயன்றுள்ளது. பாயிரத்துடன் துவங்கி வாழ்த்துடன் முடிந்துள்ளது. ஏட்டுச்சுவடியாகவே இருந்த இந்நூல் 1966 இல் சிரவணபுரம் கௌமாரமடாலயம் தண்டபாணி மூர்த்தி திருக்கோயில் கும்பாபிசேக விழாவின் போது வெளிவரும் சிறப்பினைப் பெற்றது. சிரவைக் கௌமார மடாலயம் வெளியிட்டுள்ளது.

40. வீ. ஞான சிகாமணி; 1978; ப. 2.

ஆசிரியர் இந்நூலினிடத்துக் கூறியுள்ள செய்திகள்; தனது தவமுயற்சி, இறைவழிபாடு, கனவு, நனவு, நிட்டைகளில் இறைவன் தனக்குக் கூறிய அருளுரைகள், திருவருட் சோதனை, தன் நலமே பெரிதென்று எண்ணுதலின்றிப் பிற உயிர்களுக்கு அருளுதல், கடன் பெற்றும் பெரும் பூசனைசெய்தல், பலதலங்களுக்குச் செல்லுதல், ஆங்காங்குள்ள கடவுள் மீது தமிழ்ப் பாடல்பாடுதல், அப்பாடல்களை அரங்கேற்றுதல், சமயபேத மற்ற சமரசக் கொள்கை, தான் செய்த செயல்கள் குணமாயினும் குற்றமாயினும் உள்ளதை உள்ளபடிக் கூறுதல், கொலை புலை அற்ற, தூய நெறியை உலகில் அமைத்தல், அதை உலகிற் புரியுமுன் அழிவற்ற முத்தியை இறைவன் உதவினாலும் பெறவிரும்பாமை முதலியனவாகும் என்பர். [41]

இருபத்திரண்டு சருக்கங்களில் வரலாறும், அநுபவமும் கலந்து கூறி, பின்பு சூரியன் சிவன் சக்தி திருமால் கணபதி முருகன் என்ற அறுசமயக் கடவுளருக்கும் தனித்தனியே தனக்களித்த அனுபவம், அவர்களிடம் தனக்குள்ள உரிமை, அறுபடை வீட்டில் தனக்குள்ள தொடர்புகளை எடுத்துக் கூறியுள்ளதோடு தனித்தனி சருக்கமாகவும் இயற்றியுள்ளார். இவற்றுக்கெல்லாம் ஆதரவான பொதுக்கடவுளான சமயாதீதப் பகுதியில் மேலான சமரசக் கருத்தையும் விளக்கியுள்ளார்.

இவை முதலாகத் தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் இரு நிலைகளிலும் இடையறாது தோன்றிக் கொண்டே இருக்கின்றன. சிறுகதை, புதினம் போன்று இவையும் பொது மக்கள் இலக்கியமாக இன்று சிறப்புற்றுள்ளன. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளோர் மீதும், பல துறைகளிலும் புகழுடன் விளங்குபவரில் தம்மைக் கவர்ந்தவர் மீதும் மக்கள் கொள்ளும் அன்பும், அவர் தம் வரலாறு அறிய காட்டும் விருப்பமும் இப்பெருக்கத்திற்கு ஓர் காரணமாகும். தமிழில் இவை முதற்கொண்டு எழுந்துள்ள வாழ்க்கை வரலாறுகள் பற்றியதொரு கண்ணோட்டத்தினைப் பின்வரும் கட்டுரைகளில் விளக்கமாகக் காணலாம்.

41. தி. செ. முருகதாசஐயா ; குருபரதத்துவம் நூல்-முகவுரை.

வாழ்க்கை வரலாற்று மூலங்கள்

தன்னுணர்வின் வடிகாலாக, புலமையின் வெளியீடாக, கற்பனையின் கருவூலமாக அமையும் இலக்கியங்களினின்றும் வாழ்க்கை வரலாறு மிகுதியும் வேறுபடுகிறது. வாழ்க்கை வரலாற்றைச் சுவைபட அமைப்பதிலும் நிகழ்ச்சிகளை முரணின்றித் தெளிவாகத் தருவதிலும், தலைவரின் பண்பினை இயல்பாக உணர்த்துவதிலுமே வாழ்க்கை வரலாற்றாசிரியர் தம் திறமையைக் காட்ட வேண்டியுள்ளது. இதற்காக அவர், வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய ஒரு முழுமையான அறிவினைப் பெற வேண்டியுள்ளது. அதற்குத் துணை நிற்பன வற்றை வாழ்க்கை வரலாற்று மூலங்கள் எனலாம். எவையெவை தமக்கு இந்நிலையில் துணை நிற்கின்றன என்பதை அவ்வாசிரியர் வழியாகவே அறிய முடிகிறது.

1. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் தரும் குறிப்புகளும் நாட் குறிப்புகளும் இதில் முக்கிய இடம் பெறுகின்றன. 'நெருங்கிப் பழகிய நிலையில் எனது எண்ணத்தையுணர்ந்த பண்டிதமணியவர்கள் தாம் வைத்திருந்த குறிப்புகளையெல்லாம் அன்புடன் என்னிடம் கொடுத்தார்கள்' என்பர் சோமலெ.

2. உடன் உறைந்தோர் தரும் கருத்துகள், குறிப்புகள் போன்றன வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் உண்மை நிலையினை ஆராய்ந்துணர பெருமளவு உதவுகின்றன. ''இந்த நூலை எழுதுவதற்காக திரு. சோமலெ பத்துமாதகாலம் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். ஒ. பி. ஆர். உடன் பழகிய முன்னூறுக்கு மேற்பட்ட வயது முதிர்ந்த பெரியோர்களைச் சந்தித்து விஷயங்களைச் சேகரித்தார்'' என்பதினின்றும்[1] இதன் தேவை புலனாகிறது.

---

1. நா. மகாலிங்கம்; விவசாய முதலமைச்சர்; சோமலெ; அணிந்துரை. உடன் பழகியவராக இந்நூல் அறிவிப்பவர்கள்;

3. கல்வெட்டுக்கள் நம்பிக்கையான கருவிகளாக இலங்குவதைக் கா. ம. வேங்கடராமையா அமைத்துள்ள 'சோழர் கால அரசியல் தலைவர்கள்' நூல் மூலம் அறியலாம். மிக முற்பட்ட காலத்தவர் பற்றிய வரலாற்றினை அமைக்கும்போது இத்தகையன ஐயத்திற்கு இடமின்றி எழுதத்துணை நிற்கின்றன. ஆயின் இவற்றினின்றும் முழுமையான வாழ்க்கை வரலாற்றினைப் படைத்தல் இயலுமா என்பது ஆய்விற்குரியது.

4. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் கடிதங்களும் இவண் குறிப்பிடத்தக்கன. "மற்றவை பல சமயங்களில் அவரும் அவருடைய சிநேகிதரும் எழுதிய புத்தகங்களிலிருந்தும் கடிதங்களிலிருந்தும் திரட்டப்பட்டன" எனும் குறிப்பு இதற்குக் காட்டாம்.[2]

5. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றி மற்றோர் எழுதி வைத்த நூல்களும் சிறந்தமூலமாக விளங்குவதை 'ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 300 புத்தகங்களுக்கு மேல் ஆராய்ந்து பலமதப் பெரியோர்களை நேரில் கண்டு விஷயங்களைச் சேகரித்திருக்கிறார்' என்பதால்[3] பெறலாம்.

6. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் படைப்புகளும் உதவ முடியும் என்பதை 'நூல்களை ஆராயும் பொழுதெல்லாம் ஆசிரியர்கள் வரலாற்றைப் பற்றித் தெரிய வந்தனவற்றையெல்லாம் குறித்துக் கொள்ளும் வழக்கத்தை மேற் கொண்டேன்' என்னும் உ. வே. சா. கூற்றால்[4] உணரலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் அளித்த பேட்டிகள், சொற்பொழிவுகள் போன்றனவும் இதனுள் இணைத்து எண்ணத்தக்கன. பாணனின் 'தமிழக அமைச்சர்கள்' எனும் நூல் அமைச்சர்களை நேரடியாகப் பேட்டி கண்டு அதன் மூலம் உருவாக்கப்பட்டது என்பதும் நவிலற்பாலது.

பதவியிலிருந்தபோது உயர் பதவியில் இருந்தவர்கள்; முதலமைச்சரின் அலுவலகத்தில் பணிபுரிந்தவர்கள், அவர் நியமித்த அமைச்சர்கள், அவருடைய அரசியல் கட்சியினர், மாற்றுக் கட்சியினர், அவருடைய உடல் நலத்தைப் பேணியவர்கள், மருத்துவர்கள், விமானம் ஓட்டியவர்கள், முடி வெட்டியவர்கள் ஆகியோர்.

2. எலிசபெத் சொர்ணம் அப்பாசாமி, பண்டிதை ரமாபாய்; முன்னுரை.

3. பதிப்பாளர்; உலக மகா புருஷர்கள்; நஜன்; பதிப்புரை.

4. ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம்; முகவுரை.

7. வாய் மொழியிலக்கியமும் வாழ்க்கை வரலாற்றிலக்கியப் படைப்பிற்கு உதவ இயலும் என்பதனை, ''வரலாறுகள், நாடோடிப் பாடல்கள், தென்னாட்டுச் சீமையிலே ஆங்காங்கே வாய் மொழியாக வழங்கும் கதைகள் முதலிய பலவற்றையும் உள்ளத்தில் கொண்டு அழகு தரும் வீரஞ் செறிந்த வரலாறாக இதனை அமைத்தனர் ஆசிரியர்'' எனும் உரையால் காணலாம்.[5]

8. செய்தி ஒலிபரப்புக் கருவிகளின் துணை கொண்டும் வாழ்க்கை வரலாறு வடிக்க இயலும் என்பதனை ஜே. எம். சாலியின் 'உலக குத்துச் சண்டை வீரர்கள்' நூல் அறிவிக்கிறது. ''1964 முதல் 1971 வரை நடைபெற்ற பிரபலமான குத்துச் சண்டைகளைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நேர்முகமாக அல்ல; டெலிவிஷனில் சிங்கப்பூரில் பத்திரிகையாளனாக நான் பணியாற்றி வந்த ஆண்டுகளில் குத்துச் சண்டைகளை ஒன்று விடாமல் பார்த்து வந்ததுடன் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளையும் வருணனைகளையும் தொகுத்து வைக்கவும் தொடங்கினேன். விளையாட்டு வீரர்களைப் பற்றிய சில நூல்களை அந்த அடிப்படைகளைக்கொண்டு தான் எழுதி வந்திருக்கிறேன். உலக குத்து சண்டை வீரர்கள் என்ற இந்நூலும் அப்படித்தான்'' எனும் ஆசிரியர் கூற்று இதனை விளக்குகிறது.

தங்களின் நாட்குறிப்பிலும், பெரும்பாலும் தங்கள் சிந்தையில் ஒதுங்கியிருந்த குறிப்புகளை நினைவிற்குக்கொண்டு வருவதன் மூலமும் தன் வரலாறுகள் எழுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள கூறுகளில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டன இணைந்து இவ்விலக்கியத்தை உருவாக்குகின்றன. பெரும்பாலும் ஒன்றிற்கு மேற்பட்ட மூலங்களின் இணைவில்தான் எழுகின்றன.

ஒரு சிறந்த வாழ்க்கை வரலாற்றிலக்கியம் உருவாவதற்கு ஆசிரியர் மேற்கொள்ளும் முன்னேற்பாடுகள் அதன் படைப் பருமையை உணர்த்துகின்றன. பொன்னியின் புதல்வரைப் படைத்த சுந்தா பற்றி, கி. ராஜேந்திரன், ''அடுத்தபடியாக சுந்தா, கல்கியின் நூல்களையெல்லாம் படித்தார். ஏற்கனவே படித்திருந்தவற்றை மீண்டும் புதுக்கண்ணோட்டத்தில் படித்தார். புத்தகங்களாக வெளிவராத கதை கட்டுரைகளையும் தேடிக் கண்டுபிடித்து ஆராய்ந்தார். அப்புறம் கல்கியின் பல்வேறு பணிகளுக்கும் தனித்தனி நோட்டுப் புத்தகங்கள் போட்டுக் கொண்டு குறிப்பெடுக்கத் தொடங்கினார். பிறகு கல்கியின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் சந்தித்துப் பேசித்

5. கோ. நீ. அண்ணாமலை; பகதூர் வெள்ளை.

தகவல்கள் சேர்த்தார். இவ்வளவும் செய்த பிறகு நோட்டுப் புத்தகங்களில் குறிக்கப்பட்டுள்ள வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி களைக் கல்கி தமது இலக்கியப் படைப்புகளில் எவ்வாறு கையாண் டிருக்கிறார் என்று ஆராயத் தொடங்கினார். அதற்குக் குறிப்பு எடுத்தார். இதன் பிறகுதான் எழுதத் தொடங்கினார்'' என்று கூறியிருப்பது வாழ்க்கை வரலாறு எப்படி எழுத வேண்டும் என்பதற்கு ஓர் வழிகாட்டியாக அமைகிறது.

மிகச் சிறந்த வாழ்க்கை வரலாறுகள் பல படைத்துள்ள அ. லெ. நடராஜன் ஒவ்வொரு நூலும் முடிந்தவுடன் அவ்வவ் துறையைச் சார்ந்தோரால் அல்லது வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய தெளிந்த அறிவுடையோரால் சரிபார்க்கச் செய்து பின் வெளியிடுதல் குறிப்பிடத் தக்கது. வரலாற்றில் வாய்மையே நிலவ வேண்டும் என்பதில் அவர் காட்டும் விழை வினை, வாழ்க்கை வரலாற்றிலக்கியப் படைப்பாளர் அனைவரும் பின்பற்ற வேண்டும்.

ஒருவர் பற்றிப் பலர் தனித்தனியே வாழ்க்கை வரலாற்றிலக் கியம் படைப்பதும் இவண் கருதத்தக்கது. அவ்வேளையில் மீண்டும் ஒரு வாழ்க்கை வரலாறு படைப்பதன் தேவை, நோக்கம் முதலானவற்றைச் சிந்தித்துச் செயல்படல் சாலச் சிறந்தது. கூறியது கூறலாக அமைதலினால் யாதொரு பயனுமில்லை. எனவே முன்வந்துள்ள வாழ்க்கை வரலாற்று நூல் அல்லது நூல்களில் தலைவர் எவ்வகையில் சிறப்பிக்கப்பட்டுள்ளார், தான் எவ்வகையில் அவற்றிலிருந்து வேறுபட்டு நூல் படைக்கப் போகிறோம், புதுமைச் செய்திகளாக இணைக்கப்படுவன யாவை என்பனவற்றையும் முதற்கண் நோக்க வேண்டும். இதற்கு ஒருவர் பற்றி முன் எழுந்த வாழ்க்கை வரலாறுகளும் பின்வருவனவற்றிற்குப் பெருமளவு உதவுகின்றன. தன் வரலாறு கள் இருப்பின் அவையும் மிகுந்த பயனாயமையும்.

மேற்கண்டன, தமிழில் வந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக் கியங்கள் எழுந்துள்ள தன்மையை, அவற்றின் எழுச்சிக்கு அடித் தளமாக அமைந்தனவற்றை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் சிலவற்றை ஆங்கில அகராதியும் சுட்டுகிறது.[6] இது, வாழ்க்கை

6. What are the normal Sources used in biography- a) Books previously written on the Subject or on Cognate matters; b) Original documents, such as letters, diaries or official archives; c) The memoirs of Contemporaries; d) Where the period dealt with is not too remote, the recollections of living witness; e) the writers own memoirs if he happens to have had personal knowledge of his hero as Boswell

வரலாற்றாசிரியர் இயன்றால் தம் நூற்றலைவர் வாழ்ந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்த்து அதனை விவரிக்க வேண்டுதலும் இங்கு எண்ணத்தக்கது. இடவருணனையிலும் உண்மை துலங்கற்கும், இலக்கிய நயம்பட உரைத்தற்கும் இஃது உதவுவதுடன் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பண்பு நலன்களுக்கும், செயலாக்கங்களுக்கும் எவ்வகையில் அச் சூழல் பயன்பட்டிருக்கக் கூடும் என்பதனை அறுதியிடவும் துணை நிற்கும். சோ. சிவபாதசுந்தரத்தின் 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' நூல் இவ்வகையில் எண்ணத்தக்கது.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் மிக நெருங்கியவரே அவர் வரலாற்றைப் படைக்கும்பொழுது, அவர் நேரில் நிகழ்ந்த, கேட்டறிந்த செய்திகள் நூலுள் பெரிதும் இடங்கொள்கின்றன; முதன்மை பெறுகின்றன என்பதும் இவண் குறிப்பிடற்பாலது.

---

had of Johnson. Finally; the writer should, where possible visit in person the places he will have to describe.

Cassell's Encyclopaedia of World Literature; P. 73.

வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகள்

ஒரு வரையறுக்கப்பட்ட இலக்கணத்தை மட்டுமே உட்கொண்டு எவ்வகை இலக்கியமும் எழுதல் இல்லை. அதன் அடிப்படை இயல்பிற்கு மட்டுமே கட்டுப்பட்டு அதாவது தன்னைப் பிறவற்றினின்றும் பிரித்துக் காட்டும் பண்பிற்கே சிறப்பளித்து விட்டு, ஏனையவற்றில் படைப்பாளரின் விருப்பத்திற்கேற்ப வளைந்து கொடுக்கிறது. எனவே படைப்பாளர் தம் புலமைக்குத்தக்கப் பல்வேறு சிறப்பியல்புகளைத் தம் படைப்பில் படைத்துக் காட்டுகின்றனர். அவை வடிவம், வெளியீடு போன்ற பல நிலைகளில் அமைகின்றன. இதனால் குறிப்பிட்ட ஓரே வகை இலக்கியத்துள்ளும் பல வகைமைகளைக் காண முடிகிறது. மற்றும் அவற்றின் இயல்பு குறித்தும் பலவாக இனம் பிரிக்க வியலும். அவ்வகையில் தமிழில் எழுந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களைப் பல கோணங்களில் வகைப்படுத்தலாம்.

பிற இலக்கியவகைகளுக்கு இல்லாத சிறப்பாக, படைப்பாளரின் இயல்பு குறித்தே (பிறர்) வாழ்க்கை வரலாறு, தன்வரலாறு என இவ்வகைப் பிரிக்கப்படுதலையும் இவண் எண்ணலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரை அடிப்படையாகக் கொண்டும் வகைப்படுத்தலாம். தலைவர் எத்துறையைச்சார்ந்தவர் என்பதின் மூலம் இப்பகுப்பை அமைக்கலாம். 1. புலமையாளர் பற்றியன (இதனுள் படைப்பாளர் மற்றும் திறனாய்வாளரையும் இணைத்து நோக்கலாம்); 2. அரசியல் தலைவரைச் சுட்டுவன; 3. சமுதாயத் தொண்டரைக் குறிப்பன; 4. தொழில் வல்லுநரை வரைவன; 5. அறிவியல் அறிஞரை அறிவிப்புன; 6. சமயச் செல்வரைச் சார்ந்தன; 7. கலைஞரைக் காட்டுவன எனப் பலவாறாக இஃதமையும்.

வாழ்க்கை வரலாற்றிலக்கியம் யாருக்காகப் படைக்கப்பட்டதோ அதனைக் கொண்டும் வகைப்படுத்தலாம். சிறுவர்க்

காக எழுவன; இளைஞர்க்காக இயைந்தன; மங்கையர்க்காக மலர்ந்தன; இவ்விதம் குறிப்பிட்டவருக்கு என இன்றிப் பொது வாக அனைவருக்காகவும் தோன்றின என இங்கு நால்வகையைச் சுட்டலாம். மகளிர் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு எழுச்சிதரும் விதத்தில், நோக்கில் அமைக்கப்படும் வாழ்க்கை வரலாறுகள் மங்கையர்க்காக மலர்கின்றன எனலாம். மகளிர் இதழ்கள் இதற்கு முக்கியத்துவமளிக்கின்றன.

இவை போன்று வடிவ நிலையிலும் பகுக்க வியலும். உரை நடை (வெ. இராமலிங்கம் பிள்ளை-என் கதை) உரையாடல் (சம்பந்தன்-வினோபாவே); கவிதை (பாரதி அறுபத்தாறு—பாரதி); புதுக்கவிதை (கவிராஜன் கதை-வைர முத்து); காப் பியம் (மனித தெய்வம் காந்திகாதை-அரங்க சீனிவாசன்); 'நாடகம் (குணங்குடி மஸ்தான் வரலாறு—குணங்குடி தாசன்); கடிதம் (அவள் பிரிவு-வெ. சாமிநாத சர்மா) என்பனவாக இவை அமைகின்றன.

மேற் சுட்டிய பகுப்பு முறைகள், மேற் போக்காக, புற நிலை யினின்று வாழ்க்கை வரலாறுகளை வகைப்படுத்துவனவாகஅமை கின்றன. இவையன்றி அவற்றின் உள்ளடக்கத்தையும் அமைப் பையும் வெளியீட்டையும் உட்கொண்டு வகைப்படுத்தல் ஏற் புடை ஒன்றாக அமைகிறது. இந்நிலையில் பலரும் முயன்றுள்ள னர். ''சமய வாதிகள் போன்றோரைப் பற்றியன மீவியல் கூறு களுடன் வேறுபட்டு நிற்கின்றன. அ. லெ. நடராஜனின் கௌதம புத்தர், மொஹிதீனின் நபிகள் வரலாறு (1875) போன்றன சான்று. செய்தித் தரவுகட்கு முதன்மை அளிக்கும் நிலையில் கே. அப்பாதுரையின் ஓவியக் கலைஞர் ரவிவர்மா (1952), ஏ. கே. நவநீத கிருஷ்ணனின் டாக்டர் சேதுப்பிள்ளை (1962) போன்றன உள. கதையமைப்புடையதும் குழந்தை களுக்கு ஏற்றதுமான வாழ்க்கை வரலாறு கே. எஸ். லக்ஷ்மண னின் காந்தி கதைகள் என்பதில் காணப்படுகின்றது. வரலாறு எழுதும் பாங்கில் அமைந்த வாழ்வியல் நூல்களாக நாகை தரு மனின் அண்ணாவின் கடைசி நாட்கள், லால்பகதூர் சாஸ்திரி, ஏ. நாராயணனின் மருது பாண்டியர் வரலாறு முதலியன தென் படுகின்றன. திறனாய்வுப் பண்புடையனதாக நாச்சியப்பனின் காமராஜ் ஒரு புதிய கண்ணோட்டம் (1976) போன்ற சில அமை கின்றன. விளக்கத் தன்மையாகத் தாகூரைப் பற்றி கு. ராஜ வேலுவின் வங்கம் தந்த தங்கக் கவிஞன் போன்ற நூல்கள் உரு வாகியுள்ளன'', என்பர்.[1] இஃது வெளியீட்டு நிலையில் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களை வகைப்படுத்துகிறது.

1. ச. வே. சுப்பிரமணியன்; முன்சுட்டிய நூல்; பக். 317-318.

உள்ளடக்கத்தினைக் கருத்தில் கொண்டு வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களை வகைப்படுத்தியுள்ளனர் சிலர்.[2] அவற்றுள் முழுமையின்மையாலும் வகைப்பாடுகள் ஒன்றுடன் ஒன்று

2\. 1. சுருக்கவரலாறு, ஆய்வுமுறை வரலாறு, ஒருதலைச் சார்பான வாழ்க்கை வரலாறு, வரலாற்றுக் கற்பனை, சுவை மலி (Popular) வாழ்க்கை வரலாறு-சாலினி இளந்திரையன், முன்சுட்டிய நூல்; பக். 56-60.

2\. சிறுவரலாறுகள்; சிற்றாய்வுகள்; ஒருமுக வாழ்வுகள்; கற்பனை வகையின; இனிய வகையின-மது. ச. விமலானந்தம்; முன்சுட்டிய நூல்; பக். 35-39.

3\. யார் எவர் என்னும் தலைப்பில் எழுதப்படும் நூல்களை வாழ்க்கை வரலாற்றுள் துணுக்குகள் (Biographicalpits) எனலாம். ஒருவருடைய வாழ்வில் நிகழ்ந்த அடிப்படை விவரங்களை மட்டும் சுருங்கச் சொல்வது வரலாற்றுச் சுருக்கம் (Simple Biography) எனப்படும். ஒருவரின் பன்முக வாழ்வில் ஏதாவது ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டுவது ஒருமுக வாழ்க்கை வரலாறு (One side Biography) எனப்படுகிறது. ஒருவரின் வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டு ஒரு புதினமோ அல்லது நாடகமோ எழுதலாம். அதில் செய்திகள் உண்மையாக நடந்தவைகளாக இல்லாமல் புனைவுகளாக அமைந்திட இடமுண்டு. அத்தகையவற்றை வாழ்க்கைக் கதைகள் (Biographical fictions) எனலாம். படிப்போருக்கு உவகையூட்டும் முறையில் பகட்டான நடையில் எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகளும் உண்டு. இவற்றில் செய்திகளைச் சுவைபடக் கூறுவதே முதன்மையான நோக்கமாக இருக்கும். இவ்வாறனவற்றை மக்கள் சுவைக்கேற்பச் செய்யப்படும் சுவைதரா வாழ்க்கை வரலாறுகள் (Popular Biographies) எனலாம். செய்திகளைவிட எழுதுவோரின் இலக்கியப் புலமை வெளிப்படும்படி எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகளும் உண்டு. அவை புலமை நலஞ்சான்ற வாழ்க்கை வரலாறுகள் (Scholarly Biography) எனப்படும். செய்திகளை முழுமையாகவும் சரியாகவும் நுணுக்கமாகவும் சுவைபடவும் சொல்வதே சரியான வாழ்க்கை வரலாற்று நூலாகும் (Complete Biography)-சி. சு. செல்லப்பன்; இலக்கியஜோதி, மது. ச. விமலானந்தம்; அணிந்துரை; பக். 3-4.

4\. Informative Biography; Fictionalised Biography, Historical Biography; Critical Biography; Descriptive Biography-Grace Selvaraj; P. 770-772.

தொடர்புடைத்தாக அமைதலானும் இங்குத் தனித்து, வகைப் படுத்தித் தரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. வாழ்க்கைத் துணுக்குகள்

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய அடிப்படைச் செய்திகள் (பிறப்பு, பெற்றோர், ஊர் போல்வன) யாதும் இருக்காது. அவரின் வாழ்வில் நடந்த குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி மட்டும் இடம் பெறும். இத்தகையன தொகுப்பு நூலாகவே அமையும். இவை வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துள் மிகச் சிறுபான்மை யாகவே உள்ளன. மெர்வின் எழுதிய மேதைகள் வாழ்விலே எனும் நூல் இதற்குச் சான்றாம். வாழ்க்கை வரலாற்றிலக் கியத்தின் நோக்கம் இங்கு நிறைவு பெறாவிடினும், ஒருவரைப் பற்றி அவரின் வாழ்வில் நடந்த ஒன்றைக் கற்பாருக்கு அறிவித் தல் என்ற நிலையில் தொடர்புடையதாகிறது. இதழ்களில் இத்தகையன அதிகமாக இடம்பெறுகின்றன. இதன் முன்பே கற்பார் அறிந்திருப்பர் அல்லது அறிந்திருக்கின்றனர் என்ற நோக்கில் இவை எழுகின்றன. அறிந்தவர் பற்றிய கூடுதல் அறிவினைப் பெற இவை உதவுகின்றன எனலாம். தற்பொழுது மக்களிடையே புகழ்பெற்றுவிளங்குபவர் பற்றிய செய்திகளே அதிகமாகக் காணப்படினும் மறைந்தவர் பற்றிய செய்திகளும் காணப்படுவதுண்டு.

''ஜி. டி. நாயுடுவுக்கு நிறையப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் இருந்தது. படிக்கவேண்டிய புத்தகங்கள் அதிகமாகி விட்டால் அவைகளைப் படித்து முடிப்பதற்கென்றே ரயில் பிரயாணம் செய்வார். முதல் வகுப்பில் கோயம்பத்தூரிலிருந்து புறப்பட்டால் அந்த ரயில் வண்டி போகும் கடைசி ஸ்டேசன் வரை பிரயாணம் செய்வார். 'ரயில் பிரயாணத்தினால் பிற ருடைய தொல்லைகளின்றி நிறையப் புத்தகங்களைப் படிக்க முடிகிறது' என்றார். படிப்பில் ஆர்வம் கொண்ட ஜி. டி. நாயுடு விஞ்ஞானம் பொறியியல் துறைகள் பற்றிய 18000 புத்தகங்களும் உளநூல் தொடர்புடைய 3000 நூல்களும் படித்து முடித்துவிட்டு நூலகத்தில் வைத்திருக்கிறார்'' என்பது போன்று[3] இது அமை கிறது.

2. வாழ்க்கை அறிமுகம்

இத்தகையனவற்றிலும் ஒருவர் வாழ்வின் முழுமையை அறிய முடியாது. ஆயின் அவர் பற்றிய அடிப்படைச் செய்திகளுடன்

3. மெர்வின்; மேதைகள் வாழ்விலே; ப. 80.

அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒரு சிலவற்றைக் கொண்டு, அவர் பண்பினை, மேன்மையினைச் சுட்ட முயல்வன இதன்பாற்படும். இவ்வகையின ஓரளவு குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. சான்றாகச் சி. பி. சிற்றரசுவின் மாபெரும் வீரர்கள், மு. உலகநாதனின் தமிழ்நாட்டின் தவப்புதல்வர்கள் போன்றவற்றைச் சுட்டலாம். இவ்வகையினவும் பலதலைவர் பற்றிய தொகுப்பு நூலாக அமைகின்றன.

3. வாழ்க்கைக் குறிப்புகள்

இதனுள் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பிறப்பு முதல் நூல் எழுதுங்கால வரையிலான முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் பெரும் பாலும் இடம் பெற்றிருக்கும். அவை விரிவான விளக்கங் கள் இன்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கும். அதனுள்ளும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் சிறப்பு, பண்பு போன்ற வற்றில் குறையேதுமின்றிக் காட்டப்படுதல் தேவையாகிறது. இவற்றை வாழ்க்கைச் சுருக்கங்கள் என்றும் கூறலாம். குறிப் பான வாழ்க்கை நிகழ்வுகள், அதிக விளக்கமின்றிக் குறிப்பாகச் சுட்டப்படுதலின் வாழ்க்கைக் குறிப்புகள் என இவண் நவிலப் பட்டுள்ளது. இவ்வகையின தனி நூலாகவும், பலரின் வாழ்க்கை யைத் தொகுத்துத் தரும் நூலாகவும் அமைகின்றன. பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம் வெளியிடும் நாட்டுக்கு உழைத்த நல்லவர் வரிசை, அறிவியல் அறிஞர் வரிசை நூல்களையும், சாகித்திய அக்காதெமி வெளியிடும் இந்திய இலக்கியச் சிற்பிகள் நூல் வரிசை போன்றவற்றையும் தனி நூலுக்குச் சான்றாக்கலாம். புரவலனின் பேராற்றல் பெற்ற பெண்கள், அ. குப்புஸ்வாமியின் தென்னிந்திய மஹாமஹோபாத்யாயர்கள் வரலாறு போன்றன தொகுப்பு நூல்களுக்குக் காட்டாகும். விரிந்த வரலாற்றினின்றும் எழும் சுருக்க வரலாறுகளையும் இவண் இணைத்து நோக்கலாம். மறை. திருநாவுக்கரசின் மறைமலையடிகள் வரலாறு விரிந்த நிலையிலும், சுருக்கமாகவும் வெளிவந்துள்ளது சான்றாகும். இவ் வகையினவும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத் தொகையுள் குறிப் பிடத்தக்க சிறப்பிடம் பெற்றுள்ளன.

4. ஒரு முக வரலாறு

எந்த ஒரு மனிதருக்கும் பலவகை வாழ்க்கை நிலைகள் அமைகின்றன. அவை பருவ நிலைகளின் அடிப்படையில் அதாவது, ஏதாவது குறிப்பிட்ட கால கட்டத்தினை மட்டும் சிறப்பிக்கும் நிலையிலும் தோன்றலாம். எல். எஸ். கரை யாளரின் 'திருச்சி ஜெயில்' எனும் நூல் அவர் வாழ்வில் 1940

டிசம்பர் 12 முதல் 1941 மே 23 வரை நிகழ்ந்த சிறை வாழ்க்கையை மட்டும் நவில்கிறது. பூவை அமுதனின் 'எண் பெருந்தலைவரின் இளமை வரலாறுகள்' நூலையும் இதற்குச் சான்றாக்கலாம்.

சிலர் வாழ்வினைப் பல நிலைகளில் நோக்கி ஆராய்தற்கு இடம் இருக்கையில் அவற்றுள் ஒன்றினை முதன்மைப்படுத்தி, அதனை நோக்கித் தம் நூலைச் செலுத்தலும் உண்டு. இவை தலைவரின் இயல்பினை முழுமையாக அல்லாது குறிப்பிட்ட ஒரு நிலையில் மட்டுமே தருதலால் ஒருமுக வரலாறு ஆகின்றன. மணி மொழியின் கருணைத்தேவன் காந்தி மகான்[4], சி. ஞானமணியின் எழுத்தாளர் ம. பொ. சி. போன்றன[5] இவ்வகையின. இந்நிலை நூல்கள் சிறுபான்மையே எழுந்துள்ளன.

5. முழுமை வரலாறு

வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகையுள் இதுவே சிறப்பிடம் பெறுகிறது. ஒருவரைப் பற்றிய முழுமையான கண்ணோட்டத்தினை, அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் எவையும் விடுபடாமல், அவரின் பண்புகள், வெற்றிகள், தோல்விகள், சாதனைகள் என எவையும் விடுபடாமல் கற்பாருக்கு அவர் பற்றிய முழுமையான ஓவியத்தை நல்குவன இதன் பாற்படும் இவர் பற்றிய பிறரின் கருத்துரைகளும் இடம் பெறுதலுண்டு. வாழ்க்கைத்துணுக்குகள், வாழ்க்கை அறிமுகம் போன்றவற்றைத் தனிப்பாடல்கள் என்றால் இதனைக் காப்பியங்களுடன் ஒப்பிடலாம். இவ்வகை நூல்கள் வாழ்க்கை வரலாற்றிலக்கிய உலகில்

---

4. 'அதற்கு பெருமை பெற்ற பெரியோரின் வாழ்வில் அவர் அகிம்சையைப் போற்றி அதன்படி நடந்து காட்டிய சுவையான நிகழ்ச்சிகளை உள்ளத்தைக் கவரக் கூடிய சோகமயமான சம்பவங்களை, இந்நூலில் தொகுத்துக் கூறியிருக்கிறேன்' மணி மொழி; கருணைத்தேவன் காந்திமகான்; முன்னுரை.

5. ''எழுத்துலகில் நாற்பதாண்டுக் காலமாகப் பல்வேறு ஏடுகளுடன் தொடர்பு கொண்டு நடத்தி, இது வரை ஏறத்தாழ எண்பது நூல்கள் வரை எழுதிக்குவித்துள்ள எழுத்தாளர் ம. பொ. சியை ஓரளவு ஆய்வு செய்கிறது இந்நூல். எழுத்தாளர் என்ற நோக்கில் அவரைப் பற்றியும் அவர் ஆற்றியுள்ள தொண்டையும் அவரிடத்து அமைந்துள்ள பல்வேறு சிறப்பு ஆற்றல்களையும் இயன்றவரை படம் பிடித்துக் காட்டியுள்ளேன்''. சி. ஞானமணி; எழுத்தாளர் ம.பொ.சி. முன்னுரை.

தமிழர் பெருமை கொள்ளும் அளவிற்குச் சிறப்பாகவும் மிகுதியாகவும் அமைந்துள்ளன. ரா. கணபதியின் சுவாமி விவேகானந்தர்; அ. லெ. நடராஜனின் நெப்போலியன்; சுந்தாவின் பொன்னியின் புதல்வர்; உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரம்; பரணீதரனின் கஸ்தூரி திலகம்; சோமலெயின் பண்டிதமணி; கௌசிகனின் ராஜாஜி போன்ற பலவற்றை இதற்கு எடுத்துக் காட்டுகளாக்கலாம்.

ஒருவரின் இறப்புப் பற்றி நவிலாதபோது ஏனையன அனைத்தும் குறைவின்றி நிறைந்திருப்பினும் அவை முழுமையான வரலாறு ஆகுமா என்ற வினா எழலாம். ஒருவரின் வாழ்வின் முடிவில் அவர் உடல் இவ்வுலகை விட்டு மறைகிறது என்பது உண்மை. ஆயின் தம் பூதவுடல் மறைந்த பின்னும் வரலாறு அறியும் காலம் தொட்டுப் பலர் இன்றும் தம் புகழில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 'மரணம்' என்பது அத்தகையவரின் வாழ்வில் மிகச் சாதாரணமான ஒரு நிகழ்வாகும். ஒருவர் தம் வாழ்நாளிலேயே தம் செயல்களால் மக்களிடையே நிரந்தரமான ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுவிடுகின்றார். மற்றும் மிக உயர்ந்த குறிக்கோளுடன் நீண்ட வாழ்க்கைப் பயணம் செய்து அதில் வெற்றி பெற்றவுடன் அவரது வாழ்வும் நிறைவுடையதாகிறது. இத்தகையவர்களின் மரணம் என்பது மக்களால் விரும்பப்படாத ஒன்றாகவும் அமைகிறது. நூல் எழுந்ததன் நோக்கம் இங்கு நிறைவேறியுள்ளதா என்பதே இவண் வேண்டற்பாலது. சிலர் தம் வாழ்வின் இறுதிவரை தம் குறிக்கோள் நிறைவேற்றத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கலாம். சிலர் அதனை நிறைவேற்றிய மகிழ்வில் அல்லது திருப்தியில் தம் எஞ்சிய நாட்களை ஓய்வுடன் கழிக்கலாம். எனவே வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை இறுதிவரை நூல் அமைந்தால்தான் முழுமை வரலாறு என்பது தேவையில்லை. தன் வரலாறுகளில் இது இடம்பெற இயலாது என்பதுடன் திரு. வி. க. வின் திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்; ம. பொ. சி. யின் 'எனது போராட்டம்' போன்றன மிகச் சிறந்த முழுமையான வாழ்க்கை வரலாற்று நூல்களாக அமைந்திருத்தலும் சுட்டற்பாலது. புதுமை படைக்க விரும்பும் புதின ஆசிரியர்கள் தம் புதின முடிவில் தலைவன், தலைவியரின் நிலை இறுதியில் என்ன என்பதைச் சுட்டாது கற்பாரின் ஊகத்திற்கு இடனளித்து நிறைவு செய்வதை[6] இவண் இணைத்து நோக்கலாம். அவற்றை நாம் குறையுடைய புதினங்

6. இந்துமதி; பைசா நகரத்துக் கோபுரங்கள்; திருமகள் நிலையம்; சென்னை; 1982.

கள் என ஒதுக்கி விடுவதில்லையாதலின் இவற்றையும் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

6. வாழ்க்கை ஆய்வுகள்

ஒருவரின் வாழ்க்கை நிகழ்வுகளைத் தரவேண்டும் என்பதுடன் அவர் பற்றிய உண்மையினை ஆய்தலை நோக்கமாகக் கொள்வதும் இதன்பாற்படும். ம. பொ. சி யின் ஊளவையார்?'' சோவின் 'காமராஜை சந்தித்தேன்' போன்ற ஒருசில நூல்கள் இவ்வாறு அமைகின்றன. ஒருவரைப்பற்றிப் பலவித எண்ணங்கள் நிலவுங்கால் அவற்றின் உண்மை நிலை அறிய வேண்டும் என்ற எண்ணம் எழும்போதும், தன்னுடைய நோக்கில் ஒருவர் எவ்வாறு அமைகிறார் என்பதனை உணர்த்த விரும்பி வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் ஆசிரியர் தன்னையும் நூலில் உட்படுத்தும்போதும் இவை எழுகின்றன. வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தில் இஃது ஓர் வரவேற்கத்தக்க முயற்சியாம்.

7. வாழ்க்கை ஒப்பாய்வுகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு நிலையில் வாழ்க்கை அமையினும், ஏதேனும் ஒரு சில கூறுகளில் ஒன்றுபடுகின்றனர் அல்லது ஒரே நோக்கில் இருவேறு பாதைகளை மேற்கொள்கின்றனர். இவற்றினை ஒப்பு நோக்கி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒருங்கே பிணைத்துத் தருதல் இவ்வகையைச் சாரும். 'காந்தியும் விவேகானந்தரும்-ஒரு பரிசீலனை' என்று வெ. சாமிநாத சர்மாவால் இயற்றப்பட்ட நூல் இதற்குச் சான்றாகும். இவ்வகை மிக அருகியே காணப்படும் ஒன்று எனினும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலையில் இதனையும் உட்படுத்தலாம். இவை ஏனைய நூல்களைவிட மிகுந்த சுவையை, வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினைக் கற்பாருக்கு அளிக்கின்றன எனில் மிகையாகாது.

8. வாழ்க்கைப் புனைவுகள்

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளின் துணைகொண்டு, படைப்பாளர் தம் புலமைத் திறனையும் இணைத்து, கற்பனைப் பாத்திரங்கள், சூழல்கள், நிகழ்வுகள் போன்றவற்றைப் படைத்துப் படைப்பிலக்கியங்களுடன் ஒத்துத் திகழ்வன இதனுட்படுகின்றன.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் உண்மைச் சித்திரத்துடன் ஆசிரியர் தம் கற்பனையையும் இணைத்துத் தருவதனால் இவை வாழ்க்கைப் புனைவுகளாகின்றன. இரா. பழனிச்சாமியின் கவிச் சக்கரவர்த்தி கம்பன் போன்றன இதனுள் அடங்குகின்றன. இலக்கியத் தலைவர் ஒரு காலத்தில் உயிருடன் இவ்வுலகில் உலவியவர்; இலக்கியத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் சில உண்மையின் பாற்படும் என்ற நிலையில் மட்டுமே இவை வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துடன் தொடர்பு கொள்கின்றன. நடந்த நிகழ்வுகளையே உயிர்நாடியாகக் கொண்டதும் கற்பனைக்கு இடம் மறுப்பதைக் கொள்கையாகக் கொண்டதுமாகிய வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களோடு இவற்றை ஒப்புக்காண்டல் பொருந்துமா என்பது மேலும் ஆய்விற்குரியது. இத்தகையன வற்றை ஒதுக்கிவிடுதலால் தவறில்லை எனத்தோன்றுகிறது.

மூன் சுட்டியுள்ள வாழ்க்கைப் புதினத்தினின்றும் இவை மாறுபட்டன என்பதும் இவண் கருதற்பாலது. வாழ்க்கைப் புதினம் என்பது அமைப்பால் மட்டுமே புனைவியலுடன் ஒன்று பட்டு, உள்ளடக்கத்தில் சிறிதும் கற்பனைக்கு அதாவது உண்மைக்குப் புறம்பானவற்றிற்கு இடமில்லையாதலின் வேறுபடுகிறது. மற்றும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் உயிர்நாடியான உண்மை முதன்மை பெற்று அதனிருந்துப் பிரிக்க இயலா வகையில் ஒன்றுபட்டு நிற்கிறது. தமிழில் சிறுவர்களுக்காக எழும் வாழ்க்கை வரலாறுகளை இத்தகையனவாகக் கருதுதலும்[7] சுட்டற்பாலது.

இத்தகு பல்வேறு பகுப்பு நெறிகள் தமிழிலக்கிய வரலாற்றில் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் வளர்ச்சியை, சிறப்பை இயம்புகின்றன.

---

7. Biographical Novels too are slowly entering this field, though they are not numerous in number the biographer here tries to present the life history in the form of a novel. He exhibits the story of his individual in a series of dramatic episodes each presenting some crisis or triumph and at the same time gives a moral value. Kural vali Anna by Canmuka Cupra-maniyam is a very good example to this type of biography. Almost all the fictionalised biographies written for little children come under the classification.

Grace selvaraj, P.747.

பொருண்மை

தமிழ் இலக்கிய வகைகள் தம் உள்ளடக்கத்தினை, பொருண் மையினைக் கொள்ளும் முறையில் இரு நிலைகளைக் காண்கின் றோம். ஒன்று தமக்கென்று தனித்த பொருண்மையினைக் கொண்டிலங்குதல். தூது, மடல், உலா போன்றவற்றைச் சான் றாக்கலாம். மற்றொன்று பொருள் வரையறை இன்றி எப் பொருண்மையின் மீதும் எழுதலாகும். பதிகம், அந்தாதி முதலானவை காட்டுகளாகின்றன. உரை நடையிலக்கியங்களுள் புனைவாக அமைவன தமக்கென வரையறுத்த பொருண்மை யைக் கொள்ளவில்லை. புனைவிலியாக இயல்பாக அமைவன பொருள் வரையறை பெறுகின்றன. அவ்வகையில் வாழ்க்கை வரலாறும் ஒருவரின் வாழ்வின் நிகழ்ந்த நிகழ்வுகளின் இலக்கிய ஆக்கம் என்ற பொருண்மையின் மீது எழுந்துள்ளது. பொருளால் பெயர் பெறும் இலக்கிய வகைகளுள் ஒன்றாகவும் வாழ்க்கை வரலாறு அமைகிறது.

இலக்கிய உருவாக்கத்தில் அதன் உள்ளடக்கம் (உள்ளீடு, பொருண்மை, இலக்கியப் பொருள்) சிறப்புப் பெறுகிறது. இலக்கியத்தின் கருத்தினையோ (Theme), நோக்கத்தினையோ (aim) உணர்த்துவதாக, நூல் முழுமையும் அதனோடு தொடர் புடைய நிகழ்ச்சிகளாக அல்லது எண்ணங்களாக அல்லது செய்தி களாகப் புலவர் படைத்து மொழிவனவற்றை உள்ளடக்கம் எனக் கொள்ளலாம். எனவே பொது நிலையில் இலக்கியப் பொருள் (Content) என்பது, ஏதேனும் ஒரு நோக்கத்தின் அடிப் படையில், தாம் விரும்பிய தலைமை மீது அந்நோக்கம் புலப்படு மாறு படைப்பாளரால் அமைக்கப் படும் நிகழ்ச்சிகள் அல்லது செய்திகள் அல்லது எண்ணங்கள் அல்லது இவற்றின் இணைவு எனக்கருதலாம். இவ்விலக்கியப்பொருண்மை வாழ்க்கை வரலாற் றிலக்கிலக்கியங்களில் அறுதியிடப்பட்டிருப்பதால் அவற்றை இனஞ்சுட்டும் முயற்சி இவண் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இவ்விலக்கியத்திற்கென்று அமையும் தனித்த பொருண்மையை முதன்மை பொருட் கூறுகள், துணைப் பொருட் கூறுகள் என இருவகைப் படுத்தலாம். நூலுக்கு இன்றியமையாததாகத் தேவைப்படும் பொருட் கூறுகளை முதன்மை பொருட் கூறுகளாகவும், நூலின் சிறப்பினை மேம்படுத்துதற்காக, அமையும் ஏனையவற்றைத் துணைப் பொருட்கூறுகள் என்றும் கொள்ளலாம். பல அணுக்கள் இணைந்து ஓர் உருவம் தோன்றுதல் போன்று, பல பொருட் கூறுகள் இணைந்து ஒரு பொருண்மையை உருவாக்குகின்றன. ஒருவரின் வரலாறு என்பது இங்குப் பொருண்மையாக, இவ்விலக்கிய பொருளாக அமைய, அவ்வரலாற்றை உருவாக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள், செய்திகள், குறிப்புகள் போன்றன பொருட் கூறுகளாகின்றன. இப்பொருட் கூறுகள் அனைத்தும் ஒரே நூலுள் இடம் பெற்றிருக்கத் தேவையில்லை. நூற்றலைவரின் இயல்பிற்கேற்ப இக்கூறுகளுள் பொருந்துவன நூலுள் அமைகின்றன.

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துள் அமையும் பொருட் கூறுகளைக் கீழ்கண்டவாறு அட்டவணைப் படுத்திக் காட்டலாம். அவற்றின் விளக்கங்கள் பின் தொடர்கின்றன.

பொருண்மை

முதன்மைபொருட் கூறுகள்

1. அடிப்படைச் செய்திகள்
2. அறிமுகம்
3. வாழ்க்கை இலக்கு
   - நிறைவேற்றத்திற்குரிய நிகழ்வுகள்
   - எதிர்கொள்ளும் மனநிலை
   - மேற்கொள்ளும் முயற்சி
   - நிறைவேற்றம்
4. சூழல் (ஏது)
   - மனநிலை
   - இயற்கை
   - பெற்றோர்
   - மாற்றார்
   - நிகழ்ச்சி
   - காட்சி
   - விபத்து
   - திருப்புமுனை

துணைப்பொருட் கூறுகள்

1. காப்பு, கடவுள் வாழ்த்து
2. நூற்பயன்
3. நூலாசிரியர் நூற்றலைவர் தொடர்பு.
4. பிறந்தகாலக்கணிப்பு (சாதகம்)
5. மரபுவழிப்பட்டியல்
6. தொடர்பு தொண்டோர்
7. வாழ்த்து

5. பண்பு

6. பழக்கவழக்கங்கள்

7. பட்டறிவு

8. துறை செய்திகள்

9. மொழிகள் { கூற்றுகள் / அருள்மொழிகள் }

10. மதிப்புரை { பாராட்டுரை / பரிசு }

11. வாழ்க்கை முடிபு

12. ஆசிரியர் இடையீடு

13. முக்கிய நிகழ்வு வரிசை

14. செவிவழிச் செய்திகள்

15. காலக் குறிப்பு

8. பின்னிணைப்பு

முதன்மை பொருட்கூறுகள்

1. அடிப்படைச் செய்திகள்.

தலைவரின் பிறப்பு, ஊர், பெற்றோர், பெயர் முதலியன அடிப்படைச் செய்திகளாக இவண் குறிக்கப்படுகின்றன. இவை நூலின் தோற்றுவாயாக அமைகின்றன எனவும் கொள்ளலாம். இவை நூலின் இயல்பிற்கேற்ப விரிந்தோ அன்றிச் சுருக்கமாகவோ அமைகின்றன. மற்றும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் காலத்தால் மிக முற்பட்டவராகி இவை தொடர்பான குறிப்புகள் அறியப்படாமலோ அன்றி ஐயத்திற்கிடமாகவோ உள்ள நிலையில் மட்டுமே இவற்றை நூலுள் காணலரிது. ஒரு தொடருக்கு எழுவாய் போல வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களுக்கு இவை அமைகின்றன எனலாம்.

பலர் வரலாறுகளின் தொகுப்பாக அமையும் நூல்களில் இக்குறிப்புகள் பெரும்பாலும் குறுகிய அளவில் அமைகின்றன. "இத்தாலி நாட்டில் போலோனோ என்னும் நகரம் செய்த புண்ணியப் பேற்றால் தோன்றியவர் மார்க்கோனி. கி. பி. 1874 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளில் வானொலி கண்ட அறிஞர் பிறந்தார். அவர் தம் தந்தையார் சினோர் மார்க்கோனி என்பவர். அவர் இத்தாலியில் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சினோர் மார்க்கோனி தாம் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைக் கொண்டு சீரும் சிறப்பும் நிறைந்து வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார். அவர் தம் மூத்த மகனார் அல்போன்ஸ் என்பவர். இளையவரே குக்லியல்மோ மார்க்கோனி" என்பது போன்று நீண்ட வண்ணனைகளின்றிச் சுட்டிச் செல்லலாக அவை நிற்கின்றன.[1] இக்குறிப்புகள் சில அத்தியாயங்களைக் கொண்டதாக விரிந்த நூல்களில் அமைகின்றன. சுந்தாவின் பொன்னியின் புதல்வர் நூல் கல்கி பற்றிய இக்குறிப்புகளை, கல்கி என்ற பெயர், மற்ற புனை பெயர்கள், பிறந்த ஊர், பிறந்த காலம் என நான்கு அத்தியாயங்களில் 30 பக்கங்களில் விரிவாக எடுத்தியம்பக் காணலாம். உ. வே. சாமிநாதையரின் 'என் சரித்திரம்' இதனினும் விரிவாக, எங்கள் ஊர், என் முன்னோர்கள், என் பாட்டனார், சில பெரியோர்கள், கனம் கிருஷ்ணையர், என் தந்தையார், குருகுல வாசம், கிருஷ்ண சாஸ்திரிகள், எனது பிறப்பு என எண் அத்தியாயங்களில் தருகிறது. பெருங்காப்பியங்களோடு ஒத்தெண்ணத்தக்கதாக இப்பகுதிகள் அமைகின்றன எனலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பண்பு நலத்திற்கு இவ் இயற்கைச் சூழல் எந்த அளவிற்குக் காரண

---

1. புதுமை கண்டவர்; ஜெயா அருணாசலம்; பக். 8-9.

மாயிற்று எனக்கான இந்நீண்ட பகுதிகள் துணைநிற்கின்றன. மற்றும் தன் வரலாறுகளில் வரலாற்றுத் தலைவரோடு உள்ளம் ஒன்றிய நிலையில் இவை விரிவாக அமைகின்றதற்கும் வாய்ப்புள்ளது.

சிறுபான்மை தனித்த வரலாறுகளில் 'இரவிவர்மா இந்த வீர சிளிமானூர் மரபில் 1948 ஏப்ரல் மாதம் 29 ஆம் நாளன்று புகழ் பெற்ற அரண்மனையில் பிறந்தார். தாயார் பெயர் உமா அம்பாபாய். தந்தை பெயர் பட்டாதிரி' என்பது போன்று மிகச் சுருக்கமாக[2] அமைந்து விடுதலுமுண்டு. வரலாற்றாசிரியருக்கு இவைபற்றிய குறிப்புகள் மிகச் சிலவாகக் கிடைத்தமை அல்லது இவையே போதுமானது என்ற எண்ணம் இதற்குக் காரண மாகின்றது.

2. அறிமுகம்

நூற்றலைவர் யார் என்பது பற்றிய அறிமுகம் கற்பாருக்கு இன்றியமையாததாகிறது. எனவே இதுவும் நூலின் மிகச் சிறப் புடைய கூறுகளுள் ஒன்றாகிறது. மூவகையாக இவ்வறிமுகம் நிகழ்வதை வாழ்க்கை வரலாற்றிலக்கிய நூல்கள் தெளிவுறுத்து கின்றன.

பொது நிலையில் அவர் வாழ்வில் நடந்த மிகச் சிறப்பான நிகழ்வு ஒன்றினைக் கூறி அதன் மூலம் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரை அவர் பெருமை துலங்குமாறு அறிமுகப்படுத்தும் போக்குப் பரவலாக அமைகிறது. 'பள்ளிக் கூடம் விட்டதும் அவ்ன் நேராக வீட்டுக்கு வரமாட்டான். காடு மேடுகளில் சுற்றிக் கொண்டே திரிவான். வண்டு, வண்ணாத்திப்பூச்சி, விட்டில், வெட்டுக்கிளி-இப்படிப்பட்ட பூச்சிகளைப் பிடிப்பதில் அவனுக்கு அளவில்லாத ஆனந்தம். அந்தப் பூச்சிகளைப் பிடித்து வீட்டுக்குக் கொண்டுவருவான். அவை எப்படி இருக்கின்றன, என்ன என்ன செய்கின்றன, எது எதைத் தின்கின்றன என்றெல்லாம் கவனிப் பான்.........இப்படிச் சிறுவயதிலே பூச்சிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துவந்த சிறுவன்தான் ஒரு காலத்தில் உலகம் போற்றும் பெரிய விஞ்ஞானி ஆகிவிட்டான். பூச்சி புழுக்களைப் பற்றியும் தாவரங்களைப் பற்றியும் மனிதர்களைப்பற்றியும் அவன் பல்புது உண்மைகளைக் கண்டு பிடித்தான். 'மந்தியிலிருந்து மனிதன் வந்தான்' என்ற உண்மையை உலகுக்கு எடுத்துச் சொன்னவனே அவன் தான்! அவன் பெயர் சார்லஸ் ராபர்ட் டார்வின்.'' என்பது போன்று[3] சுவைபட அவை அமைகின்றன.

---

2. இரவிவர்மா; வித்தகன்; ப. 28.
3. சின்னஞ் சிறு வயதில்; அழ. வள்ளியப்பா; பக். 31 - 32.

''அப்போதே அவருக்குத் தலையில் நரைபுரை போட்டிருந்தது. வாழ்க்கை நெருப்பில் அடிப்பட்டுக் காய்ந்த முகம், வயதுக்கு மீறிய முதுமை, நோஞ்சான் உடம்பு, தொளதொளத்துத் தொங்கும் வெள்ளைக் கதர் ஜிப்பாதான் உடம்பின் சோனித் தன்மையை மூடி மறைத்திருந்தது. அவரது தோற்றம் பற்றிக் குறிப்பிடும் போது கண்களைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் கண்கள் ஓர் அசாதாரணமான ஒளி நிறைந்த கண்கள். தீராத ஏக்கமும் பித்தமும் ஒளியும் தீட்சண்யமும் தென்படும் கண்கள். அந்தக் கண்களை வெகு நேரம் பார்க்க முடியாது. பார்க்கிறவர்களின் கண்களைச் சீக்கிரம் உறுத்தி விடும் கணைகள் அவை. ஆழக் குழிக்குள் அமிழ்ந்து கிடந்தாலும் தெறித்துச் சிதறும் ஒளியும் வேகமும் கொண்ட கண்கள் அவை. அவரை அறியாதவர்கள் முதலில் அவர் கண்களைச் சந்தித்தால், அது அவர்களுக்கு ஏதோ ஓர் இனந்தெரியாத அச்சத்தை எழுப்பி விடும் என்று கூடச் சொல்லலாம்'' என்பது போன்று[4] உருவ வருணனைகள் இடம் பெறல் இரண்டாம் வகை. இத்தகு உருவ வருணனைகள் ஓரளவே காணப்படுகின்றன. அதிலும் உடன் காலத்தவராகவும், உடன் பழகியவராகவும் இருக்கும் பொழுதே மிகுதியாக அமைகிறது.

இவ்விரு நிலைகளுமின்றி நேரடியாகவே 'இந்த ஆறாவது குழவியே பிற்காலத்தில் தமிழ்க் கடலாக விளங்கியது; தமிழ்த் தென்றலாக வீசியது; தமிழ் ஓவியமாய் மிளிர்ந்தது; நடமாடும் பல்கலைக் கழகமாய்க் காட்சி தந்தது; சமரச சன்மார்க்க மணம் வீசியது; வாய்மையும், தூய்மையும், எளிமையும், தொண்டும் ஓர் உருக்கொண்டாலென்னத் தோன்றியது; திரு. வி. க. எனும் பெயர் பெற்றது' என்பது போன்று[5] புகழுரைகளுடன் அறிமுகப் படுத்துதலை மூன்றாம் வகையாகக் கொள்ளலாம். இந்நேரிடை அறிமுகம் புகழுரைகளின்றி இயல்பு நிலையில் ''புதுவை மாநிலத்தில் தமிழாசிரியர் பணியேற்றிருந்தவருட் பலர் புலமை சான்ற பெருமக்களிடம் முறையாகத் தமிழ் பயின்று முத்தமிழ் வித்தகராய் விளங்கினர். அத்தகையாருள் ஒருவரே நம் குமாரசாமி செட்டியார். 'சுந்தரக் குமரன்' என்னும் புனைப்பெயர் கொண்ட இவரைப்பலரும் 'செட்டியார்' என்றே சிறப்பாகக் குறிப்பிடுவார்.'' எனவும் அமைதலுண்டு.[6]

---

4. புதுமைப்பித்தன் வரலாறு; ரகுநாதன்; பக். 199 - 200.
5. திரு. வி. க. வாழ்வும் தொண்டும்; சக்திதாசன் சுப்பிரமணியன்; ப. 18.
6. புதுவைப் புகழ் மணிகள்; மன்னர் மன்னன் (தொகு); ப. 32.

தன் வரலாறுகளில் பெரும்பாலும் இத்தகு அறிமுகங்களைக் காணலரிது. நூலாசிரியர் என்ற நிலையிலேயே இவ்வறிமுகம் அமைந்து விடுகிறது எனலாம்.

3. வாழ்க்கை இலக்கு

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வெற்றி முகத்தினைப் படிப்படியாகக் காட்டிக் கொண்டே செல்லுதல் இவ்விலக்கியத்தின் உயிர் நிலையாக அமைகிறது. வாழ்க்கை இலக்கு என்று இதனைக் குறிப்பிடலாம். நூலின் பெரும் பகுதியைத் தன்னுட் கொண்டதாகவும் இஃதமைகிறது. வரலாற்றுத் தலைவரின் நோக்கம் அல்லது கொள்கை நிறைவேற்றம், கொண்ட முயற்சியில் வெற்றி, தோல்வி என்பனவாக இவ்விலக்கு அமைகிறது. இதனைச் சுற்றியே இவர்தம் வாழ்வு நிகழ்வுகளும் நிகழக் காண்கிறோம்.

சமயப்பணியில் ஈடுபட்ட சுவாமி விவேகானந்தரின் வரலாறு, உலகில் இந்து சமயத்தின் பெருமையை நிலை நாட்டிய உயர்ச்சியை முன்னிட்டே வளர்ந்து செல்கிறது. திரைப்படத் துறையில் வெற்றிகண்ட ஏ. வி. மெய்யப்பனின் வரலாறு அத்துறையில் உயர் நிலை அடைய அவர் மேற்கொண்ட முயற்சிகளைச் சுற்றியே சுழல்கிறது. ஓவியக்கலைஞர் இரவிவர்மாவின் வரலாறு அவர் அத்துறையில் ஆற்றிய அரும் பெரும் சிறப்புகளையே காரணகாரியத்தோடு நவில்கிறது. புதுமைப் பித்தன் வரலாறும் இலக்கிய உலகில் அவர் புதுமைப் பித்தனாக மலர்ந்து மணம் வீசியதையே காட்டுகிறது. மாவீரன் நெப்போலியன் தன் கனவை நினைவாக்க கொண்ட பெருமுயற்சியே அவர் வரலாறாகக் கனிந்துள்ளது. உ. வே. சாமிநாதையரின் தமிழார்வத்தையும், தமிழ்ப்பணியையும் தவிரப் பிறவற்றை அவரின் வாழ்க்கை வரலாற்றில் பெறலரிது. இதுபோன்றே ஒவ்வொரு அறிவியல் அறிஞரும் தம் கண்டுபிடிப்புகளுக்கு நடத்திய போராட்டமே அவர் தம் வாழ்வாக, வரலாறாக வடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வரலாற்றுத் தலைவர் எத்துறையைச் சார்ந்தவரோ அத்துறையில் அவர் பெற்ற வெற்றிகள், கண்ட முன்னேற்றங்கள், சிறப்பித்தமை போன்றவையே அவர் தம் வாழ்வில் முதன்மை பெற்றமையக் காண்கிறோம். அத்துறையினின்றும் பிரிக்கவியலாதவாறு அவர் அதனுடன் கலந்து நிற்கின்றார்.

ஒவ்வொரு துறையின் வரலாறு என்று ஒன்று எழும் பொழுதும் அவரவர்க்குரிய இடம் அங்கு ஒதுக்கப்பட்டிருத்தலையும் இவண் நினைவுகூரலாம். தமிழ்ப் பதிப்பு வரலாறு வரும் பொழுது அங்கு உ. வே. சாவைப் புறக்கணித்தோ, தமிழ்ச்

சிறு கதை வரலாறு படைக்கும் பொழுது புதுமைப் பித்தனைத் தவிர்த்தோ வரைந்தால் அது முழுமை பெறாதது போன்றதே அவர்களின் வாழ்க்கை வரலாறுகளில் அவர் சார்ந்த துறை நிகழ்வுகளே முதன்மை இடம் பெறுதலும் ஆகும். சுருங்கக் கூறின் ஒருவரது வாழ்க்கைப் பயணம் அவர் ஏற்றுக் கொண்ட துறையுடன் இணைந்தே நடைபெறுகிறது என்பது இங்கு வெளிப்படை.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை இலக்கை நோக்கியே அமையும் நிகழ்வுகள் அனைத்தும் வரலாற்றுத் தலைவருக்கு வெற்றியைத் தருவனவாகவே அமைகின்ற எனல் பொருந்தாது. இறுதி வெற்றியைப் பெறுமுன் இடையிடையே தோல்விகளும், பின்னேற்றங்களும், பெரும் இடையூறுகளும் நேர்தல் இயற்கை. இவற்றை யெல்லாம் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எங்ஙனம் எதிர் நோக்கி வெற்றிகண்டார் என்பதனையும் அந்நிகழ்ச்சிகள் கற்பாருக்குக் காட்டுகின்றன. எனவே வாழ்க்கை இலக்கினை நிறைவேற்றுதற்குரிய நிகழ்வுகள் இவ்வாறு பலதரப்பட்டனவாக அமையக் காண்கிறோம்.

இலக்கியப்பணியில் ஈடுபட்டிருந்த கல்கிக்கு ஆனந்த விகடன் இதழிலிருந்து விலகியமை ஒரு இடையூறு அந்நிகழ்ச்சி கல்கியின் வாழ்வின் ஓர் சிறப்பிடம் கொண்டுள்ளமையை, "விகடனைவிட்டு கல்கி விலகிய காலத்தில் பத்திரிகைகளின் உழைக்கும் எழுத்தாளர்களின் பாதுகாப்புக்கான சட்டம் ஏதும் உண்டாகியிருக்கவில்லை. ஒன்பது வருடகாலமாய் விகடனின் வளர்ச்சியையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்டு, அதற்குச் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் தேடிக் கொடுத்த கல்கிக்கு, கடைசி மாதச் சம்பளத்தை மட்டும் கொடுத்துக் கணக்குத் தீர்த்து விட்டார் வாசன். அதன் மூலம் அவர் புலப்படுத்தியது என்ன? பணக்கடுத்தம் அல்ல. கல்கியின் மீது அப்போது கொண்ட மனக் கடுத்தமே! ....கல்கியின் கற்பனைக் கதைகளில் மட்டுமல்லாமல், அவருடைய வாழ்க்கைக் கதையிலும் விதியின் வினைகள் பல உண்டு. விகடனிலிருந்து அவர் விலகும்படி நேர்ந்தது அவற்றிலே ஒன்று. அப்படி நேர்ந்திரா விட்டால் அவருடைய தனிச்சிறப்பு வாய்ந்த புனைபெயரை மகுடமாய்க் கொண்டே தனியான தொரு பத்திரிகை தோன்றியிருக்க முடியுமா? அரசியல், இலக்கியம், மற்றும் நற்கலைகள் முதலிய துறைகளில், தனிப்பெரும் இயக்கங்களும் சாதனைகளும் நிகழ்ந்திருக்க முடியுமா?" என விளக்குகிறார்[7] அவரின் வரலாற்றை வரைந்தவர். ஒவ்வொருவர் வரலாற்றிலும் இத்தகையனவற்றைக் காணலாம்.

---

7. பொன்னியின் புதல்வர்; சுந்தா; ப. 489.

தம் வழியில் ஏற்படும் இடையூறுகளை அல்லது ஏற்றங்களை நேர் கொள்ளும்பொழுது வரலாற்றுத் தலைவர் கொள்ளும் மனநிலையும் இதனுடன் கருதத்தக்கது. தன் குழந்தைப் பருவத்திலேயே கேட்கும், பார்க்கும், பேசும் திறன் இழந்த ஹெலன் கெல்லர், பின்னாளில் மனித சமுதாயத்தில் அங்கக் குறைபாடுள்ளோர்க்கு உய்யும் வழிகாட்டிய சீர்திருத்தவாதியாக ஒளி வீசியவர். இவர் ஊனமுற்ற ஆரம்ப நாட்களில் கொண்ட மனநிலையை, 'ஹெலன் வளர வளர, தன் மனதில் எழும் எண்ணங்களை வெளியில் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவும் கூடவே வளர்ந்தது. அவள் பயன்படுத்திய அடையாளங்கள் போதிய தெளிவுடனில்லை. சில வேளைகளில் தான் நினைத்ததைச் சொல்ல முடியாமல் அவதிப்பட்டாள். அப்பொழுது ஆத்திரமும் எரிச்சலும் அதிகரித்தன. கண்ணுக்குப் புலனாகாத சில கைகள் தன்னைப் பிடித்துச் சிறைப்படுத்தியிருப்பது போன்ற உணர்ச்சி அவளை அழுத்தியது. அந்தச் சிறையிலிருந்து விடுபட வெகுவாய்ப் போராடினாள். ஆனால் பயன் இல்லை. ஆயினும் தோல்வியை ஏற்றுக் கொள்ளவும் அவள் மனம் இசைய வில்லை. அதனால் உடல்சோர உள்ளம் துவள அழத்தொடங்கி விடுவாள். அம்மா அருகில் இருந்தால் ஹெலனை அணைத்து ஆறுதல் கூறுவாள். வரவர இந்த உணர்ச்சிப் போராட்டம் அதிகரித்தது'' என விளக்குவர்.[8]

கொண்ட நோக்கிற்கு எதிராக அமைவனவற்றைத் தகர்க்க ஒவ்வொருவரும் முயலுதல் இயல்பு. அம் முயற்சிகளாக வரலாற்றுத் தலைவர் பின்பற்றியனவற்றையும் படைப்பாளர் தம் நூலுள் சிறப்பிக்கின்றனர். ''இப்படி அடுத்தடுத்துக் குறுகிய காலத்தில் மூன்று படங்கள் எடுத்து நஷ்டம் அடைந்தவுடன் நான் இந்தத் துறையைவிட்டு விலகிவிடுவேன் எனச் சிலர் நினைத்திருக்கலாம். இந்தத் தோல்விக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தேன். நமக்கு என்று ஒரு ஸ்டுடியோ இல்லாததுதான்; நடிகர்களையும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு இனி கல்கத்தா, பாம்பே என்று போகக் கூடாது. இங்கேயே ஒரு ஸ்டுடியோவை ஏற்படுத்திவிட்டால் இந்தக் குறைகளை அகற்றிவிடலாம் என்று தோன்றியது. நண்பர்களுடன் கலந்து பேசினேன். டுமாரோ இஸ் நோ குட்-நல்லதை நினைக்கிறபோதே செய்துவிட வேண்டும். எந்தக் காரியத்தையும் பென்டிங்காக வைக்க எனக்குப் பிடிக்காது.........நமக்கென்று ஒரு ஸ்டுடியோ அமைக்க வேண்டும் என்கிற எண்ணம்

---

8. ஹெலன் கெல்லர்; டெய்சி இராமையா; ப. 15.

தோன்றியவுடன் எனக்கு அதில் ஒரு வேகமும் வந்துவிட்டது'' எனும் பகுதியைக் காட்டாக்கலாம்.[9]

இடையூறுகளை வெட்டி முறித்தற்கு வரலாற்றுத் தலைவருக்குப் பிறரின் துணை கிடைத்தலும் உண்டு. புதுவை நகரில், ஆங்கில அரசின் அடக்கு முறையால், தம் பத்திரிகைத் தொழிலைப் பிரிந்திருக்க நேர்ந்தது பாரதிக்கு. ஆனால், தடைபட்ட எழுத்துப்பணி மீண்டும் தொடர்ந்ததை

''அந்த
வெறுமைபடர்ந்த
வேளையில்...
மண்டயத்து ஆச்சாரியார்
மருந்து கொண்டு வந்தார்.
இந்தியா பத்திரிக்கையின்
அச்சு இயத்திரங்களை
அள்ளிக் கொண்டு வந்து
புதுவையில் அவர்
பதியம் போட்டார்.
பாரதி
குதூகலத்தில் குதித்தான்;
முண்டாசு வானத்தை
முட்டியது.
வறண்ட பாலாற்றில்
கங்கையே வந்ததாய்க்
களித்தான்
தேக்கிவைத்த தாகம்
மடை உடைத்தது.
ஆனந்த அவசரத்தில் பேனாவின் முள்
மூடியைத் துளைத்துக் கொண்டு
துருத்தியது.
புதுவையிலிருந்து
புதிய இந்தியா
புறப்பட்டது.''

என்பதால்[10] அறிகிறோம்.

நோக்க நிறைவேற்றம் எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே முடிதலும் உண்டு. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயில விரும்பிய உ. வே. சாமிநாதையர்,

---

9. எனது வாழ்க்கை அநுபவங்கள்; ஏ. வி. எம்; பக். 18-19.
10. கவிராஜன் கதை; வைரமுத்து; பக். 128-129.

பல்வேறு முயற்சிகளுடன் அவரைக் கண்டபொழுது அவரால் மாணாக்கராக ஏற்றுக்கொள்ளப்பட்டதை இவண் சான்று காட்டலாம். அதனால் தாமடைந்த மகிழ்வை, ''பிள்ளையவர்களுடைய மாணாக்கர் கூட்டத்தில் நாமும் சேர்ந்து விட்டோமென்ற நினைப்பு எனக்கு ஒருவகையான பெருமிதத்தை உண்டாக்கியது, அன்று இரவு நானும் என் தந்தையாரும் ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீ மாயூரநாதரையும் அபயாம்பிகையையும் தரிசித்து வந்தோம். இராத்திரி முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. என் உள்ளத்தில் பொங்கி வந்த சந்தோஷ உணர்ச்சியினால் அமைதியில்லாமல் பலவகையான காட்சிகளைக் கற்பனை செய்து பார்த்தேன். இனி நமக்கு ஒரு குறைவும் இல்லை என்ற நம்பிக்கை என் அந்தரங்கத்திலிருந்து ஒளிவிட்டு வந்தது'' என்று காட்டுகிறார்.[11]

வாழ்வில் தம்முடைய வாழ்க்கை இலக்கினை எட்டிப் பிடிப்பவரும் உண்டு. ஏமாறுபவரும் உண்டு. ஏமாறுபவர்களும் இறுதிவரை துணிந்து அதற்காக மேற்கொண்ட போராட்டங்களாலாயே வரலாற்றில் அழியா இடம் பெற்று விடுகின்றனர். அவர்கள் அதற்காக வாழ்ந்த வாழ்க்கையே அவர்களையும் வெற்றி வீரர்களாக உலகைக் கருதச் செய்கிறது. வெற்றி பெற்றவர்க்குரிய மதிப்பினையும் சிறப்பினையும் நல்குகிறது. நெப்போலியனின் வாழ்க்கை இதற்கு மிகச் சிறந்த சான்று. தன்னை முதல்வனாகக் கொண்டு அரசபரம்பரை ஒன்றை நிறுவ நெப்போலியன் பெரிதும் ஆசைப்பட்டான். அது இயலவில்லை. வஞ்சனையால் சிறைக் கைதியாகி அல்லலுற்று ஆற்றாது மடிந்த நிலை கேட்போரை நெக்குருக வைக்கும். ''நெப்போலியனைச் சிறை வைத்த இடம் ஐம்பது ஆண்டுகளாகக் குதிரை லாயமாக இருந்த இடம். துரிதப்படுத்தி அதை வாசஸ்தலமாகச் செய்து, சீர்படுத்தினார்கள். இங்குத் தற்காலிகமாக அமைத்த மர வீட்டில், இரு சிறு அறைகளில் சக்கரவர்த்தி நெப்போலியன் வசித்தான். ஒரு சாய்வு நாற்காலி, இரண்டு நாற்காலி, கை கழுவும் பாத்திரம் ஒன்று இவையே அங்கு இருந்த தளவாடச் சாமான்கள். இந்த அறைகளில் எலிகளின் நடமாட்டம் அதிகம்; குதிரைகளையும் மனிதர்களையும் இடையிடையே அவை கடிப்பது உண்டு. கோழி முதலிய வீட்டுப் பறவைகளையும் அவை கொல்வது உண்டு'' என்று அவன் வாழ்வின் இறுதிநிலை காட்டப்படுகிறது.[12] அவன் பருவுடலுக்கு வந்த இந்த இழிநிலை அவன் பெற்ற புகழுக்குச் சிறிதும் ஊறு விளைக்கவில்லை. மாறாகக் கூட்டியது என்றே கூறவேண்டும். இதுபோன்றே

11. என் சரித்திரம்; உ. வே. சாமிநாதையர்; ப. 164.

சுல்தானா ரஸியாவின் வாழ்வும் அமையக் காணலாம் (மானம் காத்த மங்கையர்).

தம் எண்ணம் ஈடேறக் காணும்பொழுது ஒருவர் அடையும் ஆனந்தத்தையும், பெருமிதத்தையையும் வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் சுட்டுவதை இதனுடன் இணைத்து நோக்கலாம்: விடுதலை இந்தியாவைக் காணவிரும்பி அதற்குத் தம் பங்கினை அளித்த கல்கி, இந்திய விடுதலையை நேரில் கண்ட இன்பத்தை, அவர் வரலாற்றைப் படைத்த சுந்தா காட்டுகிறார். 'ஆனந்த நகரம்' என்று அதைக் கல்கி வர்ணித்து அதையே தலைப்பாய்க் கொண்டு, சுதந்திர மலரை அடுத்த நாலு இதழ்களில் ஒரு தொடர் கட்டுரை எழுதினார். அது ஓர் ஆனந்த நகரமாய்க் கல்கிக்குத் தோன்றியதற்கு மற்றொரு காரணம், சிறப்பான காரணம், அவருடைய அருந் தலைவர் ராஜாஜி, அந்நகரத்து அரசாங்க மாளிகையில் மேற்கு வங்காளக் கவர்னராய்ப் பதவி ஏற்றவைபவத்தை, வரலாற்றுக் காட்சியை, கண்ணாரக் கண்டு களித்ததனால் ஆகும். அந்தக் களிப்பினை அவர் உடனிருந்த டி. கே. சி. யுடனும் சின்ன அண்ணாமலையுடனும் சேர்ந்து அனுபவித்தார். பின்னர் அதை வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டார் என்று வருணிக்கின்றார் (ப. 651).

இவ்வாறு வெற்றி அல்லது தோல்வி என்ற முடிவு அறிய இயலாவாறு சிலரின் வாழ்வு இடையிலேயே முடிந்துவிடுவதுண்டு. அல்லது சமூகத் தொண்டர் போன்று தம் வாழ்வை முழுவதும் பிறர் நலனுக்காகவே தியாகம் செய்பவர்களின் வாழ்வும் என்றும் தொடர்கதையாகி விடுகிறது. "எனது பொது வாழ்க்கை முடிவடையாத தொடர்கதைபோல நீளுகின்றது. ஆகவே எனது போராட்ட வரலாற்றை முற்றுப்புள்ளி வைத்து நான் முடித்து விடுவதற்கில்லை. கமா போட்டு இந்த அளவில் நிறுத்திவைத்து, வாசகர்களிடம் தற்காலிகமாக விடைபெறுகிறேன்" எனும் கூற்று உணர்த்தும்[12] பாட்டுக்கொரு புலவன் பாரதி; கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோர் தம் வாழ்வு இந்திய விடுதலைக்குப் போராடிய வாழ்வாக அமைந்தது. ஆனால் அவர் தம் வேட்கை தணியுமுன்பே, இந்திய விடுதலை மலருமுன்பே இல்வுலக வாழ்வை நீக்கும் அவலத்திற்கு ஆளாகி விட்டனர். "அரசியலால் இன்னலையே அடைந்த அவருக்கு இறுதி நாட்கள் வந்துவிட்டன. மருத்துவர்கள் கைவிட்டனர். அப்போது கண்களில் நீர் வழிய "சாவதற்கு முன்னர் சுதந்திரத்தைக் காணக்கொடுத்து வைக்கவில்லையே?" என்று கூறி கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொன்

12. எனது போராட்டம்; ம. பொ. சி.; பக். 1007.

னார். கேட்டு மனம் பூரித்தார். அந்த உள்ளப் பூரிப்புடனே நவம்பர் 18ஆம் தேதி நள்ளிரவில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். கன்னித்தமிழ் வளர்த்த கவிஞர் இவ்வுலக வாழ் விலிருந்து விடுதலை பெற்றார். அவர் இறப்பதற்கு முன்னர் தன் அருகிலிருந்த தேசபக்தர்களை வணங்கி விடைபெற்றார்.'' என்ற வ. உ. சியின் இறுதிக்காட்சி[13] நம்மை அவ்வீரருக்காக வருந்தச் செய்கிறது.

இலக்கிய படைப்பாளர், அறிவியலறிஞர் போன்றோர் பலரின் வரலாறுகள்கூட மேலும் மேலும் புதியனவற்றைப் படைத்தல் என்ற நிலையில் தொடர்ந்து அமையக் காணலாம். பதிப்புப் பணியில் ஈடுபட்டுப் பழந்தமிழ் நூல்களை நன்முறையில் தமிழுலகு அறியச் செய்த தமிழ்த்தாத்தா உ. வே. சாமி நாதையர், உழைப்பால் உயர்ந்த தொழில்மேதை ஜி. டி. நாயுடு போன்றவர்களைச் சான்றாக்கலாம். இத்தகையோரின் வாழ்க்கை இலக்குகள் நிறைந்தும் நிறைவுறாத தன்மையாகக் கொள்ள லாம். தம் உழைப்பின் பயனைச் சமுதாயத்தில் பெற்று விட்ட னர் எனும்பொழுது நிறைவும்; மேலும் அவரது ஆக்கப்பணிகள் முடிவுறாது எல்லையற்ற தன்மையாய் வளர்ந்துவரும் நிலையில் நிறைவின்மையும் அமைகின்றன.

எவ்வித இலக்குமின்றி வாழ்வை அதன் போக்கில் கடப்பவர் களே உலகில் மிகுதி. அவர்களைப் பற்றி உலகம் அறிந்து கொள்ள விழைவதுமில்லை—வாழ்க்கை வரலாறுகள் எழுவது மில்லை. ஏதேனும் ஓர் இலக்கினை நோக்கிச் செல்பவர்களே உலகின் ஈர்ப்பிற்கு ஆளாகின்றனர். அவர் வாழ்வு அவருக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் பயனாகும்பொழுது பாராட்டுக்குறி யவராகின்றனர். அவர் தம் வாழ்க்கைப் பிறருக்கு வழிகாட்டி யாகிறது. வாழ்க்கை வரலாறுகள் எழுகின்றன. இவ்வாறு வாழ்க்கை இலக்கு ஒன்றாக மட்டுமின்றி, முதன்மையானதுடன் இணைந்ததாக மற்றும் சிலவும் சிலரின் வாழ்வில் காணக் கூடும். மகாத்மா காந்தியின் வாழ்வு, இந்திய மக்களின் விடுதலை என்ற இலக்கினைக் கொண்டிருந்தபொழுதிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம்; இந்து இசுலாமியர் ஒற்றுமை எனப் பன்முகம் கொண்டிருந்தது. பெரும்பாலும் பொதுப்பணியில் ஈடுபட்டோரின் வாழ்க்கை இவ்வாறு அமையக்காணலாம். பெண் விடுதலை, சமுதாய முன்னேற்றம், தமிழ்மொழி வளர்ச்சி, நாட்டு விடுதலை என வாழ்ந்த பாரதி; நாட்டு விடுதலை, இலக் கியப்பணி, மொழிப்பணி என வாழ்ந்த கல்கி போன்றோர்

13. நாட்டுக்கு உழைத்த நல்லவர்-வ. உ. சிதம்பரம்பிள்ளை; எம். வி. வெங்கட்ராம்; ப. 40.

தமிழுக்குப் பெருமையளிக்கின்றனர். இத்தகையவரின் வாழ்க்கை வரலாறுகள் பலகிளைகளாய் அவ்வவ் இலக்கினை நடத்திச் செல்லும் நிகழ்ச்சிகளுடன் சிறப்பிக்கப்படுகின்றன.

வாழ்க்கை வரலாற்று நூலின் விரிவிற்குத்தக இதில் சுட்டப் படும் நிகழ்ச்சிகள் எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. நிகழ்ச்சி களின் விளக்கமும் அதற்கேற்பவே அமைகின்றது. வாழ்க்கை அறிமுகங்கள் ஓரிரு நிகழ்ச்சிகளுடன் நின்றுவிடுகின்றன. சுருக்க வரலாறுகள் சற்று அதிகமாகக் காணப்பட, விரிந்த வரலாறுகள் நன்குச் சிறப்பாக இந்நிகழ்ச்சிகளில் விளக்கம் பெறுகின்றன. நூலின் இயல்பிற்குத்தக இடம்பெறும் நிகழ்வுகளின் முக்கியத் துவம் அமைகிறது. நூலின் அமைப்பியல்பிற்கேற்ப வாழ்க்கை வரலாற்றுத்தலைவரின் வாழ்க்கை இலக்கை நடத்தும் நிகழ்ச்சி கள் தேர்வு செய்யப்படுகின்றன எனவும் கொள்ளலாம். எனவே வாழ்க்கை வரலாற்று நூல் படைப்பாளரின் பணி இதில் மிக்க கவனம் கொள்ளப்பட்டு, அவரது திறமையைப் புலப்படுத்துவ தாகவும் அமைகிறது.

4. சூழல் (ஏது)

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் தம் வாழ்க்கை இலக் கினைத் தேர்ந்ததற்கான சூழல், அச்சூழல் அவ்விலக்கை நோக்கி அவர் முன்னேற துணை நின்ற விதம், இலக்கை எட்டியதில் அதற்குரிய இடம் போன்றன இவண் கருதப்படுகின்றன. ஏதேனும் ஒன்றன் அடிப்படையில்தான் ஒவ்வொருவரின் நோக்க மும் அமைகிறது. அந்த ஒன்றைச் சூழலாகக் கொள்ளலாம். இதனையும் வரலாற்றாசிரியர்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்ற னர். தன் வரலாறுகளிலும் அவர்கள் தம் கொள்கைக்கு அடிப் படை வித்து யாது என்பதைச் சுட்டத் தவறவில்லை. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை நோக்கோடு மிக்கத் தொடர் புடையதாக அமைதலினாலும், அவர் தம் பண்பு விளக்கத் திற்குக் காரணியாகவும் விளங்கக் கூடுமாதலாலும் வாழ்க்கை வரலாற்றிலக்கியப் பொருண்மையில் சிறப்பிடம் பெறுகிறது.

''கிராமத்திற்கு மேற்கிலிருந்த கண்மாய்க் கரையை ஒட்டிய ஒரு தென்னந்தோப்பில் அவன் அடிக்கடி போய் உட்கார்ந்திருப் பான். சலசலக்கும் தென்னை ஓலையும் 'விர்' ரென்று பறந்து செல்லும் வண்டுகளும் பல கவிதைகளில் வருவதை அவன் படித் திருக்கிறான். அவற்றையே தென்னந்தோப்பில் கண்ட அவன், அவற்றைப் பற்றித்தானும் பாட எண்ணினான், பாடியும் பார்த்தான், தனக்குத்தானே பேசிக்கொண்டான். அப்போதே ஒரு பெரிய எழுத்தாளனாகி விட்டதாக அவனே இறுமாந்து

கொண்டான்.........புதுவிதச் சிந்தனைகளின்மீது அவனுக்கு விடாப்பிடியான பற்று இருந்தது. தான் ஒரு பெரிய எழுத்தாளனாக ஆகிவிட்டதாகக் கற்பனை செய்து பார்ப்பதில் அவனுக்கு நிம்மதியும் தெம்பும் கிடைத்தன'' என்று கவிஞர் கண்ணதாசன் நவில்கிறார்.[14] பிற்காலத்தில் அவர் மிகப் பெரிய கவிஞராக, எழுத்தாளராக உருவெடுப்பதற்கு அவரது மனநிலையே முக்கிய காரணமாக அமைந்ததை இது உணர்த்துகிறது.

காசி-
மற்றவர்க்கெல்லாம் அது
யாத்திரை முடியும் இடம்
பாரதிக்கோ-ஒரு
புனித யாத்திரை
தொடங்கிய இடம்.
காசிக் கரையின் காற்றும்
கங்கை அலையின் வீச்சும்
பாரதியின் மனத்தை
ஒரு
விசால வானமாய்
விரித்தன
இங்கு தான்
திலகன் தூவிய
தீயின் விதைகள்
பாரதி நெஞ்சிலும்
பைய வீழுந்தன.
அவை
முளைப்பதற்கு
முகூர்த்தம் பார்த்தன.
கல்வி அங்கே முடிந்தது!
காசி வாசம் கசந்தது!
இதயத்திற்கு
இறகு முளைத்தது.

என்பது[15] நாட்டுப் பற்றினைத் தம் உயிர் மூச்சாகப் பாரதி கொண்டதன் அடிப்படையைக் காட்டுகிறது.

''நான்சி அம்மையாரே ஓர் ஆசிரியை அல்லவா? அவர் தம் செல்வக் குமாரனுக்கு வீட்டிலேயே பாடம் கற்றுக் கொடுத்தார். தாமஸ் விரும்பிப் படித்தார். தாயார் கூறிய வீரக்கதைகளும்

14. வனவாசம்; ப. 14.
15. கவிராஜன் கதை; வைரமுத்து; பக். 37 - 38.

நீதிக் கதைகளும் இளம் தாமஸின் இதயத்தைக் கவர்ந்தன. நூல்கள் படிக்கும் பழக்கத்தை அவருக்கு ஊட்டியவரும் அவருடைய தாயாரே. நூல்கள் படிக்கும் பழக்கத்திற்கு ஊக்கம் ஊட்டியவரோ அவர் தந்தை. அவர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு நாள் அவர் தம் மகன் தாமஸை அழைத்து, 'தாமஸ்! நீ உன் அறிவை வளர்த்துக்கொள்ள நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். அதற்காக உனக்குப் பரிசு தரப் போகிறேன். நீ நிறைய நூல்கள் படிப்பாய் அல்லவா? என்று கேட்டார்'' என்று ஆயிரக் கணக்கான அறிவியல் கண்டு பிடிப்புகளை உலகிற்குத் தந்த தாமஸ் ஆல்வா எடிசனின் அறிவியற்பணி விழைவிற்குத் தூண்டு கோலாக அவர் தம் பெற்றோர் அமைந்தமையைச் சுட்டுவர்.[16] இவ்வாறே ஒவ்வொருவரின் செயலுக்குப் பின்னும் ஏதேனும் ஓர் பின்னணி நிற்கிறது. அது பெற்றோர், இயற்கை, மனவியல்பு, மாற்றார் (நண்பர், சுற்றம் மதிப்பிற்குரியோர்........) என இவை மட்டுமின்றி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி, காட்சி, விபத்து, எனப் பிறவாகவும் அமைதற்கு வாய்ப்புண்டு. மகாத்மா காந்தியின் வாழ்க்கைப் பயணம் உண்மையை நோக்கி நடைபயின் றமைக்கு 'அரிச்சந்திர நாடகம்' துணை நின்றமையை நாம் அறிவோம். 'எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபையங்காரே. பொம்மை (பாவை) களைக் காட்டி குழந்தைகளைக் கவர்வது போலத் தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக் காட்டி என் உள்ளத்துக்குள் அந்த இளம் பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே' என்று உ. வே. சாமிநாதையர் தம் தமிழ்ப்பணிக்கு வித்திட்டவரைக் குறிப்பிடுகிறார் (பக். 71). நாடு அடிமையுற்றிருந்த காலத்தில் அதுவே காமராஜர், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற எண்ணற்றவர்களுக்கு நாட்டுப் பணியையே தம் வாழ்க்கை இலக்காகக் கொள்ளச்செய்தது; ''லெனின் தமையன் அலெக்சாந்தர் அரசியல் தீவிரவாதியாக விளங்கியதன் பலன் தூக்கு மேடையில் உயிர் துறந்தார். இதனைப் பார்த்து தான் புரட்சியாளராக மாறினார் லெனின்'' என்பதும்[17] நோக்கத் தக்கது.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் தம் வாழ்க்கை இலக்கை மாற்றிக் கொள்ளுதலும், தம் இயல்பை மாற்றிக் கொள்ளுதலும் இயல்பே. இவ்வியல்பிற்கும் மேற்கண்ட சூழலே (ஏது) அடிப் படையாகிறது. அவர்கள் வாழ்வின் திருப்புமுனைகளான்

16. அறிவியல் அறிஞர் தாமஸ் ஆல்வா எடிசன்; தி. சு. கலிய பெருமாள்; பக் 6 - 7.

17. மேதைகள் வாழ்விலே; இ. எஸ். மெர்வின்; ப. 43.

இவற்றை வரலாற்றுப் படைப்பாளர் தவறாது சுட்டுகின்றனர். புதினம், சிறுகதை போன்ற படைப்பிலக்கியங்களில் வரும் திருப்பங்கள் போன்று இவை அமைந்து பலரின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதற்குச் சுவையுடையதாக்குகின்றன. கற்பாரின் ஆவலைத் தூண்டி, அச்சூழலுக்கு ஏற்ப மகிழ்வையோ அல்லது துன்பத்தையோ அவர்களும் கொள்ளுமாறு செய்கின்றன. தன்னுடைய சகோதர சகோதரிகளைக் கொன்றுவிட்டு, தன்னுடைய தந்தையின் அரியணையைக் கைப்பற்றிய அசோகன் பின்னாளில் தன் போர் வெறியைத் தணித்து உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு காட்டும் புத்த மதத்தில் இணைந்து அதன் பரப்புதலுக்குப் பெருந் தொண்டாற்றினான் என்பது வரலாறு. அசோகனின் வாழ்க்கை இலக்கினை, தன் நாட்டை விரிவாக்க வேண்டும் என்ற நோக்கினை இங்கு மாற்றியமைத்தது அவர் மேற்கொண்ட கலிங்கப் போரே. எனவே அசோகனின் வாழ்க்கை வரலாற்றில் அஃது குறிப்பிடத்தக்க இன்றியமையாமை பெறுகிறது.

"யான் திருக்குறள் படித்தவன், என்பால் பிடிவாதம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் துதைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை, அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்லள். எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனை வாழ்க்கையில் ஈடுபடபடத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்வதற்கு மனை வாழ்க்கை இன்றியமையாதது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று என்று குறிப்பிடுகிறார். திரு. வி. க." இதனால்[18] திரு. வி. க. வின் பண்பு மேம்பாட்டிற்கு, உயர் பண்பு பெறலுக்கு அவரது வாழ்க்கைத் துணைவியாரும் ஒரு கருவியானார் என்பது புலப்படுகிறது. இவ்வாறே பிறவும் அமைகின்றன.

5. பண்பு

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தமக்கென்று சில பண்புகளுடனே தான் அமைகின்றனர். எனவே அவர் தம் வாழ்க்கை ஏட்டில் இடம் பெறும் பொழுது, அன்னாரின் பண்பும் விளக்கம் பெறும் பொழுதுதான் படைப்பு முழுமை பெறுகிறது. பல வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் அறிமுகங்கள் அவர் தம் குறிப்பிட்ட சிறந்த பண்பின் விளக்கமாக அமைதலும் உண்டு. ஒரு

---

18. திரு. வி. க. வாழ்வும் தொண்டும்; சக்திதாசன் சுப்பிரமணியன்; ப. 57.

வரின் இயல்பு நடவடிக்கைகளும், குறிப்பிட்ட சூழலில் நடந்து கொள்ளும் விதமும் பிறரிடம் பழகும் முறையும் அவர்தம் பண்பினை, இயல்பினை உணர்த்துகின்றன எனலாம்.

பிறருடைய துன்பத்தை உணராது, தனது இன்பத்தை மட்டுமே உணர்ந்து அதற்கேற்ப செயல் படும் இயல்பினராகச் சிறு வயதில் ஜி. டி. நாயுடு விளங்கினார் என்பதை அவரின் வரலாற்றாசிரியர், ''தன்னைப் போன்ற இளைஞர்கள் காற்றாடி விட விரும்பினார். அங்கு நின்று கொண்டிருந்த பையன் கையில் பட்டம் ஒன்றிருப்பதைக் கவனித்தார். ஆனால் அதைப் பறக்க விடுவதற்கு நூல் இல்லை. அருகில் பட்டறை வைத்திருந்த ஆசாரி ஆபரணம் செய்வதற்காகத் தங்கத்தைக் கம்பியாக இழுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே அந்தக் கம்பியைப் பிடுங்கி அதில் பட்டத்தைக் கட்டினார். அந்த இடத்தில் அது அவருக்குத்தமாஷ்! பெரியவர்களிடம் இவர் மரியாதையாக நடப்பதில்லை. வெண்மையான மெலிந்த இளைஞனின் மித மிஞ்சிய குறும்புத்தனங்களுக்குப் பெரியவர்கள் தான் பயந்து நடந்தார்கள்'' என்று காட்டுகிறார்.[19]

''சமுதாயத்தில் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். காரில் போகிறவன் போகட்டும்; காலால் நடந்து போகிறவனுக்கும் நாம் பாதுகாப்புத் தரவேண்டும். பணம் உள்ளவன் அல்வா சாப்பிடட்டும்; ஏழைகளுக்கு இட்டிலி சாப்பிடவாவது நாம் வசதி அளிக்க வேண்டும் இதுதான் என் நேச்சர். என்னுடைய ரெக்ரியேஷன் எல்லாம் இன்டெலிஜென்ட் பீப்பிளோடு மணிக்கணக்காகப் பேசுவதுதான். சென்னை வரும் போதெல்லாம் புதிய நாடகம், புதிய சினிமா — அது எந்த மொழியில் இருந்தாலும் ஜனங்களால் பாராட்டப்படுகிறது என்றால் அதில் உள்ள நல்ல அம்சங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று போய்ப் பார்ப்பது உண்டு'' என்று தன் பண்பினைத் தெரிவிக்கிறார் ஏ. வி. எம்.[20]

ஆபரகாம் லிங்கன் மிகுந்த நகைச்சுவைப்பண்புடையவராகப் பாராட்டப் படுகிறார். இதனை 'இவர் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது ஒரு அமெரிக்கப் பெண் நீக்ரோ பொம்மை ஒன்றை இவர் மேல் வீசி எறிந்தாள். அதைக் கையில் பிடித்துக் கொண்டு, ஏம்மா, இது உனக்குப் பிறந்த குழந்தையா?' என்று கேட்டவுடன் அந்தப் பெண் தலை குனிந்து போய் விட்டாள். இன்னொருவர், ஏய் மனிதனுக்குக் கால்கள் எவ்வளவு நீளம் இருக்க வேண்டுமென்று கேட்டார். அதாவது

19. உழைப்பால் உயர்ந்த ஜி. டி. நாயுடு; மெர்வின்; பக். 19-20.
20. எனது வாழ்க்கை அனுபவங்கள்; ப. 74.

இடுப்பிலிருந்து தரையைத் தொடுகிற வரையிலிருந்தால் போதும் என்றார்' என்பதால் அறியலாம்.[21]

இத்தகைய பண்பு விளக்கங்கள் முழுமையான நீண்ட வரலாறுகளில் சிறப்பிடம் பெறுகின்றன. படைப்பாசிரியர் வாழ்க்கை வரலாற்றை வரைந்து கொண்டிருக்கையில் இடையிடையே இப்பண்புகள் வெளியே புலப்படுமாறு அல்லது தனித்து நிற்குமாறு படைக்கின்றனர்.[22] அன்றி நூலின் ஒரு பகுதியில் பண்பு விளக்கத்திற்கெனத்தனித்த அத்தியாயங்களைப் படைத்து மொழிதலும் உண்டு.[23] தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் என்ற நிலையில் பின்னிலைச் சிறப்புற்றாலும் இலக்கியச் சுவையை நினைக்கும் பொழுது முன்னதே ஏற்புடைத்தாகிறது. ஏனைய வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகையிலும் இவை இடைமிடைந்து குறிப்பிடத்தக்க அளவு இடம் பெறுகின்றன. ''ஸீசருடைய உயில் ஒவ்வொரு ரோம் நகரப் பிரஜைக்கும் சில பொற்காசுகள் வழங்கும்படி எழுதியிருந்ததிலிருந்து மக்களை உண்மையாய் நேசித்தார் என்று தெரிகிறது'' என்பதைச் சான்றாக்கலாம்.[24]

6. பழக்க வழக்கங்கள்

ஒவ்வொருவரின் வாழ்விலும் தொடர்ந்து இடம்பெறுவனவாகவும், முக்கிய இடம் கொள்வனவாகவும் பழக்க வழக்கங்கள் அமைகின்றன. அடிக்கடி நிகழும் குறிப்பிட்டதொரு செயலை ஒருவர் எங்ஙனம் நிகழ்த்துகிறார், அன்றாட வாழ்வில் சிறப்பாக மேற்கொள்ளும் செயல் போன்றவற்றை ஒருவரின் பழக்கமாகக் கொள்ளலாம். அது தொடர்ந்து நிகழ்வதால் பழக்கவழக்கமாகிறது. அவ்வகையில் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் எழும்பொழுது வரலாற்றுத் தலைவரின் பழக்கவழக்கங்களும் குறிப்பிடத்தக்கப் பெருமை பெறுகின்றன. வரலாற்றுத் தலைவரை முழுமையாகப் புரிந்து கொள்ளுதற்கும், நூலைச் சுவைபட நடத்திச் செல்வதற்கும் இப்பொருண்மை மிகுதியும் துணை நிற்கின்றது.

நூல்களை எந்நேரமும் படித்துக்கொண்டேயிருக்கும் வழக்கம் கல்கியிடம் சிறுவயது முதற்கொண்டே அமைந்திருந்ததைச் சுந்தா அழகாக விவரிக்கிறார். ''புஸ்தகம் ஹஸ்த பூஷணம் என்பதை ஐயர்தான் தமது அருமை அகஸ்தியனுக்குச் சொல்லியும் பழக்கியும் கொடுத்தார். புத்தகம் கைக்கு அணிகலந்தான்;

---

21. மாபெரும் வீரர்கள்; சி. பி. சிற்றரசு; ப. 81.
22. பொன்னியின் புதல்வர்; சுந்தா.
23. இலக்கிய ஜோதி; மது. ச. விமலானந்தம்.
24. மேதைகள் வாழ்விலே; இ. எஸ். மெர்வின், ப. 19.

ஆனாலும், கை இருப்பதே புஸ்தகத்தைப் பற்றுவதற்காகத்தான் என்ப் பொருள் கொண்டதுபோல், எப்பொழுதும் அவன் புத்தகமும் கையுமாய் இருந்ததைக் கண்டு, அவனைப் 'புஸ்தகப்பழு' என்று ஐயர் கேலி செய்யலானார். திண்ணையில் அவன் குப்புறப்படுத்துக் கொண்டு படிப்பதைப் பார்த்தால், அந்தக் கேலிப் பெயருக்குப் பொருத்தமாகவே இருப்பான்.........ஒருநாள் அவனுடைய தாயார், புழுங்கிய நெல்லைத் தெருவில் விரித்து உலரப்போட்டு, திண்ணையில் புத்தகமும் கையுமாய் நெளிந்து கொண்டிருந்த பிள்ளையிடம் ஒரு கம்பைக் கொடுத்துக் காவல் காக்கச் சொன்னார். சிறிது நேரம் அவன் மிக்க பொறுப்புடன் புத்தகத்திலும் நெல்லிலும் மாறி மாறிக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். பிறகு நெல்லை மறந்து புத்தகத்திலேயே லயித்து விட்டான். ஏதோ கூக்குரல் கேட்டு அவன் பார்த்த போது, புழுங்கல் நெல்லில் பாதிக்குமேல் ஒரு மாடு விழுங்கிவிட்டு ஓடுவதைக் கண்டான்,'' என்பதைப் (பக். 33-34) படிக்கும் பொழுது கல்கியின் புத்தகப்பித்து புரிகிறது. வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களில் நூற்றலைவராகத் திகழும் பலருக்கு இப்பழக்கம் உள்ளமை சிந்திக்கத்தக்கது.

"நான் எப்போதும் கதர்வேட்டி, கதர்ஃபுல் ஜிப்பாதான் அணிவேன். எழுந்தவுடன் ஒரு காப்பி-அப்புறம் ஒரு காப்பி சாப்பிடுவேன். பிறகு ஒரு க்ளான்ஸ் எல்லாப் பத்திரிகைகளையும் பார்த்துவிட்டுக் காலையில் என் கடமைகளை ஆரம்பித்து விடுவேன். வாழ்க்கைக்குக் கடவுள் பக்தி எவ்வளவு அவசியமோ அதுபோல சிம்ப்ளிசிடி இன்லைஃப் மிகவும் அவசியம்'' எனத் தன் அன்றாடப் பழக்கத்தைச் சுட்டுகிறார் ஏ. வி. எம். (ப. 39).

சிலரின் இளமைப் பழக்கவழக்கங்களே பின்னாளில் அவர் தம் வாழ்க்கை வெற்றிக்கு அடிப்படையாக அமைதலும் உண்டு. இதற்கு நாம் ஹான்ஸ் கிறிஸ்தியன் ஆண்டர்சன் வாழ்க்கையைச் சான்று காட்டலாம். ''அந்தப் பையன் பொம்மைகளை வைத்து தினமும் நாடகம் நடத்துவான். மேடையில் நிற்கும் பொம்மைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நடிகராக நினைத்துக் கொள்ளுவான். அந்த நடிகர்களுக்குத் தகுந்தபடி நாடகம் வேண்டாமா? உடனே அவன் தானாகவே கற்பனை செய்து நாடகம் தயாரிப்பான். பொம்மை நடிகர்கள் ஒவ்வொருவரும் நடிப்பது போலக் கனவு காண்பான். இந்தப் பழக்கம் வளர்ந்து கொண்டே வந்தது. கொஞ்சகாலம் சென்றதும் கதைகள், நாடகங்கள் எழுதவேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. அவன் பல கதைகள் எழுதினான்; நாடகங்கள் எழுதினான். அவை

யெல்லாம் மிகவும் நன்றாக இருந்தன'' என்பர் அவரது வாழ்க்கை வரலாற்றாசிரியர்.[25]

''அதிலும் தேசாந்திரிகளாக வரும் சாமியார்களிடம் அவனுக்குத் தனிப்பட்டதொரு பற்று. தன் கையில் கிடைப்பது எதுவாயினும் அதை அவர்களுக்கு அளித்து விடுவான் நரேன். உலகைத் துறந்த அந்த ஆண்டிகளைக் கண்டாலே அவனுக்கு என்னவோ அவ்வளவு சந்தோஷம்! ஒருநாள் இடையில் சுற்றிய ஒரே வஸ்திரத்துடன் குழந்தை நரேன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு சந்நியாசி வாசலில் யாசகத்துக்கு வந்தார். நரேன் யோசிக்கவேயில்லை. அவரிடம் ஓடி, தான் அணிந்திருந்த ஒரே ஆடையை அவருக்கு அளித்துவிட்டான். இப்படிப்பட்ட தயாளம் எந்த லட்சாதிபதியின் வீட்டிலும் கட்டுப்படியாகாததல்லவா? எனவே அதன்பின் ஆண்டிகள் யாரேனும் கண்ணில் பட்டாலே நரேனை ஓர் அறையில் விட்டு மூடிவிடுவது வழக்கமாயிற்று. அப்படியும் அவன் சும்மா இருக்கமாட்டான். தன் கைக்கு அந்த அறையில் என்ன கிடைக்கிறதோ அதை ஜன்னல் கம்பிகளின் வழியே யாசகம் வந்த சாதுவிடம் வீசி எறிவான். தியாகச் சிகரமாக விளங்கப் போவதால் துறவிகளிடம் நரேனுக்குத் தானும் அறிந்திரா அன்பு உண்டாகியிருக்கலாம்'' என்று[26] விவேகானந்தரின் இளமைப் பழக்கத்தையும் அவரின் பின்னாளைய வாழ்க்கையையும் தொடர்பு படுத்திக் காணும்பொழுது பெரியோர் பலரின் வாழ்க்கைப் பாதையில் அவர் தம் இளம்பருவப் பழக்கவழக்கங்கள் உயர்ந்ததொரு இடம் கொண்டுள்ளமையை அறியமுடிகிறது.

பண்புப்பொருண்மை போன்றே பழக்கவழக்கங்களும் நூலின் இயற்கேற்ப குறுகிய, விரிந்த அளவில் இடம்பெறுகின்றன. வாழ்க்கைத் துணுக்குகளாக அமையும் நூல்களிலும், வரலாற்றுத் தலைவரை அறிமுகப்படுத்துதலிலும் பண்பு, மற்றும் பழக்க வழக்கங்களின் துணை கொள்ளுதல் குறிப்பிடத்தக்கவளவில் அமைகிறது. ''ஹிட்லர்உணர்ச்சி வசப்படும் பொழுது எல்லாம் கையை ஓங்கிக் குத்துவார். மேஜையில் இருக்கும் கண் கண்ணாடி உடைந்து சிதறும். தன்னுடைய வாழ்நாளில் முப்பது கண் கண்ணாடியை உடைத்திருக்கிறார். ஓயாத வயிற்று வலியால் அவதிப்பட்டார். வயிற்று வலி வந்து விடக் கூடாதென்பதற்காகப் பேசுவதற்கு முன் மருந்து சாப்பிட்டுக் கொள்வார்'' என்பதை[27] முதல் வகைக்குச் சான்றாக்கலாம்.

25. சின்னஞ்சிறு வயதில்; அழ. வள்ளியப்பா, பக் 5-6.
26. சுவாமி விவேகானந்தர்; ரா. கணபதி; பக். 13-14.
27. மேதைகள் வாழ்விலே; இ. எஸ். மெர்லின்; ப. 35.

7. பட்டறிவு (அனுபவம்)

வாழ்க்கையின் பாதை எப்பொழுதும் நேரான, செம்மை படுத்தப்பட்ட பாதையாக அமைவதில்லை. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையாகவே அனைவருக்கும் அமைகிறது. அதிலிருந்து விடுபட்டு, செல்லும் பாதையை, முன்வைத்த இலக்கை அடைவதற்கு ஒவ்வொருவருக்கும் அவரது பட்டறிவு துணை நிற்கிறது. ஒருவர் ஒரு செயலை மேற்கொள்ளும் பொழுது பெறும் அறிவினைப் பட்டறிவு என உரைக்கலாம். ஒன்றின் வெற்றி, தோல்வி, நிறைவேற்ற கையாண்ட நெறி முறைகள், தோன்றிய இடையூறுகள், துணைகள் போன்றன இவ்வறிவினைப் பெறுவதற்கு உறுபொருளாகின்றன. இப்பட்டறிவு மேற்செல்லும் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர்ந்து செலுத்துதற்கும், குறைகளிருப்பின் தவிர்த்து மேற் சென்று எதிர் காலத்தில் அதே சிக்கல் எழாதிருத்தற்கும் வழி காட்டுகிறது. மற்றும் வாழ்க்கை இலக்கினை மாற்றிக் கொள்வதற்கும் கூட சிற்சில வேளைகளில் காரணமாயமைகிறது. இவ்வற்றான் இப்பொருண்மையும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துள் சிறப்பு பெறுகிறது.

திருநெல்வேலியில், 1933 ஆம் ஆண்டு, தந்தையிடம் ஏற்பட்ட கசப்பின் காரணமாக, பத்திரிகைத்தொழிலையே லட்சியமாகக் கொண்டுவீட்டை விட்டு வெளியேறினார்; புதுமைப் பித்தன்; அதே புதுமைப்பித்தன் இடைப்பட்ட பதினோரு வருடகாலத்தில் தமது இலக்கானப் பத்திரிகைத் தொழிலையும் பார்த்து முடித்து, 1944 - ஆம் ஆண்டு அதே இலக்கினைக் கைவிட்டு, தினசரியிலிருந்து வெளியேறினார் என்பர்.[28] இவ்வாறு புதுமைபித்தன் தம் இதழ்ப்பணியை விட்டு விலகுவதற்கு அங்கு அவருக்குக் கிடைத்த கசப்பான அனுபவங்களே காரணமாகும். அவற்றை அவரது வரலாற்றாசிரியர் தெளிவாகக் கூறிச் செல்கிறார்.[29]

பழக்கவழக்கங்களின் மாற்றங்களுக்கும் பட்டறிவு துணை நிற்றலைக் காண்கிறோம். ''ஒரு நாள் நண்பர்களுடன் கடலாடினார். அவர் ஓரிடத்தில் நின்று ஆடினார். மற்றவர் மற்றோரிடத்தில் ஆடினார். இரண்டிடத்துக்கும் இடையே ஒரு பள்ளம். அப்பள்ளத்தில் தோழர் ஒருவர் சிக்கினார். தண்ணீரில் மூழ்கித் தத்தளித்தார். கண்டார் கலியாண சுந்தரனார்; மனம் பதைத்தார். மற்றோரலை வந்து அந்த நண்பரைப் புரட்டித்தள்ளியது. அவ்வளவில் பாய்ந்தார் கலியாண சுந்தரனார். தோழரின் முடி

28. புதுமைப்பித்தன் வரலாறு; ரகுநாதன்; ப. 55.
29. மேற்படி பக். 49 - 54.

பற்றிக் கரையில் சேர்த்தார். தோழருக்குத் தெளிவு ஏற்பட அரைமணி நேரம் ஆயிற்று. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கலியாண சுந்தரனார் கடலில் இறங்குவது ஒழித்தார். கடலாடல் விடுத்தார்.'' என்று திரு. வி. க. கடலாடும் பழக்கத்தை ஒழித்தமையைத்தருவர்.[30]

பட்டறிவு அறிவுரைகளாக வடிவெடுப்பதை ம. பொ. சியின் எனது போராட்டத்தில் காணலாம். ''வேலை இல்லாத நிலையில் ஒருவர் கலியாணம் செய்து கொள்வது அல்லது செய்து வைப்பது பெருந்தவறு என்றே கருதுகின்றேன். 'உத்யோகம் புருஷ லட்சணம்' என்றொரு பழமொழி உண்டு. இதனை, பொன் போல் போற்ற வேண்டும் - செல்வந்தர் வீட்டுப் பிள்ளையானாலும், வருவாய்க் குரிய தொழில் இல்லாத நிலையில் அவருக்குத் திருமணம் செய்து வைத்தல் கூடாது. முழுக்க முழுக்க கடன் பட்டுத் திருமணம் செய்து கொள்வதும் பெரும் பிழையாகும். என் விஷயத்தில் இந்த இரண்டு தவறுமே நடந்து விட்டன. ஆம்! வருவாய்க்குரிய வேலையில்லாத நிலையில் பெரும் வட்டிக்குக் கடன் வாங்கிக் கலியாணம் செய்து வைத்தனர் பெற்றோர். ஏற்கனவே நான் பரமதரித்திரன்! இவற்றால் கலியாணமாகியும் பட்டினி தான்'' என்று அறிவுறுத்துகிறார். (ப. 46).

பட்டறிவு தன்னனுபவமாக மட்டுமே இருக்க வேண்டுமென்பதில்லை. பிறரனுபவத்தையும் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொள்வதையும் பார்க்கலாம். ஏ. வி. மெய்யப்பன், 'எனது வாழ்க்கை அநுபவங்கள்' நூலில் ''மங்கம்மா சபதத்தில் திரு. வாசன் அவர்களிடமே வசுந்தரா தகராறு செய்து விட்ட காரணத்தினால் தான், அதற்குப் பிறகு எடுத்த படங்களில் வசுந்தராவைப்போட்டு எடுக்க வில்லை என்பது கேள்வி. மைனர் பெண் வைஜயந்தி மாலாவைப் போட்டு நான் படம் எடுக்க முனைந்தால் வசுந்தரா தகராறு செய்தால் என்ன செய்வது என்று யோசித்தோம். அப்போது எங்களிடம் இருந்த லீகல் அட்வைசர், ''அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். மைனரது இண்ட்டரஸ்ட்டையும் காப்பாற்றுகிற வகையில் ஒரு போர்ஷன் மைனர் பேரில் பாங்கில் டெபாசிட் செய்வது, பாக்கியைக் கையில் கொடுப்பது என்கிற முறையில் அக்கிரிமெண்டு செய்து கொள்ளலாம் என்றார்! மாதம் ரூ 2350 சம்பளம் என்று மூன்று வருஷத்திற்கு அக்ரிமெண்டு செய்து - வாழ்க்கை படத்தின் ஹீரோயின் ரோலை வைஜயந்தி

30. திரு. வி. க. வாழ்வும் தொண்டும்; சக்திதாசன் சுப்பிரமணியன்; ப. 37.

மாலாவுக்குக் கொடுத்தேன்'' என்று (பக். 102 - 103) தாம் தம் செயலில் முன் சிந்தனையுடன் செயல்பட்ட நிலையைக் குறிப்பிடுகிறார்.

இப்பட்டறிவுப் பொருண்மை வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகளாக அமையும் துணுக்குகள், அறிமுகம் போன்றவற்றில் மிகமிகக் குறைவாகவே அமைகிறது. இங்கு விரிந்த மற்றும் முழுமை வரலாறுகளில் சிறப்பிடம் கொள்வது போன்று சிறப்புக் கொள்வதில்லை.

8. துறை செய்திகள்

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எத்துறையில் வெற்றி/உயர் நிலை அடைந்தாரோ அத்துறையும் அவர் தம் வரலாறு உரைக்கும் நூலுள் சிறப்பு பெறுதல் தவிர்க்க இயலாதாகிறது. தலைவர், அவர் சார்ந்த துறை என் இரண்டைப் பற்றியும் அறியும் நிலையில் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் இரட்டைப் பயனுடையதாதலும் இங்குக் கருதத்தக்கது.

காவல் துறையைச் சார்ந்த எப். வி. அருள் தம் 'ஒரு போலீஸ் காரரின் டைரி' நூலுள் காவல் துறை பற்றிய செய்திகளைத் தருகிறார். ''மலபார் விசேஷ போலீஸ் படை பிறந்த வரலாறே ஒரு தனிக்கதை. ஏர்காடு தாலுகாவில் மாப்பிளாக்கள் என்ற பிரிவினர் அதிகமாக வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் கலவரங்கள் நடந்தவாறு இருந்தன. 1821 முதல் 1921 வரை ஒரு நூறு ஆண்டுகட்குக் கணக்கு எடுத்தால் கிட்டதிட்ட முப்பத்தாறு பெருங் கலவரங்கள் அந்தப்பகுதியில் நடந்திருக்கின்றன. 1921 இல் மிகப் பெரிய அளவில் நடந்த கலவரத்தையொட்டித்தான் மலபார் விசேஷப் போலீஸ் படையைப் பிரிட்டிஷ் அரசு அமைத்தது'' என்பதைச் சான்றாக்கலாம்.

இலக்கியப் புலவராயின் அவரது இலக்கியத்திறனாய்வுகள் இடம் பெறல் சிறப்புப் பெறுகிறது. ''கள்வனின் காதலி ஒரு தொடர் கதையாய் வந்த போது அதைப் படித்த முத்தைய பிள்ளை, 'நான் சொன்னதை வச்சுக்கிட்டு எம்புட்டு ஜோரா கல்கி எழுதிப் போட்டாக! என்று பாராட்டிச் சொல்லிக் கொண்டிருந்தார். அத்துடன் 'எம் பெயரைக் கொண்டு போய்க் கள்ளனுக்குக் கொடுத்தட்டாகளே' என்று, ஆவலாதியையும் சேர்த்துக் கொண்டார். அந்தநாவலின் நாயகன் முத்தையனுக்கு மூலமானவன் ஜம்புலிங்கமே என்று அவர்மட்டும் அல்லாமல், வட்டத்தொட்டி உறுப்பினர்களும், மற்றும் திருநெல்வேலி வாசகர்கள் எல்லோருமே நினைத்தார்கள். ஆனால், ஜம்புலிங்கத்தின் சாயல் ஓரளவே தான் முத்தையனிடம் உண்டு.

முத்தையனுக்குப் பெரும் அளவில் நிலமானவன் கல்கியின் சொந்த ஊரைச் சுற்றியுள்ள பகுதிகளில் திகிலடிக் கொள்கைகளில் ஈடுபட்டிருந்த கதிர்வேலு என்பவன். எவ்வித சந்தர்ப்பங்களினால் முத்தையன் கள்வனாய் மாற நேர்ந்ததாகக் கல்கியின் நாவலில் சொல்லியிருக்கிறதோ, கிட்டத்தட்ட அதே சந்தர்ப்பங்களுக்கு உள்ளானவன் கதிர்வேலு. நாவலில் வரும் கார்வார் சங்குப்பிள்ளைக்கு மூலமான ஒருவன், சைவ மடம் அமைந்த ஊர் ஒன்றில் கதிர்வேலுக்குக் கொடுமை இழைத்தான். அந்த மடத்தின் நற் பெயரைக் கெடுக்க வேண்டாம் என்ற எண்ணத்தினால் தான் திருப்பரங்கோயில் என அதற்குக் கற்பனைப் பெயர் கொடுத்தார் கல்கி' என்பதைப் பொன்னியின் புதல்வரில் (ப.331-332) பார்க்கலாம்.

சமயம் சார்ந்தவராயின் அவர் செய்த அற்புதச் செயல்கள் முக்கியத்துவம் பெறுதலை, ஊமைப்பிள்ளையைப் பேசவைத்தது, மீனவப் பெண்ணின் நலிந்த கை நலம் பெறச் செய்தது, சிறைக் காவல் கடந்தது போன்றவற்றை உள்ளடக்கிய காரைக்கால் மஸ்தான் சாஹிப்வரலாற்றின் மூலம்[31] உணரலாம்.

"ரேடியம் யுரேனியத்தை விட 5 லட்சம் மடங்கு சிறந்து விளங்கியது. ஏனைய பொருள்களுக்கோ வெளியிலிருந்து வெப்பம் வரும். ஆனால் ரேடியம் தன்னிற்றானே வெப்பத்தைத் தோற்றிக் கொதித்தது. பார்வைக்கு வெறும் சோற்று உப்பைப் போலத் தோன்றும் ரேடியத்தின் ஒளி ஈயத்தினையும் ஊடுருவிச் சென்று படம் பிடித்துக் காட்டியது. அது தன்னைச் சுற்றிலும் உள்ள பொருள்களில் வெப்பத்தை ஏற்றும் மின் மண்டலமாக்கும் ஆற்றலுடையது. அதன் பயனாகப் பல பொருள்கள் ஒளியை உறிஞ்சும். காற்றில் உள்ள அணுக்களையும் சிதைத்துச் சல்லியாக்கும் தன்மை ரேடியத்துக்கு உண்டு. ரேடியத்தின் எதிரில் வைரம், மாயவொளிகளை விசி அற்புதக் காட்சிகளை அளிக்கும்" என்பது போன்று[32] அறிவியலறிஞர் வரலாறுகளில் அறிவியல் செய்திகளை அறிகிறோம்.

அரசியல் சார்ந்தவராயின், 'தமிழரது உரிமையைப் பறித்து செல்வத்தைச் சுரண்டுவது கண்டு சிதம்பரனாரின் நெஞ்சு பொறுக்க வில்லை. வெள்ளையரை விரட்டியடிக்க சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தார். இந்த நிலையில் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார் லார்டு கர்சான். கர்சான் வங்காள

31. காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுள்ளாஹ் வரலாற்றுப் பேழை; காரை இறையடியான், மு. சாயபு மரைக்காயர்; காரைக் காண்டம்.
32. புதுமை கண்டவர்; ஜெயா அருணாசலம்; ப. 49.

மக்களிடையே வேற்றுமையை உருவாக்க நினைத்தார். அதனாலேயே இந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் எனப் பிரித்தார். ஆனால் வங்காளிகள் கர்சானின் எண்ணத்தைப் புரிந்து கொண்டனர். பிரிவினையை எதிர்த்துப் போராடினர். இந்தப் போராட்டம் இந்தியா முழுவதும் பரவியது. வங்கப் பிரிவினையை எதிர்த்து அந்நிய ஆடை பகிஷ்காரம் செய்தனர். அந்நிய ஆடைகள் மலை மலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப் பட்டன. அந்நிய ஆடையில் பற்றி எரிந்த தீயானது இந்திய மக்களின் மனத்தே கொழுந்து விட்டெரிந்த சினத்தீயைக் காட்டிற்று' என்பது போன்று[33] வரலாற்றுச் செய்திகளைப் பெறலாம்.

இவ்வாறு ஏனைய துறை சார்ந்தோர் பற்றிய துறை செய்திகளையும் பெறலாம். சிலரின் வாழ்க்கை வரலாறுகள் முழுமையும் அவர் துறை சார்ந்த வரலாறாகவே அமைதலும் உண்டு. ''என் வரலாற்றை எழுத வேண்டுமென்று நான் கருதியதற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அது, என் வாழ்க்கையானது ஒரு தனி நபருடைய சரித்திரமாக மட்டுமல்லாமல், உருவாகிக் கொண்டு வரும் புதிய தமிழகத்தின் வரலாறாகவும் இருந்து வருவதாகும். ஆம் என்னை முதல்வனாகக் கொண்டு தான் புதிய தமிழகம் அமைக்கும் பணி 1946 இல் பாரதப் பெருநாடு சுதந்திரத்தை அணுகிக் கொண்டிருந்த நேரத்தில்-தொடங்கியதென்று நான் உறுதியாகக் கூறமுடியும். பாரதம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலைப் போரில் தொடர்ந்து 20 ஆண்டு காலம் ஈடுபட்டு, 6 முறை சிறைபுகுந்து அல்லல்பல அடைந்தேனென்றாலும், அதெல்லாம் என்னுடைய சரிதத்தின் முன்னுரையாகத் தான் இருக்க முடியும். இதனாற்றான் எனது வரலாற்றைப் புதிய தமிழகத்தின் வரலாறாகக் கருதி அதனை எழுதும் முயற்சியை நான் மேற் கொண்டேன். நான் எழுதாவிடில், புதிய தமிழகம் உருவான சுவை மிக்க வரலாறு, உலகினரின் பார்வையிலிருந்தே மறைந்து போய் விடவும் கூடும்.'' என்று ம. பொ. சி தமது வரலாற்றிற்கு அளித்துள் முன்னுரையால் இதனை உணரலாம்.

9. வரலாற்றுத் தலைவர் மொழிகள்

வரலாற்றுத் தலைவரின் பண்பு விளக்கம் பெறுதற் பொருட்டும், பெருமையை நிலை நாட்டுதல் அல்லது கொள்கை வலியுறுத்தல் பொருட்டும் அவரது வாய் மொழிகளையே நூலுள் எடுத்தாளுதலும் குறிப்பிடத்தக்கது. பாரதி தமிழருக்கு உணர்த்திய அறிவுரையை, ''தமிழா எழுதிப்படிப்பதெல்லாம் மெய்யு

33. வ. உ. சிதம்பரம்பிள்ளை; எம். வி. வெங்கட்ராம்; ப. 9.

மில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை, முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய் என்று தீர்மானம் செய்து கொள்ளாதே, காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்ச தந்திரம் நகைக்கிறது'' என்று அவரது குரலிலேயே தந்திருப்பதன்[34] மூலம் இதனை உணரலாம். வாழ்க்கை வரலாற்றுத்தலைவர் எழுதிய கடிதங்கள் இதனுள் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெறுகின்றன.[35] இவற்றால் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய தம் எண்ணத்தைக் கற்பாரும் உண்டு பண்ணிக் கொள்ள இயலும். உண்மை விளக்கத்திற்கு இவை உற்ற துணையாகின்றன.

பெற்றாரு ணின்னைப் பெற்றார் போற் பெற்
 றார்களும் பேண் பிறப்பை
உற்றாரு ணின்னைப் போலவுற்
 றார்களு முன்னருளை
நற்றா ரணியு ளெனைப் போற் பெற்
 றார்களு நாடுறினும்
மற்றார் முற்றேர்தரு மீனாட்சி
 சுந்தர மாமணியே

என்பது போன்று[36] புலவராயின் அவர்தம் பாடல்கள் இடம் பெறுதல் தவிர்க்க இயலாதாகிறது.

''எடிசன் கொஞ்சம் இரு, இதோ நானும் வந்துவிடுகிறேன். இருவரும் சென்று காலை உணவு உண்டு வரலாம்'' என்று நண்பர் கேட்டுக் கொண்டார். ''மன்னிக்கவும்! நான் பலபுதுமைகளைச் செய்ய தீர்மானித்து இருக்கிறேன், அவை அனைத்தையும் செய்து முடிக்க என் வாழ் நாள் முழுவதுங்கூட போதாது அதனால், நான் செய்ய நினைத்திருப்பவைகளை வேகமாகச் செய்து முடிக்கப் போகிறேன். காலத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. வருகிறேன்'' என்று கூறிவிட்டு உணவு அருந்த ஓடினார் எடிசன். அதைக் கேட்டுத் திகைத்து நின்றார் நண்பர். காலத்தைப் பொன்போல் கருதும் எடிசனை அந்த நண்பர் இதயத்திற்குள் வாழ்த்தினார்'' என்பதினின்றும்[37] வரலாற்றுத்

34. தேசியக்கவி; பி. எல். ராஜேந்திரன் ப. 42.
35. மேதைகள் வாழ்விலே; சு. ர. சண்முகம்; ப. 70.
 வித்துவான் தியாகராச செட்டியார்; உ. வே. சாமிநாதையர்; ப. 17.
37. தாமஸ் ஆல்வா எடிசன்; தி. சு. கலிய பெருமாள்; ப. 24.

தலைவரின் மொழிகளினின்றும் அவர் தம் பண்பு வெளிப்படக் காணலாம்.

இம்மொழிகள் வரலாற்றுத் தலைவரின் உள்ளத்தை வெளிக் காட்டுவதாக முன்னிறுத்துவதாக அமைதலும் சுட்டற்பாலது. ''அம்பிகே! உன் திரு உள்ளத்தை எனக்குத் தெரிவித்து அருள மாட்டாயா? செயல்கள் யாவற்றையும் செய்பவள் உண்மையில் நீயே! என்னை உன் கருவியாக மட்டுமே செய்து கொள்வாய். எனக்கென்று ஏதோ திட்டங்களும், சங்கல்பமும் இருப்பதாக நான் மயங்காதபடி செய்வாய். தேவி! நான் ஒரு நாடோடிப் பரதேசி, உலகத்தின் போக்குகளில் அநுபவப்படாதவன் என்னை ஏழு கடல் தாண்டி தூரதேசங்கள் அனுப்பி வைக்க உன் திரு உள்ளமா? தூர தேசங்களில் தன்னந்தனியாக யாரும் அறியாத வனாக நான் என்ன செய்ய முடியும். விசித்திரமான மக்களிடை யில் அவர்களுக்கு விசித்திரமான ஓர் ஆத்ம அறை கூவலை எழுப்ப என்னால் முடியுமா? விடை சொல்ல மாட்டாயா நீ? ஐயம் திரிபுற எனக்கு உத்தரவு தந்தாலொழிய நான் எப்படி இந்தப் பணத்தைத் தீண்டமுடியும்?''— அகங்குழைய விழி நீர் இழிய அன்னையிடம் பிரார்த்தித்தார் சுவாமிஜி [38] இதனின்றும் மேல் நாடு செல்வதற்கு ஒருப்படு முன்பிருந்த விவேகானந்தரின் மனநிலை விளங்கக் காணலாம்.

இவ்வாறு அமையும் மொழிகள் பெரும்பாலும் நூலினுள்ளே இரண்டறக் கலந்து நிற்கின்றன. சிறுபான்மை புறநடையாகத் தொகுத்துத்தரலுமுண்டு.[39] அமைப்பு நிலையில் முன்னதே வேண்டப்படினும் ஒருவர் உலகிற்கு அளித்த செய்திகள் யாவை எனும் பொழுது இரண்டாம் நிலை பயனுடைய தாகிறது.

ஒருவருடைய வாழ்க்கை வரலாறு கற்பாருக்கு வழி காட்டி யாக அமைதல் தேவை எனும் நோக்கில் வாழ்க்கை வரலாறு படைக்கும் பொழுதும், இலக்கியப் படைப்பாளர், சமயத் தலை வர் பற்றிய வரலாறுகளைப் படைக்கும் பொழுதும் அவர்கள் உலகிற்கு விடுத்த அருள் மொழிகளும் நூலுள் இன்றியமையாமை பெறுகின்றன. அவற்றையும் இப்பொருண்மையுடன் இணைத்து நோக்கலாம் ''அவர்களுடன் நீண்ட நேரம் விவாதித்தபின் சுவாமிஜி பின்வருமாறு கூறினார்; ஏழைகளுக்குச் சேவை செய் வது, பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பது, துக்கப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது, தவறி விழுந்தவர்களுக்கும் நண்பர்களற்றவர் களுக்கும் உதவி புரிவது ஆகியவை தாம் கடவுளை அறிவதற்குச்

---

38. சுவாமி விவேகானந்தர்; ரா. கணபதி; ப. 30.
29. குருநானக் தேவர் வரலாறு; அ. லெ. நடராஜன்.

சிறந்த வழி''—என்பது போன்று அம்மணிமொழிகள் அமை கின்றன. சிறுவர்களுக்கான சுவாமி விவேகானந்தரின் வரலாற் றில் வெ. பார்த்திபன் (பக் 46) இதனைச் சுட்டியுள்ளார். ஒரு வரின் அறிவுரையைத் தம் மொழியில் கூறுவதைவிட அவரது மொழிவாயிலாகவே உணர்த்தும் பொழுது கூடுதல் அழுத்தமும், பிடிப்பும் ஏற்படுதல் உண்மை.

10. மதிப்புரை (பாராட்டுரை)

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய பிறர் மதிப்புரை கள் உண்மைத் தெளிவிற்கு மிக இன்றியமையாததுடன் அவர் தம் சிறப்பிற்கும் காரணமாக அமைகின்றன. எனவே வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் இதற்கும் சிறந்த முக்கியத்துவம் அளிக் கின்றனர். இந்திய தேசிய ராணுவத்தை அமைத்த மற்றொரு மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், 'சாவர்கரின் தீர்க்க தரிசனத்தினால் தான் தேசபக்தி வீறு கொண்ட ஆண் பெண்களுக்குள்ள இந்திய தேசிய ராணுவத்தை நிறுவ முடிந்தது' என்று சாவர்கரைப் போற்றினார் என்பது[40] இதற்குக் காட் டாகும். இத்தகையன ஒருவர் பற்றிய முழுமை அறிவினைப்பெற, வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் நோக்கு நிறைவேற்றத் தினைப் பெற மிகச்சிறந்த கருவிகளாகின்றன.

''சித்தூர் ஜில்லாவின் ஆறு தமிழ்த் தாலூக்காக்களைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்பதாக, ம. பொ. சி யின் தமிழரசுக் கழகம் விடுத்த கோரிக்கையைக் கல்கி ஆதரித்துத் தலையங்கங்கள் எழுதினார். அந்த ஆதரவைக் கண்டு ம. பெ. சி. வெகுவாக உற்சாகம் கொண்டார். பின்னர் அதை நினைவு கூர்ந்தும் மெச்சி எழுதினார்:— வடக்கெல்லைப் போராட்ட காலத்தில் கல்கியாரின் பக்திக்குரிய ராஜாஜிதான் முதல் அமைச் சராய் இருந்தார். பொறுப்புணர்ச்சி காரணமாய் அந்தப் போராட்டத்தை ராஜாஜி விரும்பவில்லை. அப்படியிருந்தும் வடக்கு எல்லையில் நடைபெற்ற சட்ட மறுப்புப் போராட் டத்துக்கு வெளிப்படையாக ஆதரவு காட்டி எழுதினார், கல்கி கிருஷ்ணமூர்த்தி. என்னிடம் அவர் வைத்திருந்த அன்பும், வடக் கெல்லையை மீட்டுத் தீர வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆர்வமும்தான் இதற்குக் காரணங்களாகும்—இந்த வாக்கியங்கள் வெளியான 12-21-54 ஆம் தேதிய செங்கோல் தலையங்கத்தில் கல்கியின் பரோபகாரச் செயல்கள் பற்றியும் ம. பொ. சி. எழுதி

40. நாட்டுக்கு உழைத்த நல்லவர் வீரசாவர்கர்; எம். வி. வெங் கட்ராம்; ப. 63.

இருக்கிறார்'' என்பர்.[41] இது போன்ற பகுதிகள் வாழ்க்கை வரலாறுகளில் உண்மைகளே நிறைந்திருக்க வேண்டும் என்பதால் குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது செய்தியின் உண்மையை வலியுறுத்துவதற்கு உதவுகின்றன. மற்றும் படைப்பாசிரியரே கூறும் பொழுது வரலாற்றுத் தலைவரின் பால் உள்ள பற்றுதலால் மொழிகின்றார் என்ற உணர்விலிருந்து வாசகரை விடுவிக்கவும் இது போன்ற பகுதிகள் துணை நிற்கின்றன.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் புகழ்ந்துரைக்கும் இத்தகு மதிப்புரைகள் தன் வரலாறுகளிலும் இடம்பெறுவதுண்டு. இவற்றைத் தற்புகழ்ச்சியாகக் கொள்வதைக் காட்டிலும் பிறர் தம்மைப் புகழ்வது கண்டுத் தாம் கொண்ட மகிழ்வைப் புலப்படுத்துதல் எனவும், தம் வெற்றி மிகைப்படக் கூறவில்லை இயல்புரையே என்பதை உறுதிப்படுத்துவதாகவும் ஏற்கலாம். ''பொதுவாக எதையும் அதிகமாகப் புகழ்ந்து பேசுவது திரு. அண்ணாதுரைக்குப் பழக்க மில்லை என்றுநான் அறிவேன். அவர் கூறினார். சில காலத்துக்கு முன்பு நான் காரில் வடநாட்டிக்கு நண்பர்களுடன் சென்றிருந்தேன். எனக்கு இரவு நேரங்களில் சீக்கிரம் தூக்கம் வராது. அப்பொழுதெல்லாம் சினிமாவுக்குப் போவது வழக்கம். போகும் வழியில் ஒரு சிறிய ஊரில் அந்த மாதிரித் தங்கினோம். அந்த ஊரில் இரவு படம் பார்க்கச் சென்றேன். படம் ஆரம்பித்ததும் ஜனங்கள் பலமாகக் கைதட்டினார்கள். எதற்குக் கைதட்டினார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஏவி எம். என்கிற எம்பிளம் முதலில் காட்டினார்கள். அதைப் பார்த்து விட்டுத்தான் அப்படிக்கை தட்டினார்கள் பொதுவாக ரசிகர்களுக்குப் பிடித்த நடிகர்கள் பெயர் வரும் பொழுது தான் கை தட்டுவார்கள் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் வடநாட்டில் ஒரு தென்னாட்டுக்காரரின் கம்பெனி பெயரைப் பார்த்ததுமே கை தட்டுகிறார்களே என்று மகிழ்ச்சி அடைந்தேன் என்று அண்ணாதுரை அந்த பிலிம் சேம்பர்மீட்டிங்கில் கூறியதை இப்போது நினைவு கூர்கிறேன். வெறும் தோத்திரமாக அந்தச் சமயம் இதை அவர் சொல்லவில்லை. மனத்தில் உணர்ந்ததை அப்படியே சொன்னார்'' என்பது சான்று[42].

இவை மட்டுமின்றிச் சாதனை புரிந்தோர் தம் சாதனைகளுக்காகப் பெறும் பட்டங்கள், பதவிகள், பரிசுகள், போன்றவற்றையும் இப்பொருண்மையுடன் இணைத்து நோக்கலாம். அறிவியல், கலை, சமுதாயப்பணி போன்றவற்றில் ஈடுபட்டோர் வரலாறுகளில் இப்பொருண்மை முக்கிய இடம்பெறக் காண

41. பொன்னியின் புதல்வர்; சுந்தா; ப. 802.
42. எனது வாழ்க்கை அனுபவங்கள்; ஏ. வி. எம்; ப. 163.

லாம். அவை பெரும்பாலும் இறுதியில் தொகுப்புரையாக அமைகின்றன.[43] மற்றும் தலைவரின் வரலாற்றை விவரித்துக் கொண்டிருக்கும்பொழுதே இடையிடையே, ''இவ்வாறு மனக் கண்ணில் தோன்றிய காட்சியைத்தான் இரவிவர்மா அழகிய வண்ண ஓவியமாகத் தீட்டி 1976ஆம் ஆண்டு சென்னை ஓவியக் கண்காட்சிக்கு அனுப்பி வைத்தார். 'கன்னி சகுந்தலையின் காதல் கதை' என்ற இந்த ஓவியம் இந்தத் தடவையும் முதல் பரிசு பெற்று தங்கப்பதக்கத்தை அடைந்தது. இதைக் கண் காட்சிக்கு வைத்த உடனே பக்கிங்ஹாம் கோமகனால் விலைக்கு வாங்கப்பெற்றது என்றால் இதன் மதிப்பை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்...........1892இல அமெரிக்காவில் சிக்காகோ என்னும் இடத்தில் கண்காட்சி ஒன்று நடந்தது. அந்தக் கண் காட்சிக்கு இரவிவர்மா அவர்கள் பத்து ஓவியங்களைத் தேர்ந் தெடுத்து அனுப்பி வைத்தார். அந்தக் கண்காட்சியில் இவரு டைய ஓவியங்கள் இடம்பெற்றன. இரண்டு தங்கப்பதக்கங்களும், பல நற்சான்றிதழ்களும் (Diplomas) இரவிவர்மாவின் ஓவியத் திற்கு வழங்கப்பட்டன. இதை அமெரிக்காவின் எல்லாப் பெரிய பத்திரிகைகளும் சிறப்பாக எழுதின''[44] என்பதுபோன்றும் அமைகின்றன.

இவற்றினின்றும் மாறுபட்ட தன்மையில் நூலாசிரியரே தம் வரலாற்றுத் தலைவர் பற்றிய மதிப்பீட்டினை அளித்தலும் காணப்படுகிறது. அ. லெ. நடராஜன் தமது 'மாவீரன் நெப் போலியனில்' இறுதிப்பகுதியை நெப்போலியன் பற்றிய தமது மதிப்பீடாகத் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது. காப்பியங் களில் பதிகம் போன்று இப்பகுதி அமைந்து, நெப்போலியன் வாழ்க்கை வரலாற்றை மேலும் சுவையுடையதாக்குகிறது, அவன் வாழ்வின் பின்னணியை, செயலின் சிறப்பினை, பண்புநலனை, பெருமையை ஆய்வு நோக்கில் சிறப்பிக்கிறது. ''பொதுவாக, பொது மக்கள் குறித்து, நெப்போலியன் இத்தகைய அசட்டை யான ஒரு கருத்தைக் கொண்டிருந்த போதிலும், தனிப்பட்ட போர் வீரனிடம் நடந்துகொள்ளும்போது கம்பீரமாகவும் கண்ணியமாகவும் நேசத்தோடும் நடந்துகொள்வான்; அவனுக் குத் தேவைப்படும் சௌகரியங்களையும் வசதிகளையும் தவறாது செய்து கொடுப்பான். அதனால் ஒவ்வொரு போர் வீரனும், சக்கரவர்த்தி நெப்போலியன் தன் சார்பில் இருப்பதாக நினைத் துக் கொண்டு அவனுக்காக எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தான். சுற்றத்தாரைத் தவிர்த்து, வேறு எவரும்

43. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரசா; கே. பீ. நீலமணி.
44. இரவிவர்மா; வித்தகன்; பக். 82, 88.

நெப்போலியனுக்குத் துரோகமாக நடந்து கொண்டதில்லை. சிறைவாசத்தின் போதுகூட, பலர் அவனுடன்உடன் சென்றதை யும் அவனது விருப்பங்களை ஆர்வத்துடன் நிறைவேற்றிவைத் ததையும் நெப்போலியன் வாழ்க்கையில் நாம் பார்க்கிறோம். இத்தகைய ஒரு பெருமையும் மதிப்பும் வேறு எந்தச் சரித்திர நாயகர்களுக்கும் கிட்டியதாகத் தெரியவில்லை'' (பக். 335) எனும் பகுதியைச் சான்றுகாட்டலாம். பலகோணங்களினின்றும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் புரிந்துகொள்ளவும், வர லாற்றுப் படைப்பாளரின் நேர்மையை உறுதி செய்யவும் இஃது வாய்ப்பாகிறது.

11. வரலாற்றுத்தலைவரின் வாழ்க்கை முடிபு

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒருவர் வாழ்வில் உறுதி யாக வருவது மரணம். நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யெனும் பெருமையுடையதாகவே இவ்வுலகு என்றும் இருக்கிறது. எவ்வித வேறுபாடுமின்றிக் கூற்றுவன் எல்லா உயிர்களையுமே கவர்ந்து கொள்ளுகிறான். உலக மக்கள் நல்வாழ்விற்கு அரும் பணி ஆற்றியவர் என்றோ, புதுமைகள் படைத்தவர் என்றோ, உலக மக்களின் பேரன்பிற்கு உரியவன் என்றோ, யாரையும் விட்டுவைப்பதில்லை. ஆகவே வாழ்க்கை வரலாற்றுத் தலை வரின் மறைவின் பின் எழும் நூல்கள் இப்பொருண்மையையும் உள்ளடக்கி நிற்கின்றன. ஒவ்வொருவர் வாழ்விலும் மரணம் என்பது இயல்பான ஒன்றாக அமைதலின் வாழ்க்கை வரலாற் றுத் தலைவரை அறிமுகப்படுத்தும் பாங்கில் அமையும் நூல்கள் இதனைச் சிறப்பிப்பதில்லை[45] அல்லது ''அறிஞர் ஜகதீசரது மணவாழ்க்கையின் பொன் விழா 1937ஆம் ஆண்டில் நடந்தது. ஆயினும் அதே ஆண்டில் நவம்பர் திங்களில் அவர் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகை எய்தினார். புதுமை கண்ட பெரியார் மறைந்தது குறித்து வருந்தாதவர் இலர்'' என்பது போன்று[46] சுருக்கமாகக் குறிக்கப்படுகிறது.

முழுமை வரலாறுகளில் இப்பொருண்மை சிறப்பிடம் பெறு கிறது. பெரும்பாலும் தனித்த அதிகாரங்களில் இப்பகுதி அமைக்கப்படுகிறது. இறப்பு என்பது இயல்பு ஆயினும் உலக முன்னேற்றத்திற்காக முயன்ற, உழைத்த, வாழ்ந்தவரின் இறப்பு, உலகிற்குப்பேரிழப்பாக அமைதலின் அதனை வலியுறுத்த விரும்பும் படைப்பாசிரியர் இங்ஙனம் அமைக்கின்றனர் போலும். வரலாற் றுத் தலைவரின் முடிவு எதிர்பாராத தொன்றாக, இரங்கத்தக்க

45. சின்னஞ்சிறு வயதில்; அழ. வள்ளியப்பா.
46. புதுமை கண்டவர்; ஜெயா அருணாசலம்; ப. 127.

தாக அமையும்பொழுதும் விரிவான இடத்தினை இப் பொருண்மை பெறுகிறது. கல்கியின் வரலாற்றில், அவரது இறுதிநிலை 'இறுதி வருடம், கடைசி நாட்கள், அஞ்சலி, என மூன்று அத்தியாயங்களில் தொடர்வதைக் காணலாம்.

வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர் நீச்சலிட்டு மிகவும் வறுமைத் துயரில் வாழ்ந்தவர், சிறுகதை உலகில் முடிசூடா மன்னனாக ஆட்சி செலுத்திய புதுமைப் பித்தன். இவரின் இறுதிக் காலம் நோயினாலும் வறுமையினாலும் மிக்க இரக்கத் திற்குரியதாக அமைந்துவிட்டது. வறுமையின் பிடியிலிருந்து மீளாமலே நோயின் கொடுமைக்குப் பலியானார். அவரது வாழ்வின் இறுதி நாளை, ரகுநாதன், ''புதுமைப் பித்தனின் பூதவுடலின் கடைசி வாழ்நாள்; அதுதான் சூன்மாதம் 30ஆம் தேதி. அன்றிரவு புதுமைப் பித்தன் தங்கியிருந்த வீட்டின் சூழ்நிலையில், அங்குள்ளவர்களின் முகங்களில், பேச்சு வார்த்தை களில் சாவின் பயங்கரம் படர்ந்து பரவ ஆரம்பித்தது. புதுமைப் பித்தன் செத்துக் கொண்டிருந்தார்......உடம்பெல்லாம் வியர்வை பெருகிப் பெருகி ஓடுகிறது. கமலாம்பாள் துடைக்கிறாள். சுற்றியுள்ளவர்கள் வாய்பேசாது பார்த்துக்கொண்டிருக்கிறார் கள். புதுமைப் பித்தன் ஒருவரே அப்போது பேசினார். கமலா, கடைசியாக இந்த உலகத்துக்கு நான் விட்டுச் செல்வது ராஜ முக்திப்படமும், தினகரியும்தான். கவலைப்படாதே உன்னை நல்ல நிலையில் வைக்க விரும்பினேன். ஆசைப்பட்டேன். ஆனால் விதி என்னை இந்தக் கோலத்துக்குத்தான் கொண்டுவந்து விட்டது... 30-6-48. அன்றிரவுக்குப்பின் உலகுக்கெல்லாம் விடிந்தது; ஆனால் புதுமைப் பித்தனுக்கு அன்றிரவு விடியவே இல்லை. புதுமைப்பித்தன் காலமானார். அவரது மனைவியும் உறவினரும் கண்ணீர் வடித்தார்கள்; கதறினார்கள்; புலம்பினார் கள்...... ''வானத்து அமரன் வந்தான் காண்; வந்ததுபோல் போனான் காண்!'' என்று புலம்பவில்லை. 'எழுதி எழுதிக் கையும் வீங்கிற்றே; உயிரும் கொடுத்தாயே!' என்றுதான் கமலாம்பாள் புலம்பினார்...அந்தப் புலம்பலே வீடு நிறைந்து ஒலித்தது...'' என்று (பக் 95—96) காட்சிப்படுத்துகின்றார். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் அவல நிலையையும் இறுதி ஏக்கங்களையும் 'அந்திம காலம்' எனும் அத்தியாயத்துள் விரிவாக எடுத்துக் காட்டுகிறார். தமிழுக்குப் புத்துணர்வு ஊட்டிய பெருமையாளர் அனுபவித்த துயரங்களும் இழிநிலையும் பிற்காலத்தில், இலக்கியத்தைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டு அதற்காகத் தம் வாழ்வையே தியாகம் செய்யும் எந்த ஒரு படைப் பாளருக்கும் வரவே கூடாது என்பதை வலியுறுத்துவதாக-இவ் வெண்ணம் உள்ளடங்கியதாகவும் அது நிற்கக் காணலாம்.

வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை முடிவு நூலின் முடிவாகத்தான் அமைய வேண்டும் என்பதில்லை. படைப்பாளரின் விருப்பத்திற்குத் தகவும், நூலின் அமைப்பிற்கு ஏற்பவும் நூலின் தொடக்க[47] அல்லது இடையேயும்[48] அமைகின்றன.

12. ஆசிரியர் இடையீடு

வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே வரலாற்றாசிரியர் இடை புகுதல், சூழ்நிலையைத் தெளிவுறுத்தல், பண்பு விளக்கம் செய்தல், நிகழ்ச்சியின் இயல்பினை உள்ளவாறு உணர்த்தல் போன்ற பயன்பாடுகளை உடையனவாகி வேண்டப் படுகிறது. ''நெப்போலியனைப் போல நெஞ்சுரம் படைத்த ஒரு சக்கரவர்த்தியைச் சரித்திரத்தில் காண்பது அருமை; எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்; எண்ணியர் திண்ணியர் ஆகப்பெறின் என்னும் குறள் நெப்போலியன் வாழ்க்கையில் முழுக்க முழுக்கப் பொய்த்துவிட்டது. அடல் வீரனையும் விஞ்சிய முழு ஆற்றல் ஒன்று இருக்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. இத்தகைய நிலையையே நம் நாட்டுப் பெரியவர்கள் விதியென்று குறிப்பிடுகிறார்கள். ஊழின் பெருவலியாவுள என்பது நெப்போலியன் வாழ்வில் முழுவதும் பொய்யாகிவிட்டது'' எனும் குறிப்பு[49] நெப்போலியனைப் பற்றிய ஒரு பரிதாப உணர்வை உண்டு பண்ணுவதாக அமையக்காணலாம். சில வேளைகளில் இத்தகைய குறிப்புகள் சுவையுடையதாகி நூலின் ஓட்டத்தினை மிகுவிப்பதாகவும் அமைகின்றன. ஆசிரியர் எவ்வளவு தூரம் இவ்வாழ்க்கை வரலாற்றில் ஈடுபட்டிருக்கிறார் என்பதனை அறுதியிடவும் இவை பயன்படுகின்றன.

இப்பொருண்மையும் மிகுதியும் விரிந்த வரலாறுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுவர்களுக்கென அமையும் வாழ்க்கை வரலாறுகளில் கதை கூறிச்செல்லும் முறையில் அமையும் பொழுதும் வெளியீட்டு உத்தியாக இவ்வாசிரியர் இடையீடு அமைகிறது. ''அந்தத் திட்டத்தின் பெயரைச் சொன்னால், அந்தப் பெண் டாக்டர் பெயரும் உங்களுக்குத் தெரிந்து விடும். 'மாண்டிசோரி கல்வித்திட்டம்' என்பதுதான் அதன் பெயர். இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்குமே, அந்த டாக்டர் பெயர் மரியா மாண்டிசோரி அம்மையார்தான் என்பது!'' எனும் பகுதியை[50] இதற்குச் சான்று காட்டலாம்.

---

47. மானங்காத்த மங்கையர்; கௌசிகன்.
48. புதுமைப்பித்தன் வரலாறு; ரகுநாதன்.
49. மாவீரன் நெப்போலியன்; அ. லெ. நடராஜன்; ப. 320.
50. சின்னஞ்சிறுவயதில்; அழ. வள்ளியப்பா; ப. 62.

13. முக்கிய நிகழ்வு வரிசை

நூலின் முன் அல்லது பின் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் தோற்றம் முதல் இறுதி வரை கால வரிசையில் தொகுத்தளிக்கப்படுகின்றன[51] வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்தினை இவை நல்குகின்றன. வரலாற்றாசிரியர்கள் தங்கள் எண்ணத்திற்கு ஏற்ப நிகழ்ச்சிகளை முன்பின் அமைத்துக் கூறும் பொழுது, இக்குறிப்பு வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை வரிசைக் கிரமமாக அறிய பெரிதும் துணை நிற்கின்றது.

14. செவிவழிச்செய்திகள்

தெளிவில்லாத வரலாற்றுச் செய்திகளையே துணையாகக் கொண்டு ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் படைக்கும் பொழுது அவருடன் தொடர்புடையதாக விளங்கும் கதைகளும், செவிவழிச் செய்திகளும் இடம் பெறுகின்றன. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் வெகு காலத்திற்கு முற்பட்டவராகவும், மக்களிடையே மிக்க புகழுடன் திகழ்ந்தவராகவும் அமையும் பொழுது இந்நிலை ஏற்படுகின்றது. அவர் தம் வரலாற்றில் மிகுதியும் இவையே இடங் கொண்டும் அமைகின்றன.

''இந்த அபிராமிப்பட்டர் ஒரு நாளோர் சபையிலே அமாவாசித் தினத்தைப் பௌரணைத்தினமென வகை மோசமாய்ச் சொல்லித், தாஞ் சொல்லியது சரியென்று ரூபித்தற்காக நூறு வடந்தாங்கிய உறியொன்றில் ஏறியிருந்து, இவ்வந்தாதியில் ஒவ்வொரு பாவைப்பாடி ஒவ்வொரு வடத்தையறுத்து, நூறாம் பாட்டுடன் நூறாம் வடத்தை அறுக்கும் தருணம் அபிராமியருளினாற் பௌர்ணமி தோன்றிற்றென்று இப்பாடற் காரணங் கூறுங் கன்ன பரம்பரையும் நங் கன்னத்தில் விழுந்துண்டு. கதை எவ்வாறாயினு மாகுக, பாடல் உத்தமமே. இவர் இறந்தகால வரலாறு இதுவரையும் எங்கைக்கு அகப்படவில்லை. எனும்[52] பகுதியைச் சான்றாக்கலாம்.

15. காலக்குறிப்பு

வாழ்க்கை வரலாறு எனும் பொழுது மிக முக்கியமாகத் தேவைப்படும் கூறுகளுள் காலக்குறிப்பு தலையாயது. ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் இது குறிக்கப்படும் பொழுது வரலாற்றில்

---

51. இரவிவர்மா; வித்தகன்; வருடமும் வரலாற்றுக் குறிப்பும்.
52. பாவலர் சரித்திர தீபகம்-பகுதி 1; அ. சதாசிவம்பிள்ளை; ப. 58.

ஒரு தெளிந்த கண்ணோட்டம் ஏற்படுகிறது. தமிழில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் இதற்கு அளிக்கும் முக்கியத்துவம் மிகமிகக் குறைவே. ஆங்காங்கே இக்குறிப்புகள் காணப்படினும் முழுமை யான நிலையில் அமைந்துள்ளதாகக் கூற இயலாது. தன் வரலாறு களில் கூட இக் குறைபாடு இருப்பது சுட்டத்தக்கது[53] நாட் குறிப்புகளின்றித் தன் நினைவுகளை மட்டுமே கொண்டு எழுது கையில் இக்குறைபாடு எழுகிறது எனலாம்.

பெரியோரின் வாழ்விலே நடந்தகுறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை அல்லது அவரது மொழியை மட்டுமே சுட்டிச் செல்வனவாக அமையும் 'வாழ்க்கைத் துணுக்குகள்' எனும் வாழ்க்கை வரலாற் றிலக்கிய வகையினுள்ளும் கிடைக்கும் செய்திகளை இப்பொருட் கூறுகளுள் அடக்கி விட இயலும். ஏனைய வகைகள் இப்பொருட் கூறுகளுள் பலவற்றைத் தம்முட் கொண்டிலங்க இவை ஒவ் வொருவரைப் பற்றிக் கூறும் பொழுதும் ஒவ்வொன்றைக் கையாளுகின்றன.

துணைப் பொருட் கூறுகள்

1. காப்பு, கடவுள் வாழ்த்து

பழைய இலக்கிய மரபினை ஒட்டி ஆசிரியர் நூலின் முன் காப்பு, கடவுள் வாழ்த்து, ஆசிரிய வணக்கம் முதலியவற்றைச் சுட்டுதல் அமைகிறது. ராம. உ. ராமசாமி செட்டியாரின் ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம், தி. ஓ. ராஜரத்னம் பிள்ளையின் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரம் முதலான நூல்களில் இவற்றைக் காணலாம்.

2. நூற்பயன்

"இச்சரித்திரத்தைப் படிப்பவர்கட்கும் படித்துக் கேட்பவர் கட்கும் சமஸ்பொக்கியமும் நித்தியா நித்திய விஸ்து விவேகமும் சிவஞான சித்தியும் கிடைக்கின்றன" என்று வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் தம்முடைய 'ஸ்ரீமணிய சிவனார் சரித் திரம்' நூலுள் (பக். 60) நூற்பயனைத் தனித்து ஓதியிருப்பதும் பழைய மரபின் பாற்பட்டதே.

3. நூலாசிரியர் - நூற்றலைவர் தொடர்பு

நூலாசிரியர், வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் தொடர்புடையவராக இருக்கையில் இருவருக்கும் இடையே உள்ள தொடர்பு, இடம் பெறும் நிகழ்ச்சிகளால் விளக்கம் பெறல் இயல்பு. "புதுமைப்பித்தனுடன் நண்பர் முல்லை முத்தை யாவும் நானும் காப்பி சாப்பிடச் சென்றோம். காலைக் காப்பி பலகாரம் சாப்பிடத்தான். ஆனால் புதுமைப்பித்தன்

53. வனவாசம்; கண்ணதாசன்.

கடைக்குள் சென்றதும் முதலில் காப்பிக்கு ஆர்டர் கொடுத்தார். என்ன ஏதாவது சாப்பிட வேண்டாமா? என்றோம். சாப்பிடத் தான் முதலில் காப்பி அப்புறம் தோசை. அப்புறம் இன்னொரு காப்பி என்றார் புதுமைப்பித்தன். இது என்ன வழக்கம் என்றேன் நான். உனக்குத் தெரியாது இவன் கடைத் தோசையை இப்படி முன்பாரா கொடுத்து உள்ளே தள்ளினால் தானப்பா திங்க முடியும். தெரிந்ததா? என்றார் புதுமைப்பித்தன்''— இதனின்றும் (ப. 154) புதுமைப்பித்தனும் நூலாசிரியர் ரகுநாதனும் மிக நெருங்கிய தோழர்களாகத் திகழ்ந்தமை தெரிகிறது. இது போன்றே தந்தை, மனைவி, மகன், மாணவர் போன்ற உறவு நிலைகளையும் நூலாசிரியர்கள் தாம் படைக்கும் வரலாறுகளில் உணர்த்துகின்றனர். ஆயின் நூலின் தொடக்கத்தின் முன் தமக்கும், வாழ்க்கை வரலாற்றுத் தலைவருக்கும் இடையிலுள்ள தொடர்பினை விளக்கிச் செல்லுதல்[54] வாழ்க்கை வரலாற்றுத் தலைவருக்கு அமையும் மற்றொரு அறிமுகமாகவும், அவர் பால் ஆசிரியருக்குள்ள ஆழ்ந்த பற்றினை விளக்குவதாகவும் அமைகிறது. வாழ்க்கை வரலாற்று நூலில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதனைக் கற்பார் ஊகிக்கவும் இது உதவுகிறது எனலாம்.

4. பிறந்த காலக்கணிப்பு (சாதகம்)

தமிழர் தம் பழக்கத்தினை எடுத்துக் காட்டும் பிறந்த காலக் கணிப்பு குறிப்புகளும் சிலரின் வரலாற்று நூல்களில்இடம் பெறுகின்றன. இவண் தணிகைமணி, டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் வரலாறு எனும் நூலைச் சான்றாக்கலாம்.

5. மரபு வழிப்பட்டியல்

வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் மரபு வழிப்பட்டியல் அமைக்கும் இயல்பினையும், அளிக்கும் பாங்கினையும் பாகூர் சு. குப்புசாமி முதலியாரின் வரலாற்றுக் களஞ்சியம் முதலான நூல்களில் காணலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் முன்னோர் பற்றிய அறிவினைப் பெற இஃது துணை நிற்கின்றது.

6. தொடர்பு கொண்டோர்.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் உடன் வாழ்ந்தோர். உடன்பிறந்தோர், இடையில் தொடர்பு கொண்டோர் அல்லது அவர்களது வாழ்க்கைப் பாதையின் தொடக்கத்தில் வழி நடத்திச் சென்றவர்கள், துணைவந்தவர்கள் அல்லது திருப்பத்திற்கு, முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்கள்

---

54. காமராஜ் வரலாறு; மு. நமசிவாயம்; என்னைக் கவர்ந்தவர்.

என்பதாகப் பலர் தொடர்பு கொண்டமைகின்றனர். இவர்கள் பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன. ''இராச ராசவர்மாவை நினைக்கும் போது என்னுடைய கண்களில் என்னையறியாமல் கண்ணீர் வந்து விடுவதுண்டு. அவருக்கு ஒரு சிறந்த எழுத்தாளராக ஆகும் திறன் இருந்தது. அதற்குச் சான்று அவர் எழுதிய அந்தப் பிரயாணப் புத்தகம். அதுவும் அல்லாமல் அவர் அவ்வப்போது தன்னுடைய நாட் குறிப்புப் புத்தகத்தில் பல நினைவுகளைக் குறித்து வைத்திருக்கிறார்'' என்பது போன்ற பகுதிகள்[55] ஆசிரியர் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்வுடன் தொடர்புடையவர்களையும் எந்த அள விற்கு அறிந்து வைத்திருக்கிறார் என்பதனை உணர்த்துவதாக அமைதல் ஒரு தன்மையாம். இதுபோன்ற குறிப்புகள் அவர் வரலாற்றுத் தலைவருக்கு எவ்வகையில் துணைஅல்லது எதிர் நின் றார், அதனுடைய இன்றியமையாமை போன்றவற்றை உணர்த் தும் உதவுதல் மற்றொரு இயல்பாம். மேற்சுட்டிய சான்றின் தொடர்ச்சியாகவே இதனையும் விளக்கலாம்.'' பல துறைகளில் இரவிவர்மாவிற்கு உதவியாக இருந்தார். அவருடன் கடைசிவரை இருந்தவர், சிறப்பாக ஓவியம் வரையத் தெரியுமாதலால் இரவிவர் மாவிற்கு வலதுகரம்போல் உதவினவர்; பல ஓவியங்களை வரை யும் போது ஒன்றாக இருந்து பணிபுரிந்தவர். அதுவும் அல்லாமல் தன்னுடைய சகோதரருக்குச் செயலாளர்போல் இறுதிவரை இயங்கினார். இரவிவர்மாவுக்கு ஆங்கிலம் தெரியாது. ஓய்வு நேரத்தில் அவர் அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். கடைசி காலத்தில் ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுக்க மிகவும் உதவினார்'' என்பது மேற்குறிப்பிட்டுள்ளமைக் குச் சான்று. (பக். 95—96) முழுமை வரலாறுகளில் இது பெரிதும் இடம்பெறுகின்றது. புதினம், காப்பியம் போன்றவற்றில் வரும் துணை மாந்தர் நிலையிலும் இதனை ஒப்பவைத்து எண்ணலாம்.

மற்றும் விவேகானந்தரின் வாழ்வினின்றும் இராமகிருஷ்ணப் பரமஹம்சரையும், உ. வே. சாமிநாதையர் வாழ்விலிருந்து மீனாட்சி சுந்தரம் பிள்ளையையும், ஹெலன் கெல்லர் வாழ்வி லிருந்து சலிவனையும் கல்கியின் வாழ்விலிருந்து ராஜாஜி, டி. கே. சி. யையும் பிரிக்க இயலாவாறு மிக்க வலுவான இணைப்பாக இத்தொடர்புகள் அமைதலும் உண்டு. அவ்வகை யில் நோக்கும்பொழுது இப்பொருட் கூறினை முதன்மைப் பொருட்கூறாகக் கொள்வதிலும் தவறில்லை. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் பற்றி அறிதலே முதல் நோக்கமாதலின் இவண் இது துணைப் பொருண்மையாகச் சுட்டப்பட்டுள்ளது.

55. இரவிவர்மா; வித்தகன்; ப. 95.

7. வாழ்த்து

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் வாழ்ந்துகொண்டிருப்பவ ராயின் அவரது பணியை, செயலை, ஆற்றலைப் பாராட்டித் தொடர்ந்து அதில் அவர் வெற்றிபெற வாழ்த்துவதாகவும், அதற்காகப் பல்லாண்டு வாழ வாழ்த்துவதாகவும் அமைதல் உண்டு. ''கழகத் தலைவர் கலைஞருக்கு 50ஆவது பிறந்தநாள் விழா, பொன்னாள் இந்த நன்னாள் நாம் நமது நல்வாழ்த்து களை அவர்பால் குவிப்போம்'', என்று பி. எல். ராஜேந்திரன் தம் தொகுப்பு நூலாகிய பொன்னாரத்துள் குறிப்பிட்டுள்ளமை சான்றாகும்.

8. பின்னிணைப்புகள்

நூலின் இறுதியில் பின்னிணைப்புகளாக வாழ்க்கை வரலாற் றுத் தலைவர் பற்றிய இலக்கியக் குறிப்புகள், அவர்மீது எழுந் துள்ள இரங்கற் பாக்கள்[56] பலரின் கருத்துரைகள்[57] ஆகிய வற்றை இணைத்திருப்பது வரலாற்றுத் தலைவர் பற்றிய முழு நோக்கினை அல்லது மேன்மையைத் தெளிவாக, உறுதியான நிலையில் உணர்த்த வேண்டும் எனும் ஆசிரியர் நோக்கினைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

''மைசூர் மன்னர் விவேகானந்தரிடம் மதிப்பும் மரியாதை யும் வைத்திருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டு விவேகானந் தரின் பேச்சை அக்காலத்திலே அவர் ஒலித்தட்டில் பதிவு செய்து பாதுகாத்து வைத்ததிலிருந்து தெரிகிறது. இந்த தட்டு இன்னும் மைசூர் மன்னர் குடும்பத்தில் இருக்கிறது. ஆனால் இசைத் தட்டில் குரல் முற்றிலும் மங்கிவிட்டது'' என்பது போன்ற[58] நுணுக்குச் செய்திகளும் வரலாற்றுத் தலைவரின் புலமையைப் புலப்படுத்த துணை நிற்கின்றன.

கல்கத்தாவிலுள்ள வரலாற்று ஆய்வு நிறுவனம் வெளியிட் டுள்ள தேசிய வாழ்க்கை வரலாற்று அகராதியுள் வாழ்க்கை வரலாற்றுள் இடம்பெற வேண்டிய பொருட் கூறுகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது[59] இங்கு வரையறை செய்யப்பட்டுள்ள

---

56. வள்ளல் அழகப்பர்; அரு. சோமசுந்தரம்.
வள்ளல் சீதக்காதி வரலாறு; க. மு. செரீப்.
57. பாகூர் சு. குப்புசாமி வரலாற்றுக் களஞ்சியம்.
58. மேதைகள் வாழ்விலே; இ. எஸ். மெர்வின்; பக். 6—7.
59. 1. Personal and family Details-Dates and place of birth parents, relatives, caste etc. crown economic status, marriage, date name of wife, family background of wife.

பொருட்கூறுகள் முழுமையும் தமிழில் எழுந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் அடிப்படையில் எழுந்தனவாகும். இன்னும் ஆழ்ந்து நோக்குங்கால் புதிய புதிய பொருட் கூறுகளைக் காணலும் கூடும். வாழ்க்கை வரலாற்றிலக்கிய வளர்ச்சி நிலையில் மேலும் வளம் பெறுதலும் அமையும். பொருண்மை நிலையில் பிறர் வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு எனும் இரண்டிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை என்றே தோன்றுகிறது. படைப்பாளர் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றி வாசகருக்கு உணர்த்த விரும்புவது, நூலின் இயல்பு, வரலாற்றுத் தலைவரின் இயல்பு, பெருமை, சார்ந்த துறை இவற்றிற்கேற்ப வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் இப்பொருட்கூறுகளைத் தம்மகத்தே கொண்டிலங்குகின்றன. பொருண்மையால் பெயர் பெறும் இலக்கிய வகையாக வாழ்க்கை வரலாற்றிலக்கியம் அமைதலின் படைப்பாளர், பொருண்மை நிலையில் புதியன புகுத்தல் அரிது. எனவே, சோ. சிவபாதசுந்தரம் பயணத்தையும் வாழ்க்கை வரலாற்றையும் இணைத்துத்தரும் ‘கௌதம புத்தர் அடிச்சுவடில்’ என்பன போன்ற நூல்களை இதனால் இத்துறைகளின் (பயணம், வாழ்க்கை வரலாறு) பெரிய வெற்றி என்றே துணிந்து கூறலாம்.

---

2. Early life; Education - travels - influences on mind and character (men, books, association etc.)

3. Career history; History of the entire career from the time of reaching adulthood till death (or till the present time for persons still alive), to be given in a narrative and chronological form including positions held and honours received, controversies, however unpleasent to some, need not be avoided.

   In the case of a writer or a poet an account of his principal works should be given in a standard history of literature.

4. Personality: Ideas and attitude towards different Issues-social reforms, religion, education, nationalism economic proplems, regionalisms etc. Appearance, dress, manners, and mode of life (austere, Ostentations, quiet, heroic, pohemion, etc)

5. General Estimate; An assessment of his position, Views and contripution society, with particular refernce to the promotion on national concionsness.

   S. P. Sen (ed); Dictionary of Nationol Biography vol I, P. XXXVI.

அமைப்பும் வெளியீடும்

ஒன்று அமைந்திருக்கும் தன்மையை, படைத்துள்ள இயல்பை, ஆயத்தஞ் செய்துள்ள நிலையை அமைப்பு எனலாம். படிப்பதற்கு ஏற்றாற்போல் நிகழ்ச்சிகள் தொடுக்கப்பட்டு, முழு உருவம் பெற்றுள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் அமைப்பு முதற்கண் இக்கட்டுரையில் நோக்கப்படுகிறது. நூலின் அகம், புறம் எனும் இரு நிலைகளிலும் இவ்வமைப்பு நோக்கற்பாலது.

புறவமைப்பு

நூலின் உட்பிரிவுகள் பற்றிய எண்ணம் இங்கமைகிறது. வாழ்க்கை வரலாறுகளின் வடிவிற்கு ஏற்றாற்போல் இவ்வமைப்பு அமைந்து நூலுடன் பொருந்துகின்றது. வாழ்க்கை வரலாறுகள் காப்பிய வடிவம் கொள்ளும் பொழுது அதற்கேற்ப காண்டம், படலம் முதலான பிரிவுகளைக் கொள்கின்றன. அரங்க. சீனிவாசனின் 'மனித தெய்வம் காந்தி கதை' காந்தியடிகளின் வரலாற்றைப்பாலகாண்டம், தகுதிக் காண்டம், அறப்போர்க் காண்டம், அரசியற் காண்டம், விடுதலைக் காண்டம் என ஐந்து காண்டங்களில் நாட்டியற் படலம் முதலாகத் தோத்திரப்படலம் ஈறாக 77 படலங்களில் நவிலுகிறது. இந்நிலை சில உரை நடை நூல்களிலும் காணப்படுகிறது. சுத்தானந்த பாரதியாரின் ஸ்ரீரமண விஜயம், பாலகாண்டம், பக்குவக்காண்டம், யோகஸ்வராஜ்ய காண்டம், யோகஸாம்ராஜ்யக் காண்டம், ரமணாசிரமக் காண்டம் எனப்பகுக்கப்பட்டுள்ளமையை இதற்குச் சுட்டலாம்.

புதுக்கவிதையின் வடிவில் அமைந்துள்ள கவிராஜன்கதை சுருக்கம், படலம் எனும் மரபுப் பகுப்புகளின்றி ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு தலைப்பிட்டு உரைநடை நூல்களின் அமைப்பியல்பை ஒட்டிச் செல்கிறது. இம்முறையே பெரும்பான்மையான நூல்களின் இயல்பாக அமைகிறது. மிக விரிந்த

வரலாறுகளாக அமையும் 'பொன்னியின் புதல்வர்' போன்ற சில நூல்கள் முதல்பாகம், இரண்டாம் பாகம் எனப்பகுக்கப்பட்டுள் ளன. குறுகிய வரலாறுகளில் இத்தகு பகுப்புகள் இன்றி ஒரு தலைப்பின் கீழ் வாழ்க்கை வரலாறுகள் அமைகின்றன.

அக அமைப்பு

வாழ்க்கை வரலாற்று நூல்களின் நிகழ்ச்சித் தொகுப்பு நிலை இங்குக் கருதப்படுகிறது. பொதுநிலையில் இருபெரும் பிரிவுகளில் இவ்வரலாற்று நூல்கள் அமைகின்றன. தலைவரின் பிறப்பு முதல் நூல் எழுதும் காலம் வரை அவரது வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் காலவரிசையில் தொடர்ச்சியாக அமைத்துச் செல்லல் ஒருவகை. டெய்சிஇராசையாவின் ஹெலன் கெல்லர், காரைக் கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற் றுப் பேழை போன்றன இதன்பாற்படுகின்றன.

காலத்திற்குச் சிறப்பிடம் நல்காது வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பலவித பண்புகள் அல்லது பணிகள் என்பனவற்றை முதன்மைப் படுத்திக் கொண்டு ஒவ்வொன்றாக அவற்றை விளக்கி வரல் மற்றொரு வகையாகும். ஆறு. அழகப்பனின் டாக்டர் ராஜாசர் முத்தைய செட்டியார், சுந்தரவின் பொன்னி யின் புதல்வர் போன்றன சான்றுகள். வாழ்க்கைத்துணுக்கு களாகவும், வாழ்க்கை அறிமுகங்களாகவும் அமையும் நூல்கள் இவற்றினின்றும் விலகி நிற்கின்றன. அவற்றின் குறுகிய வடிவும், நோக்கமும் காரணங்களாகின்றன.

நூல் யாருக்காக எழுதப்படுகிறது என்ற நோக்கிலும் அமைப்பில் வேறுபாடுகாணப்படுகிறது. சிறுவர்களுக்கு என்று எழுதும் பொழுது அவர்களுக்குத் தேவையானதும், அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதுமான நிகழ்வுகள் மட்டுமே இடம் பெறுகின்றன. தமிழ் முடியின் குறள்வழி நடந்த பெரியோர்கள் போன்றன மூலம் இதனை உணரலாம்.

நூலின் நோக்கம் பற்றியும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு அமை கிறது. அறிமுகம் என்ற நோக்கில் அமையும் பொழுது வரலாற் றுத் தலைவரின் வாழ்வில் நிகழ்ந்த மிக்கச் சிறப்புடைய நிகழ்ச்சி இடம் பெறுகிறது. அது அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்ததாக, அல்லது அவரது வாழ்வின் திருப்பு முனையாக என ஏதேனும் ஒரு விதத்தில் முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது. வாழ்க்கைத் துணுக்குகளாக அமையும் பொழுது இவற்றுடன் வரலாற்றுத் தலைவரின் பண்பினை, பழக்க வழக்கத்தினை, படிப்பினையைப் புலப்படுத்துவதாகவும் அமையலாம். வாழ்க்

கைத் துணுக்குகளின் தொகுப்பாக அமையும் நூல்கள் தொகுப்பு நிலையில் இருவிதப்பண்பு காட்டுகின்றன. குறிப்பிட்ட ஒருவர் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து தரல் என்பது ஒன்று.

''ஒரு சமயம் விவேகானந்தரின் மேல் நாட்டுச் சீடர் ஒருவர் அவரை அணுகி, 'சுவாமி' உங்களுக்கு நான் எந்த முறையில் சிறந்த உதவி அளிக்க முடியும்?' என்று கேட்டார். இந்தியாவை நேசிப்பதன்மூலம்?'' என்று நறுக்கென்று பதில் சொன்னார் விவேகானந்தர்.—

விவேகானந்தர் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க முடிந்தற்குக் காரணம் அவருடைய வறுமையே! 'நரேந்தரனுக்கு மட்டும் ஆடம்பர வாழ்க்கை கிடைத்திருந்தால் அவன் வேறு வழியில் போயிருப்பான்' என்று இராம கிருஷ்ணரே கூறினார்'' என்பது போன்று[1] துணுக்குகள் தொடர்கின்றன.

பழக்கவழக்கங்கள், பண்புகள் மற்றும் ஆற்றல் போன்றவற்றின் அடிப்படையிலும் தொகுத்துச் செல்வதுண்டு.

''மர்மக்கதை மன்னர் எட்கார் வாலஸ் தமது கற்பனை தடைபடாமல் இருக்கத் தேநீர் அருந்திக் கொண்டே இருப்பார். —மார்க் ட்வெயின் வேக வைத்த முட்டையை மிளகுத்தூளில் தொட்டுத் தின்று கொண்டே இருப்பார். அப்பொழுதுதான் அவருக்குக் கற்பனை ஓடும்—சூரிய வெளிச்சமுள்ள தோட்டங்களில் தரையில் உட்கார்ந்தபடி எழுதினால் தான் ரூஸோவுக்கு மூளை வேலை செய்யும்'' என்பதாக அவை அமையும்.[2]

முழுமையான வரலாறுகளாக அமைவனவற்றிலும் நிகழ்ச்சிகளின் தேர்வு சிறப்பிடம் பெறுகிறது. சுருக்கமான வரலாறுகளில் தேவையானவை மட்டுமே இடம் பெறுகின்றன[3] விரிந்த வரலாறுகளில், வாழ்க்கை வரலாற்று நூலுக்குத் தேவையானவை அனைத்தும் இணைந்து நிகழ்ச்சிப் பெருக்கம் காட்டுகின்றன. மற்றும் இரண்டிலும் இடம் பெறும் ஒரே நிகழ்வு கூடச் சுருக்க வரலாறுகளில் சுருக்கமாகவும், மற்றதில் போதியஅளவு விரிந்தும் அமைகின்றன.[4] மற்றும் நூலாசிரியர் வாலாற்றுத் தலைவரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் இவற்றின் இயல்பு அமைகிறது. நூலின் படைப்பு

---

1. மேதைகள் வாழ்விலே இ. எஸ். மெர்வின்; ப. 7.
2. மேற்படி ப. 42.
3. சுவாமி விவேகானந்தர்; சித்பவானந்தர்.
4. சுவாமி விவேகானந்தர்; ரா கணபதி.

நோக்கம் குறித்தும் நிகழ்ச்சிகள் தேர்வு அமைவதும் இவண் இணைத்து எண்ணற்பாலது[5].

சில வாழ்க்கை வரலாறுகள் செய்திகளின் கோவையாக, தனிப்பாடல்களின் தொகுப்பு போன்று அமைவதும் உண்டு. பி.கே. எஸ்.ஐம்புநாதனின் 'கஸ்தூரிபா கதைகளைக்' காட்டு ஆக் கலாம். நூற்றலைவரே, தனித்தனியே நிற்கும் நிகழ்ச்சிகளின் இணைப்பு பாலமாக அமைகிறார். இத்தகு அமைப்புடை நூல் களில் நாம் நீண்ட கதைப்பாடல்களில் பெறும் இலக்கிய நயத்தை விடத் தனிப்பாடல் தரும் இலக்கிய இன்பத்தையே பெரிதும் பெறமுடியும். செய்திகளைச் சுவைபடக் கோர்த்தமைப்பதும் அதன் இலக்கிய வெற்றிக்குக் ஒரு காரணமாகிறது எனவே வாழ்க்கை வரலாற்றாசிரியர் இதில் தகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சிறுவர்களுக்கென்று படைக்கப்படும் வாழ்க்கை வரலாறுகள் கதையமைப்புடன் திகழ்வதற்கு இது அடிப்படை யாகிறது.

காப்பியக் கதை அமைப்பாக அமையும் முகம், பிரதி முகம், கருப்பம், விளைவு, துய்ப்பு எனும் வளர்ச்சி நிலை பொருந்து மாறும் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் பல வற்றிலும் அமை தலைக் காணக் கூடும். இவற்றைத் தொடக்க நிகழ்ச்சி, திருப்பு மையம் அல்லது சிக்கல், உச்சகட்டம், விளைவு, துய்த்தல் எனவும் குறிப்பிடலாம். வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துள் பொருந்து மாறை அ. லெ. நடராஜனின் நெப்போலியன் வழிக் காட்ட லாம். இதனுள் அமையும் போர்வீரன் பகுதி தொடக்க நிகழ்ச்சி யாகவும் தலைமைக் குடிமகன் எனும் பகுதி திருப்புமையம் அல்லது சிக்கலாகவும், சக்கரவர்த்தி எனும் பகுதி உச்சக்கட்ட மாகவும் விதியின் விளையாட்டு விளைவாகவும், இறுதிக்காலம் துய்ப்பாகவும் நிற்கக் காணலாம். பெரும்பான்மையான அறி வியல் துறை சார்ந்த அறிஞர்களின் நூல்களில் இவற்றைப் பொருத்த வியலும்.

உ. வே. சாவின் என்சரித்திரம் போன்ற பல நூல்களில் இத்தகு ஏற்ற இறக்கம், சிக்கல் போன்ற பெரும் மாற்ற நிலை களின்றித் தொடர்ந்து ஆற்றொழுக்காகச் செல்லும் வாழ்க்கை வரலாறுகளும் உள. இத்தகைய வரலாறுகள் படைப்பாளரின் திறமையால் சுவைபட நடத்திச் செல்லப் படுகின்றன. வரலாற் றுத் தலைவர் மீதுள்ள பற்றும் வாசகரை இத்தகு நூல்களைப் படிக்கத் தூண்டுகின்றன. வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களில் மேற்கண்டனவே அமைப்பு பற்றிய பொதுவான எண்ணங்களா கின்றன.

---

5. சிறுவர்களுக்கு விவேகானந்தர்; வெ. பார்த்திபன் (பதி).

வெளியீடு

எண்ணம், சொல் அல்லது செயலாக உருவெடுக்கும்போது அதனை வெளியீடு எனலாம். உள்ளத்தில் உள்ளது வெளியில் பிறரறியும்படி வெளிவரு நிலை வெளியீடு எனவும் கொள்ளலாம். ''வாழ்க்கை வரலாறு எழுதுவது ஒரு கடினமான கலை. சுவை பொருந்த எழுத முயன்றால் கற்பனை மிகுந்துவிடும், கதையாகி விடும். மிகவும் வரலாற்று நினைவோடையே எழுதினால் ஒரே அறுவையாகிவிடும்,'' என்பதினின்றும்[6] வாழ்க்கை வரலாறு எழுதுவதன் கடினம் புலப்படும். நன்கு திறமை பெற்ற ஒருவராலேயே சிறந்த வாழ்க்கை வரலாறுகள் படைக்க இயலும் என்பது உறுதி.

''ஒரு கலைஞன், தன் துறையின் செவ்விய வெளியீட்டிற்குப் பயன் கொள்ளும் ஆற்றலும் ஆக்க முறையும் உத்தி எனப்படுகிறது. இலக்கியக் கலைக்கும் இது ஒக்கும். இலக்கிய ஆக்கத்தைப் புனைதற்குக் கவிஞன் கொண்ட பல நோக்க முறைகளும், மறைந்தும் வெளிப்பட்டும், சிறுகூறிலும், முழுமையிலும் சொல்லாகவும் கருத்தாகவும் பலவாறாகப் பொருந்தி அமைவது உத்தியாகும் எனலாம். நோக்க நிறைவேற்றமாக அமையும் இவை புலவனால் தேர்ந்து தெரிந்து அறிந்து செய்யப்பட்டன வெனினும், சுவைஞனுக்கு உடனடியாகப் புலப்படாதும் அமைதல் கூடும். கதிர்வரச் சிறிது சிறிதாக இதழிதழாக மலரும் தாமரை போல அறிவுத் தெளிவுடன் பன்முறை அணுகும்போது பல்சுவை தருதல் இலக்கியத்தின் உத்திச் சிறப்புக்குச் சான்றாகும். சுவைஞர்க்கேற்பவும் அது பன்முகம் காட்டு மாற்றையும் சிறப்பாகச் சுட்டலாம். கவிஞன் ஏதேனும் நோக்கம் பற்றி ஒரு சொல், தொடர், பொருண்மை, கருத்து, பொருள், உணர்வு, பாத்திரம் செயல், நிகழ்ச்சி, இடம், காலம், கனவு, கடிதம், வருணனை, விளக்கம், ஆடல், பாடல், காட்சி, நிறம் என ஏதேனும் ஒன்றனை ஆளும்போது அதில் உத்தி தேர முடிகின்றது'' என்பர்[7]. இதன் அடிப்படையில் இங்கு வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றிய சிந்தனை அமைகிறது.

வெளியீட்டு நிலையில் பலவகை உத்திகளைக் கையாண்டே படைப்பாளர் தம் திறமையை நிலைநாட்டுகின்றனர். அவை வாழ்க்கை வரலாறு எழுந்ததன் நோக்கத்தை நிறைவு செய்தல்

---

6. இராம. பெரிய கருப்பன்; கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்; சு. குழந்தைநாதன் அணிந்துரை.
7. ச. வே. சுப்பிரமணியன்; இளங்கோவின் இலக்கிய உத்திகள்; உதறி; சென்னை; 1984; ப. 6.

ஒருதலையாக, அதனைச் சுவைபடத்தரல், தன் திறமையைப் புலப்படுத்தல் என்பனவாகவும் அமைகின்றன. இவ்வகையில் நூலின் தொடக்கத்தினையே பல உத்திகளுடன் சிறப்பிக்கின்றனர். ஒரு நூலின் தொடக்கம் கற்பாரை ஈர்க்கும்படியாக அமைதல் மிக்க இன்றியமையாதது ஆதலின் படைப்பாளர், தாம் வரையும் வாழ்க்கை வரலாறுகளில் பல உத்திகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவற்றைக் கீழே முறைப்படுத்திக் காணலாம்.

நூற்றொடக்க உத்திகள்

(1) காப்பிய மரபினைப் பின்பற்றி விரிவான நிலையில் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் நாடு, நகர், வளம் காட்டல் 'வாரியார் வாழ்க்கை வரலாறு' போன்ற சில நூல்களில் இடம் பெறுகிறது.

(2) சி. வை. தாமோதரம் பிள்ளை, புராணங்களில் காணப் படும் மரபினைப் பின்பற்றித் தம் 'ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம் நூலினைத், தொடங்குகிறார். சிதாநந்தர், என்னும் மாணவர் தம் குரு சிதாநந்த வல்லிஸ்வருபரிடம் ஸ்ரீ வித்தியா விருத்திக் கிரந்தமெழுதிய ஸ்ரீ மணிய சிவனாரின் வரலாற்றைக் கூறுமாறு கேட்க அவர் கூறுவதாக அமைக்கிறார். இங்கு வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் யார் எனும் வினாவிற்கும் விடையளிப் பதைக் காண்கிறோம்.

(3) இரவிவர்மாவின் வரலாற்றைப் படைத்த வித்தகன் தம்முடன் பயணம் செய்தவர்களுடன் ஏற்பட்ட உரையாடலில் அவரது வாழ்க்கை வரலாறு கூறுவதாக அமைக்கின்றார். நீண்ட உரையாடலின் இறுதியில் "ஏன் விற்கப்பட்டன? அவர் கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? மூல ஓவியங்களை என்ன செய்தார்கள்? அவைகளைச் சொல்ல வேண்டுமானால் அவர் வரலாறு முழுவதும் கூறினால்தான் உங்களுக்கு விளங்கும்"- 'தயவு செய்து கூறுங்கள்' அம்மையார்; 'தயவு செய்து கூறுங்கள்- அவர்-கூறுகிறேன்' என்று சொல்லி இரவிவர்மாவின் வரலாற் றைக் கூற ஆரம்பித்தேன்." என்று கூறி வரலாறு அமைக்கிறார். இவ்வுரையாடல் இரவிவர்மாவின் வரலாற்றை அறிய கற்பா ருக்கு ஓர் உந்துதலை அளித்தல் இயல்பு. நூலைத் தொடர்வதற்கு வாசகரைத் தூண்டும் நலுத்தியாக வித்தகன் இதனைக் கையாண்டுள்ளார் எனலாம்.

(4) தலைவர் ஏன் அவர் காலச் சூழலை நன்குப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அதில் வாழ்க்கை வரலாற் றுத் தலைவரின் பங்கை உணர்ந்து கொள்ளவும், அதில் அவர்

ஈடுபட்டதற்கான சூழலை அறிந்து கொள்ளவும் முடிகிறது. இவற்றை நிறைவு செய்யும் நோக்கில் கவிராஜன் கதையில் வைரமுத்து, மகாகவி பாரதியின் காலப் பின்னணியை மிக அழகாக வடித்துத் தருகிறார்.

> ஒரு பழைய கலா சாரம்
> முதலில் முகவரியையும்
> பிறகு முகத்தையும்
> தொலைத்து விட்டுத்
> தூங்கிவிட்டது
> மொகலாயரின்
> வாளை வணங்காத கலைகள்
> வெள்ளையரின் வியாபாரச் சந்தையில்
> விலையாகிப் போயின.
> கலைமகள்
> தன்
> வீணையை விற்று
> விறகு வாங்கினாள்
> தன்
> ரகசிய ரணங்களைச்
> சொல்ல முடியாமல்
> முனகிக் கிடந்தது மொழி
> .... (பக். 9-11)

என்பது போன்று இப்பகுதி வளர்ந்து செல்கிறது. பாரதி எனும் புரட்சிப் பொறி உருவானதன் சூழலை இவ்வுத்தியால் வெளிக் காட்டுகிறார்.

(5) உ. வே. சாமிநாதையர் தன் வரலாற்றை 'எங்கள் ஊர்' எனும் அதிகாரத்தை முன்னிட்டுத் தொடங்குகின்றார். ஒவ்வொருவருடனும் அவர்கள் பிறந்து வளர்ந்த ஊர் மிக்க சிறப்புடையது. பாண்டிய மன்னனிடம் அறம் கேட்டு வந்த கண்ணகி, தன்னை அவனுக்கு அறிமுகப்படுத்தும்பொழுது,

> தேரா மன்னா செப்புவதுடையேன்
> எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
> புள்ளுறு புண்கண் டீர்த்தோ னன்றியும்
> வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான்றன்
> அரும் பெற்ற புதல்வனை யாழியின் மடித்தோன்,
> பெரும் பெயர்ப் புகாரென் பதியே (20:50-56) என்று

முதற்கண் தன் ஊரைக் குறிப்பிடுவதைக் காணலாம். வழக்கிலும் ஒருவரை ஒருவர் புதிதாகக் கண்டுரையாடும்பொழுது ஊர் பற்றிய வினாவும் இடம்பெறுதலைப் பார்க்கிறோம். எனவே இப்போது மரபினையே உத்தியாகக் கொண்டும் வாழ்க்கை வரலாறுகள் பல தொடங்குகின்றன என்பதற்கு முன் நூல் சான்று. வரலாற்றுத் தலைவருக்கு, அவ்வூரின் பாலுள்ள பற்றுதலைச் சுட்டும் உத்தியாகவும் இதனைக் கொள்ளலாம். இடச்சூழலும் ஒருவர் வாழ்வில் முக்கிய இடம் வகிக்க முடியுமாத லின் பிறந்த ஊரை முன்னிட்டுத் தொடங்குதலும் ஏற்புடைத் தாகிறது.

(6) "உலகம் என்பது ஒரு நாடக மேடை; அதில் பல்வகை யான மக்கள் தோன்றுவார்கள்-" என்று பாடினார் உலக மகாகவி ஷேக்ஸ்பியர். மாபெரும் வீரர்கள் தோன்றுவார்கள்; சக்ரவர்த்திகள் தோன்றுவார்கள்; சான்றோர்கள், ஞானிகள், துறவிகள், தோன்றுவார்கள்; அசடர்கள் தோன்றுவார்கள்; வீரத்தந்தைமார்களும் தாய்மார்களும் தோன்றி, வீரப்புதல்வர் களைப் பெற்றுத் தருவார்கள். உலகம் நடைபெறுவதற்கு, இப்படிப் பலவகைப்பட்ட மக்கள் தேவைப்படுகின்றனர். இவ் விதம் தோன்றுபவர்களுள் யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர், யார் மேலானவர், யார் கீழானவர் என்பது முக்கியம் அன்று. உலகம் நடைபெறுவதற்குப் பலவகைப்பட்ட மக்கள் தேவைப்படுகின்றனர் என்னும் அழியாத உண்மையை மனதில் நன்கு பதிய வைத்துக் கொண்டு வாழ்க்கையை நாம் நடத்துவோ மாயின், வாழ்க்கை பயனுடையதாயும், சுவையுடையதாயும் அமையும். வீரனுக்கும் கொள்ளைக்காரனுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு.........உலகத்தில் தோன்றிய மாபெரும் வீரர்களுள் ஈடும் எடுப்பும் இல்லாத மாவீரன் நெப்போலியன்...........உழைப்பு, உறுதி, விடாமுயற்சி, ஊக்கம், எச்சரிக்கை, துணிவு ஆகிய ஆக்கப் பண்புகளை மிகுதியாகப் பெற்றவன். இத்தகைய மாவீரன் வாழ்க்கையில், நாம் கற்று கொள்ளத்தக்க பாடங்களும் படிப்பினைகளும் பல உண்டு. அவற்றைப் பின்வரும் அத்தியாயங்களில் தெரிந்துகொள்ள முயல்வோம்" என்று தன் நூலைத் தொடங்குகிறார் அ. லெ. நடராஜன். இங்குப் படைப்பாசிரியரின் படைப்பு நோக்கமும், வரலாற்றுத் தலைவர் பற்றிய பொது அறிமுகமும் இணைந்த நிலையில் இவரின் உத்தி அமைந்துள்ளது. தொடர்ந்து தம்முடைய நூலின் அமைப்பின் போக்கும், இயல்பும் எவ்வாறு இருக்கும் என்பதையும் சுட்டி விடுகிறார். இரண்டும் வாசகரை ஓர் எதிர்பார்ப்புடன் நூலைத் தொடரச் செய்கின்

றன. இறுதிவரை இவற்றில் ஏமாற்றமின்றி ஆசிரியர் யாத்திருப்பது அவரின் வெற்றியை உறுதிப்படுத்துகிறது.

(7) ம. பொ, சி. தமது 'எனது போராட்டத்'தைப் பிறந்த ஆண்டின் பெருமை பேசித் தொடங்குகிறார். 1906 ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மிகவும் சிறப்புடையதாகும். அந்த ஆண்டிலே புதுமையான தத்துவங்களும், புரட்சிகரமான போர் முறைகளும் தேசியத் தலைவர்களால் வெளியிடப் பெற்றன. அந்த ஆண்டில்தான் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவிலே காந்தியடிகள் தொடங்கி வைத்தார். அதே ஆண்டில்தான் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் தலைமை உரையிலே சுயராஜ்யம் எனும் புனிதமான மந்திரத்தை மும்முறை கோஷித்தார் முதுபெரும் தலைவர் தாதாபாய் நௌரோஜி...இப்படி, புதுமையான தத்துவங்களும், புரட்சிகரமான போர் முறைகளும் அறிமுகமான 1906 ஆம் ஆண்டிலே சூன் திங்கள் 26 ஆம் நாளிலே நான் பிறந்தேன்'' என்பது அவர் தம் வாய் மொழி (ப. 17). இதனின்றும் வரலாற்றில் தனக்கும் ஓர் குறிப்பிடத்தக்க இடம் உண்டு என்பதனைச் சொல்லாமல் சொல்லுகின்றார் எனலாம். வரலாற்றோடு தனக்கிருக்கும் தொடர்பினை எடுத்தியம்புவது நூலின் நோக்கம் என்பதனையும் இத்தொடக்க உத்தியால் வலியுறுத்துகிறார் எனலாம்.

(8) ''புதுமைகள் பூத்துக் குலுங்கும் உலகப் பூந்தோட்டத்திலே வானொலிக்கு ஒரு தனி இடம் உண்டு. வானொலி இன்று மக்களின் உணவும், உடையும் போல அன்றாட வாழ்க்கையில் பின்னிக் கிடக்கும் தேவைப் பொருளாக ஆகிவிட்டது. காற்றினிலே வரும் கான வெள்ளத்தில் மூழ்கி மகிழாதார் யார்? அறிஞர் பெருமக்களின் அரிய பேச்சுக்களையும் கருத்தைக் கவரும் நாடகங்களையும் இசைப்பாடல்களையும் வானொலி வழியாகக் கேட்டு இன்புறாதவர் இல்லை. பல நாட்டுச் செய்திகளை அவ்வப்போது கேட்டறிவதற்கு உற்ற துணைவனாக இருப்பது வானொலி. வானொலியைப் படைத்து வையகத்துக்கு அளித்த பெருமை குக்லியல்மோ மார்க்கோனி என்னும் அறிஞர் பெருமகனாரைச் சார்ந்தது'' என்பது போன்று[8] வரலாற்றுத் தலைவருக்குப் பெரும் புகழ் பெற்றுத் தந்ததனைக் குறிப்பிட்டும் நூலைத் தொடங்குதல் உண்டு. இவ்வாறு புகழுக்குரிய புதுமை, கண்டுபிடிப்பு, வரலாறு கூறிச் செல்லுதலும் ஒருவகை உத்தியே. அனைவர் வாழ்விலும் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றை முதற்

---

8. புதுமை கண்டவர்; ஜெயா அருணசலம்; ப. 8.

கண் எடுத்துக் காட்டுவதன் மூலம் தொடர்ந்து செல்லும் செய்திகளில் கற்பாரின் மனம் ஈடுபடல் இயல்பாகும்.

(9) ''யாராலும் அடக்க முடியாத உலகப் புகழ் பெற்ற பூசிபாலிஸ் என்ற குதிரை ஒன்று விலைக்கு விற்பதற்காக, அலெக்சாண்டர் தந்தைபிலிப் என்ற மன்னன் முன்னாலே நிறுத்தப் படுகிறது. அவையிலிருந்தோர் மற்றும் தளபதிகள், போர் வீரர்கள் யாரும் அதன் மேல் சவாரி செய்ய முடியவில்லை. அவ்வளவு முரட்டுக் குதிரையாயிருந்தது. இருபது வயது கூட நிரம்பப் பெறாத அலெக்சாண்டர் அந்தக் குதிரையின் மேல் ஏறி, கிழக்கு நோக்கி ஓட்டினான். ஏனெனில் அதன் நிழலைப் பார்த்து மிரளக் கூடாது என்பதற்காக நெடுந்தூரம் ஒட்டி, அதன் கொட்டத்தை யடக்கிக் கொண்டு வந்து நிறுத்தினான்.'' என்று வரலாற்றுத் தலைவரின், இளம் பருவச் சிறப்புச் செயலைச் சுட்டித்தொடங்குதலும் ஒரு தலை. இதனால் வரலாற்றுத்தலைவர் தம் வளர்ச்சிக் காலத்தில் இன்னும் எத்தனைச் சிறப்புகளைச் செய்திருப்பார்; அவற்றையும் அறியவேண்டும்—எனவே நூலைத் தொடர வேண்டும் என்ற அவாவைக் கற்பாரிடையே எழச் செய்யும் உத்தியாக இஃதமைகிறது. சுவையான தொடக்கமே ஒரு நூலுக்குச் சிறந்த அணிகலன் என்பதனை உன்னியும் இவ்வுத்தி நிகழலாம்.

(10) ''நான் ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்''—கையிலிருந்த எண்பது பக்க நோட்டுப் புத்தகத்தை நீட்டி மிகவும் பணிவான குரலில் அவன் சொன்னான். ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஆசிரியர் தன் கண்ணாடிக் கண்களை மெதுவாகத் தூக்கி அவனைப் பார்த்தார். 'என்ன எழுதியிருக்கிறாய்; என்று இழுத்தார். மிகவும் பயத்தோடு 'கதை' என்றான் அவன். 'கதையா'...? ஆசிரியர் ஓங்கிச் சிரித்தார். 'நீயெல்லாம் ஏனப்பா கதை எழுதுகிருய்! போய் வேறு ஏதாவது நல்ல வேலையைப் பார். கதை எழுதுவதொன்றும்சாமான்ய வேலையல்ல......' என்றார். ஆமை தலையை ஓட்டுக்குள்ளே இழுப்பது போல், நீட்டிய நோட்டுப் புத்தகத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, தலை குனிந்து வெளியேறினான் அவன். ஆசிரியரின் அந்தச் சிரிப்பு அவன்காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆம்; ஒலித்துக் கொண்டிருந்தது. இன்றைக்குப் பதினான்கு வயதுகளைக் கடந்து விட்ட அந்தச் சிரிப்பு, இளமை மாறாமல் இன்னும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது''—என்று வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை இலக்கில் ஏற்பட்ட முதல் தோல்வியை முன்னிட்டு நூலை நடத்திச் செல்லுதலும் உண்டு. இந்நிலை வரலாற்றுத் தலைவர் பால் ஒரு இரக்க உணர்வைத்

தூண்டிவிட்டு, தொடர்ந்து அவர் எங்ஙனம் இத்தோல்வியை எதிர்கொண்டு முன்னேறினார், வெற்றியடைந்தார் என்று அறியும் ஆவலைத் தூண்டும் உத்தியாகவும் அமைகிறது. வரலாற்றுத் தலைவருக்கு இந்நிகழ்ச்சி அவர் தம் வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகவும், முயற்சியைக் கைவிடாது மேற்கொண்டு செயல்படும் துணிவிற்கும் வித்திட்டதைக் கற்பார் உணரும் வாயிலாகவும் இத்தொடக்கம் அமைகிறது.

(11) ''1736.........ராணி மீனாட்சி உப்பரிகைக்குச் சென்று உயர்ந்து நின்ற ஆலயக் கோபுரங்களைப் பார்த்தாள். கண்கள் கலங்கின. ஆகாயம் நிர்மலமாக இல்லை. ஆங்காங்கே சுருண்டெழுந்த நெருப்பும் புகையும் வான மண்டலத்திலே கலந்து விளையாடுவது கோரமாகக் காட்சியளித்தது, பீரங்கிகளின் உறுமலும் அநாதரவான நகரத்து மக்களை எதிர்ப்படைகள் அல்லல் படுத்துவதனால் அவர்கள் எழுப்பும் ஓலமும் கர்ண கடூரமாக ஒலித்தன. மனமுடைந்த ராணி மீனாட்சி, தன் அந்தரங்க அறைக்கு வந்தாள். கதவுகளைச் சாத்தி உட்புறம் தாளிட்டுக் கொண்டாள். மஞ்சத்தின் அருகே எரிந்து கொண்டிருந்த தூண்டா விளக்கின் அருகில் சென்றாள். தன் ஆடையின் முந்தானையைத் தூக்கி அதன் சுடரில் பிடித்தாள்'' என்று வரலாற்றுத் தலைவரின் முடிவையே, அவர் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்திற்குத் தொடக்கமாக வைக்கும் உத்தியைக் கௌசிகனின் 'மானங்காத்த மங்கையரி'ல் (ப. 123) காணலாம். பொதுவாகத் துன்பியல் முடிவுகள் கற்பாரின் மனதிடையே மிக அதிகமாக ஊடுருவல் பெறுகிறது. எனவே துன்பியல் முடிவினை முன்சுட்டும்பொழுது கற்பாருக்கு, அதன் அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிய வேண்டும் என்ற உணர்வு இயல்பாகிறது. தொடர்ந்து வாழ்க்கை வரலாற்றைப் படிக்கச் செய்யும் மிக எளிய உத்தியாகிறது.

(12) வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பெயர் சுட்டாது, அவரின் சிறப்பியல்புகளை முன்னடுக்கி அதன் மூலம் அவரைச் சுட்டி நூலைத் தொடங்குதலும் உண்டு. இதனாலும் இத்தகு பெருமைக்குரியவர் அதனைப் பெற்றது யாங்ஙனம்? எதனால்? போன்ற வினாக்கள் வாசகருக்கு எழும்பி, விடை காணுமுகமாக அவர் தம் வரலாற்றைப் படிக்கச் செய்கிறது. இவ்வுத்தியை மெர்வின் தம், 'உழைப்பால் உயர்ந்த ஜி. டி. நாயுடு' நூலுள், ''கோவை தந்தகோமான், கொங்கு நாட்டுச் சீமான், தென்னாட்டின் தலைமகன், தொழில் வளத்தின் நன்மகன், அவர் ஒரு அதிசய மனிதர்! அபூர்வமானவர், ஆடம்பரம் அற்றவர், அறிவு பெற்றவர், அகந்தையை விரட்டியவர், அனைத்

திலும் அபாரத் திறமையைப் பெற்றவர், ஆற்றல் மிகுந்த அறிவு விற்பன்னர். யார் இவர்? தரணி எங்கும் பரணி பாடும் ஒப்பற்ற தமிழ் விஞ்ஞானி, சிந்தனை சிற்பி, மோட்டார் மன்னன், நடமாடும் பல்கலைக் கழகம் இதுபோன்ற எண்ணற்ற அடைமொழிகளைத் தன்னகத்தே கொண்டு இருப்பவர். இந்த புகழ் மொழிகள் எல்லாம் அவருடைய உண்மையான அறிவின் திறமைக்குச் சூட்டப்படும் பாராட்டுப் பத்திரங்கள், நற்சான்று சித்திரங்கள், வழிகாட்டும் வண்ண விளக்குகள். இவர்தான்--பாரதமே பாராட்டிச் சீராட்டிப் புகழ் ஏற்றி, பண்பை ஊற்றி, பகுத்தறிவு காட்டி, புதுமை ஏற்றிப் புகழ்படைத்த புனித மனிதர் தான்-ஜி. டி. நாயுடு!'' என்று கையாண்டிருக்கக் (பக். 5-6) காணலாம்.

13. கற்பனை நயத்துடன், வருணனை கலந்து வரலாற்றுத் தலைவரை அறிமுகப்படுத்துமுகமாக நூல் தொடக்கத்தை அமைத்தலும் ஒரு உத்தியே. நூலின் நடைநயமும் கற்பாரைக் கவர்ந்து நூலுள் ஈடுபாடு கொள்ளச் செய்வனவற்றுள் முக்கியத்துவம் பெறுகிறது. அதில் தன் திறமையை ஆசிரியர் இவ்வாறே முன்னுணர்த்தி விடுகிறார் எனலாம். டெய்சி இராசையா, தமது 'ஹெலன் கெல்லர்' நூலுள் ''ஒளி! ஒளி! காரிருளைக் கிழித்துக் கொண்டு ஒரு ஒளிக்கீற்று! எங்கிருந்து வருகிறது இந்த ஒளி? வான மண்டலத்து வீதியில் விண்வெளிக் கப்பலில் வலம் வருகிறான் ஒரு விண்வெளி வீரன். சந்திர மண்டலத்தையும் சுற்றி வருகின்றான் அவன். அவன் மீண்டும் இந்நிலவுலகுக்குத் திரும்பியபொழுது தன் கூடவே கொண்டுவந்த தண்ணிலவோ இது? இல்லை. பின் எங்கேயிருந்து வருகின்றது இந்த ஒளி? அதோ செல்லுகின்றாளே ஒரு பெண், ஆஹா! அவள் கண்கள்தான் எத்தனை அழகு! தாரகையின் ஒளி மிளிரும் அழகிய விழிகள்! அங்கிருந்துதான் இந்த ஒளி வந்திருக்க வேண்டும். இல்லை, இதோ ஒரு வைரக்கல். இதை ஒளிமலை என்று வர்ணிக்கலாமே! பட்டைதீட்டிய இந்த வைரம் சிந்திய ஒளிதானோ இது? அதுவும் இல்லை. அதோ பார், ஒரு பெண் ஆம், ஒளிமயமான ஒரு பெண். ஆம், அவளிடமிருந்தன்றோ இந்த ஒளி வருகின்றது. ஐயமேயில்லை. ஆனால், ஆனால் என்ன? அவளுடைய கண்களில் பார்வையில்லையே? கண்களில் பார்வையில்லைதான், அதனால் என்ன? வாழ்வில் ஒளி இருக்கிறது. காரிருள் கவ்விய உலகில் அவள் வாழ்கின்றாள்; ஆனால், அவளிருக்குமிடமெல்லாம் ஒளி நிலவுகிறது. இப்பெண்ணிடம் சற்றே பேசிப் பார்க்கின்றாயா? அந்தோ! இதென்ன? அவளுக்குக் காதும் கேளாதோ? ஆம், ஒலியேயில்லாத சூன்ய உலகில் அவள் வாழ்கின்றாள். ஆனால், அவள் வாழ்வே இன்னிசை கீதமாகவல்லவா அமைந்து

விட்டது! அவள் இருக்குமிடத்தில் யாழும் குழலும் சேர்ந்து ஒலிக்கின்றனவே. யார் இவர்? அவர்தான் உலகம் கண்ட அதிசயப் பெண் ஹெலன் கெல்லர்'' என்று தொடங்கியிருப் பதைச் சான்று காட்டலாம். (பக். 1-2) வாழ்க்கை வரலாற் றினை இலக்கிய நயம் சிறக்கப் படைக்க வேண்டும் என்ற நேர்மையுடன் நூலாசிரியர் இயங்கியிருப்பதும் இதில் வெளிப் படுகிறது. இத்தகு வருணனைகள் கதையிலக்கியப் பாங்கினை யும் நல்குகின்றன எனலாம்.

14. வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் பெரும்பாலும் வாசகர் உலகிற்கு நன்கு அறிமுகமானவரையே நூற்றலைவராகக் கொள்கின்றன. எனவே உலகறிந்த ஒருவரைப் பற்றி இயம்பும் போது எவ்வித முன்னுரைகளும் அவர் பற்றிய அறிமுகத்திற்குத் தேவையில்லை; அவ்வாறே கூறினும் அவை கொல்லன் பட்டறை யில் ஊசி விற்ற கதையாகவே அமையும் என்ற நோக்கிலும் அவற்றை விடுத்து நேரிடையாகவே வரலாற்று நிகழ்வுகளை விளக்கிச் செல்லுதலும் உண்டு. ''காந்திஜி தம்முடைய குடும்பத் துடன் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றபோது தாதா அப்துல்லா கம்பெனிக்குச் சொந்தமான கப்பலில் பிரயாணம் செய்தார். அவர் சைவ உணவுக்காரர் என்பதை அறிந்த கப்பல் கப்பித்தான் கப்பலிலுள்ள சமையலறைக்குள், பா, தனியாகச் சமைத்துக் கொள்ள வசதி செய்து தந்தார். கப்பல் பயணிகளில் பெரும் பாலோர் அசைவச் சாப்பாட்டுக்காரர்கள். ஆதலால் சமையலறை யில் மாமிச உணவுகளைத் தயாரிக்கும்போது பாவுக்குக் குமட்டல் ஏற்பட்டது. வைதீகமான வைஷ்ணவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பாவுக்கு மாமிசம், மீன் முதலியவற்றைப் பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தது. ஆயினும் அவர் பொறுமையுடன் இருந்தார். இதை அறிந்த கப்பித்தான், சமையலறைக்கு வெளியிலுள்ள ஒரு பகுதியில் சமையல் செய்யலாம் என்று பாவிடம் கூறினார். ஆனால் காந்திஜி ஏற்கவில்லை. சுகமாகப் பிரயாணம் செய்வதற்காகப் பல வசதிகளைச் செய்து தந்துள்ள கப்பல் கம்பெனியைப் பாராட்டுவதாகவும், சமையலறைக்கு வெளியே ஓரிடத்தில் சமையல் செய்வது முறையல்ல என்று காந்திஜி கூறியதைப் பா ஏற்றுக் கொண்டார். பிறகு, பயணக் காலம் முழுவதும் சமையலறையில் தமக்கென ஒதுக்கிக் கொடுத்த இடத்திலேயே சமையல் செய்தார்.'' என்று கே. எஸ். ஜம்புநாதன், 'கஸ்தூரிபாகதைகள்' எனும் தம் நூலைத் தொடங்குகின்றார். பெரும்பாலும் நூல்கள் எவ் வகையிலாவது நூற்றலைவருக்கு ஒரு அறிமுகத்துடன்தான் தொடங்குகின்றன. அவ்வகையில் இதுபோன்ற ஒரு சில நூல் களே வேறுபட்டு நிற்கின்றன.

15. நாட்குறிப்பு போன்று நூலைத் தொடங்கி அமைத்துச் செல்லும் பாங்கினை நாகை தருமனின் 'அண்ணாவின் கடைசி நாட்கள்' புத்தகத்தில் பார்க்கலாம். "3-9-68- உடல்நலக் குறைவினால் முதன் முதலாகச் சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பலவிதமான பரிசோதனைகளுக்குப் பின் சிகிச்சை பெற்றார். 8-9-68 அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டத்தை நேரில் பெற உடல்நல மின்மையால் அவரது சார்பில் கல்வியமைச்சர் நாவலர் சென்று பெற்று வந்தார்" என்பதாக நூற்றொடக்கம் அமைகிறது.

16. ஆய்வு நோக்கில் நூலமையும்பொழுது, தலைவரின் பின்புலத்தைத் தெளிவுறுத்துவதற்காக முதற்கண் மிக நீண்ட முன்னுரை அமைத்தலும் ஒரு உத்தியாகக் காணப்படுகிறது. "தொன்மைத்தமிழகம், தமிழர்-அரபியர் உறவு, இஸ்லாம் என்றால் என்ன? தமிழகமும் வரலாறும், எது கொற்கை? பெயர்க் காரணம், கெஜெட்டியர் செய்திகள், தமிழகத்தில் மார்கோ போலோ இபுனுபாதூதா பயணப் பாதைகள், தமிழகத்தில் முஸ்லிம் வருகை, வள்ளல் சீதக்காதியின் முன்னோர்" எனப் பத்து அதிகாரங்கள் வரலாற்றுத் தலைவரின் பின் புலத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. (கா. மு. ஷெரீப்- வள்ளல் சீதக்காதி வரலாறு)

17. வரலாற்றுத் தலைவரின் பெயராய்வு கூட நூற்றொடக்கமாக அமையக் கூடும் என்பதனைச் சுந்தா தமது 'பொன்னியின் புதல்வரி'ல் காட்டுகிறார். வரலாற்றுத் தலைவருக்குப் பெருமை தேடித் தந்த புனை பெயரின், தோற்றம் நோக்கம் போன்றவற்றை விளக்குவதாக நூலின் தொடக்கம் (கல்கி என்ற பெயர்) அமைகிறது. வரலாற்றுத் தலைவரின் எழுத்துப்பணியின் வெற்றியை நிலைநாட்டிய பெயராதலின் அதன் சிறப்புரைத்தல் இன்றியமையாதது; சமுதாயப்பணி, அரசியற்பணி, இலக்கியப்பணி எனப் பல துறைகளில் நூற்றலைவர் தம் வாழ்வினை நடத்தினும் இலக்கியப்பணி மாபெரும் வெற்றியைத் தேடித்தந்தது; அவரைத் தமிழுலகம் பெருமைப் படுத்துவது இலக்கியப் பணிக்காகவே; வேறு பல புனை பெயர்களிருப்பினும் இப்பெயரே சிறந்த எழுத்தாளராக உலகிற்கு அறிமுகப்படுத்தியது எனும் பல் சிறப்புகளின் அடிப்படையில் நூலாசிரியர் முதலில் இதனை முன்வைக்கிறார் எனலாம்.

18. வரலாற்றுத் தலைவருக்கும் தமக்கும் உள்ள தொடர்பினை முன்சுட்டி நூலைத் தொடங்குதலும் ஒரு உத்தியே. "என் வாழ்க்கையில் எவ்வளவோ மனிதர்களோடு பழகியிருக்கிறேன்; நல்லவர்களால் நன்மையடைந்திருக்கிறேன்;........என்

உடம்பை எடுத்து நிறுத்திய என் தந்தையார், என் அறிவை நிலை நிறுத்திய என் ஆசிரியர், என் நிலையை உயர்த்திய திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், எனக்கு ஒரு பதவியை அளித்து நிலைபெறச் செய்த ஸ்ரீ தியாகராச செட்டியார் ஆகியவர்கள் எனக்கு மகோபகாரம் செய்தவர்களின் வரிசையிலே முன்னணியில் நிற்பவர்கள். இந்த நால்வரும் நால் வேறு குணம் உடையவர்கள்; நால்வேறு நிலையை உடையவர்கள்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் எனக்குத் தெய்வமாக விளங்குகின்றனர்..........என் ஆசிரியரிடம் என்க்குமுன் படித்தவராதலின் இவர் (தியாகராச செட்டியார்) எனக்கு முன்னவர்; என்பால் அன்பு வைத்துப் பழகியமையின் என் நண்பர்; இன்ன இன்னபடி மாணாக்கர்களிடம் நடந்து வரவேண்டுமென்பதையும் சில நூற்பொருள்களையும் வேறு விஷயங்களையும் எனக்கு அறிவுறுத்தினமையின் என் ஆசிரியர்களில் ஒருவர்; எனக்குத் தம் உத்தியோகத்தை அளித்துப் பிறர் கையை எதிர்பாராத நிலையைச் செய்வித்தமையின் ஒரு வள்ளல்'' என்பதாக இத்தொடர்பு நிலைச் சுட்டப்படுகிறது. இதன் காரணமாக வரலாற்றுத் தலைவருக்கும், ஆசிரியருக்கும் உள்ள உறவு நிலையின் நெருக்கம் புலப்படுகிறது; இதனால் கற்பாருக்கும் வரலாற்றுத் தலைவர் பற்றி நன்கு அறிந்த ஒருவரே எழுதியிருப்பதால் சிறப்பாக இருக்கும், கற்பனை கலவாத உண்மைகளே இடம் பெற்றிருக்கும் எனும் எண்ணங்கள் எழும்புவதற்கும் வாய்ப்புண்டு.

19. வாழ்க்கை வரலாற்றோடு, நூலாசிரியர் தம் பயண அனுபவங்களையும் இணைத்துத் தருவதால் அவரது நூலின் தொடக்கம் முற்றிலும் வேறுபட்டு அமைகிறது. சோ. சிவபாத சுந்தரம் தமது நூலைத் தாம் மேற்கொண்ட பயணத்தை முன்னிறுத்தியே தொடங்குகிறார். நூலாசிரியரின் பயண அனுபவம், நூற்றலைவரின் வரலாறு என இரண்டும் இணைந்து கற்பாரைக் கூடுதல் எதிர்பார்ப்புக் கொள்ளச் செய்யும் உத்தியாக இஃது மிளிருகிறது என்பதில் ஐயமில்லை. ''காசியிலிருந்து வடக்கே கோரக்பூர் என்ற நகரத்துக்கு ஒரு ரயில் போகிறது. பின்னர் அங்கிருந்து வடமேற்கே சுற்றி வளைந்து கோண்டா என்ற இடத்துக்கு ஒரு ரயில் பாதை செல்லுகின்றது. இந்தப் பாதையில் ஷோரத்கர் என்ற ஒரு சிறிய ஸ்டேஷன் இருக்கிறது. அங்கிருந்து வடக்கே பத்து மைல் தூரத்திலே தௌலீவா என்ற இடமுள்ளதென்றும், அங்குதான் கபிலவஸ்து என்ற சாக்கிய நகரத்தைப் பார்க்கலாம் என்றும் தெரிந்து வைத்திருந்தேன். வழித் துணைக்கு எவரும் அகப்படவில்லை. பாஷைக்கு ஆங்கிலத்தையும் அரை குறையாக இரண்டொரு ஹிந்திச் சொற்களை

யும் மாத்திரமே நம்பிக் கொண்டுபிரயாணத்தில் புறப்பட்டேன்'' என்பதாகக் 'கௌதம புத்தரின் அடிச்சுவட்டில்' நூலைத் துவங்குகிறார். புதுமைகள் கற்பாரை ஈர்ப்பதில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றனவாதலின் நூலாசிரியர் இவ்வாறு பல புதுமைகளைப் படைப்பதில் முனைகின்றனர். இது கற்பாருக்குப் பெருவிருந்தாகிறது.

இவ்வாறு பல்வேறு பட்ட உத்திகளுடன்தான் வாழ்க்கை வரலாறுகள் தொடங்குகின்றன. நூலைத் தொடர்ந்து கற்பாரைப் படிக்கச் செய்வதற்கு, அவரது மனம் அதில் ஈடுபாடு கொள்வதற்கு நூலின் தொடக்கம் மிகவும் இன்றியமையாதது. எனவே தான் ஒருவரின் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தல் வாழ்க்கை வரலாற்றிலக்கியப் பொதுமை நோக்கமாயினும் நூலின் தொடக்கத்தில் தங்கள் விருப்பிற்கேற்ப, கற்பாரைக் கவரும் முறையில் பல உத்திகளைக் கையாளுகின்றனர். தொடர்ந்தும் நூலின்சுவை கெடாதவாறும், நூலின் ஓட்டம் தடைபடாதவாறும், கற்பாருக்கு நூலின் தொடக்கத்தில் ஏற்படுத்திய ஆர்வத்தினைச் சிதைக்காவாறும் வரலாற்றுத் தலைவரின் வரலாற்றை நடத்திச் செல்வதில் பல உத்திகளை மேற்கொள்கின்றனர். அவற்றையும் இங்குமுறைப்படுத்திக் காணலாம்.

வரலாற்றை நடத்திச் செல்லும் உத்திகள்

1. அமைப்பெளிமை கருதி நூல் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுதல் பொது இயல்பு. இப்பகுதிகளுக்குத் தலைப்பிடுவதிலும் படைப்பாசிரியர் தம் புலமையைப் பயன்படுத்திக் கற்பாரை ஈர்க்கிறார். உள்ளடங்கியிருக்கும் செய்திகளின் சாரத்தை இத்தலைப்புகள் உணர்த்தி விடுகின்றன. 'மறக்க முடியாத சிரிப்பு; சிந்தனை அலைகள்; வேலை கிடைத்தது; நினைக்காத உறவு; இன்ப உலகம்; முதல் கவிதை; ஓர் எளிய பக்தன்..........எனக் கவிஞர் கண்ணதாசன் தம் 'வனவாசத்தில்' தலைப்புகளிட்டிருப்பதைச் சான்று காட்டலாம்.

2. இவ்வாறு தலைப்புகளிட்டு ஒவ்வொரு பகுதியாகத் தொடங்கும் பொழுது அப்பகுதிக்குப் பொருத்தமாகப் பிறரின் வாய் மொழிகளை முன் மொழிவது வாசகருக்குக் கூடுதல் இன்பத்தை அளிக்கிறது. இலக்கிய நயமும் பொருந்துகிறது. சான்றாக, கே. பீ. நீலமணி, 'அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா' வில் இவ்வுத்தியை நன்குக் கையாண்டுள்ளார். தம் வாழ்வின் இலக்கினை உறுதிப்படுத்தவும், அதற்குச் சிறந்த முன் அடித்

தளத்தை உருவாக்கவும் அன்னை தெரேசா தம் பயணத்தில் முடி வெடுத்ததை வருணிக்கும் பகுதியில் மகுடமாக வேன்டைக்கின்,

''நல்ல கருத்துக்கள்
உயர்ந்த இலட்சியங்கள்
இவற்றைப் பற்றி அடிக்கடிச்
சிந்தனை செய்தால்-அவற்றில்
ஈடுபாடு உண்டாகும்
ஈடுபாடு உண்டானால்
அவற்றிற்காக ஏங்குவோம்
ஏங்கினால் தேடுவோம்
தேடினால் ஒரு நாள்; அழகும், அருளும்
நம்வாழ்வில் நாமறியாமலே புகுந்து—அவை
நமக்குச் சொந்தமாகும்'' (ப. 57)

எனும் மொழியைச் சிறப்பித்திருக்கக் காணலாம். வாழ்க்கை வரலாறுகள் படிப்போருக்குத் வழி காட்டியாகவும் அமைய வேண்டும் எனும் நோக்கினை நிறைவேற்றுவதில் இதுபோன்ற மொழிகளும் துணை நிற்கக் காணலாம். சுந்தா தமது மொழி களையே இவ்வாறு 'பொன்னியின் புதல்வரில்' அமைந்திருப் பதும் சுட்டற்பாலது.

3. சுருக்கமாக அமையும் அறிமுக வாழ்க்கை வரலாறு களிலும், சில விரிந்த முழுநிலை வாழ்க்கை வரலாறுகளிலும் குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உட் தலைப்புகள் இட்டுச் செல்ல லும் காணப்படுகிறது. ஜெயா அருணாசலத்தின் புதுவை கண் டவர் நூலை முன்னதிற்கும் உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரத்தைப் பின்னதிற்கும் சான்றாக்கலாம். நூலினை மேலும் மேலும் எளிமைப்படுத்தித் தரும் உத்தியாகவே இது அமைகின்றது. சிறுவர்களுக்காக இத்தகு நூல் படைக்கும் பொழுது இதன் பயன்பாடு அதிகமாகிறது. எளிதாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பினை அளிக்கிறது.

4. பொதுவாக வாழ்க்கை வரலாறுகளின் நடையமைப்பாக உரை நடை அமைய, உரையாடலிலும் கவிதையிலும், புதுக் கவிதையிலுமாக நூல் படைத்தலும் ஓர் உத்தி நிலையே என லாம். 'மனித தெய்வம் காந்தி காதை' போன்ற வரலாற்றுக் காப்பியங்களும் இதன் பாற்படுவனவே.

5. தன் வரலாறுகள் மிகுதியும் தன்மையில் அமைய கவிஞர் கண்ணதாசன் தம் வரலாற்றை 'அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். பத்திரிகைக்கு அலுவலமாக அமைந் திருந்த அந்த வீடு அமைதிதவழும் இடமாகக் காட்சியளித்தது.

காலில் பழைய பூட்சும், கையில் தகரப் பெட்டியுமாக நின்ற அவன், 'சார், சார்!' என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை! இன்னும் உள்ளே நுழைந்தான் அந்த எழுத்தாளன்,' என்று படர்க்கையில் அமைத்திருப்பதும் ஒரு புதுமையே. முன்னுரையில் கவிஞர், 'நான் என்று எழுதுவதற்குத் தகுதி போதாது என்ற தன்னடக்கத்துடனேயே 'அவன்' என்று என்னைக் குறிப்பிட்டேன்' என்று அமைதி காட்டியுள்ளார்.

6. வாழ்க்கை வரலாறுகளை, இலக்கியங்களாகச் சுவைக்கச் செய்வதில் அதில்வரும் வருணனைகளுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. "டஸ்கம்பியாவிலிருந்து பதினான்கு மைல்களுக்கு அப்பால் உள்ள 'ஃபெர்ண்குவாரி' என்ற கோடை இல்லத்தில் தன் குடும்பத்தினரோடு சில மாதங்கள் தங்கினாள் ஹெலன். குன்றுகளின் சரிவில் மூன்று சிறு ஓடைகள் குதித்துக் குதித்துவோடி வெள்ளிய நீர்வீழ்ச்சிகளாகவும் சிறு சிறு சுனைகளாகவும் மாறின. பல இடங்களில் புல் பூண்டுகள் முளைத்து ஓடையை மறைத்து விட்டன. மலையின் சரிவுகளில் பைன், ஓக்மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகளிலிருந்து ஐவியும் மிஸில்டோவும் சரம் சரமாகத் தொங்கி ஊசலாடின. காட்டுக் கொடிகளும், செடிகளும் பல இடங்களைத் திரையிட்டு மறைத்தன. பொறி வரி வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும் பறந்து திரிவதை ஹெலன் உணர்ந்தாள்" என்பது போன்று நூலின் இடையிடையே அமையும் வருணனைகள் (ஹெலன் கெல்லர். பக் 49-50) வாழ்க்கை வரலாற்றின் இறுக்கத்தினை நெகிழ்விக்கின்றன எனலாம். பிறநாட்டவர் பற்றிய வரலாறுகளில் இவை இடம் பெறும் பொழுது அந்நாட்டினைப் பற்றி அறிந்து கொள்ளும் இரட்டைப் பயனுடையதாகவும் ஆகிறது.

'சுப்பிரமணிய தேசிகருடைய தோற்றத்திலே ஒரு வசீகரம் இருந்தது. நான் அது காறும் அத்தகைய தோற்றத்தைக் கண்டதே இல்லை. துறவிகளிடம் உள்ள தூய்மையும் தவக் கோலமும் சுப்பிரமணிய தேசிகரிடம் நன்றாக விளங்கின. கவலை என்பதையே அறியாத செல்வரது முகத்தில் உள்ள தெளிவு அவர் முகத்தில் பிரகாசித்தது. அவரது காவியுடை, ருத்திராட்ச மாலை, தலையில் வைத்துள்ள ஜபமாலை ஆகிய இவைகள் அவரது சைவத் திருக்கோலத்தை விளக்கின. காதில் அணிந்திருந்த ஆறுகட்டி, சுந்தர வேடம், விரல்களில் உள்ள அங்குஷ்டம் பவித்திரம் என்பவைகள், தேகத்திலிருந்த ஒளி, அந்த மேனியிலிருந்த வளப்பம் எல்லாம் அவர் துறவிகளுள் அரசராக விளங்கியதைப் புலப்படுத்தின. அவருடைய தோற்றத்தில் தவப்பயனும் செல்வப்பயனும் ஒருங்கே விளங்கின. அவர் முக மலர்ச்சியிலே;

அவருடைய பார்வையிலே, அவர் அமர்ந்திருந்த நிலையிலே அவரது கம்பீரமான தோற்றத்திலே ஓர் அமைதியும், கண்டாரைக் கவரும் தன்மையும், இயல்பாகவே அமைந்திருக்கும் தலைமையும் ரஸிகத்துவமும் புலப்பட்டன''[9] இவை போன்ற வருணனைகள் படைப்பாசிரியருக்கு ஒன்றை வருணித்தலில் உள்ள ஈடுபாட்டையும் புலப்படுத்துகின்றன. விரிந்த வரலாறுகள் இவற்றிற்கு வாய்ப்பாக உள்ளன.

7. நூலின் இயல்பிற்கேற்பவும் வெளியீட்டு நிலை அமைதலைக் காண்கிறோம். சிறார்களுக்காகப் படைக்கப்படும் பொழுது அதில் கதை கூறும் பாங்கினை அடியொற்றி வரலாறு படைத்திருப்பதைக் காணலாம். மற்றும் எளிமை நிறைந்த சொற்களே கையாளப்படுகின்றன. ''ஊருணியில் நீர் நிறைந்தால் ஊர் மக்கள் உண்டு மகிழ்வர். அதைப்போல் நல்லவர்கள் கையில் பொருள் கிடைத்தால் நல்ல காரியங்களுக்குப் பயன்படும். இது திருவள்ளுவரின் பொன்மொழி. எடிசன் நல்லவர்; அறிவாளி. நாற்பதாயிரம் டாலர்கள் கிடைத்ததும் அவர் தம்முடைய ஆராய்ச்சிகளை நிறுத்தவும் இல்லை. பணத்தைப் பாங்கியில் போட்டு வைத்து விடவும் இல்லை. அவர் இருபதாயிரம் டாலர்களுக்கு மேல் செலவு செய்து ஒரு கம்பெனியை நிறுவினார். எவ்வளவு காலத்திற்குள் என்று நினைக்கிறீர்கள்? சுமார் இரண்டு மாதத்திற்குள். 'நீவர்க்' என்னும் இடத்தில் அந்தக் கம்பெனி நிறுவப்பட்டிருந்தது'' எனும் பகுதியைக் காட்டாக்கலாம்.[10] இதனுள் திருக்குறளையும் புகுத்தி, சிறார்களை முன்னிறுத்தி வரலாறு கூறிச் செல்லும் பாங்கினையும் காண்கிறோம்.

8. குறள் போன்று பிற இலக்கியப் படைப்பாளரின் கருத்துகளையும் உடன் கலந்து கூறும் முறைமை பொதுவாகப் பிற வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களிலும் காணக்கூடிய மரபாக அமைகிறது. ''மரணம் நெருங்கிவிட்டது என்பதைப் புதுமைப் பித்தன் உணரத் தொடங்கிவிட்டார். ஆனால் புதுமைப்பித்தன் தமிழாக்கி எழுதியிருக்கிறாரே, அமெரிக்க ஆசிரியர் ஜாக்லண்டனின் 'உயிராசை' என்ற கதை, அதில் காணும் உயிராசையைப் போலத்தான் அவரது மனநிலை இருந்தது. சாவதில் துன்பமில்லை; வாழ்வதில்தான் துன்பமிருக்கிறது; எனினும் மனிதன் வாழத்தான் விரும்புகிறான்; புதுமைப் பித்தன் வாழத்தான் விரும்பினார்'' என்று ரகுநாதன் புதுமைப் பித்தன் வரலாற்றில் (ப. 92) அமைப்பது போன்று பிறநாட்டார் இலக்கியங்களும்

9. என் சரித்திரம்; உ. வே. சாமிநாதையர்; ப. 211-212.
10. தாமஸ் ஆல்வா எடிசன்; தி. சு. கலியபெருமாள்; ப. 30.

இதில் பயன்படுகின்றன. வாழ்க்கை வரலாற்றை ஓர் இலக்கிய மாக மேற்கொள்வதற்கு இவையும் துணைநிற்கின்றன.

9. படைப்பாசிரியர் வரலாற்றைக் கூறிக்கொண்டு வருகை யில் சற்று விலகி உரையாடலுக்கு இடம் கொடுக்கும்போது, நாடகப்போக்கு இடைபுகுந்து இலக்கிய இன்பம் பயப்பதாகிறது. ''மகா ராணியின் வார்த்தையைக் கேட்டு அனுபவஸ்தரும் வயோதிகருமான ஒருவர் 'அன்னையே, இங்கிருந்து நீங்கள் உங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதால் என்ன பயன்? அதற்குப் பதில் இன்றிரவே இங்கிருந்து தப்பிப் பேஷ்வா நானா சாகிப் இருக்குமிடத்துக்குச் சென்றால் இந்த ஆங்கிலேயரைப் பழிக்குப் பழி வாங்க வழி பிறக்கலாம்'' என்றார். ''தப்பிச் செல்லும்போது பகைவர்கள் எதிர்ப்பட்டால்'' என்று கேட்டாள் ராணி. ''எதிர்த்துப் போராடுவோம். அதில் மாண்டால் வீரசுவர்க்கம் இருக்கவே இருக்கிறது.'' ''போர்க்களத்தில் இறப்பதையே நான் பாக்கியமாகக் கருதுகிறேன். ஆனால் நான் இறந்த பிறகு என் உடலைப் பகைவர்கள் இழிவாக நடத்தினால்?'' என்று தயங்கினாள் வீரமங்கை. ''இழிவா? எங்களில் ஒருவரின் உடலில் உயிர் இருக்கும்வரை உங்கள் புனித சரீரத்தை யாராலும் தொடமுடியுமா? துண்டாடி விடுவோம்'' என்று எல்லோரும் ஏகக்குரலில் முழக்கமிட்டார்கள். லக்ஷ்மிபாய் தப்பிச் சென்று ஆங்கிலேயர்களைப் பழிவாங்குவதென்ற முடிவுக்கு வந்தாள்'' என்பதைச் சான்றாகச் சுட்டலாம்.[11] குறிப்பிட்ட நிகழ்ச்சியைத் தன் கூற்றாகத் தருவதிலும் நிகழ்ந்த உரையாடலின் மூலம் அவ்வாறே தருவது அந்நிகழ்ச்சிக்குக் கூடுதல் சிறப்புகிடைப்பதாக, முக்கியத்துவம் அளிப்பதாகப் படைப்பாசிரியர் கருதுவதும் ஒரு காரணமாகும். எனவே வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைக் கற்பதில் சலிப்பு ஏற்படாது ஒருவித வேகம் அதில் அமைவதற் கும், குறிப்பிட்ட நிகழ்ச்சியின் சிறப்பினைக் கற்பாருக்குப் புலப் படுத்தற்கும் இவ்வுரையாடல் உத்தி மிகவும் பயன்படுகிறது எனலாம். இது பொதுவாக எல்லா வகையான வாழ்க்கை வரலாறுகளிலும் காண இயலும் ஒன்றாம்.

10. ''ஆகா! அவன் மட்டும் ஆங்கிலம் பயின்றிராவிடின் வேதாந்த செல்வதை மேல் நாடுகளில் யார் பரப்பியிருக்க முடியும்? வேதாந்தம் செல்வம்தான். எனினும் செல்வமும் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு நாணயமாக இருக்கின்றதே யன்றி, ஒரு நாட்டு நாணயம் இன்னொரு நாட்டில் செல்லுவ தில்லையல்லவா? வேதாந்த சிந்தனைச் செல்வங்களை, மேனாட்

---

11. மானங்காத்த மங்கையர்; கௌசிகன்; பக். 167-168.

டில் செல்லுபடியாகும் ஆங்கிலச் சொல் நாணயங்களிலேயே வழங்கவே பிறந்தவர் அன்றோ விவேகானந்தர். அதோடு அந்நியச் சரக்காயினும் சுவாமிகள் காலத்திலேயே இந்தியாவின் நாலா பகுதிகளிலுமுள்ள அறிவாளிகளை இணைத்த பொது மொழிப் பாலமாக ஆங்கிலம்தான் இருந்தது. ஆங்கிலேய மோகம் மிகுந்த இவர்களுக்குப் பாரதத்தின் தனித்துவத்தை எடுத்துக்கூறவும் ஆங்கில மொழியே அவசியமாக இருந்தது. அம்மொழியில் விவேகானந்தர் பெற்ற புலமை அவரது உரைகளிலெல்லாம் உறைந்து கிடக்கிறது. அன்பு மொழியை அறிந்து தமக்கு எதுவுமே அந்நியம் கிடையாது என்ற உயர்நிலையைப் பிற்காலத்தில் எய்த விவேகானந்தர் எத்தனையோ பல ஆங்கிலேயர்களையும் அமெரிக்கர்களையும் தம் அத்தியந்த சிஷ்யர்களாகப் பெற்றார்.'' என்பது போன்று[12] விமர்சனப் போக்கில் படைப்பாளர் இடைபுகுதலும் ஒரு நிலையாகக் காணப்படுகிறது. ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் படைக்கும்பொழுது தம் கருத்துகளையும் தேவையான அளவு, தகுந்த இடத்தில் புகுத்துதல் பொருத்தமாகும் என்பதனை வலியுறுத்துவதாக இது நிற்கிறது. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் செயல் மற்றும் சூழல் விளக்கத்திற்கு இது துணை செய்கிறது. நூலைச் சுவை குன்றாது வழி நடத்திச் செல்லுதற்கும் உதவுகிறது. படைப்பாசிரியருக்கு, வரலாற்றுத் தலைவரிடையே உள்ள ஈடுபாட்டையும், எந்த அளவிற்கு அவரது வரலாற்றை ஐயமற அறிந்திருக்கிறார் என்பதையும் இது உணர்த்துகிறது.

11. இடையிடையே வரலாற்றுத் தலைவரின் மொழிகளை, கருத்துகளை இணைப்பது, கூறவந்த கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைவதுடன் கற்பாருக்கு அதனையும் உணர்த்துதல்; அதன் உண்மையை நிலைநாட்டல்; நூலுக்குச் சுவை கூட்டல் எனப் பல நிலைகளில் பயனுடையதாக அமைகிறது. பொன்னியின் புதல்வரைப் படைத்த சுந்தா தம் படைப்பில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், கல்கியைப்பற்றிய விளக்கங்களுக்கும் அவரது மொழிகளைப் பெரிதும் துணை கொண்டிருக்க காணலாம். தம் நூலுள் நிறைந்திருக்கும் யாவும் உண்மையே என்ற உணர்வினை வாசகருக்களிக்க அவர் கையாண்டுள்ள உத்தியாகத் தென்படுகிறது. ஏனைய நூல்களிலும் இதனைப் பெற முடியுமாயினும் அங்கு மிகுதியும் வரலாற்றுத்தலைவரின் பண்பு செயல் விளக்கத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெளிப்படை. கல்கி மிகப் பெரிய எழுத்தாளராக விளங்கியமையும் சுந்தாவிற்கு இவ்வாய்ப்பை நல்கியது. அவற்றைப் பாங்குற இணைத்து வெற்றி

12. சுவாமி விவேகானந்தர்; ரா. கணபதி; ப. 29.

கண்டுள்ளார். வரலாற்றுத் தலைவரின் எண்ணங்களை முடிந்த அளவிற்கு அவரின் வரலாற்றுடன் இணைத்துவிட வேண்டும் என்ற துடிப்பும் இதன் மற்றொரு நோக்கமாகலாம். புதுமைப் பித்தன் வரலாற்றைப் படைத்த ரகுநாதன் நூலுள்ளும் சுவாமி விவேகானந்தரின் வரலாறு வரைந்த ரா. கணபதியின் நூலுள்ளும் 'மாவீரன் நெப்போலியன்' வரலாறு தந்த அ. லெ. நடராஜனின் நூலுள்ளும் இத்தகு மொழிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றை நோக்குகையில் இலக்கியப் படைப்பாளர் வரலாறுகளில் அவர்களுடன் அவர்களது படைப்புகளும், சமயத் தலைவரின் அற வரலாறுகளில் அவர்களது போதனைகளும், அரசியற்றலைவர் வரலாறுகளில் அவர்களது சிந்தனைகளும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன; அவர் தம் வரலாற்றுப் படைப்பாளருக்கு நூலை வளர்த்துச் செல்ல உதவும் ஒரு கருவியாகவும் பெருந்துணை நிற்கின்றன எனத் தோன்றுகிறது.

12. வரலாற்றாசிரியர் தம் கொள்கைகளை அல்லது வரலாற்றுத் தலைவரின் கொள்கைகளைக் கற்பாருக்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கிலும் வாழ்க்கை வரலாறுகளில் இடைபுகுத்தல் உண்டு. ரா. கணபதியின் சுவாமி விவேகானந்தரின் வரலாற்றில் சமயம் பற்றிய எண்ணங்களைப் பரவலாகச் சுட்டிச் செல்லக் காணலாம். ''வேத கால முனிவர்கள் மிகவும் உன்னதமான ஜீவப் பரம்ம அபேதத்தைக் கூறினாலும், அந்த இலக்கை அடைய பல மனோபாவங்களுக்கு ஏற்பப் பல மார்க்கங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சமீபத்திலும் செய்து காட்டிய மகான் ஸ்ரீராம கிருஷ்ணர். அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்ட சுவாமிஜியும் பிற்பாடு இவ்வாறே செய்தார். இப்படிப் பல உள்ளப்பாங்குகளுக்கு ஏற்ப பற்பல சமயங்களில் அவர் உபதேசம் செய்ததால் சில சமயங்களில் உபதேசங்கள் முரண்படுவதாகவும் தோன்றும். மகான்களுடைய உபதேசங்களைப் படிக்கும் பொழுது அவை யார் பொருட்டுக் கூறப்பட்டன என்பதையும் நினைவில் கொள்ளுவது அவசியமாகும். 'ஒருவருக்கு ஒளஷதம்; இன்னொருவருக்குவிஷம்' என்று சொல்வதுண்டல்லவா? அவரவருக்குரிய மருந்துகளைக் கொடுத்து அவரவர் வியாதியையும் தீர்த்த பின் எல்லோருக்கும் அளிக்கும் அமுதமே அத்வைதம்'' (ப. 214) என்பதைச் சான்று காட்டலாம். நூல் நெடுகிலும் இந்நிலை விரவிவரக் காணலாம். இதுபோன்றே 'பத்திரிகையாளர் நெஞ்சில் காமராஜ்' எனும் நூலுள்ளும் காமராஜின் கொள்கைகள் தனித்து எடுத்து ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன.

''டாக்டர்கள் இல்லாமல் ஆஸ்பத்திரி கட்ட முடியுமா? ஆசிரியர்கள் இல்லாமல் பள்ளிக்கூடம் திறக்க முடியுமா?

"எல்லாவற்றையும் கவனித்துத் திட்டமிட்டு நாம் முன்னேற வேண்டும். திட்டம், மக்கள் திட்டமாக இருக்கவேண்டும். அத்துடன் மக்கள் ஒத்துழைப்பும் வேண்டும். மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தத் திட்டமும் வெற்றி பெற முடியாது என்பதனை எல்லோரும் உணர வேண்டும்" என்பது அவற்றுள் ஒன்று. (ப. 223) இங்குப் பொதுமக்களின் முன்னேற்றத்தைக் கருத்துள் கொண்டே திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்த வேண்டும். அதன் வெற்றிக்கு அவர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது எனும் எண்ணம் வெளிப்படுகிறது. பலரின் தொகுப்புரையாக அமையும் இந்நூலுள் அதன்தொகுப்பாசிரியர் அவர் தம் கட்டுரைகளுக்கு வெளியே அங்கங்கே இவற்றை இணைத்துள்ளார். இவ்வாறின்றி முழுமை வரலாறுகளாக அமைவனவற்றுள் வரலாற்றின் இடையிலேயே வரலாற்றுத் தலைவரின் கொள்கைகள் இடம் பெற்றிருக்கக் காணலாம்.[13]

13. பின் நிகழ இருப்பனவற்றை முன் சுட்டிச் செல்லும் கதையிலக்கிய உத்தியினையும் இங்குக் காண முடிகிறது. கற்பாரிடையே ஓர் ஆர்வத்தினை, உண்டுபண்ண இது கையாளப்படுகிறது. வாழ்க்கை வரலாறுகளிலும் இதனை இணைத்திருப்பது படைப்பாளரின் திறமையைக் காட்டுகிறது. "இந்தப் பிரத்தியேக அநுபவத்தையும் நரேன் சொல்லாமலே அறிந்த ஒருவர் இருந்தார். பல ஆண்டுகளுக்குப் பின் நரேந்திரன் அவரை அடைந்த பிறகு அவர், "என் குழந்தாய், நரேன்! நீ உறக்கம் கொள்ளும் போது ஓர் ஒளியினைக் காண்கிறாயா?" என்று கேட்டதுண்டு. நரேந்திரனின் நனவுலகு மட்டுமின்றிக் கனவுலகையும் அறிந்திருந்த அவர் யார்? இந்தக் கதையின் பிறிதொரு அத்தியாயத்தில் தக்ஷிணேசுவரம் செல்லும் போது அவரைத் தரிசிப்போம்" என்று ரா. கணபதி தம் நூலுள் அமைத்துள்ளதைச் (சுவாமி விவேகானந்தர் ப. 19) சான்று காட்டலாம். இது போன்ற உத்திகளால் இலக்கியச் சுவையை வாழ்க்கை வரலாறுகளும் பெறுகின்றன. "இந்தப் படம் வெளியானதற்குச் சில மாதங்களுக்குப் பிறகு, கல்கியின் 'தியாக பூமி' திரைப்படமாய் வந்தது. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் பெரும் பாலான

13. "நாகரிகம் இருக்கிறதே, அது நெருப்பு மாதிரி எதிர்பட்டவரையெல்லாம் எரித்து விடுகிறது. உலகமெல்லாம் முன்னேறிக் கொண்டிருக்க நாம் சும்மாயிருந்ததால், அதிகமான தொல்லைகளையடைந்தோம். இப்போது நாம் முன்னேற வேண்டியகாலம் வந்திருக்கிறது. விஞ்ஞானம், கைத்தொழில்யாவுமே நமக்குத்தேவை," மாபெரும் வீரர்கள்; சி. பி. சிற்றரசு; ப. 115.

லாற்றில், அதற்குப் பாதகமான விமரிசனங்கள் வெளியாயின. எவ்வளவு பாதகமானது என்பது பின்னர் தெரியவரும். அந்த விமரிசனங்களில் சம்பந்தப்பட்டவர்கள் சிலர், இராமானுஜர் படத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிகிறது'' என்று சுந்தாவும் மேற்கொள்கிறார் இவ்வுத்தியை (ப. 392). இவற்றை நோக்குகையில் விரிந்த வரலாறுகளில் இவ்வுத்தியின் பயன்பாடு சிறப்பிடம் பெறுவதாகத் தெரிகிறது. வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கும் பொழுது இடையே சோர்வோ, சலிப்போ ஏற்படா வகையில் கொண்டு செல்லும் உத்தியாக இதுவும் விளங்குகிறது.

14. நூலின் இனிமையை மிகுவிக்கவும், கூறவரும் செய்தியினை அல்லது நிகழ்ச்சிகளை விளக்கவும் கதைகளை இணைக்கும் பாங்குக் குறிப்பிடற்பாலது. சமய வரலாறு பேசும் நூல்களில் இது மிகுந்த சிறப்புப் பெறுகிறது. உ. வே. சாமிநாதையர், வித்துவான் தியாகராச செட்டியார் வரலாற்றில் 'தான் கெட்டதல்லாமல் சந்திர புஷ்கரிணியையும் கெடுத்தது போல' என்ற பழமொழிக்குரிய கதையைச் சுட்டியிருப்பதைச் சுட்டலாம். இப்பழமொழிக்குரிய விளக்கத்தைத் தியாகராச செட்டியார், ''ஸ்ரீரங்கம் கோயிலில் இருந்த சமையற்காரன் ஒருவன் ஒரு தாசியை வைத்திருந்தான். கோயிற் பிரசாதத்தை அவளுக்குச் சுடச் சுடச் கொண்டுபோய்க் கொடுப்பான். அந்த வழக்கப்படி ஒரு நாள் சட்டியரனை என்னும் பொங்கலை எடுத்துக் கொண்டு போனான். வழியில் சந்திர புஷ்கரிணியில் குளிக்க எண்ணி அதன் கரையில் வைத்தான். சூடு ஆறுவதற்குமுன் கொடுக்கவேண்டுமே என்ற எண்ணத்தால் அவசர அவசரமாக இறங்கும் போது படி வழுக்கிவிட்டுப் புஷ்கரிணியில் விழுந்து இறந்து விட்டான். கோயிலார் மறுநாட் காலையில் பிரேதத்தை அப்புறப்படுத்தி அத்தீர்த்தம் கெட்டுப் போனதற்கு வருந்திப் புஷ்கரிணிக்கும் கோயிலுக்கும் சம்புரோக்ஷணை செய்து பின்பே பூஜை நடத்தினார்கள். அந்தச் சமையற்காரன் பண்ணின காரியத்தை எண்ணி உண்டானது இந்தப் பழமொழி,'' என்று விளக்கியதாகக் காட்டுவர். (பக். 83-84)

15. சில வரலாற்றாசிரியர்கள் நூலின் இடையே சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடு இன்றி நூலைக் கற்பார் அனைவருக்கும் பொருந்தும் வகையில் பொதுவான அறிவுரைகளைக் கூறிச் செல்லல் காணப்படுகிறது. வரலாற்றோடு இயல்பாகப் பொருந்தும் வகையில் அவை உட்புகுத்தப்படுகின்றன. 'உன் மேல் தவறா என் மேல் தவறா என்கிற வீண் சர்ச்சையில் இறங்காமல், எது தவறு என்பதைக் கண்டு பிடித்து அதை டும் திருத்திக் கொண்டு ஒற்றுமைப்பட்டு விட்டால் உலகத்

தில் எந்தப் பிரச்சினையையும் சுலபமாகத் தீர்த்து விடலாம் என் கிற மகத்தான உண்மையை அந்த நாடகம் உணர்த்தியது'' என்று ஏ. வி. எம். தமது 'எனது வாழ்க்கை அநுபவங்களில்' (ப. 37) கூறியிருப்பதைக் காட்டலாம். படைப்பாசிரியருக்கு எப் பொழுதும் சமுதாய நினைவு உண்டு என்பதை வலியுறுத்தும் விதத்திலும் இவை அமைவது சுட்டத்தக்கது. ரகுநாதன், புதுமைப்பித்தனின் வரலாற்றில் ''தமிழ் நாட்டில் எழுதிப் பிழைப்பது என்பது ஓர் எமப் பிரயத்தனம். இந்த நிலையைச் சாபக்கேடு என்று ஒதுக்கி விடுவதற்கில்லை. இன்றைய சமுதாய நிலையில் எழுத்தாளன் மட்டுமல்ல. மத்திய தர வர்க்கத்தின் நிலை முழுவதுமே இப்படித்தான் இருக்கிறது; இருக்கும் சமு தாய அமைப்பு சீர்பட்டால் ஒழிய நாட்டில் கல்விவளராது; எழுத்தாளன் வளர மாட்டான்'' என்று நவின்றிருப்பது இதனைப் புலப்படுத்துகிறது. (ப. 101) சிறுவர்க்காகவும், இளைஞர்க் காகவும் படைக்கப்படும் வரலாறுகளில் இதன் ஆட்சி சற்று அதிகமாகவே காணப்படுகிறது. எழுந்ததன் நோக்கம் இதற்குக் காரணமாம்.

16. நூலின் இடையிடையே வரலாற்றுத் தலைவரின் பல் வகைத் தோற்றங்களைக் காட்டும் புகைப் படங்களையும் அவ ரோடு தொடர்புடையோரின் புகைப்படங்களையும் தொடர் புடைய இடங்களின் புகைப்படங்களையும் இணைத்தல் நூலுக் குத் தனித்ததொரு கவர்ச்சியைத் தருகிறது. கடந்த சில ஆண்டு களில் வெளிவரும் நூல்களில் இந்நிலை பரவலாகக் காணப்படு கிறது. நூலைக் கற்க வேண்டும் என்று வாசகரின் ஆவலைத் தூண்டுவதாகச் செயற்படும் காரணிகளுள் இதுவும் ஒன்று. கழக வெளியீடான உலகப் பேரொளி-ஜவஹர்லால் நேருவின் பிரிவு, ஆறு அழகப்பனின் ராசா சர் முத்தையா செட்டியார் போன்ற நூல்களில் புகைப்படங்கள் மிகுந்திருக்கக் காணலாம்.

17. உடன் வாழ்ந்தோர் தரும் செய்திகள், எண்ணங்கள் போன்றன வாழ்க்கை வரலாற்றில் இடம் பெறுதல் போன்று பயணம் இணைந்த வாழ்க்கை வரலாற்றில் தம் பயணத்தின் போது பெற்ற அனுபவங்கள், உடன் சந்தித்தவர் தரும் செய்தி கள், எண்ணங்கள் போன்றவற்றையும் இணைத்து மொழிதல் இயல்பாகிறது.

ஒரு நூலை முடித்தவுடன் மன நிறைவு பெறுவதில் அதன் முடிவும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. அதுவும் இலக்கியங்களில் இதன் சிறப்பு சுட்டாமலே பெறத்தக்கது. துன் பியல் இலக்கியம், இன்பியல் இலக்கியம் என்ற பகுப்பிற்கு அவற்றின் முடிவுகளே அடிப்படையாகின்றன. கற்பாரின்

உள்ளத்தில் குறிப்பிட்ட நூல் நீங்கா இடம் பெறுவதற்கு அதன் முடிவும் சிறப்பாய் அமைதல் வேண்டற்பாற்று. எனவேதான் படைப்பாசிரியர் நூலின் முடிவினைச் செம்மையுடன் கற்பாரைக் கவரும் வகையில் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். நூலின் தொடக்கமும் தொடர்வும் மட்டும் சிறப்பாய் அமைந்து விட்டால் போதாது. அதன் முடிவும் நூலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கேற்கிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் வாழ்க்கை வரலாற்றாசிரியரும் தம் நூல் முடிவில் பல உத்திகளைக் கையாண்டுள்ளமை தெரிய வருகிறது.

முடிபு உத்திகள்

(1) வரலாற்றுத் தலைவரின் பெருமையனைத்தினையும் ஒருங்கே இழைத்து தருதல் ஒரு நிலை. ''மதிப்புக்கு அடங்காத சொத்து ஒன்றை நம் எல்லோருக்கும் வழங்கியிருக்கிறார் அவர்— அதுதான் அவர் படைத்ததான இலக்கியச் செல்வம், குறைவிலா இச்செல்வத்தில் அவர் நிறைவாக வாழ்கிறார். இச்செல்வத்தை அனுபவிப்போரின் இதயங்களில் வாழ்கிறார். அவருடைய வழியிலே நடக்கும் இலக்கியப் பரம்பரையில் வாழ்கிறார். அவர் இயற்றிய பாடல்களில் இழைந்து வாழ்கிறார். அவர் பேணிய கலைகளில் கலந்து வாழ்கிறார். அவர் ஆற்றிய பலன்களிலும், அமைத்த சின்னங்களின் பெருமையிலும் வாழ்கிறார். அவர் போற்றிய நெறிகளிலும் பயின்ற பண்புகளிலும் வாழ்கிறார். இப்போதுபோல் இனியும் வாழ்வார். பொன்மயமாய்ப் பல்லாண்டு நிலைத்திருப்பார் பொன்னியின் புதல்வர்'' என்று தம் நூலுக்குச் சுந்தா தரும் முடிவு இதனை உணர்த்தும். நூலின் தலைப்பினையே இறுதிச் சொற்களாகவும் அவர் அமைத்திருப்பது புதுமையே. காவிரிநாடு தந்த கலைச்செல்வரான கல்கி தனியொருவருக்கு உரிமையில்லை; காவிரி பாயும் தமிழகம் முழுவதற்குமே உரியவர் என்னும் பொருள்பட அமைத்துள்ளார். பல நிலைகளில் கல்கி மங்கமழும் வாழ்க்கையை வாழ்ந்து காட்டித் தம்மை முழுமையாகத் தம் தாய் நாட்டிற்கு ஒப்பளித்தது போல இவ்வரலாற்றைப் படித்த ஒவ்வொருவரும் விளங்க வேண்டும் எனும் உணர்வைக் கற்பாருக்கு அளிக்கிறார். ஒரு இலக்கியப் படைப்பாளராகக் கருதப்பட்டு வந்த கல்கிக்குள் இத்தனை ஆற்றல்களா என வியக்கச் செய்கிறார். தாம் சிறந்ததொரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் என்பதனையும் உறுதிப்படுத்துகிறார். இவற்றிற்கெல்லாம் மேலாகக் கல்கி பற்றிய ஒரு முழுமையான கண்ணோட்டத்தினை மிகச் சுருக்கமாக, தெளிவாகத் தந்துள்ளார்.

(2) நூலைப் படைக்கும் பொழுது படைப்பாளர் கொண்ட எண்ணத்தினை இறுதியில் படைத்தலும் ஒரு முடிபியல்பாகக் காணக்கிடக்கிறது. படைப்பாசிரியர் தம்மை வரலாற்றுத் தலைவரின் வரலாற்றுக்கு வெளியே இனங்காட்டிக் கொள்வதற்கும் ஒரு உத்தியாக இது பயன்படுகிறது. இதற்காக 'முடிவுரை' என்றே இறுதிப்பகுதியைக் 'கௌதம புத்தரின் அடிச்சுவட்டில்' பயணம் செய்து அவரது வரலாறு படைத்த சோ. சிவபாதசுந்தரம் அமைக்கிறார். தாம் சென்ற இடங்களுக்கும் வரலாற்றுத் தலைவரின் வரலாற்றுக்கும் இடையே உள்ள தொடர்பை மீண்டும் ஒரு முறை சுருக்கமாக உணர்த்தி வாசகர்களுக்கு நினைவூட்டுதலாக இவ்வுத்தியைப் பயன்படுத்தி இறுதியில் 'பிரயாணம் ஒரு இன்பமான அனுபவம். அந்த அனுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்வதில் இன்பம் மேலும் அதிகப்படுகிறது. அதனாலேயே இந்தப் புத்தகத்தை எழுதும் போது நான் அளவற்ற இன்பத்தைப் பெற்றேன். அந்த இன்பத்தில் வாசகர்கள் ஒரு சிறிதளவாவது பெறுவார்களானால் அதுவே எனது யாத்திரா பலனாகும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று முடிக்கிறார். புதுமை படைப்பதில் ஆசிரியருக்குள்ள விருப்பினையும், இந்நூலை அவர் எந்த அளவிற்கு ஆழ்ந்து படைத்துள்ளார் என்பதையும் புலப்படுத்துவதாக இம்முடிவு அமைகிறது. முடிபுகள் படைப்பாசிரியரை இனஞ்சுட்டுவதாகவும் அமையக் கூடும் என்பதற்கு இதுவே காட்டாகவும் அமைகிறது.

(3) கிழிந்த ஆடையைக் களைவதுபோல இந்த உடலை எறிந்துவிட்டு வெளிக்கிளம்புவது நல்லது என்று எனக்குத் தோன்றக்கூடும். ஆனால் உடலுக்கு வெளியே சென்றாலும் நான் சேவை செய்வதை நிறுத்தமாட்டேன். எங்கெங்குமுள்ள மக்களை நான் ஆத்மிகத்தில் தூண்டிக் கொண்டேயிருப்பேன். நான் ஆண்டவனோடு ஒன்று பட்டிருப்பதாக உலகம் அறியும் வரை நான் சேவை செய்வேன் என்றும்—நான் உயிர் வாழ்கிற ஒரே கடவுளும், நான் நம்புகிற ஒரே கடவுளுமான, சகல ஜீவராசிகளும் ஒன்று சேர்ந்த அந்தக் கடவுளை வழிபடுவதற்காக நான் மீண்டும் மீண்டும் ஜன்மம் எடுப்பேனாக! ஆயிரமாயிரம் துயரங்களை அனுபவிப்பேனாக! என்றும் சுவாமிஜி கூறியிருந்தது அவர்களின் இதயச் செவியில் ஒலித்தது; சாந்தியின் சுகந்தத்தை நிரப்பியது'' என்று ரா. கணபதி, சுவாமிஜி விவேகானந்தரின் வரலாற்றை முடிக்கிறார். இங்குத் தம் வரலாற்றுத் தலைவரின் வாய்மொழியைக் கொண்டே நூலை முடித்திருக்கும் உத்தியைக் காண்கிறோம். விவேகானந்தரின் இழப்பால் வருந்தும் உள்ளங்களுக்குப் படைப்பாசிரியர் என்ற நிலையில் நின்று தான் கூறும் உரைகளை

விட அவரின் மொழிகளே உண்மை மருந்தாக அமையும், துயரத்தை விரைவில் அகற்றும் சிறப்பு அதற்கே உண்டு என்ற உணர்வும் இதனுள் பொதிந்திருக்கக் காணலாம். மற்றும் விவேகானந்தரின் பருஉடலுக்கு அழிவே தவிர அவருக்கு இல்லை என்பதை வலியுறுத்துவதாகவும் அமைகிறது. இறுதித் தொடரான 'சாந்தியின் சுகந்தத்தை நிரப்பியது' என்பதில் அவரின் சீடர்களுக்கு மட்டுமல்லாது இவ்வரலாற்றைப் படிக்கும் அனைவரும் மன அமைதி பெற வேண்டும் என்ற உணர்வினையும் படைப்பாசிரியர் குறிப்பாக உணர்த்தியிருக்கக் காணலாம். தன் கூற்றினை விட, வரலாற்றுத் தலைவரின் கூற்றினால் நூலை நிறைவு செய்தல் நூலுக்குக் கூடுதல் பெருமை தரும் என்ற எண்ணமும் இவ்வுத்திக்கு அடிப்படை நோக்கமாகலாம். வரலாற்றுத் தலைவரின் மொழிகளுள் என்றென்றும் மறவாது நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டிய சிறப்புடைதாயிருப்பதை இவ்வாறு இறுதியில் தரல் வேண்டும் என்பதும் ஒரு கால் இதன் நோக்கமாயிருத்தல் கூடும்.

(4) வரலாற்றுத் தலைவருக்கு விண்ணப்பம் அளித்து தன் கவிராஜன் கதையை நிறைவு செய்கிறார் வைரமுத்து.

''எங்களை
மன்னித்தே பழகிவிட்ட
மகாகவியே!.
உன்கவிதைகளை
சப்தச் சந்தையில் விற்கும்
மனப்பாட வியாபாரிகளையும்
மன்னித்துவிடு
உன் எழுத்துக்களை
வாழ்க்கைப் படுத்தினால்
உன்னை
உச்சரிக்க எமக்கு
யோக்கியதை இருக்கிறது
உன் நூற்றாண்டு என்பது
உன்
அறுபதாம் நினைவு நாள்
ஆகிவிடக் கூடாது''

என்பது அவர் தம் மொழி. உயிருடன் இருப்பவரிடம் தானே விண்ணப்பிக்க முடியும் என்ற வினா வாசகரிடையே எழலாம். அதற்கும் தயாராக 'உனக்கு மரணமில்லை. கவிஞனும் காற்றும் மரித்ததாய் ஏது சரித்திரம்?! என்று முற்றுப்புள்ளி வைத்து அதையே விடையாக்கி விடுகிறார். இங்குப் பாரதிக்கு விடுக்கும்

விண்ணப்பம் மூலமாகக் கற்பாருக்கு அறிவுரை பகரும் உத்தியை மேற்கொண்டுள்ளார். பாரதி கற்றுத் தந்த பாடல்களை வாய் மொழியில் மட்டும் கொள்ளாது வாழ்க்கையிலும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற ஆசிரியரின் மனம் இங்கு வெளிப்படுகிறது. இன்றைய சூழல் இதற்கு நேர் முரணாக அமைந்திருப்பதை ஒப்பு நோக்கி வருந்தும் பாங்கும் தென்படுகிறது. வரலாற்றுத்தலைவர் சமுதாயத்தில் பெற்ற இடம், அவர் மறைந்தபின் எவ்வாறு உள்ளது என்பதனை அறிவதில் கற்பார் விழைவு கொள்ளல் இயல்பு. அதற்குரிய பதிலுரையாகவும் இம்முடிபினை வரலாற் றாசிரியர் கையாண்டுள்ள உத்தி சிறக்கிறது. வரலாற்றுத் தலைவரின் வரலாறு மட்டுமின்றி நூலெழுந்த காலத்தில் அவருக்கு அவர் எழுந்த சமுதாயத்தில் உள்ள மதிப்பினையும் உணர்த்துவதாக வாழ்க்கை வரலாறுகள் அமைதல் வேண்டும் என்ற நோக்கமும் இங்கு உணர்த்தப்படுகிறது.

(5) வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் போற்றி நூலை நிறைவு செய்தலும் காணப்படுகிறது. நூலைக் கற்கும் வாசகரும் வரலாற்றுத் தலைவரைப் போற்றியொழுக வேண்டும் என்பது நோக்கமாகலாம். ''மனித குலம் உள்ள மட்டும் மாவீரன் நெப் போலியனுடைய வரலாறும் புகழும் மங்க மாட்டா; நெப் போலியன் வாழ்விலிருந்து, பொது மக்களும், முக்கியமாக அரசி யல் வாதிகளும் கற்றுக் கொள்ள வேண்டிய பல படிப்பினைகள் உண்டு. நெப்போலியனைப் போன்ற மாபெரும் வீரர்கள் மனித குலத்தில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை தான் பிறக்கிறார் கள்,'' என்று அ. லெ. நடராஜன், தமது 'மாவீரன் நெப் போலியன்' வரலாற்றை முடித்திருப்பது சான்று.

(6) ''ஆர்க்கிமீடீஸ் மேலும் வாழ்ந்திருப்பின் மேலும் பல புதுமைகளைக் கண்டிருப்பார். அவர் மறைந்தாலும் அவர்கண்ட உண்மைகள் உலக மக்களின் உள்ளத்தே என்றும் நிலைத்திருக் கும். ஞாயிறும் திங்களும் உள்ள வரையிலும் அவர் திருப்புகழ் நின்று நிலவும். ஆர்க்கிமிடீஸ் திருப்பெயர் அவனியில் வாழ்க!'' என்று வாழ்த்தி முடித்திருப்பதும் (புதுமை கண்டவர்-ஜெயா அருணாசலம். ப. 95) முன் ஒட்டியுள்ள உத்தியுடன் இணைவு காட்டுகிறது.

(7) சமுதாயப் பணியில், அறிவியல் துறையில் தம்மை, ஈடுபடுத்திப் பெரும் புகழ் பெற்றோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களின் முடிபுகள் பெரும்பாலும் அவர்கள் பெற்ற பட்டங் கள், பரிசுகள், பெருமைகள் போன்றவற்றைப் பட்டியலிட்டுத் தருவதாகக் காணலாம். அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா என்ற நூலின் இறுதிக் கட்டுரை 'அன்பின் வெற்றி' என்ன

அன்னை தெரசா பெற்ற பெருமைகளைத் தொகுத்துத் தந்திருக்கக் காணலாம். தம் வாழ்வைத் தியாக வேள்வியாக நடத்துபவர்கள், இறுதியில் தம் வழியில் கடந்த இடையூறுகளை, இன்னல்களை, முழுமையாக மறக்கும் வகையில் அவர்களால் பயன் பெற்றோர் தரும் காணிக்கைகளாக இவை அமைகின்றன. இவற்றை எதிர்பார்த்து அவர்கள் செயல்படா விடினும், அவர்களது வாழ்க்கை இலக்கினை அடைந்து விட்டதை உறுதிப்படுத்துவனவாக இவை அமைகின்றன. தம் உழைப்பை மானிட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன் படுத்தும் பொழுது கிடைக்கும் இது போன்ற பாராட்டுகள் கற்பாரையும் கிளர்ச்சியுறச் செய்யும் ஆற்றலுடையனவாதலின் இவ்வுத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளது எனலாம்.

முன்சுட்டிய நூலில் ஆசிரியர் நூல் முடிவில் பிறிதொரு உத்தியையும் மேற்கொண்டுள்ளமை சிறப்பாக இருக்கிறது. ''முன்பு ஒரு நாள், ஓடுகிற ரெயிலில் நிகழ்ந்தது போல-இனி என்றாவது ஒரு நாள் தன்னுடைய, ஆழ்மனத்தின் உள் குரலைக் கேட்க இறைவன் அவரை ஆளாக்கினால்-அப்போது அன்னை கேட்கும் அவரது உள்குரல் இப்படிப் பட்டதாகத்தான் இருக்கும்!

நான் பசித்திருந்தேன்-
நான் தாகமாயிருந்தேன்-
நான் உடையற்றிருந்தேன்-
நான் வீடற்றிருந்தேன்-
ஆனால் இப்போது அல்ல;
ஏன் தெரியுமா?-
ஒடுக்கப் படுவனையும்;
தெருவில் நிற்கதியாய் இறந்து கிடப்பவனையும்;
தொழுநோயால் மனம் நைந்து
உள்ளம் வெதும்புவனையும்;
அனாதையாய் இறப்பவனையும்;
அனாதையாய் பிறப்பவனையும்;
ஆதரவுடன் போற்றவும்
அன்புடன் நேசிக்கவும்-
அவர்களைப் புரிந்து கொள்ளவும் கூடிய-
தூய அன்பு நிறைந்த
உன் இதயம் எனக்குக் கிட்டியதன் காரணமாக-

என்றே அந்தக் குரல் ஒலிக்கும்'' என்று முடிக்கிறார். வரலாற்றுத் தலைவருக்கு வாழ்க்கை இலக்கைத் தேர்ந்தெடுக்க, வழி நடத்த, தொடர்ந்து செயல்பட உதவிய ஒன்றையே இறுதியில் தேவைக் கேற்ப மாற்றியமைத்து அவரின் செயல் வெற்றியை

உணர்த்துகிறார். விடாமுயற்சி வெற்றி பெற உள்ளத்தின் பங்கும் பெருமளவு தேவை; மனமே அனைத்திற்கும் மூலகாரணம். அதைச் செம்மைப்படுத்தி வாழ்வையும் பயனுடையதாக்கும் படிக் கற்பாருக்கு இதன் மூலம் வேண்டுதல் விடுக்கிறார்.

8. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றி வரலாற்றாசிரியரின் எண்ணம் யாது என்பதனைச் சுட்டி நூலை நிறைவு செய்தலும் ஒரு உத்தியே. ரகுநாதன் தம் நூலை ''புதுமைப் பித்தன் யார்? இலக்கிய திருடனின் பேய்க்கனவு; புத்தகாசிரியர் களுக்கு ஒட்டக் கூத்தன்; வலுவற்றுக் கிடந்த தமிழ் வசனத்துக்கு வாலிபம் தந்த சஞ்சீவி; உலக இலக்கிய சத்சங்கத்திலே தாமாகவே இடம் பிடித்துக் கொண்ட மேதை; சிறுகதை இலக்கியத்தின் ஆசிய ஜோதி; இளம் எழுத்தாளர்களின் லட்சியம்; யதார்த்த வாதிகளின் முன்னோடி; தமிழ் நாட்டில் எழுதிப் பிழைப்பது என்பது எத்தனை அபாயகரமானது என்பதைத் தமது உயிரைப் பணயம் வைத்துக் காட்டிச் சென்ற உதாரணம்-இவர்தான் புதுமைப்பித்தன்.'' என்று முடித்திருக்கிறார். இதனுள் வரலாற்றுத் தலைவர் பற்றி அதன் ஆசிரியரின் மதிப்பீட்டை வாசகர் உணர்ந்து கொள்வதுடன், அவரது ஈடுபாட்டைத் தெரிந்துகொள்ளவும், வாழ்க்கை வரலாற்றின் உண்மைத் தன்மையை அறியவும் இவை உதவுகின்றன.

இதுபோன்றே தம்முடைய மதிப்பீடாகவன்றிப் பிறர், வரலாற்றுத் தலைவருக்குக் கொடுக்கும் மதிப்பீட்டைச் சுட்டி நூலை நிறைவுறுத்தலும் காணப்படுகிறது. கஸ்தூரிபா கதைகள் நூலின் முடிவு ''விசுவாசத்துடனும் பக்தியுடனும் கணவனுக்குத் துணை நின்று அடக்கத்துடன் பணியாற்றிய பா, மனை விளக் காக விளங்கினார். கணவனுடைய இலட்சியங்களையே தனதாகக் கொண்டு, அயராது உழைத்த அந்தச் சீமாட்டி பாரதப் பெண்களில் சிறந்தவராகத் திகழ்ந்தார். நாட்டு விடு தலைக்காகக் காந்திஜி நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டு ஏழுமுறை சிறை சென்ற பா, போர் முறையின் ஓர் அம்சமாக காந்திஜி ஏற்றுக்கொண்ட உபவாசங்களையும், கஷ்டங்களையும் கண்டு மனங்கலங்காமல் உறுதியுடன் செய லாற்றிப் புகழ் பெற்றார். (ஹெரால்டு டிரிபியூன், அமெரிக்கா)'' என்றிருக்கக் காணலாம். இத்தகையனவற்றால் வரலாற்றுத் தலைவர் பற்றிய உண்மையான, உறுதியான, முழுமையான எண்ணம் கற்பாருக்குக் கிடைக்கிறது.

இவை, நூலுக்குச் சிறந்த நிறைவுரைகளாக, நூலுள் இடம் பெற்றுள்ள செய்திகளின் தொகுப்புரைகளாக அமைகின்றன எனலாம்.

9. கதையிலக்கியம் போன்று நூலை நிறைவு செய்தலையும் காணமுடிகிறது. ''சித்தூர் ராணி அழகி பத்மினியின் அரண் மனையைத் தகர்த்தெறிய அதை நெருங்கிக் கொண்டிருந்தனர் தார்த்தாரிய வீரர்கள். ''நில்லுங்கள், அதன் அருகே போகா தீர்கள்; அவள் அரண்மனையை அந்தப்புரத்தை மட்டும் யாரும் எதுவும் செய்யக்கூடாது' என்று கர்ஜித்தான் அலாவுதீன். திகைத்து நின்ற வீரர்கள் மௌனமாகத் திரும்பினார்கள். பத்மினியின் அந்த அரண்மனையை அதில் அவளையே காண்பது போல் அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றான் அலாவுதீன். அவன் கண்கள் அருவியாகி இருந்தன'' என்பதில்[14] ஒரு சிறந்த துன்பியல் முடிவினைக் காண்கிறோம். இலக்கியம் நயம் சிறக் கும் இலக்கியமாக வாழ்க்கை வரலாறு அமைதலின் இதுவும் சிறப்புப் பெறுகிறது.

தலைவர் வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே எழும் வர லாறுகள் பெரும்பாலும் தலைவரைப் போற்றுதல் அல்லது வாழ்த்துதலுடன் நிறைவுறுகின்றன. தன் வரலாறுகளும் தலை வரின் நினைவலைகளிலிருந்து அவர் காலத்திலேயே எழுதப்படுவ தால் அவர் தம் நூலை எவ்வாறு நிறைவு செய்கிறார் என்ப தனைத் தனித்து நோக்குதல் ஏற்புடையதாகிறது. தமது வரலாற்று நூல் அமைப்பளவில் நிறைவுற்றாலும் பொருளளவில் நிறைவுறாது மேலும் தொடர இருக்கிறது என்பதை உணர்த்தி வாசகர்களிடமிருந்து தற்காலிகமாக விடை பெறுகிறார் ம. பொ. சி.

''அரசாங்கம் வசூலிக்கும் தமாஷா வரியிலிருந்து கால் பகுதியையாவது சினிமாவுக்கு உறுதுணையாக இருக்கும் நாடகக் கலை வளர்ச்சிக்கும், நான் முன்பு கூறியபடி மாவட்டங்கள் தோறும் நாடகக் கொட்டகைகள் ஏற்படுத்தி, அதன் மூலம் சினிமாத் தொழிலுக்கு நல்ல நடிகர்கள், நடிகைகள், கதாசிரியர் கள், டைரக்டர்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். 38 ஆண்டுகள் எத்தனையோ இடைஞ்சல்களைத் தவிர்த்துக் கொண்டு ஓரளவுக்குச் சௌகரியத் துடன் இந்த தொழில் நிலைத்து நிற்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய தயாரிப்பாளர்களில் நானும் ஒருவனாக இருக்கிறேன் என்பதால், இந்தக் கோரிக்கையை அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ள எனக்கு உரிமை இருக்கிறது என்று நம்புகிறேன்'' என்ற வேண்டுகோளுடன் நிறைவு செய்கிறார். ஏ. வி. எம். வரலாற்றுத் தலைவரின் வரலாற்றுடன் அவர் சார்ந்த துறையும் இரண்டற கலந்து நிற்றல் இவ்விலக்கியத்தில் இயல்பாதலை

4 . மானங்காத்த மங்கையர்; கௌசிகன்; ப. 38.

இந்நிறைவுப் பகுதி விளக்கக் காணலாம். அவர் தம் சிந்தனையும், செயலும் தம் துறைசார்ந்ததாகவே இருக்கும் என்பதனையும் நிறுவுகிறது.

நூல் முழுமையும் தம் எண்ணங்களையும் கொள்கைகளையும் காட்டிக்கொண்டே வரினும் இறுதியில்தான் மிகவும் வலியுறுத்துகின்ற ஒன்றை முன்னிறுத்தி நூலை முடித்தலும் ஓர் சிறப்பாகும். 'ஈஸ்வரசமர்ப்பணமாக நாம் செய்யும் சகல பணிகளையும், செயல்களையும் அவனுக்கே என்று விட்டு விடுவது உத்தமமான நற்கதி பயக்கும் வழி என்று நான் முடிவிற்கு வந்துள்ளேன். ஆகவே நான் எழுதிய இந்த நூலையும் என் இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீராமபிரானுக்கே சமர்ப்பணம் செய்கிறேன். சீதா ராமனுடைய அருள் கடாக்ஷம் அனைவருக்கும் கிடைக்கும்' என்று அம்புஜம்மாள் தம் நூலை (நான் கண்ட பாரதம்) ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார். இதனை இதற்குக் காட்டு ஆக்கலாம். தம் வாழ்நாளைச் சமுதாய முன்னேற்றத்திற்குத் தியாகம் செய்த அம்மையார் பிறர் நலம் வேண்டி, வாழ்த்தி நூலை நிறைவு செய்திருக்கும் பாங்கும் அவர் தம் பண்பை வெளிக்காட்டுகிறது.

தம் வரலாற்றுக்கு ஒரு வரையறை மேற்கொண்டு எழுதும் பொழுது அந்த எல்லையுடன் நூலை முடிவுக்குக் கொண்டு வருதலைக் காண்கிறோம். கண்ணதாசனின் வனவாசம் இதற்குச் சான்று. ''வனவாசம் புரிந்த மிருகம் அன்று மனிதன் ஆனது! ஏப்ரல் ஒன்பது-அவன் வரலாற்றில் புனிதமான நாள்! அன்றுதான் அவன் உண்மையை நோக்கி நடைபோடத் துவங்கினான். அன்று இரவு நிம்மதியாகத் தூங்கினான்! மறுநாள் பொழுது 'மனிதா எழுந்திரு! உன் வாசம் முடிந்துவிட்டது'' என்று அவனுக்கு நினைவுறுத்திற்று என்று நிறைவுபடுத்தும் படைப்பாளர் தம் வரலாற்றுத் தலைப்புடன் தொடர்புபடுத்தி முடித்திருத்தல் சுட்டத்தக்கது. கதையிலக்கிய உத்திகளுள் ஒன்றாக இஃதமைதலும் குறிப்பிடற்பாலது. மேற்கண்டவாறு எந்த வரையறைக்கும் உட்படாது தம் வரலாற்றின் முழுமையையும் உணர்த்த விரும்பி வரலாற்றாசிரியர் இடையே மறைந்து விடுதலும் உண்டு. அக்காலையில் நூல்கள் நிறைவுறாதே நின்று விடுதலை உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரம் காட்டுகிறது. ''மேலே ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, பெருங்கதை என்பவற்றில் என் கருத்தைச் செலுத்தலானேன்'' என்பதுடன் நூல் நின்றுவிட்டது. இவர் தாம் உணர்த்த விரும்பிய, தாம் மட்டுமே அறிந்த செய்திகளைத் தமிழர் அறிய இயலாமல் போனது வருந்தற்குரியது.

தண்டபாணி சுவாமிகள் தமது வரலாற்றின் மீதிப் பகுதியைக் கூறவிழைதலையும், நூலின் பயன், நூல் இயற்றிய காலம், அதன் பெயர் என்பனவற்றையும் இறுதியில் அமைத்து முடிவாக,

வேதம் ஆகமம் வாழி, வியன்றிகழ்
பூதலத் தொடு பொன்னகர் வாழி, நல்
ஆதாரத்துடன் ஆண்டருள் சற்குரு
பாதம் வாழி, மெய்ப் பத்தரும் வாழியே என்று வாழ்த்துடன் முடித்திருப்பதும் ஓர் புதுமையே.

இவ்வாறு பல உத்தி நயங்களுடன் நூலாசிரியர் தம் நூல்களைப் படைத்தல் காணப்படுகிறது. கதையிலக்கியங்களில் காணப்படும் உத்திகளில் சில இங்கும் அமைகின்றமை ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன. அறிந்த செய்திகளைத் தொகுத்துரைத்தல் என்ற நிலையில் மட்டுமே அமையும் நூல்களும் உள. பாவலர் சரித்திர தீபகம் போன்றவற்றை இதற்குச் சுட்டலாம். வரலாற்றுத் தலைவரோடு தொடர்புடைய ஏனைய செய்திகளை நல்குவதாக அமையும் பின்னிணைப்புகள் பல நூல்களை அணி செய்தலும் குறிப்பிடற்பாலது. ரகுநாதனின் 'புதுமைப்பித்தன் வரலாறு' போன்ற முழுமையான, விரிந்த வரலாற்று நூல்களில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. வாழ்க்கை வரலாற்றுடன் இணைப்பதற்குத் தேவையான முக்கியத்துவம் அற்றதாய், ஆயினும் நூலுள் அமைந்திருக்கும் எண்ணங்களுக்கு, செய்திகளுக்கு வலுவூட்டுவதால், வரலாற்றுத் தலைவர் பற்றிக் கூடுதல் அறிவு பெற உதவுவதாய் அமையும் செய்திகளாக அவை பெரும்பாலும் அமைகின்றன.

தற்கால இலக்கியங்களில் பிறமொழிச் சொற்களை அவ்வாறே கையாளுதல் பரவலாகக் காணப்படுகிறது. வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களும் அதற்கு விலக்காகாது உடன்படுகின்றன. எப். வி. அருள் தம் வரலாற்று நூலான, 'ஒரு போலீஸ்காரரின் டைரி'யில் ''அப்போதெல்லாம் சீனியர் போலீஸ் அதிகாரிகளுக்குச் 'சில்வர்பாஸ்' ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. இதனால் ரயிலில் இலவசமாக உயர் வகுப்பில் பயணம் செய்யலாம். சில்வர் பாஸ் வைத்திருந்த வெள்ளைக்கார சீனியர் போலீஸ் அதிகாரி ஒருவர், ரயில் பயணம் சென்றதற்கு டி. ஏ. பில் போட்டு அரசாங்கத்தில் பணம் பெற்று வந்ததைக் கண்டுபிடித்து விட்டார் ராஜாஜி'' (ப. 38) என்று நவின்றிருப்பதைச் சான்று காட்டலாம். இலக்கியத்துள் இயல்புத் தன்மையை நிலைநாட்டல் இதன் நோக்கம் என்று பொதுநிலையில் படைப்பாளர் கருதுகின்றனர். தமிழறிஞரால் மட்டுமின்றிப் பல்துறை

சார்ந்தோராலும் நூல் படைக்கப்படுதல் இப்பிற மொழிச் சொற்கலப்பிற்குரிய முதன்மைகாரணங்களுள் ஒன்று எனலாம். எவ்வகையிலாயினும் இக்குறைபாடு களையப்பட வேண்டிய ஒன்றாகும். மொழியின் வளர்ச்சியை, சிறப்பைப் பாதிக்கும் ஒன்றாக இஃதமைதலின் படைப்பாளர் இதில் மிகுந்த கவனம் செலுத்துதல் தேவை என்பது இக்குறைபாடு பெற்றுவரும் செல்வாக்கால் உணரப்படுகிறது.

இவை மட்டுமே வாழ்க்கை வரலாற்றை நடத்திச் செல்லும் உத்திகள் என்று அறுதியிடயியலாது. குறிப்பிட்ட சில நூல்களை மட்டுமே ஆய்வுத்துணையாகக் கொண்டுள்ளமையால் மற்றும் பல புதிய சிறந்த உத்திகள் பிற நூல்களில் இருத்தல் கூடும். மீண்டும் பல்வேறு கோணங்களில் அணுகும்பொழுதும் உத்திகளின் பெருக்கம் தோன்றுதல் இயல்பு. இவற்றுள்ளும் இன்னும் ஆழ்ந்து நோக்குங்கால் பலவும் பெறலும் கூடும். புதிய புதிய நூல்கள் எழும்பொழுது அவற்றினிடையேயும் புதிய புதிய உத்திகள் மலரக் கூடும்.

நோக்கமும் பயனும்

உலகில் எந்த ஒரு செயலின் பின்னும் அதன் நிகழ்விற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏதுக்கள் நிறைந்திருந்தல் இயல்பு. அது யாரால் நிகழ்த்தப் படினும் எவ்வளவு சிறிய செயலாயிருப்பினும் இதில் மாற்றம் இல்லை. எனவே இலக்கியங்களின் எழுச்சியும் சில அடிப்படையிலேயே அமையக் காண்கிறோம். ''இலக்கியம், தனக்கென ஒரு 'இலக்கு' உடையது; ஒரு இலக்கை நோக்கிச் செல்வது; எது இலக்கு என உணர்த்துவது ......இலக்கியம் என்ற சொல்லமைப்பால் — பெயரமைப்பாலேயே இத்தகு நிலைகள் பெறப்படக் கூடும் எனத் தோன்றுகிறது. இவ்வாறு, காரணப் பெயர்ப் பொருத்தம் கொண்டால், களமும் கருவியுமான இலக்கியமும், எத்தன்மைத்து என்பது வெளிப்படப் புலப்படுகின்றது. இலக்காக, குறிக்கோளாக ஒரு அல்லது பல பொருண்மைகளைக் கொண்டு இயல்வது, இயம்புவது இலக்கியம் எனலாம்......... இவ்விலக்கு, அல்லது குறிக்கோள் நோக்கமும் பயனுமாக இணைகின்றது'' என்பர்.[1] இவ்வகையில் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் நோக்கமும் பயனும் இங்கு எண்ணப்படுகிறது.

''எழுவாயும் பயனிலையும் போல் ஒன்றிலொன்று இன்றியமையாது இணைந்தவை, நோக்கமும் பயனும் எனலாம். நோக்கமில்லாப் பாடல் அல்லது பயன் கருதாப்பாடல் இருக்க முடியாது எனத் தோன்றுகிறது. ஆயின், நோக்கம் இருந்தும் பயன் நிகழாமல் இருக்கலாம். எதிர்பாராத பயனும் ஏற்படலாம். அறிவித்தல் நோக்கமென்றால், அறிதல் பயன்; அறிவுரை கூறல் நோக்கமென்றால் அதன்படி நடத்தல் பயன்; சீர்திருத்தம் நோக்கமென்றால் திருந்துதல் பயன்; வழிகாட்டுதல் நோக்கம்

---

1. அன்னிதாமசு; இலக்கியத்தின் நோக்கமும் பயனும்-புறப் பொருள், இலக்கியக் கொள்கை-115; ப. 1; தட்டச்சுப் பிரதி.

என்றால் பின்பற்றுதல் பயன்; நெறிப்படுத்துதல் நோக்க மென்றால் நெறி நிற்றல் பயன்; குறிக்கோளிலக்கிய நிலை இங்குக் கருதப்படல் கூடும். நோக்கமும் பயனும் பற்றிய குறிப்புகள்—செய்திகள் பாடலுள்ளும் புறத்தும் பெறப்படக்கூடும். கவிஞனின் நோக்கம் நிறைவேறினால் அதுபயன், உடன் காலத்தும் அது நிறைவேறக்கூடும். உடனடியாக வன்றி, தொடர்ந்த காலத்து அல்லது பிற்காலத்தும் அது நிறைவேறக் கூடும்'' எனும் கருத்தும்[2] எந்த ஒரு இலக்கியத்துள்ளும் நோக்கமும் பயனும் அதன் தோற்றுவாயாகவும் ஒன்றுடன் ஒன்று இணைந்து நிற்பதையும் வலியுறுத்துகிறது. ''பயன் என்ற முடிவுக்கு, இலக்கியத்தில்-செய்யுளில் காரணமாக கருவியாக அமைவது நோக்கு என்பது புலப்படும்'' என்று மேலும் இதனை அவர் வலியுறுத்துவார்.

இவற்றின் அடிப்படையில் வாழ்க்கை வரலாற்றின் நோக்கமும் பயனும் காணல் அமைகிறது. பொருள், வடிவம், வெளியீடு போன்றவற்றுள் இலக்கிய வகைகள் தம்முள் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று நிற்றல் போன்று நோக்க நிலையிலும் தொடர்பு காட்டுகின்றன. மற்றும் தனித்த நோக்கங்களும் உண்டு. எவ்வகை இலக்கியத்திற்கும் பொதுவாக ஒரு நோக்கம் உண்டு. படைப்பாளர் தாமும் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற விருப்பம், தம் படைப்புகளையும் வாசகர் உலகு பெற வேண்டும் என்ற துடிப்பு, தம் உள்ளத்து உணர்வுகளை இலக்கியமாக வடிக்கச் செய்யும் மன உந்துதல் இவையே ஒரு இலக்கியம் எழுவதன் முதன்மை கரணியமாகிறது.

1. தம்மைப் புரந்த அல்லது கவர்ந்த தலைவனைப் போற்றுதல் கபிலர், அவ்வையார் போன்றோர் பாடல்களில் நோக்கமாகக் காண்கிறோம். இப்போற்றுதல் நோக்கம் வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களிலும் அமைகிறது. ''எங்கோன் வளவன் வாழ்க என்று பீடுகெழு நோன்தாள் பாடேனாயின் படுகதிர்ச் செல்வனும் தோன்றா தொழிவான்; என்று கிள்ளி வளவனைப் பற்றி ஆலத்தூர் கிழார் கூறுவது போல், தமிழர் தலைவர்-தமிழவேள்-செந்தமிழ்ப்புலவர் த. வே. உமாமகேசுவரனாரைத் தமிழராகிய யாம் போற்றா தொழிந்தால் உய்வே இல்லை. எனவே உமாகேசுவரனாரின் வாழ்க்கை வரலாற்றைக் காண்போம்'' என்பது[3] சான்றாக நிற்கிறது. மற்றும் இயன்

2. மேற்படி ப. 4.
3. தமிழவேள் உமாகேசுவரனார்; ச. சாம்பசிவன்; தோற்றுவாய்.

மொழி, வாழ்த்து போன்ற துறைகளும் இவண் இணைத்து நோக்கத்தக்கது.

2. வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, விளங்க வேண்டும் என்பதே அறநூல்களின் அடிப்படை நோக்கம். எவ்வாறு வாழ வேண்டும்; எவ்வாறு வாழக்கூடாது என்பதை வலியுறுத்துவதையே அவை தம் படைப்பிலக்காகக் கொண்டுள்ளன. வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றாகவும் இஃது இலங்குகின்றது.

பெரியவர் சரிதை நம்மைப்
  பெரியவ ராக்கி நாமே
அரிய வாழ்நாளாம் பாலை
  வனத்திடை யலைவோருக்குத்
துரிசற வழியைக் காட்டுஞ்
  சுவடுறச் செய்யும் வன்மை
மருவிலா மென்னு மெண்ணெ
  மனங்கொளச் செய்யு மன்னோ

என்பதனை[4] ஒரு காட்டாக்கலாம். வழிகாட்டுதல் எதிர் மறையில் எவ்வாறு வாழ்தல் கூடாது என்பதாகவும் இங்கு அமைகிறது. இதனைக் கவிஞர் கண்ணதாசன் தன் வரலாற்று நூலாகிய வனவாசத்தின் முன்னுரையில் 'எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இது நூலல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கு இதுவே வழிகாட்டி' என்று நவின்றுள்ளமை சுட்டற்பாலது.

3. அறநூல்களின் மற்றொரு அடிப்படை நோக்கமான அறமுரைத்தலும் இங்கு அமைகிறது. ''எண்ணத்திற்குச் சக்தி அதிகம். நல்ல எண்ணங்கள் மனிதர்களை நல்லவர்களாக மாற்றுகின்றன. இத்தகைய எண்ணங்களைத் தூண்டிவிடும் கருவிகள் வாழ்க்கை வரலாறுகள். 'உயர வேண்டும் என்ற குறிக்கோள்' சிறுவர்களிடம் வளர வேண்டும். வெறும் நீதிகளைத் தொகுத்துக் கூறுவது பிஞ்சு மனங்களில் நிலைத்து நிற்பதில்லை. அதே நீதிகள் மற்றவர்களின் வாழ்க்கையில் கலந்து நிற்பதை அறிந்து, உணரும்பொழுது அவற்றால் சிறந்த பலன்கள் விளையும்'' எனும் இவ்வுணர்வு[5] பரவலாகக் காணப்படுகிறது.

4. பக்தியைப் பரப்புதல் பக்தியிலக்கியங்களின் நோக்கமாக நிற்றல் வெளிப்படை. அதுபோன்றே சமயத் தலைவர் மற்றும் இறையடியார்களின் வாழ்க்கை வரலாறுகள் நூலாக்கம் பெறும் பொழுதும் இந்நோக்கம் இழையோடிருக்கக் காணலாம். இறை

---

4. புகழ் பூத்த தமிழர்; லே. ரா. சுந்தரராமன்.
5. செயற்கரிய செய்தோர்; மா. பா. குருசாமி; முன்னுரை.

நம்பிக்கையை வலியுறுத்துதல், வளர்த்தல் எனவும் இதனைக் கொள்ளலாம். ரா. கணபதியின் சுவாமி விவேகானந்தர் போன்ற நூல்களை இவண் எண்ணலாம்.

5. தம் விருப்புடைத் தலைவரைப் பிள்ளைத் தமிழ், உலா, தூது, அந்தாதி, கோவை எனப் பலவகை இலக்கியங்களில் படைத்து மகிழுதல் போன்று வாழ்க்கை வரலாறும் படைத்துக் காண விரும்பியதும் நோக்கமாக அமையலாம். மற்றும் தம்மைக் கவர்ந்தவர் வரலாற்று நாயகர் என்பது மட்டுமின்றி இலக்கிய நாயகராக, காப்பியத் தலைவராகவும் மிளிர வேண்டும் என்பது நோக்கமாக, வாழ்க்கை வரலாறுகள் செய்யுள் வடிவமும் கொள்கின்றன எனலாம்.

6. 'அடிப்படையில் வாழ்க்கை வரலாறுகள் எழுதுவதன் உண்மையான காரியமே மறைந்த சிறந்தோரை நினைவு கூர்தலே, நன்றி பாராட்டு முறையில் நலம் பாராட்டுதலே'; என்ற[6] கருத்திருப்பினும் வாழ்க்கை வரலாற்றாசிரியர் தங்களின் நோக்கமாக மற்றும் பலவற்றைத் தருகின்றனர்.

7. ஒருவரை உலகிற்கு அறிமுகப் படுத்துதலும் நோக்கமாக விளங்க முடியுமென்பதை, 'தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பல வழிகளில் பாடுபடுபவர்களின் பெருமையை நாடறியச் செய்ய வேண்டும் என்பது எனது நெடுநாளைய அவா, கனவு கூட; இதன் ஒரு கூறே இவ்வரலாறு எழுத எனக்கு ஆர்வம் ஊட்டியது'' என்பது[7] போன்ற கூற்றுகளால் அறியலாம்.

8. கற்பாரின் ஆவலை நிறைவு செய்வதும் நோக்கமாக அமைகிறது என்பதற்கு ''ஏதேனும் ஒரு துறையில் ஒருவர் புகழ் பெற்று நாலு பேருக்குத் தெரிந்தவராக இருந்தால் அவரைப் பற்றி மிகுதியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டாவது இயல்பு. அத்தகையவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவருடைய அனுபவங்கள், அவர்களுக்குப் பிடிக்கும் விஷயங்கள், பிடிக்காதவை முதலிய செய்திகளை அறிந்து கொள்ளும் ஆவல் இப்போது பின்னும் வளர்ந்து வருகிறது. அதற்கு ஏற்றபடி பத்திரிகைகளும் கட்டுரைகளாகவும் துணுக்குகளாகவும் பெரிய மனிதர்களைப் பற்றிய சுவையான செய்திகளை வெளியிட்டு வருகின்றன'' என்பது[8] சான்று.

9. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரைப் பற்றிய ஆராய்ச்சியும் ஒரு நோக்கமாகும் என்பதனை, 'இன்றைய காமராஜ்

6. மது. ச. விமலானந்தம்; முன் சுட்டிய நூல்; ப. 12.
7. திருச்சி விசுவநாதன்; மா. சு. சம்பந்தன்; முன்னுரை.
8. தமிழக அமைச்சர்கள்; பாணன்; கி. வா. ஜ. முன்னுரை.

உருவான விதத்தை ஆராய்ந்தறிய முயற்சிப்பதே இந்த வாழ்க்கை வரலாறு எழுதுவதன் அடிப்படை நோக்கம்' என்பதால்[9] பெறலாம்.

10. ஒரு குறிப்பிட்ட கொள்கையினை விளக்கும் நெறியிலும் எழலாம். இதனை 'ஒரு குடும்பத்தின் பெருமைக்கு, அக்குடும்பத்தாரின் ஒழுக்கமும் உழைப்புமே அளவுகோலாக அமையும். இதுவே என் தாயின் தத்துவம். இதை விளக்குவதே இக்குறிப்பின் நோக்கம்' எனும்[10] கூற்றுப் புலப்படுத்துகிறது.

11. ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமுதாய நிலையைக் காட்டுதலும் நோக்கமாகும் என்பதனை, 'என் வாழ்நாளில் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை, குறிப்பாக மாதர் சமூகத்தில் விளைந்துள்ள மாறுதல்களை அவை நேர்ந்த விதத்தைக் குறிப்பிட வேண்டுமென்பதே என் முக்கிய நோக்கம்' என்பது[11] புலப்படுத்துகிறது.

12. பிறர் தூண்டல் வாழ்க்கை, வரலாற்றெழுச்சிக்கு நோக்கக் காரணமாவதை அகிலன், ''ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னால், தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி அவர்களும் என் பதிப்பாளர் நண்பர் கண. முத்தையா அவர்களும் என்னிடம் இந்த ஆலோசனையை (தன் வரலாறு படைத்தல்) வெளியிட்டார்கள். எழுதும்படி என்னை வற்புறுத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்ப முடியவில்லை. அவ்வப்போது நினைவுக்கு வருவதை எழுதுவதாக ஒப்புக் கொண்டேன்'' எனத் தம் 'எழுத்தும் வாழ்க்கையும்' நூலுக்குத் தரும் முகவுரையில் பகருகின்றார்.

13. இவை போன்ற எந்தக் குறிப்பிட்ட நோக்கமுமன்றி, வாழ்க்கை வரலாற்றினைச் சுவை மிகுந்த பொழுது போக்காகவும் அமைக்கலாம் என்பதை, அதனையே நோக்கமாகக் கொண்டு 'என் கதை' படைத்த நாமக்கல் கவிஞர் கூற்றால் உணரலாம். ''பிறருக்கு வழிகாட்டக் கூடிய முயற்சிகள் எல்லா சரித்திரங்களிலும் இருக்க முடியாது. என்றாலும், படிப்பதற்கும் கேட்பதற்கும் ருசிகரமாகிய சம்பவங்கள் பல சரித்திரங்களில் இருக்கவே இருக்கும். அந்தச் சம்பவங்களில் அநேகம் இதுவரைக்கும் எழுதப்பட்ட சரித்திரங்கள் எதிலுமே இல்லாத அபூர்வ நிகழ்ச்சிகளாக அமைதலும் கூடும். ஆகையினால் எல்லா மனிதர்களும் அவரவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சிற்சில குறிப்பிடத்தகுந்த சந்தர்ப்பங்களையாவது எழுதிவைக்க முடியுமானால் பொழுது

---

9. காமராஜ் வரலாறு; மு. நமசிவாயம்; முன்னுரை.
10. தியாகச்சுடர்-ஒரு குறிப்பு; சீ. தங்கையன்; முன்னுரை.
11. நான் கண்ட பாரதம்; எஸ், அம்புஜம்மாள்; முன்னுரை.

போக்காகப் படிப்பதற்கேனும் எத்தனையோ இனிய கதைகள் கிடைக்கும்'' என்பதே அவர் தம் வாய்மொழி.

14. ஒருவரின் வாழ்க்கை வரலாறு அவராலும், வேறு பிறராலும் எழுதப்பட்டிருக்கும்பொழுது மேலும் ஒருவர் படைக்க விரும்புவதும் எண்ணத்தக்கது. அவரைப் பற்றித் தானும் எழுத வேண்டும் என்ற உந்துதல் அல்லது அவற்றில் விடுபட்டுள்ள, தானறிந்தவற்றைத் தன் நோக்கில் தர விழைதல் அல்லது அவரைப் பற்றி எழுதுதல் தனக்குப் பெருமையளிக்கும் என எண்ணுதல் போன்றன காரணமாகின்றன.

இவற்றுள் ஏதேனும் ஒன்றினைத் தம் நோக்கமாகக் கொண்டே வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் எழுகின்றன. இவ் விலக்கியம் இன்னும் பலவாகப் பெருகி நிற்பதற்கு இவ்வடிப் படை நோக்கங்களும் ஒரு காரணமாக அமைகின்றன. இவ்வாறு பல்வகை நோக்கங்கள் வாழ்க்கை வரலாற்றிலக்கியப் படைப் பாளருக்கு இருப்பதைப் பிறரும் சுட்டுவர்[12] வாழ்க்கை அனு பவத்தில் தாம் கண்ட உண்மையை வெளிப்படுத்தல், மிகப் பெரிய முயற்சியில் ஈடுபட்டுப் பெற்ற வெற்றியின் இடையே கண்ட போராட்டங்களை உணர்த்தல், உயர்ந்த பண்பு நலன்களைக் காட்டல் போன்ற காரணங்கள் தன் வரலாறுகளுக்குக் காரணங் களாக அமைகின்றன; எனினும் தம்முடைய தன்னலத்திற்காக எழுதுவோரும் உண்டு என்றும் குறிப்பர்.[13]

---

12. Modern biographer's aims are varied. Some wish to tell an exciting, dramatic, and often inspirational human story. Others study the life of a person so that we can profit by another's experience and better understand ourselves and the world about us. Still others wish to make the past more alive. Instead of writing about the impersonal forces of history, the biographer tells of the impact of an individual on the life of his times.
The New Book of knowledge; P. 185.

13. A man some times writes his own story because he has experienced some kind of self discovery. The discovery may be about his relationship to life, to his fellow man, or to god. Others write about their struggles against great odds and their eventual success......greatness of character, which seems to spring from selflessness and courage, often reveals itself in an autobiography...... They inspire the reader and deepen his under standing. Not all autobiographies are written for noble purposes

பயன்கள்

ஒன்றன் தோற்றம் பயனுடையதாய் அமையும்பொழுது மிக்க சிறப்பு பெறுகிறது. ஏதேனும் ஒரு வகையிலாவது பயனுடையதாய்த் தம் படைப்புகள் இருப்பதையே படைப்பாளரும் விரும்புகின்றனர். சமுதாயமும் அதற்கு மிகுந்த மதிப்பளிக்கிறது. பிறஇலக்கியங்களை விட வாழ்க்கை வரலாறுகள் பயன் மிகுந்தனவாய் அமைகின்றன எனில் மிகையன்று. அதன் பொருண்மை இச்சிறப்பை நல்குகிறது. வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் பயன்களை இனி நோக்கலாம்.

1. பாமரர் முதல் கற்றறிந்த சான்றோர்வரை யாவருக்கும் பயன் நல்குவதாய் அமைதல் இதன் இயல்பு. ஒருவரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வரலாறுகள் அமைய வேண்டும் என்ற கருத்தில் பல நூல்கள் குறிப்பாக, சிறுவருக்கும், இளையோருக்கும் படைப்பன எழுகின்றன. பல வாழ்க்கை வரலாறுகள் பாடசாலைகளில் பாடப்புத்தங்களாக அமையும் சிறப்பே இதனை வலியுறுத்தும். இத்தகு வரலாறுகள் வளரும் தலைமுறையினருக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கின்றன. நல்லொழுக்கத்தினை அறிவுறுத்துதல்; வாழ்க்கைப் பொது நலத்தின் பாற்பட்டதாய் அமைய வேண்டும் என்ற உணர்வினை ஊட்டுதல்; விடா முயற்சியை வலியுறுத்தல்; வாழ்க்கையை மனத்துணிவுடன், அமைதியுடன் எதிர் நோக்குதல் போன்ற பலவற்றை எளிதாக மனதில் உட்புகுத்தும் காரணியாக இவ்வகை நூல்கள் அமைதல் வெளிப்படை. எனவே பொது நிலையிலே வாழ்க்கை வரலாறுகள் சமுதாயப் பயனை முன்னிட்டே எழுகின்றன எனலாம்.

2. பொது அறிவுக் களஞ்சியமாகவும் இவை பயன்படுகின்றன என்பதில் ஐயமில்லை. பல நாட்டவர் பற்றியும் பல இனத்தவர் பற்றியும், பல மொழியினர் பற்றியும் வரலாறுகள் அமையும்பொழுது அவை பற்றிய விளக்கங்கள், அவர் தம் சிறப்பு பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாடு போன்ற பலவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்பேற்படுகிறது. கற்பதில் சலிப்பின்றி இவற்றைச் சுவையுடன் அறிந்து

Many are written for selfish reasons-to get-money attention, sympathy or revenge. Yet all too often the writer to autobiography conveys the exact opposite of the impression he had hoped to impart......It has become fashionables for actors and athletes to have their stories ghost written.

Ibid; P. 186.

கொள்ள முடிகிறது. மேல் நாடுகளில் கிறிஸ்துமஸ் விழா நடை பெறும் சிறப்பினை டெய்சி ராமையாவின் ஹெலன் கெல்லர் நூலுள் காணலாம். வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் பற்றிய அறிவினை அ. லெ. நடராஜனின் 'மாவீரன் நெப்போலியனில்' பெறலாம். ''இஸ்தமஸ் கால்வாயை உருவாக்கி, கீழை நாடுகளுக் கும் மேலை நாடுகளுக்கும் இடையில் தொடர்பை உண்டாக்க, முதன் முதலாகப் பெரும் திட்டம் தீட்டிய பெருமை நெப்போலி யனுக்கு உண்டு என்று கன்னர் மோரிஸ் என்ற ஆங்கில ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்'' (ப. 127); ''மோர்ஸ் என்பவர் எடிசனுக்கு முன்பே தந்தியைக்கண்டு பிடித்தவர். அந்தத் தந்தி முறையில் பல புதுமைகளைச் செய்து காட்டியவர் எடிசன்.........அதேபோல், டெலிபோனை முதன் முதலில் கண்டு பிடித்து உலகிற்குத் தந்த வர் 'பெல்'. இன்றுள்ள முறையில் அதைத்திருத்தி அமைத்தவர் எடிசன்'' (தாமஸ் ஆல்வா எடிசன், ப. 38); என்பன போன்ற வற்றால் இக்கருத்து உறுதிப்படும்.

3. பல்துறை சார்ந்த அறிஞர்தம் வாழ்க்கை வரலாறுகள் படைக்கப்படுவதால் கற்பாருக்கு அவ்வவ் துறை சார்ந்த அறிவு, கிடைக்கிறது என்பதும் இவண் சுட்டத்தக்கது. உ. வே. சா. வின் என்சரித்திரத்தைப் படித்தால் ஒருவர் அவரது வரலாற்றை மட்டுமின்றி ஒரு நூலைப் பதிப்பித்தல் எவ்வாறு; அதில் உள்ள இடர்ப்பாடுகள்; அவற்றைக்களையும்முறை; செம்மையான பதிப் பின் நிலை போன்ற பலவற்றையும் நன்குஉணர்ந்து கொள்ள முடியும். தாம் பதிப்பு முயற்சியில் ஈடுபடும் பொழுது அது மிகச் சிறந்த துணையாய் நிற்றலைக் கற்றார் உணருவர். காவல்துறை பற்றிய செய்திகளை எப். வி. அருளின் 'ஒரு போலீஸ்காரரின் டைரி'யில் பெறலாம். வரலாற்றாய்வாளருக்கு வரலாற்றில், இடம் பெற்றவரின் வாழ்க்கை வரலாறுகள் பெரிதும் துணை நிற் கின்றன. வரலாற்றைச் சுவையோடு அறிவதற்கு ஒரு வழியாக வும் நிற்கிறது. நெப்போலியனின் வரலாறு அக்காலப் பிரஞ்சு, இத்தாலி நாடுகளின் வரலாறாகவும் அமைகிறது.

''வரையப் போகும் ஓவியத்திற்குப் பலபயிற்சிப் படங்களைக் கருப்பு மையால் போட்டுப் பார்ப்பார். அதுவும் அல்லாமல் தனக்கு வேண்டிய பாத்திரத்தைத் தேவையான பாவனையில் நிற்க வைத்துப் பல கோணங்களில் சித்திரம் வரைந்து பார்ப்பது வழக்கம். தனக்குப் பிடித்த பாவனை கிடைத்து விட்டதும் அவை களை வைத்துக் கொண்டு சிறிய நீர் வண்ணப் படமாக வரைந்து பார்ப்பார். தமக்கு வேண்டிய நிறங்களைச் சேர்க்க வேண்டிய முக்கிய இடங்களைச் சேர்க்கவும் நீக்க வேண்டிய தவறுகளை நீக்கவும் அந்த நீர் வண்ண ஓவியத்தின் மூலம் சரிபார்த்துச்

கொள்ளுவார்'' என்பதின்றும் (இரவிவர்மா-வித்தகன் ப. 108) ஓவியக்கலை பற்றிச் சிறிது அறிந்து கொள்ள முடிகிறது.

''செடிகள் உயிரினத்தைப் போலத் தூங்குகின்றன; பின்னர் விழித்தெழுகின்றன. மின் தாக்குதலால் உயிர்கள் படும் துன்பத்தைப் போலச் செடி கொடி முதலியனவும் துன்பம் உறுகின்றன; மரண வேதனை பெறுகின்றன. மதுவை ஆவியாக்கிச் செடி கொடிகட்குச் செலுத்தினால் அவை மதுவுண்ட மனிதன் ஒருவனின் நிலையை அடைகின்றன. மிக்க நீரைக் குடித்து வயிறு நிரம்ப உண்டானொருவன் பெறும் தடுமாற்ற உணர்ச்சி தாவர இனங்களுக்கும் உண்டு'' என்று (புதுமை கண்டவர்; ப. 121) அறிவியலறிஞர் வரலாறுகளால் அறிவியல் அறிவு பெறுகிறோம். இவ்வாறாகப் பல்துறை அறிவினையும் எளிதாகப் பெறுதற்கு மிகச் சிறந்த வாய்ப்பாக வாழ்க்கை வரலாற்று நூல்கள் அமைகின்றன.

4. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எந்த காலக்கட்டத்தைச் சார்ந்தவரோ அக்காலம் பற்றிய அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. உ. வே.சாமிநாதையரின் என் சரித்திரம் மிகத் தெளிவாக அக்காலத்திய அந்தணர் வாழ்க்கை முறையையும், தமிழ்ப் புலவர் நிலையையும் சிறப்பாக எடுத்துக்காட்டக் காணலாம். ''ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் பன்னாங்குப் பல்லக்கில் (வளைவுப் பல்லக்கில்) ஊர்வலம் நடைபெறும். கடைசி நாள் ஊர்வலத்தில் மத்தாப்பும் சீறுவாணமும் விடுவார்கள். சிறு பிள்ளைகளே அவற்றை விடுவார்கள். ஊர்வலத்தின் போது ஒவ்வொரு வீட்டிற்கும் தாம்பூலம் அளிப்பார்கள். ஒரு வீட்டிலுள்ள குடித்தனத்திற்கு ஏற்ற படி கொட்டைப்பாக்கைக் கணக்குப் பண்ணிப் போடுவார்கள். அதற்குத் திண்ணைப்பாக்கு என்று பெயர். அதனை வழங்காவிட்டால் வீட்டுக்காரருக்குக் கோபம் வந்து விடும். முகூர்த்த காலத்தில் பழமும் வெற்றிலைப் பாக்கும் தருவார்கள். மரியாதைக்கு ஒரு மஞ்சள் பூசிய தேங்காயைத் தாம்பாளத்தில் வைத்திருப்பார்கள். தாம்பூலத்தைப் பஞ்சாதி சொல்லிக் கொடுப்பார்கள், கொடுக்கும் போது மஞ்சள் தேங்காயைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வார்கள். தேங்காயை எடுத்துக் கொள்ளும் வழக்கம் இல்லை. உபநயனத்தில் தான் ஒவ்வொருவருக்கும் தேங்காய் வழங்குவது பொரும்பான்மையான வழக்கம். சிறு பையன்கள் கொட்டைப் பாக்குகளை ஒருவரும் அறியாமல் திருடிக் கொண்டுபோய் மாம்பழக்காரியிடப் கொடுத்து மாம்பழம் வாங்கித் தின்பார்கள். இந்தக்கொட்டைப் பாக்கு வியாபாரத்தை எதிர் பார்த்தே சில மாம்பழக்கூடைக்காரி

கள் கல்யாண வீட்டுக்கு அருகில் வந்து காத்திருப்பார்கள்'' (ப. 126) போன்றவற்றால் சமுதாயக்கல்விக்கும் வாழ்க்கை வரலாறுகள் பேரிடம் அளிக்கின்றன என்பது புலப்படும்.

''இந்தக் கதர் மாப்பிள்ளை ஒரு வருஷம் ஜெயில்லே இருந்திருக்கான், தெரியுமோ; ஓய்!—அதுவும் எப்படி, கை விலங்கு கால் விலங்கு மாட்டி வச்சிருந்தாளாம்—இப்படிக் காந்திக்காக ஜெயிலுக்குப் போனதை ரொம்பப் பெருமையாகச் சொல்லிக்கிறாளேங்கணும்—என்னங்கணும் பெருமை வேண்டி இருக்கு! கண்டவன் சமைச்ச களியைத்தின்னுண்டு, கல்லைஉடைச்சிண்டு!—ஜெயில் தீட்டையும் பாபத்தையும் போக்கிக்கறதுக்காக ராமேசுவரம் போய் பிராயச்சித்தம் செஞ்சிண்டாச்சாம்—இதிலே எல்லாம் மட்டும் நம்பிக்கை இருக்காக்கும் இவனுக்கு!—இருக்கோ இல்லையே, தாயாரைத் திருப்திப் படுத்துறத்துக்காகச் செஞ்சுண்டானாம்'' எனும் உரையாடலில் சுந்தா (ப. 158) அக்காலத்திய நம்பிக்கையைச் சுட்டுகிறார்.

''1931 ஆம் ஆண்டு ராஜாஜி த. நா. காங்கிரஸ் தலைவராகவும் சத்தியமூர்த்தி துணைத் தலைவராகவும் இருந்தனர். ஸ்தல ஸ்தாபனங்களை எல்லாம் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும் என்பது சத்திய மூர்த்தியின் ஆசை. ராஜாஜி தலைமை தாங்கி நடத்திய த. நா. கா. கமிட்டிக் கூட்டத்தில் சத்திய மூர்த்தி தமது ஆசையைத் தீர்மானமாக்கி முன் மொழிந்தார். ராஜாஜி அதனை எதிர்த்தார். ஆனால் சத்தியமூர்த்தியின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு வெற்றி பெற்றது'' (பத்திரிகையாளர் நெஞ்சில் காமராஜ், ப. 75) என்பது அரசியல் அறிவளிப்பதற்குச் சான்று.

5. வாழ்க்கை வரலாறுகள் எந்த நோக்கத்துடன் எழுகின்றதோ அந்த நோக்கம் நிறைவேறும் பொழுது எழுந்ததன் பயனும் கிடைக்கிறது. சமுதாயத்தில் உயரிடம், புகழ் பெற்ற ஒருவரைக் கற்பாருக்கு அறிமுகப் படுத்தல் என்பது பொது நோக்கம். நூல் வெளிவருதல் நோக்க நிறைவேற்றத்தை உணர்த்திப் பயனாய் அமைகின்றது. இது போலப் பிற நோக்கங்களையும் நவிலலாம். இங்கு வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் மட்டுமின்றி அவருடன் தொடர்புடைய பிறர் பற்றியும் பல செய்திகள் கிடைக்கின்றன. இப்பிறர் பெரும் பாலும் சமுதாயத்தினரால் நன்கு அறியப்பட்ட ஒருவராக இருத்தலும் உண்டு. இதனால் இரட்டைப் பயன்கிடைக்கிறது. பொன்னியின் புதல்வரில் ராஜாஜி, டி. கே. சி, திரு. வி. க போன்றோர் பற்றி அறியப்படுகிறது. அரசியற்றலைவராயின் உடன் காலத்திய பிறஅரசியற்றலைவரைப் பற்றியும் அறியலாம்.

''நான் சிறையில் இருந்தபோதுதான் ராஜாஜியின் மூத்த மருமகன் (மாப்பிள்ளை) ரங்கூனில் இறந்து விட்டார். அதற்கு அவரைப் பெரோலில் விடுவதாக ஜெயில் அதிகாரிகள் சொல்லியும் அவர் ரங்கூன் போக மறுத்து விட்டார். ராஜாஜியின் மாப்பிள்ளை போய்விட்டதற்கு நாங்கள் யாவரும் மிக வருத்தப் பட்டோம்'' என்று எஸ். அம்புஜம்மாள் தம் வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். இங்கு ராஜாஜியின் நன்னலம் மறந்த நாட்டுப் பற்றும் வெளிப்படக் காண்கிறோம்.

இங்கு மற்றொன்றையும் சுட்டலாம். வரலாற்றுத் தலைவரைப் பற்றி நாம் அறிந்திராத பல புதிய செய்திகளின் இருப்பிடமாகவும் வாழ்க்கை வரலாறுகள் அமைகின்றன. கல்கி மிகப் பெரிய எழுத்தாளர் என்பதே பொதுவாக அவரைப் பற்றிய அறிமுகமாகும். அவர் ஓர் கவிஞரும்கூட, ஒரு சில திரைப்பாடல்களும் யாத்திருக்கிறார் என்பது அவரது வரலாறு காட்டும் உண்மை.

6. ஆய்வறிஞருக்கும் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் நல் விருந்து. இலக்கியத் துறையாயின் வரலாற்றுத் தலைவரின் படைப்புகள் பற்றிப் பல செய்திகள் அறிந்து கொள்ளலாம். இலக்கியத் திறனாய்விற்கு அவை மிகுந்த துணை புரிகின்றன. தம் படைப்பில் ஆசிரியர் எந்த அளவிற்குத் தன்னை உட்படுத்தியுள்ளார் என்பதனை அறுதியிடுதற்கு உறுதுணையாம். இது மட்டுமின்றி இலக்கியத் துறை தொடர்பான ஏனைய பிற செய்திகளை அறிதற்கும் வாய்ப்புண்டு. ''புதுமைப்பித்தன் கற்பித்த சுந்தரம் பிள்ளை எப்படி வெற்றிலை போட்டுக்கொண்டாரோ, அதுபோலவேதான் இந்த இலக்கிய பிரம்மா பிரம்ம பத்திரத்தோடு கலந்த தாம்பூல சுகத்தை ஒரு நாளுக்கு இருபது தடவையாவது அனுபவித்து வந்தார்'' (ப. 123); ''வட்டத் தொட்டி என்பது, திருநெல்வேலி வண்ணார்ப் பேட்டையில் டி. கே. சிதம்பரநாத முதலியார் வசித்த சொந்த வீட்டின் விசாலமான கூடத்தில் அமைந்த வட்டவடிவ முற்றம். அந்த முற்றத்தில் வட்டமாய்ப் போட்டுள்ள பிரம்பு நாற்காலிகளில் டி. கே. சியும் அவருடைய இலக்கிய நண்பர்களும் சீடர்களும் அமர்ந்து உரையாடுவார்கள். வட்டத் தொட்டி என்பது நாளா வட்டத்தில், அந்த இடத்துக்கு மட்டுமின்றி, அதில் அளவளாவிய அன்பர்களின் சங்கத்தையும் வளைத்து வழங்கலாயிற்று. 1935 இலிருந்து சுமார் ஐந்தாண்டு காலம் அந்தச் சங்கம் இயங்கி, தமிழ் இலக்கியம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும், நம் வரலாற்று நாயகரின் வாழ்க்கையிலும் வெவ்வேறு வகையில் பங்கு கொண்டது. அந்த வட்டத்

தொட்டிக்கு அவ்வப்போது வந்து போனவர்களிலும் அதன் நிலையான உறுப்பினர்களிலும், கல்கியுடன் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களும் உண்டு; அதன் மூலமாகவே அவருடன் தொடர்பு கொண்டவர்களும் உண்டு...'' (பக். 315-316) என்பன போன்ற குறிப்புகள் இவற்றைக் காட்டும். வரலாற்றுத் தலைவரின் படைப்புகள் தனியே விளக்கம் பெறலும் உண்டு. (கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும், தே. ப. பெருமாள்).

அரசியல் வானில் சுடர்விட்ட அரசியல்வாதிகள் பெரும்பாலோர்க்கும் வாழ்க்கை வரலாறுகள் எழுந்துள்ளன. இவற்றில் தன் வரலாறுகளும் உண்டு. வரலாற்றில் ஐயத்திற்கு இடமளிக்கும் அல்லது குழப்பம் தரும் செய்திகளில் தெளிவு பெறற்கும், உண்மை விளங்குதற்கும் இவர்கள் வரலாறுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. படைப்பாளர் நோக்கில் அமைந்துள்ள கணிப்புகளும் இதற்கு உதவுகின்றன. எனவே வரலாற்றாசிரியர் நாட்டு வரலாறு படைக்கும்பொழுது அரசியல் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் மூலப்பொருட்களுள் ஒன்றாக விளங்கும் பெருமையுடையன.

மானிடவியல் அறிஞருக்கும் குறிப்பிட்ட இன மக்களின் பழக்கம், பண்பாடு, நம்பிக்கை போன்ற செய்திகளைப் பெறுதற்கு வாழ்க்கை வரலாறுகள் துணை நிற்பது முன்பே சுட்டப்பட்டுள்ளது. இதுபோன்றே சமய வரலாறு படைக்கும்பொழுது, சமயக் கொள்கைகளில் விளக்கம் பெறுதற்கும் சமயத்தலைவரின் வாழ்க்கை வரலாறுகள் துணை நிற்கின்றன.

7. மேற்சுட்டப்பட்டுள்ள பயன்களைத் தன் வரலாறுகளில் பெறலாமெனினும் கூடுதலொன்றும் உண்டு. வரலாற்றாசிரியரின் வாய்மொழியாகவே ஒன்றைப் பற்றிய அவரது எண்ணத்தை ஐயத்திற்கிடமின்றி அறிய முடிகிறது. அவர் தம் வாழ்க்கை நிகழ்வுகளில் கற்பனை கலப்பிற்கு இடமில்லை. இருப்பினும் பிறர் எழுதுவதினின்றும் மிகக் குறைவாகவே இருக்கும். ஒருவர் வரலாற்றைப் பிறர் எழுதுவதினும் அவரே எழுதும்பொழுது அவர் பற்றாளருக்குக் கூடுதல் இன்பம் கிடைப்பது உண்மை. மற்றும் ஒருவர் வரலாற்றைத் தாமே எழுதும்பொழுது பிறர் எழுதுவதைவிடச் சுவையாக அமைதலும் உண்டு. சான்றாக உ. வே. சாமிநாதையரின் வரலாற்றை அறிய விழைவர் அவரது என் சரித்திரத்தில் பெறும் சுவையை அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய பிறரின் நூல்களில் பெற இயலவில்லை. ம. பொ. சியின் 'எனது போராட்டமும்'; கவிஞர் கண்ணதாசனின் தன் வரலாறும் இச்சிறப்புடையனவே.

வரலாற்றுத் தலைவரின் தவறுகளை, குறைகளைச் சுட்டி வரலாறு படைக்கப் பிறர் அதற்குத் தயங்கி அவற்றை ஒதுக்கி விடுதல் பொதுவாகக் காணப்படுகிறது. ஆனால் தம் வரலாறு படைப்போர் பெரும்பாலும் அவற்றைச் சுட்டிச் செல்லத் தயங்குவதில்லை. கண்ணதாசனின் வனவாசம் போன்றன எடுத்துக்காட்டுகளாகும்.

8. பலரது எண்ணங்களின் தொகுப்பாக அமையும் நூல்களும் இவண் எண்ணத்தக்கன. பல கோணங்களினின்றும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரை அறிதற்கும் பல புதிய புதிய செய்திகளைப் பெறுதற்கும் இவை துணை நிற்கின்றன.

9. இலக்கியம் எனும் நிலையில் வாழ்க்கை வரலாறுகள் இலக்கிய இன்பம் அளித்தலையும் பயனாகச் சுட்டலாம். இலக்கியப் படைப்பாளர்களால் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் படைக்கப்படும்பொழுது பிறவற்றினின்றும் கூடுதல் இலக்கிய இன்பம் கிடைத்தல் குறிப்பிடத்தக்கது. அவ்வரலாற்றினை அதற்காகவே மீண்டும் மீண்டும் கற்கத் தூண்டுகின்றன.

அவன்
வறுமை ராச்சியத்தின்
ஆஸ்தானக் கவிஞன்
அடுப்பில்தான் நெருப்பில்லை
நெஞ்சில் மட்டும் எரிமலை
பாதுகை இல்லாத பாதம்தான்;
ராஜநடை மறக்கவில்லை
மாலை சுமக்கவும்
தாளாத தோளுக்கு
மலையைச் சுமக்கும்
திண்மை இருந்தது.
புதுச்சேரி-அவனைப்
பூவால் மூடிப்
பொத்தி வைத்தது.
அந்தச் சூரியன்
நடந்து போனால்
தெருவின் இருமருங்கும்
கைத்தாமரைகள் குவியும்.
நலம் விசாரித்து
நகர்வான்.
பட்டாளப் பார்வை பார்த்து
முன் மார்பு பிதுக்கி
காற்றைக் கிழித்துக்

கைகள் விசிறி
தாளம் தப்பாமல்
பாதம் பெயர்த்து
அவன் நடந்து போகும்
அழகின் மிடுக்கு
அவன் கட்டியங் கூறும் (பக். 202-203)

எனும் வைரமுத்துவின் வைரவரிகள் பாரதியின் கதைக்காக இன்றிக் கவிதை நயத்திற்காக, அது தரும் இன்பத்திற்காக பன் முறை அவ்வரலாற்றைப் படிக்கத் தூண்டுகின்றன. ''அது ஒரு தனி உலகம்! எல்லாவகையான மனிதர்களிலேயும் குற்ற வாளிகள் இருப்பார்கள் என்பதற்கு அந்த இடம் ஓர் உதாரணம். குடும்பக்கவலை இல்லாதவனுக்கும் உணவைப் பெரிதாகக் கருதா தவனுக்கும் சிறைச் சாலையை விட இனிமையான சொர்க்கம் கிடையாது. வெளி உலகத்தின் பரபரப்பு அங்கே இல்லை. அமைதியான சிந்தனைகள் அங்கே பூத்துக் குலுங்குகின்றன. தினமும் அவன் ஒவ்வொரு குற்றவாளியாகக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு அவர்களுடைய கதையை விசாரிப்பான். பயங்கரம், மர்மம், பரிதாபம் அனைத்தும் அந்தக் கதை களில் வரும்'' என்று கவிஞர் கண்ணதாசன் தனக்கு இனிய எளிய உரைநடையும் (ப. 195) கைவரும் என்று உணர்த்து கிறார்.

''இதற்குள் அருமை மகளுக்கு நேர்ந்துள்ள அவலம் பற்றிய விவரம் பெற்ற தாய்க்கு எட்டிவிட்டது. பத்துமாதம் சுமந்து பெற்ற குழந்தைக்கு நேர்ந்துள்ள கதியை அறிந்தபோது வயிறு குமைந்தது. கோவென்று கதறி அழுதாள். ''என் மகளைக் காப்பாற்று வாரில்லையா? என்று விம்மி வெடித்தாள். கருணை காட்ட மாட்டாயா? என்று அமீர்கானிடம் கல்லும் கரையும் வண்ணம் மன்றாடி அழுதாள். கல்லானால் உருகி இருக்கும். ஆனால் அந்தக் கயவன் அமீர்கான் உள்ளமே இல்லாத வனல்லவா? தாடியைத் தடவியபடியே ஏளனமாக நகைத்தான். வேண்டுமானால், வாளினால் இல்லாமல் விஷத்தினால் மரணம் ஏற்படட்டும், என்றான் எகத்தாளமாக'' (மானங்காத்த மங்கை யர். ப. 152); 'களிம்பு தோய் செம்பனைய' இயல்புகளையும், பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணி கொள்ள அறிந்திருந்தார் ஆத்மிக ரஸவாதியான சுவாமிஜி அவரிடம் வந்தபின் மாசுநீங்கப் பெறாதர் யார்உண்டு' (ப. 696) சுவாமிவிவேகானந்தர். என்பன போன்ற இனிய நடைகள் இலக்கிய நயத்தை, இன்பத்தை அளிக் கின்றன.

எனவே வரலாற்றுச் சிறப்புடையோராயின் வரலாற்றுத் தெளிவு, பிறதுறைப் பெரியோராயின் அவர் துறை பற்றிய அறிவு, சாதாரண மானிடர் மீது எழுந்ததாயினும் 'மானிடவியல் ஆய்விற்கு, இவற்றை யெல்லாம் உள்ளடக்கிய நிலையில் இலக்கிய இன்பம் எனப் பன் முகப் பயனுடையதாக வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் அமைந்து தனிச்சிறப்புறுகின்றன. பண்டிதர் இலக்கியமாக மட்டுமின்றிப் பொதுமக்கள் இலக்கியமாகவும் மிளிர்ந்து கூடுதல் பெருமை கொள்கின்றன. அவரவர் தம் கொள்கைகளை விளக்க, பரந்த இலக்கிய உலகில் ஒருவலுவான கருவியாகவும் அமைந்து தன்னுடைய பயன் பாட்டை இயன்ற வழியெல்லாம் இனிதே நிறைவேற்றி வலியுறுத்துகின்றன.

வளர்ச்சி

ஒன்றில் காணப்படும் முன்னேற்றம் வளர்ச்சி என வழங்கப்படுகிறது. தமிழில் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் தோற்றமே பல வளர்ச்சித் தன்மை காட்டுவதை முன்னர் கண்டோம். இந்நிலை இன்றும் பலவாறாகத் தொடர்ந்து வருகிறது. எவ்வகையில் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் தமிழில் தன் வளர்ச்சியைக் காட்டுகிறது என்பதனை இங்குக் காணலாம்.

1. வாழ்க்கை வரலாற்றிலக்கியம் முழுமை பெறத் தொடங்கிய காலத்தில் புலவர் வரலாறுகளே மிகுதியாக எழுந்தன. அந்நூல்களில் உண்மை நிகழ்வுகளுடன் வழக்குக் கதைகளும் இரண்டறக் கலந்த நிலை காணப்பட்டது. தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணத்தைச் சான்றாக்கலாம். இதற்குரிய காரணத்தை உ. வே. சா. விளக்கியுள்ளார்.[1] இன்று வழக்குக் கதைகளுக்கு முதலிடம் தராமல் உண்மை நிகழ்வுகளை மட்டுமே ஆராய்ந்து அவற்றைத் தரல் சிறப்புப் பெறுகிறது.

2. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் தொடர்புடைய ஊர்களுக்கு அவர்கள் சென்ற வரிசையிலேயே சென்று தம் முடைய பயண நிகழ்வுகளும் குறிப்புகளும் தொடர்ந்து வருவதுடன், நாயகரின் வரலாற்றினையும் இணைத்துத் தரும் கௌதம புத்தர் அடிச்சுவட்டில் (சோ. சிவபாதசுந்தரம்) போன்ற

1. ''பண்டைக்காலத்தில் முறையாகப் பாடஞ் சொல்லி வந்த வித்துவான்கள், நூலாசிரியருடைய வரலாற்றை மாணாக்கர்களுக்கு முதலிற் சொல்லிவிட்டு அப்பால் நூலை அறிவுறுத்தி வந்தனர். அதனாலே தான் புலவர்களுடைய சரித்திரத்தை எழுதி வைக்கும் வழக்கம் இலதாயிற்றென்று தோன்றுகின்றது. இங்ஙனம் அவ்வரலாறுகள் வழிவழியே வழங்கி வந்தன. முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலும் தவறிய பிற்காலத்தில் ஆசிரியர் வரலாறுகள் பலபடியாக வழங்கத் தலைப்பட்டன.

நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும். இதனால் கற்பார் இரு நிலைகளில் பயன்பெறுகின்றனர். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வரலாறு காணல், வரலாற் றாசிரியரின் பயண அனுபவங்களைப் பெறல் என்பன அவை. இவை மிக்கச் சுவை பொருந்தியமைகின்றன என்பதும் சுட்டத் தக்கது.

3. ஒருவர் பற்றிப் பலர் தம்முடைய அனுபவங்களைத் தொகுத்துத் தரும் நிலையும் நாகைதருமன் படைத்த அண்ணா வின் கடைசி நாட்கள் போன்ற நூல்களில் காணப்படுகிறது. இதனால் பலருடைய கண்ணோட்டத்தில் வாழ்க்கைவரலாற்றுத் தலைவரின் பண்புகளை அறிய முடிகிறது. இத்தகைய தொகுப்பு நூல்கள் ஒருவர் பற்றிய புகழாரமாகவே அமைகின்றன என்ப தும் உணரத்தக்கது. தலைவர் பற்றித் தன்னுடன் ஒன்றிய நினைவுகள் அல்லது நிகழ்ச்சிக் குறிப்புகள் இவற்றில் இடம்பெறு கின்றன.

4. பரணீதரன் தாம் கஸ்தூரி திலகம் படைத்தது பற்றி நவிலும் பொழுது 'இதில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் உண்மை யாக நடந்தவையே யாயினும் சிற்சில இடங்களில் தேவையான அளவிற்குக் கற்பனையையும் புகுத்தியிருக்கின்றேன். சில இடங் களின் உண்மை நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு கற்பனை உரையாடல்களைச் சேர்த்திருக்கின்றேன். ஆனால் பாத்திரங் களின் தன்மைக்கும் குணம் பண்புக்கும் மாசு ஏற்படாத வகை யில் அவற்றைக் கையாண்டிருக்கிறேனா, இல்லையா என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்;' என்று கூறுகிறார். பாத்திரத்தின் உண்மையியல்புக்கு முரணாத வகையில் கற் பனைக்கு இடந்தருதலை ஒரு வளர்ச்சி நிலையாகக் கொள்ள லாம் எனினும் இந்நிலையில் அதிக அளவில் கற்பனையைப் புகுத்திப் பாத்திரத்தின் உண்மை நிலையை மறைத்தற்கு வாய்ப்பிருத்தலின் இதன் தேவை ஆய்விற்குரியது. இலக்கியச் சுவையை மிகுவிக்கவே இந்நிலை அமைகிறது.

5. பிரபந்தங்களின் வடிவிலும் வாழ்க்கை வரலாற்றை அமைத்தல் ஒரு வளர்ச்சி நிலை. த. அமிர்தலிங்கத்தின், தலைவர் ம. பொ. சி. ஆற்றுப்படை போன்றன இதனை உணர்த்து கின்றன. பாரதி நூற்றாண்டுச் சொற்பொழிவுக் கூட்டத்தில் ம. பொ. சி. உரை கேட்க வந்த தம்பிக்கு அருகிலிருந்த ஒருவர் ம. பொ. சியின் வரலாறு கூறி, அவரை 'ஐயன்' ஆள்வினை ஆற்ற தம்பி அழைத்திருக்கின்றார், அண்ணல்தாள் இணை சேரு வாயே' என்று ஆற்றுப் படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி வரவேற்கத் தக்கதாகும்.

6. தம் அவல நிலையால் அனுதாபத்திற்குரியோராக விளங்கும் பலர் பற்றிய வரலாறுகள் 'உண்மைக் கதைகள்' எனும் பெயரில் மிகுதியாக எழுகின்றன.'[2] இவற்றில் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் மற்றும் தொடர்புடையோரின் இயற்பெயரும், ஊர்ப்பெயரும் மாற்றம் பெற்றுக் கற்பனைப் பெயர் பெறுகின்றன. அவல நிலைக்கு ஆளாகிய சூழல், நிகழ்ச்சிகள், அனுபவித்த இன்னல்கள், தற்பொழுதைய நிலை போன்றன இதனுள் இடம்பெறுகின்றன. இகழ்க்குரியோரைக் கண்டால் ஒதுங்கி நிற்பதுடன் அவர்களுடைய செயலால் அல்லது நிலையால் அருவருப்புக் கொள்ளுதலும் மனித இயல்பாதலின் அவர்களின் உண்மைப் பெயர்கள் மறைக்கப்படுகின்றன. தம்மைப்பற்றிய இழிந்த நிலை உலகிற்கு நேரிடையாக வருதலை விரும்பாததும் இம்மறைமுக அமைப்பிற்குக் காரணமாகலாம். எனினும் இவையும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் ஓர் வளர்ச்சி நிலை எனக் கொள்வதில் தவறில்லை.

7. மா. சேசையாவின் 'இயேசுவின் சீடர்கள்' என்ற நூல் அச்சீடர்களின் வரலாற்றை, புதுமையான வழியில் தருகிறது. ஆசிரியர் அவர்களுடனே கற்பனையில் ஒரு பேட்டி நிகழ்த்துவதாக அமைத்து அதன் வழி அவர்கள் வரலாற்றைத் தருகிறார். வாழ்க்கை வரலாற்றை இலக்கிய நயம் படத்தருதற்கு, அவற்றில் சுவையை மிகுவிப்பதற்கு இது போன்ற அமைப்புகள் பெரிதும் துணை நிற்கின்றன.

8. ஒன்றுக்கு மேற்பட்டோரின் வாழ்க்கை வரலாறுகளை ஒப்பிட்டு வெளிப்படுத்தும் போக்கும் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவது மற்றொரு வளர்ச்சியாம். வெ. சாமி நாதசர்மாவின் 'காந்தியும் விவேகானந்தரும் ஒரு பரிசீலனை' நூலைச் சான்றாக்கலாம். கி. ஆ. பெ. விசுவநாதம் தம் 'எனது நண்பர்கள்' நூலில் இவ்வொப்பாய்வை மூவர், நால்வருக்கு நடத்துவதும் குறிப்பிடற்பாலது. ''பாரதியாரின் பேச்சில் உணர்ச்சி கலந்திருக்கும், அடிகளின் பேச்சில் ஆராய்ச்சி கலந்திருக்கும், திரு. வி. க. வின் பேச்சில் தீஞ்சுவை கலந்திருக்கும்'' என்பது போன்று பெயர், குறிப்பு, பிறந்த ஊர், வாழ்ந்த ஊர், புலமை, வாழ்க்கை............எனச் சிறு சிறு தலைப்புகளிட்டு விளக்கிச் செல்கிறார்.

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தில், மாத, வார, நாளிதழ்களின் பணி குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புடைத்து. அன்று

---

2. சிவசங்கரி; உண்மைக்கதைகள்; திருமகள் நிலையம். சென்னை; இ. ப. மே. 1981.

முதல் இன்று வரை அவை பல இனிய வாழ்க்கை வரலாறுகளை உலகிற்கு அளித்துள்ளன. உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரம் உட்பட அவரின் பிறவாழ்க்கை வரலாற்று நூல்கள் பல முதலில் கலைமகள், ஆனந்தவிகடன் முதலான இதழ்களில்வெளி வந்த பின்பே நூலாக்கம் கொண்டன.[3] இன்றும் இந்நிலை தொடர்வதைச் சுந்தாவின் பொன்னியின் புதல்வர்[4] போன்றவற்றால் அறியலாம். பல இனிய வாழ்க்கை வரலாறுகள் இவற்றின் மூலமே இலக்கிய உலகில் புகுந்துள்ளன.

நாட்டைத் தம் செயலால் பெருமைப்படுத்திய நல்லோர் தம் வாழ்வினை முறையாக வெளியிடுவதில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பழனியப்பா பிரதர்ஸ், வானதிப் பதிப்பகம் போன்ற பதிப்பகங்களும், சாகித்திய அக்காதெமி, தேசீயப் புத்தக நிறுவனம் முதலிய நிறுவனங்களும் ஆற்றும் பணி பாராட்டற்குரியது. இந்நிறுவனங்களின் வழிப் பல சிறந்த வாழ்க்கை வரலாறுகள் மொழி பெயர்ப்புகளாகக் கிடைத்துள்ளன.

---

3. மகாவைத்தியநாதையர் வரலாறு முதலியன கலைமகள் இதழில் வெளிவந்தன, என் சரித்திரம் விகடனில் 1940 முதல் 42 வரை தொடர்ந்து வெளிவந்தது.
4. 1974 முதல் 1978 வரை தொடராகக் கல்கியில் இடம் பெற்றது.

வாழ்க்கை வரலாற்றிலக்கியக் கொள்கை

இலக்கியப் படைப்பினை நெறிப்படுத்துவதாக அமைவன, அவை எவ்வாறு அமைய வேண்டும் என உணர்த்தும் சில எண்ணங்கள். (படைப்புகள் குறிப்பிட்ட இலக்கிய வகையின் கீழ் எவ்வாறு படைக்க வேண்டும் என்பதனை இலக்கண நூல்கள் வரையறுக்கின்றன. படைப்பாளரின் உள்ளம் தம் படைப்புகளில் எவ்வெவ் வகையில் ஆழ்ந்துள்ளது என்பதைக் குறிப்பதாக இலக்கியக் கொள்கைகள் நிற்கின்றன. ஒரு குறிப்பிட்ட வகையின் கீழ் எழும் படைப்புகள் ஒன்றுபடுதற்கு அடிப்படையாகச் சில தேவைப்படுகின்றன. அவற்றை அவ்வகையின் இலக்கியக் கொள்கைகளாகக் கொள்ளலாம். இலக்கணவாசிரியரின் எண்ணமும், படைப்பாசிரியரின் எண்ணமும் இணைந்து இலக்கியக் கொள்கைகள் உருவாகின்றன எனலாம். இதனடிப்படையில் இங்கு வாழ்க்கை வரலாற்றின் இலக்கியக் கொள்கை நோக்கப் பட்டுள்ளது.

1. வாழ்க்கை வரலாறு என்பது, 'ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தினையும் அவற்றின் சிறப்பு, உண்மை, நிகழ்ந்த காலம் முதலானவற்றிற்கு முதன்மையளித்து, வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பண்பு தெளிவாக அவற்றிடையே புலப் படும்படிக் கோவை செய்து இலக்கிய நயம்பட உரைத்தல்" என்பதாகும்.

2. பல்வகை நோக்குகளிருப்பினும் பிறருக்கு வழிகாட்டு தல் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவற்றை அறிவுறுத்தல் என்பவற்றையும் உள்ளடக்கி எழுதல் இலக்கியப் பயன் குறித்து வேண்டற்பாலதாகிறது. ''ஆன்மீகத் துறையைச் சேர்ந்த பெரியோர்களின் வரலாற்றைப் படிப்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. சுவாமி விவேகானந்தரின் வரலாறு, சிறுவர் களின் மனோநிலையை வளர்க்கப் பெரிதும் உதவும். விவேகானந் தரின் தீரம், உண்மைக்காகப் போராடும் தன்மை, கொள்கைக்

காகவே துணிந்து வாழும் திறன் போன்ற பண்புகள், இளைஞர் களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளன. மேலும் இளைஞரிடையே ஒரு கொள்கைக்காக வாழும் உறுதியையும் ஆன்மீக வாழ்வில் நாட்டத்தையும் ஏற்படுத்தும் சக்தியுடையது இவ் வரலாறு. முதியோர்களாயின் விவேகானந்தரின் தத்துவங்களால் கவரப்பட்டு உள்ளத்தூய்மையும், உயர்ந்த தத்துவ ஞானத்தையும் அடைய முடியும்'' என்பது[1] போன்ற கூற்றுகள் ஏதேனும் பயன்பாட்டு அடிப்படையில் வாழ்க்கை வரலாறுகள் தோன்ற வேண்டும் என்பதையும், எத்துறை சார்ந்ததாக அது அமையினும் பயன்தர முடியும் என்பதையும் உணர்த்துகின்றன.

3. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருக்கு நாடு, மொழி, இனம் போன்ற எந்த வேறுபாடும் இல்லை. எவரேனும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவராக இயலும்.

4. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் பழகியவராயினும் சரி, பழக்கம் அற்றவராயினும் சரி வாழ்க்கை வரலாறு படைக்கும்பொழுது தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்தல் கூடாது. தலைவரின் நல்ல இயல்புகளைப் பாராட்டி விட்டுக் குறைபாடுகளை ஒளித்தலும் ஆகாது. இதனை ஆய் வாளரும்[2] வலியுறுத்துவர்.

5. ஒருவரின் வாழ்க்கை வரலாறு படைக்கும்பொழுது அவர் வாழ்ந்த காலத்தின் நிலையையும் தெளிவாகக் காட்டல் சிறப் புடையது.

6. பிறப்பு முதல் இறப்புவரை அமையும் வரலாறுகள்தாம் முழுமையான வரலாறுகள் என்பதில்லை. இறப்பின்றியும் சிறந்த வரலாறுகள் படைக்க முடியும்.

7. நிகழ்ச்சிகளை ஆசிரியர் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்துதல் தேவை. முக்கிய நிகழ்வுகள் எதுவும்

---

1. டி. எம். பி. மஹாதேவன்; சுவாமி விவேகானந்தர் வரலாறு- அ. லெ. நடராஜன்.
2. இறுதியாக வாழ்க்கை வரலாறுகளிலுள்ள ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டுவோம். பெரும்பாலும் வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் ஒரே உயர்வு நவிற்சியாக-வெறும் பாராட்டாக அமைந்துள்ளன. எந்தப் பெரியவரைப் பற்றியும் கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு ஆகையால் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்கள், தாம் சிறப்பிக்க எடுத்துக் கொள்ளும் அறிஞரின் குறைபாடுகள் இரண்டொன்றைச் சுட்டிக் காட்டுவது நலம்.
   சோமலெ; வளருந்தமிழ்; ப. 306.

விடுபடாமலும், அதே வேளையில் தலைவரின் பண்பு அல்லது செயல் முதலானவற்றை நன்கு விளக்குவனவாகவும் அமைதல் தேவை.

8. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் படைப்புகளும் அவர்தம் வாழ்வில் சிறப்பிடம் பெறுவதால் அவற்றிற்கும் உரிய இடம் தேவை. ஒருவர் பற்றிய பலரின் கருத்துரைகள் மேலும் அவர் பற்றிய வாழ்வு விளக்கத்திற்குப் பயன்படுதலின் அவற்றையும் தருதலில் தவறில்லை.

9. உண்மைக் குறிப்புகளுக்கு மட்டுமே இடம் தரவேண்டும். கற்பனை கலப்பு கூடாது. ஒன்று பற்றிய பலவிதமான எண்ணங்கள் இருப்பினும் அவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மையானவற்றை அறிதல் ஆசிரியரின் கடமை.

10. வடிவ வரையறை இவ்விலக்கியத்தைக் கட்டுப்படுத்தாது.

11. தலைவர் எத்துறையைச் சார்ந்தவரோ, அத்துறையைச் சார்ந்தவரே தலைவரின் வரலாற்றை வரையும்பொழுது மேலும் சிறப்புடன் அஃது அமைய முடியும். சான்றாக உ. வே. சா. படைத்த புலவர்களின் வரலாறுகளும், ரா. கணபதி படைத்த ஆன்மீகப் பெரியோர்களின் வரலாறுகளும் அமைகின்றன.

12. வாழ்க்கை வரலாறு வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக மட்டுமே அமைந்து விடல் கூடாது. இலக்கியம் மற்றும் பிறமேற்கோள்கள், கதைகள் போன்ற குறிப்புகளும் தேவையான அளவு இணையப் பெற்று சுவைமிக்கதாக, கற்பாரைக் கவருவதாக அமைய வேண்டும். வாழ்வு நிகழ்வுகளை அவ்வாறே கால வரிசையில்தான் அமைத்தல் வேண்டும் என்பதில்லை. நூல் எழுந்த நோக்கம் நிறைவேறும் வகையில் முன்பின்னாக அமைந்தாலும் ஏற்புடை நிலையில் அமைத்தல் சிறப்பாகும்.

13. வாழ்க்கை வரலாற்றில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குக் காலக் குறிப்புகள் மிக இன்றியமையாதனவாகும்.

14. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டோரால், வரலாறு படைக்கப்படும்பொழுது, தன்னுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளுக்கே முதன்மையளித்து, அதனால் நூலின் தலைவர் யார் எனும் ஐயப்பாடு எழாவகையில் ஆசிரியர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு படைத்தல் வேண்டற்பாற்று.

வாழ்க்கை வரலாறு அமைய வேண்டிய முறை

முன் கூறியுள்ளவற்றை இணைத்து நோக்கும்பொழுது 'வாழ்க்கை வரலாறு' எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு விடைகிடைக்கிறது. ஆண்டு, நாள் போன்ற காலக் குறிப்புகளுக்குச் சிறப்பளித்தல்; மிகத் தெளிவாகத் தலைவரின் பண்புகளையும், செயல், படைப்பு முதலானவற்றையும் வெளியிடல், கற்பாருக்குச் சலிப்பு ஏற்படா வகையில் சுவை பொருந்த அமைத்தல், தன் விருப்பு வெறுப்பிற்கு இடமளிக்காது நடுநிலை நிற்றல்; வெறும் புகழுரையாக அமைக்காது உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தல் முதலிய கூறுகளடங்கும் வாழ்க்கை வரலாறுகள் மிகச் சிறந்தவையாகும். ''இந்த நூலில் என் மதிப்பிற்குரிய தலைவர்களை, கட்சிகளை, சித்தாந்தங்களைத் தேவைப்படுமிடத்து தயவு தாட்சண்யமின்றி விமர்சித்திருக்கிறேன். அவர்களுடைய, அவர்கள்பால் பற்றுகொண்டவர்களுடைய மனங்கள் புண்படக் கூடாது என்று எச்சரிக்கையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கையாண்டிருக்கிறேன்'' எனும் கூற்று[3] நூலின் இயல்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த சான்று ஆம்.

3. ம. பொ. சி; எனது போராட்டம்; முன்னுரை.

நிறைவுரை

'மனித சமுதாயத்திற்கு முதன்மையான ஆசிரியர்கள் பெரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரிதைகளே' என்பர் ஃபௌலர். இதன் உண்மை உணர்ந்த தமிழ் எழுத்தாளர்களும் 'வாழ்க்கை வரலாறு'களைப் படைத்தற்கு மிகுந்த விருப்பு காட்டியுள்ளனர். கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில், வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பல படி நிலைகளைக் கண்டு வெகுவாக முன்னேறியுள்ளது. இன்னும் பல வளர்ச்சிகளைக் காண்பதற்குரிய வாய்ப்பினையும் இவற்றுள் காண முடிகிறது. உரை நடையிலக்கிய வகைகளுள் புதினம், சிறுகதை போன்று பொதுமக்களின் செல்வாக்கினை வாழ்க்கை வரலாறுகளும் கொண்டுள்ளமை குறிப்பிடற்பாலது. பொது அறிவுக்களஞ்சியமாகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமையும் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து தம் வாழ்வில் உயர்ந்தவர் பலர் என்பதனைத் திட்ட வட்டமாக வரையறுத்துக் கூற இயலாவிடினும், வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதில் சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லாப் பருவத்தினரும் விழைகின்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பொது மக்கள் தொடர்புக் கருவியாக விளங்கும் இதழ்களில் இது இடம் பெறுவதே தக்க சான்றாம்.

இதுவரை, தமிழில் 1790 பிறர் வரலாறுகளும் 44 தன் வரலாறுகளும் எழுந்துள்ளன. இவை தவிர மொழி பெயர்ப்புகளாக முறையே 262, 35 நூல்கள் மலர்ந்துள்ளன. ஆக 2131 வாழ்க்கை வரலாறுகள் தமிழிலக்கியப் பரப்பிற்கு வளஞ் சேர்த்துள்ளன. இவ்வெண்ணிக்கை முடிந்த முடிபல்ல. ஆய்வாளருக்குக் கிடைத்தவற்றின் அடிப்படையில் அமைந்ததே. இத்தகு நூற்றொகுப்புகளில் சிலவிடுபடற்கு வாய்ப்புள்ளமையாலும், புதிதாகப் பல நூல்கள் எழுகின்றமையாலும் இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்பது உண்மை. புதிதாகக் கிடைப்பனவற்றால் இங்குக் கூறியுள்ள சில கருத்துகள் மாறுபடுவதற்கும் வாய்ப்

புண்டு. தொகுத்தவற்றுள் கண்ட செய்திகளைக் கொண்டே இந்நூற் கருத்துகள் அமைந்துள்ளன.

தமிழில் தன் வரலாறுகள் மிகக் குறைவாக உள்ளமை எண்ணற்பாலது. சங்ககாலம் தொட்டுப் பார்ப்போமானால் தமிழ்ச் சான்றோர் பலரின் பாடல்கள் மட்டுமே உள்ளன. அவர் தம் பெயர்கள் தானும் அறியப்படவில்லை. செம்புலப் பெயல் நீரார், தேய்புரிப்பழங்கயிற்றனார் என்று அவர் தம் பாடலின் சிறப்புத் தொடர்களையே அவரின் பெயராகத் தொகுத்தோர் அமைத்தனர். பெயரைக் கூடக் குறிக்க விழையாதார் வழி வந்தவரிடம் வாழ்க்கை வரலாறு படைக்கும் எண்ணம் எழாதிருந்ததில் வியப்பொன்றுமில்லை. இவ்வவையடக்கம் பின்னாளில் புலவர் மற்றும் பெரியோரின் வரலாற்றுக்குப் பதில் புராணங்கள் எழுவதற்கு வழி வகுத்தது. வரலாற்றுப் புகழுடையோரின் வரலாற்றின் தேவை கல்வி வளர்ச்சியின் பயனாக உணரப்பட்டு இன்று அதில் ஈடுபாடு கொண்டுள்ளனர். எனவே அண்மைக்காலத்தில் தம் விருப்பாலும், பிறரின் தூண்டுதல் மற்றும் வேண்டுதலாலும் தன் வரலாறுகள் வந்து கொண்டிருக்கின்றன.

இங்கு மற்றொன்றும் சுட்டற்பாலது. பலர் தமது வரலாறுகளை, இதழ்களில் தொடர்ந்து எழுதுகின்றனர். ஆனால் அவையனைத்தும் நூலாக்கம் கொள்வதில்லை. காற்றோடு மறையும் சொற்பொழிவுகளின் நிலைதான் இவற்றிற்கும் ஏற்படுவதால் அவை உடனுக்குடன் நூலுருவம் பெற்றால் தன் வரலாறுகளின் எண்ணிக்கை பெருகும்.

தமிழில் இதுவரை எழுந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் மீது பொதுவானதொரு கண்ணோட்டம் விடும் பொழுது அவற்றின் புற நிலை, அக நிலைகளில் சில எண்ணங்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

புறநிலை

1. இலக்கிய உலகில் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் தொடர்ந்து வளர்ச்சிவேகம் காட்டுகிறது. ஆண்டுதோறும் அதன் எண்ணிக்கை அதிகரித்து வருதல் இதனை உணர்த்துகிறது.

2. வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகளுள் அறிமுக வரலாறுகளும் மிகுதியாக வந்துள்ளன. ஒப்பியல் வரலாறுகள் மிகக் குறைவே. வரலாற்றுப் புனைவுகளை படைப்பதிலும் படைப்பாளர் குறிப்பிட்டளவு விழைவு காட்டுகின்றனர். தொடக்க காலத்தில் முழுநிலை வரலாறுகள் சில காணப்பட்ட பொழுதிலும் மிகுதியாக எழுந்தவை அறிமுக வரலாறுகளே. இன்று

அனைத்து வகைகளுமே வந்து கொண்டிருந்தாலும், துணுக்கு களும், முழுநிலை வரலாறுகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

3. வரலாற்றுத் தலைவரின் நூற்றாண்டுவிழா அல்லது பிறந்தநாள் விழா காணும்பொழுது அவரின் வரலாற்றினைப் படைத்தல்; சமுதாயத்தில் சிறப்பான வாழ்க்கை நடத்தியோர் மறைவின்போது இரங்கற்பாவுடன் அவரது வரலாற்றினையும் தருதல்; பொதுமக்களின் சிந்தை கவரும் ஏதேனும் ஒரு துறை யிலிருந்து புகழின் உச்சத்திற்கு வருவோர் வரலாறு காணல் என வாழ்க்கை வரலாறுகள் எழும் சூழல்கள் அமைகின்றன.

4. இன்று தம் வரலாறுகளைப் பலர் பல்வேறு இதழ்கள் வழிப் படைத்துக் கொண்டிருக்கின்றனர். பொது மக்களிடையே செல்வாக்கு பெற்றவர்களின் வரலாறுகளை அவர் வாய்மொழி வழியாகவே அறிவதில் அவர்கள் காட்டும் விழைவு காரண மாக இன்று இவை எழுகின்றன. சான்றாக ஆனந்த விகடனில் புகழ் பெற்ற நாடகாசிரியரான 'மெரீனா' எழுதிக் கொண்டு வரும் 'சின்னஞ்சிறு வயதினிலே' தொடரைக் குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் சிறப்பிடம் பெறும் நினைவுக்குறிப்புகளை (Memoirs) ஒத்தும் சில இடம் பெறுவது அத்துறையிலும் தமிழர் வெற்றிபல படைக்க விருப்பதை இனஞ்சுட்டுவதாக அமைகிறது. சாவியின் 'பழங்கணக்கு' இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

5. இவை மட்டுமின்றிப் பிறரின் வாழ்க்கைக் குறிப்புகளும் குறிப்பிடத்தக்களவு இன்று இதழ்களை அணி செய்கின்றன. வாழ்க்கைத் துணுக்குகளுக்கும், குறிப்புகளுக்கும் பெரிதும் இட மளிக்கின்றன.

6. நாளைய சமுதாயச் சிற்பிகளாக இன்று விளங்கும் இளைய சமுதாயத்தை நேர்வழியில், முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் கரணிகளுள் வாழ்க்கை வரலாற்றிலக்கியமும் சிறப்பிடம் பெறுதலை இளைஞர்க்காகவும் சிறார்க்காகவும் எழுவன காட்டுகின்றன. பாடநூலாகவே இவ்வகையில் பல நூல்கள் எழுந்துள்ளமை சுட்டற்பாலது.

7. காப்பியம், நாடகம், பிள்ளைத்தமிழ் போன்ற பல்வேறு வடிவங்களிலும் வாழ்க்கை வரலாறுகளை, அவற்றின் உண்மைத் தன்மை சிதையாது சிறப்புடன் படைக்க வியலும் என்பதையும் படைப்பாளர் நிறுவியுள்ளனர். பிற உரை நடையிலக்கியங்களை விட வாழ்க்கை வரலாற்றிலக்கியம் இவ்வடிவங்களை மிகுதியாகப் பயன்கொண்டுள்ளமையும் சுட்டற்பாலது.

8. வரலாற்றிற்குரியோர் நேரிடையாகக் கூறக்கேட்டுப் பிறர் அத் தன் வரலாறுகளுக்கு எழுத்துருவம் அளிக்கும் போக்கும்

தமிழில் காணப்படுகிறது. ராஜா சாண்டோவின் நூல் இவ்வாறு எழுந்ததே. இன்றும் இந்நிலை தொடர்வதை 'தாய்' வார இதழில் காணலாம்.

9. தொடக்க கால வாழ்க்கை வரலாறுகள் சமயத்தலைவர், மறைந்த புலவர், அரசியலார் எனும் இவர்கள் மீது அதிகளவில் எழுந்தமையைக் காண்கிறோம். இதற்கு அக்காலச் சூழலே முதன்மைக் காரணம். இந்து, கிறித்தவம், இசுலாம் என்னும் மதங்களிடையே அன்று நிலவிய போராட்ட நிலை சமயத் தலைவர்கள் மீது வரலாறுகள் எழக் காரணமாயின. அவ்வவ் மதம் பரப்புதலுக்குரியதொரு உத்தியாக இது கையாளப்பட்டது. கிறித்தவர் நூல்களே இதில் முன்னிற்கின்றன.

தமிழ்ப் பழஞ்சுவடிகள் கண்டு பிடிக்கப்பட்டு புலவர் பெரு மக்கள் பேராதரவுடன் அவை வெளிவந்தபோது அவற்றைப் பாடிய புலவர்கள், அவர்களைப் போற்றிய, தமிழ் வளர்த்த வள்ளல்களின் வரலாறுகளும் உணரப்பட வேண்டும் என்ற இயல்பான எண்ணம் எழ அவர்களின் வரலாறுகளும் வரவேற்கப் பட்டன.

விடுதலைக்குப் போராடிய இந்தியத் தலைவர்களின் குறிப் பாகக் காந்தியடிகளின் வரலாறும் அன்று ஆட்சி புரிந்த விக்டோரியா மகாராணியாரின் வரலாறும் குறிப்பிடத்தக்கவளவு அன்று அமைந்துள்ளமை சமுதாயப் பிரதிபலிப்பாக நிற்கக் காண்கிறோம். விடுதலை வேட்கையை மக்களிடையே பரப்ப விடுதலை வீரர்களின் வரலாறுகள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பட்டிருக்குமோ என்ற எண்ணமும் இங்கு எழுகிறது. இவர்களுக் கிடையே அந்நிய ஆட்சியின் அடிமை நிலையை வேண்டியவர் களும் இருந்தமை மட்டுமன்றி அவர்கள் பிறரையும் அதனை ஏற்கத் தூண்டினர் என்பதையும் அன்றைய ஆட்சியாரின் வரலாற்று நூல்கள் உணர்த்துகின்றன. மேனாடுகளில் முதற்கண் எழுந்த வாழ்க்கை வரலாறுகளும் சமயத்தலைவர் மற்றும் அரசியலார் மீதே எழுந்துள்ளமையும் எண்ணற்பாலது.*

அகநிலை

1. தொடக்கக்கால வரலாறுகளில் கற்பனைகளும், செவி வழிச் செய்திகளும் மிகுந்து காணப்பட்டன. இன்று அவை

* In post classical Europe the literary recording of people's lives begins with the search for example in the lives of the saints and the stories of rise and fall of princes.
A dictionary of modern critical terms; Roger flower (ed); Routledge & kegan paul, London; I ed. 1973.p. 23.

உண்மைக்கு வழிவிட்டு ஒதுங்கியுள்ளன. இது முறையான வாழ்க்கை வரலாறுகள் தமிழில் வளர்ச்சியடைந்து வருவதைக் காட்டுகிறது.

2. இன்றெழும் வாழ்க்கை வரலாறுகள் உண்மையின் அடிப்படையில் எழுந்திருப்பினும் மிகுதியும் புகழ்ப் பூக்களாகவே அமைவதையும் காண்கிறோம். இதனால் தலைவரின் புகழுக் குரியன மட்டுமே காட்டப்படும் ஒருமுக வாழ்வே அமைகிறது. தலைவரின் குறைபாடுகளைத் துணிச்சலுடன் உணர்த்தும் நூல்கள் இவற்றுடன் ஒப்பிடுகையில் இல்லை என்றே கூறி விடலாம்.

3. தமிழ் வாழ்க்கை வரலாற்று நூல்களில் காணப்படும் மற்றொரு மாபெரும் குறைபாடு, வரலாற்று நிகழ்வுகளுக்குத் தெளிவான காலக் குறிப்பின்மையாம். இது தன் வரலாற்று நூல்களிலும் இன்றும் வாழ்ந்துகொண்டிருப்போர் மீது எழும் நூல்களிலும் காணப்படுதல் சுட்டத்தக்கது. எதிர்காலத்தில் இத்துறை மேலும் நன்கு வளமும் வளர்ச்சியும் பெறுதற்கு இவை போன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படுதல் இன்றியமையாததாகும்.

4. புலவரின் வரலாறுகள் மிகுதியும் அவர் தம் நூலாய்வு களுடனே வருகின்றன. திருவள்ளுவர், அவ்வையார், கம்பர், மாணிக்கவாசகர் போன்ற பழம் புலவருடன் பாரதியின் வாழ்க்கை வரலாறும் மிகுதியாகக் காணப்படுகின்றன. சமயம், அரசியல் துறை சார்ந்தோராயின் வாழ்க்கை வரலாறுகளில் அவர் தம் பொன்மொழிகளும் இடம் பெறுகின்றன.

5. வாழ்க்கை வரலாறுகள் யாரை முன்னிறுத்தி எழுதப் பட்டதோ அவர்களுக்கேற்ற நடையில் எழுதப்படுவது குறிப் பிடத்தக்கது. சான்றாக, சிறுவர்களுக்காக வினோபாவின் வாழ்க்கை வரலாற்றை வடித்துத் தர முனைந்த சம்பந்தன், உரையாடலாகக் கீழ்க்கண்டவாறு அவர்களுக்கேற்றபடி சுவை யுடன் படைத்திருப்பதைக் காட்டலாம்.

"பாபு: உடனே சென்று காந்தியை நேரில் சந்தித்தாரா மாமா?

மாமா: இல்லை, காந்திக்கு மூன்று கடிதங்கள் எழுதினார் வினோபா.

ரகு: அக்கடிதங்களில் என்ன எழுதினார்?

மாமா: முதல் கடிதத்தில் காசி இந்துப் பல்கலைக் கழகத் தில் காந்திஜி புரிந்த பேருரையை வெகுவாகப் பாராட்டி எழுதினார். இரண்டாவது கடிதத்தில்

தமது மதம், அரசியற்கொள்கை இவற்றை விளக்கி எழுதினார். மூன்றாவது கடிதத்தைக் கண்ட காந்திஜி வினோபாவை நேரிலேயே வரச் சொல்லி எழுதிவிட்டார்.

கீதா: வெகு நல்லதாய்ப் போயிற்று. வினோபாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்திருக்குமே.''

இதுபோன்று சிறுவர்களுக்குச் சலிப்பு தட்டாது அவர்களைக் கவரும் வண்ணம் எழுதிச் செல்லுதல் சிவர்களுக்குரிய வரலாறு களில் சிறப்பிடம் பெறுகிறது. இது போன்றே, இளைஞருக் காகவும், வாழ்க்கை வரலாற்றுச் சுவைஞருக்காகவும் படைக்கப் படும் நூல்கள் அவரவர்க் கேற்ப நடைநலம் கொள்கின்றன.

6. படைப்பாளரின் இயல்பு குறித்தும் வாழ்க்கை வரலாற் றிலக்கியங்கள் நலம் பெறுகின்றன. புத்திலக்கியப் படைப்பாளர் களால் வாழ்க்கை வரலாறுகள் எழும்பொழுது இலக்கியநயம் வெகு இயல்பாக அவற்றில் அமைந்துவிடக் காணலாம். ராஜம் கிருஷ்ணனின் 'டாக்டர் ரங்காச்சாரி', கண்ணதாசனின் 'வனவாசம்', வைரமுத்துவின் 'இதுவரை நான்' எனப் பல வற்றைக் காட்டலாம்.

7. வரலாற்றுத் தலைவரின் பல்வேறு பருவத்தைக் காட்டும் புகைப்படங்களும், அவரோடு தொடர்புடைய நிகழ்ச்சி, இடங் களைச் சுட்டும் புகைப்படங்களும் தரும் நூல்கள் மிகச் சிலவாகவே உள்ளன. வாழ்க்கை வரலாற்று நூல்களில் இவை இடம்பெறுதல் கூடுதல் இன்பத்தைக் கற்பாருக்கு அளிக்கும்.

8. முழுமையான வரலாறுகளில் வரலாற்றுத் தலைவரின் குறிப்பிட்ட பருவம்வரை 'அவன்' என்றும் அதன்பின் 'அவர்' என மதிப்பு மொழியிலும் சுட்டுதல் காணப்படுகிறது. இதே போன்று வரலாற்றுத் தலைவரின் இளமையை மட்டும் உணர்த் தும் நூல்களில் ஒருமையிலேயே அழைத்தல் அமைகிறது. மற்றும் தம் பெருமதிப்பிற்குரியாரைச் சுட்டும்பொழுது அவரின் பெயரைச் சுட்டாது அவரைச் சிறப்பிக்கும் அடைமொழியால் உணர்த்து தலும் குறிப்பிடற்பாலது. சான்றாக உ. வே. சாமிநாதையர், தம் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைப் பெயர் சுட்டாதே நூல் நெடுகிலும் ஆசிரியர் என்றே அழைத்தலைச் சுட்டலாம்.

9. வாழ்க்கை வரலாற்றில், வரலாற்றுத் தலைவருக்குத் துணை போனவர்களும் உண்டு. எதிர் நின்றோரும் உண்டு. அவ்வாறு எதிர் நின்றோரைச் சுட்டும்பொழுது அவர்தம் பெயர் சுட்டாது செல்லல் பலரிடம் காணப்படுகிறது. அவர் வாழ்ந்து கொண்டிருப்பவராயின் அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும்

துன்பம் தருதலுடன், எழுதுபவருடன் மனக்கசப்பு கொள்வதற்கும் வாய்ப்புண்டு; மறைந்தவராயின் உலகை நீத்தாரைப் பற்றிக் குறைகூறுதல் ஏற்புடைத்தன்று; 'சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' எனும் தமிழ்ப்பண்பு இவற்றால் இந்நிலை அமைகிறது எனலாம்.

தமிழில் எழுந்துள்ள வாழ்க்கை வரலாறுகளை ஒட்டுமொத்தமாகக் கொண்டு, அவற்றுள் சிலவற்றை அவற்றின் இயல்பு நோக்கித் தேர்ந்தெடுத்த நூல்களால் இவ்வாய்வு அமைந்துள்ளது. அதனால் தனித்த எந்த நூல்களின் மதிப்பீடும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. ஆங்காங்கே நூல் முழுமையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பெருமையும் குறையும் தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் இயல்பைச் சுட்டும் பொதுவான கருத்திற்குக் காட்டாக அமைவனவாகுமேயன்றி அவ்வவற்றின் தனி மதிப்பீடுகள் அல்ல.

வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவாகவே அமைந்துள்ளன. இன்னும் பல்வேறு கோணங்களில் இவ்வாய்வு நிகழ்வதற்கும் வாய்ப்புள்ளது. வாழ்க்கை வரலாற்றாசிரியர் தம் சம காலத்தவர், சற்று முற்பட்டவர், மிகவும் முற்பட்டவர் எனும் இவர்களைப் பற்றி எழுதும்பொழுது என்னென்ன சிக்கல்களுக்கு ஆளாகிறார்; மற்றும் இவர்களின் வாழ்க்கை வரலாறுகளுக்கிடையே காணும் வேறுபாடுகள் யாவை, ஏன் என்பன பற்றியும் ஆய்வு நிகழலாம்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அதில் தொடர்புடையோரின் வரலாறுகளில் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. இம்முரண்பாடு ஏன், இவற்றுள் உண்மைநிலை எது, முரண்பாட்டிற்குக் காரணம் என்ன என்பனவற்றையும் ஆராயலாம்.

வாழ்க்கை வரலாற்றிலக்கியப் படைப்பில் பெருவிருப்பம் கொண்டு பல நூல்களைப் படைப்பவர்களாக எம். எஸ் சுப்பிரமணிய ஐயர், கா. சு. பிள்ளை, வெ. சாமிநாத சர்மா, இரா. இளங்குமரன், அ. லெ. நடராசன், ரா. கணபதி, நாகசண்முகம், ம. பொ. சி., ஸையித் இப்ராஹீம் எனப் பலர் அமைகின்றனர். இவர்களின் நூல்களைத் தனியே தொகுத்தும் அவர்தம் எழுத்தாற்றல் இத்துறையில் படைத்துள்ள வெற்றிகளைக் குறித்தும் ஆய்வு நிகழ்த்தலாம். பல நூல்கள் சுந்தாவின் 'பொன்னியின் புதல்வர்' போன்று முழுநிலையில் தனித்த ஆய்விற்குரியனவாகவும் விளங்குகின்றன. அவற்றையும் தனித்தனியே நோக்கலாம்.

தமிழில் வந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களையும் மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டும் ஆய்வு நிகழ்வதற்கு வாய்ப்

புண்டு. தமிழரின் தனிச் சிறப்புகள் எவையெவை, பிற நாட்டார் வளர்ச்சியில் தமிழர் பெற்றுள்ளது எவ்வளவு என்பன போன்ற செய்திகள் அறிவதற்கு இவ்வாய்வு பெரிதும் துணை நிற்கும்.

உரைநடையின் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் துணை கொண்டு அன்றைய தமிழ் உரைநடையின் இயல்பையும் அமைப்பையும் இன்று வளர்ந்துள்ள முறையையும் மொழியியல் ஆய்வாகவும் மேற்கொள்ளலாம்.

இங்குத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வாழ்க்கை வரலாறுகள் பற்றியும் சில கூறலாம். தமிழில் குறிப்பிடத்தக்கள விற்கு இம்மொழி பெயர்ப்புகள் அமைந்துள்ளன. உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளும் மொழி பெயர்ப்பின் பயனாய் மலர்ந்துள்ளன. ஆங்கில மொழி நூல்களே மிகுதியும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அடுத்த நிலையில் இந்தி மொழி யமைகிறது. பொதுவாக அரசியற்றலைவர். வரலாறுகளே இம் மொழிபெயர்ப்பில் அதிகமாக உள்ளன. அடுத்த இடத்தைச் சமயத்தலைவர் பெறுகின்றனர். மிகுதியும் தனித்த வரலாறுகளே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சாகித்திய அக்காதெமியினர் வெளியிடும் ‘இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை’ சுட்டத்தக்கது.

இந்தியத் தந்தை மகாத்மாகாந்தியின் வாழ்க்கை வரலாறு தமிழிலே பலரால் எழுதப்பட்டுள்ளபோதிலும் மிகுதியான மொழி பெயர்ப்புகளும் இவரது வரலாற்றைத் தரல் குறிப்பிடத்தக்கது. இந்திய, உலக மொழிகளில் எழுந்துள்ள அவரின் வாழ்க்கை வரலாறுகள் பல தமிழ்ப் படுத்தப்பட்டுள்ளன. மற்றும் அவரின் தன் வரலாறும் பலரால் மொழிபெயர்க்கப்படும் சிறப்பினைக் கொண்டுள்ளது.

உ. வே. சாமிநதையரின் என் சரித்திரம் இந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம், செக் முதலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை தமிழுக்குச் சிறப்பளிக்கிறது. அனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பும், ஜெயகாந்தனின் ‘ஓர் இலக்கிய வாதியின் அரசியலனுபவங்களும்’ ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வேறு சில வாழ்க்கை வரலாறுகளும் பிற மொழிகளில் மாற்றப்பெறும் சிறப்பெய்தியுள்ளன.

தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றிய ஆய்வே முதன்மை நோக்கமாக அமைந்ததினால் இவ்வாய்விற்கு மொழி

பெயர்ப்பு வரலாறுகள் கருவியாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கிய வரிசையை நிறைவுடைய தாகத் தருதல் வேண்டும் என்ற நோக்கில் மொழி பெயர்ப்பு வரலாறுகளும் இணைந்துள்ளன.

இறுதியாக ஒன்றைக் கூறி இந்நூலை நிறைவு செய்யலாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் தமிழ்ப்பண்பாட்டின் விளக்கமாக இவ்வாழ்க்கை வரலாறுகள் திகழ்கின்றன. உலகம் ஒரு குடும்பம் எனும் உணர்வினை, உலகத்தார் தம்முள் நெருங்கி வருதலை இவை காட்டுகின்றன எனில் மிகையின்று. மொழி, நாடு, இனம் எனும் வேற்றுமைளககன்ற நிலையில் இவ்வரலாறு கள் ஒவ்வொரு மொழியிலும் எழுகின்றன. தமிழ் மொழியிலும் பல நூல்கள் இவ்வாறு எழுந்துள்ளமையை 'வாழ்க்கை வரலாற் றிலக்கிய வரிசை' சுட்டும். 'பழங்காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியவர்களின் வரலாறுகளை அறியாமலிருப்பது நம் வாழ் நாள் முழுவதும் குழந்தைகளாக இருப்பது போன்றது' என்பர் புளூடார்க். அக்குறை தமிழ் மக்களுக்கு நிகழா வண்ணம் தமிழ்ப் படைப்பாளர் தம் படைப்புகளை வாழ்க்கை வரலாறுகளாகவும் தந்து நிறைவு செய்துள்ளனர். உலக மொழிகளில் தமிழறிஞரின் வாழ்க்கை வரலாற்றைத்தரும் முயற்சியும் நடக்கின்றன. உலக அரங்கில் தமிழரின் பெருமை உயர்தற்கு இஃது பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழிலக்கியத்துள் வாழ்க்கை வரலாறுகள் இன்று உயரி டம் கொண்டுள்ளன. எண்ணற்ற இனிய நூல்கள் இவ்விலக்கிய வகையை வளப்படுத்தியுள்ளன. புதிய புதிய உத்திகளால் மேலும் இத்துறையை வளப்படுத்தவியலும் என்பதற்குச் சான் றாகவும் பல நூல்கள் இன்று எழுகின்றன. இந்நூற்றாண்டில் எழுந்த இலக்கியங்கள் பலவற்றுள்ளும் இவ்வகை இலக்கியங்கள் பல காலத்தை வென்று நிற்கும் சிறப்புடையன என்பது உறுதி.

வாழ்க்கை வரலாற்றிலக்கிய வரிசை

தமிழில் அன்று முதல் இன்றுவரை வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் தொகுப்பாக இவ்வகர வரிசை அமைகிறது. ஆய்வாளர் நேரில் கண்ட நூல்களுடன் பிற, பல அகரவரிசைகளின் துணை கொண்டும் இது உருவாக்கப் பட்டுள்ளது. இங்குள்ள சில நூல்கள் வாழ்க்கை வரலாற்றிலக் கியத்தின் பாற்படுமா என்ற வினா எழலாம். நூலாசிரியர், மற்றும் தொகுப்பாசிரியர் கருத்துக்கிணங்க அவையும் இணைக் கப்பட்டுள்ளன. எனவே அவை பற்றிய முடிவு அந்நூல்களில் ஆய்வு மேற்கொள்வோரின் கருத்துக்கு விடப்பட்டுள்ளது.

நூல், நூலாசிரியர், ஆண்டு, பக்கங்கள், பதிப்பிக்கப்பட்ட இடம், வெளியீட்டாளர் எனும் நிலையில் செய்திகள் அடுக்கப் பட்டு, வாழ்க்கை வரலாறுகள் நூலின் பெயரால் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிய செய்தி அறிய இயலாவிடில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஒரே நூலில் பலர் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் இடம்பெற்றிருப் பினும், வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் இயற்பெயர், நூற் பெயரால் அறிய வியலாவிடினும் ஆங்காங்கே இயன்றவரையில் அவை சுட்டப்பட்டுள்ளன. தன் வரலாற்றிலக்கிய வரிசையும் இதே அமைப்பினை மேற்கொண்டுள்ளது. மொழிபெயர்ப்பு நூல்களில், மூலநூலின் பெயரும், ஆசிரியரின் பெயரும் அறிந்த வற்றில் இணைக்கப்பட்டுள்ளன. மூலமொழிகள் அகரவரிசைப் படுத்தப்பட்டு பின் நூல்கள் அவற்றின் கீழ் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களின் தோற்றமுதல் 1970 வரையிலாக எழுந்துள்ளவற்றைக் கால வரிசையில் 'வாழ்க்கை வரலாற்றிலக்கியம்' எனும் தமது நூலில் சாலினி இளந்திரையன் தொகுத்தளித்திருப்பதால் இந்நூலில் காலவரிசை மேற்கொள்ளப் படவில்லை. வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகளின்படிப்

பகுத்தளிக்க முனைந்தபோது, பல நூல்களின் இயல்பு குறித்து அறிய இயலமாட்டாமையினால் அம்முயற்சியும் கைவிடப் பட்டது. ஆசிரியரை முதலாகக் கொண்டு நூற்றொகுப்பை அளிப்பதைவிட நூற்பெயரை முதலாகக் கொண்டு அமைத்தல் நலம்; பயன்பாட்டிற்கு எளிது எனக் கருதி இங்கு நூலின் பெயரால் அகரவரிசை மேற்கொள்ளப்பட்டது. எனினும் நூலா சிரியருக்கும் சிறப்பளித்தல் வேண்டி, நூலாசிரியர் அகரவரிசை ஒன்றும் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் நூற்றலை வர் வரிசையும் உண்டு.

காலம் முதலான எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தொகுக்கப் பட்டுள்ளது இவ்வரிசை. ஆய்வாளருக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்கொண்டு முழுமையாகத் தந்துள்ளது என்பதைவிட முழுமையாகத் தர முயன்றுள்ளது என்பதே பொருந்தும். விடுபட்டுள்ள நூல்கள் ஆய்வாளரின் கவனத் திற்கு வரும்பொழுது இணைத்துக் கொள்ளப்படும்.

1. அக்பர்; செல்வக் கேசவராய முதலியார்; இ. ப. 1931; 144; சென்னை; கழகம்.
2. அகத்திய முனிவர்; ஜெகவீரபாண்டியன்; இ. ப. 1940; 6+92; மதுரை; வரதராஜுலு நாயுடு பிரஸ்.
3. அகத்தியர்; ந. சி. கந்தையா பிள்ளை; மு. ப. மார்ச் 1984, இ. ப. பிப். 1956; 44; சென்னை; ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்.
4. அகத்தியர் வரலாறு; அ. சிதம்பரனார்; மார்ச் 1950; 104; சென்னை; கழகம்.
5. அகுஸ்தீன் பெரேரா சுவாமியவர்கள்;—; மு. ப. 1911; 15; திருச்சி; செயின்ட் ஜோசப் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்.
6. அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு; சோமசுந்தர அடியவர்; மு. ப. 1968; —; சென்னை; கலாநிதி அச்சுக்கூடம்.
7. அசோகர் சரித்திரம்;—; தி. ப. சூலை 1919; 91; சென்னை; காக்ஸ்டன் பிரஸ்.
8. அஞ்சுகச் செல்வன்; ஏ. கே. வில்வம்; 1972; 184; —; தென்னகம் வெளியீடு, (மு. கருணாநிதி)
9. அட்மிரல் நெல்சன் வரலாறு; எஸ் நடராஜன்; மு. ப. ஆக. 1965; 71; சென்னை; வானதிப்பதிப்பகம்.
10. அடிமனத்தை ஆராய்ந்த அறிஞர் (சிக்மண்ட் பிராய்டு); மு. இராசமாணிக்கம்; மு. ப. மார்ச் 1962; 138; சென்னை; தொல்காப்பியர் நூலகம்.

11. அடியார் அறுபத்து நால்வர்; சோமசுந்தரன்; இ. ப. 1982;—; பொன்முடி பதிப்பகம்; காரைக்குடி.
12. அடுக்கு மொழி திரு. பி. ஆவுடையப்பன் செட்டியார் வரலாறு; —;—;—;—;—.
13. அடைக்கலநாதப் பிள்ளை சரித்திரம்; பி. மேனுவல்; மு. ப. சூன் 1913; 18; சென்னை; பூலோக வியாசன் பிரஸ்.
14. அண்ணல் ஆபிரகாம்; இரா. இளங்குமரன்; பிப். 1965; 103; சென்னை; கழகம்.
15. அண்ணல் நபி; ஸையித் இப்ராஹீம்; 1957;—; திருச்சி; வளர்மதி பதிப்பகம்.
16. அண்ணா ஒரு சரித்திரம்; அரு. சின்னசாமி; 1978; 156; சென்னை; பூம்புகார் பிரசுரம்.
17. அண்ணாமலை அரசர்; லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்; சன. 1972; 104; சென்னை; முத்தையா நிலையம்.
18. அண்ணா யார்? தமிழ்வாணன்; மு. ப. 1965; 91; சென்னை; மணிமேகலை பிரசுரம்.
19. அண்ணா வனப்பியம் என்னும் அண்ணா காவியம்; செந்தமிழ்ச் செல்வன்; 1968; 276; சென்னை; பாரி அச்சகம்.
20. அண்ணாவின் அந்த நாட்கள்; ஜே. எஸ். இராசு: 1977: 23: திருச்சி: இராணி பதிப்பகம்.
21. அண்ணாவின் அரசியல் பாதை; மா. தங்கவேலர்: 1969: 128: சென்னை: அன்பு நிலையம்.
22. அண்ணாவின் கடைசி நாட்கள்; நாகை தருமன்; மு. ப. சூலை; 1970; 376: சென்னை: தமிழ்ச்சோலை வெளியீடு.
23. அண்ணாவின் கதை; நவீனன்: 1970: 144: சென்னை: தினமணிக் கதிர் வெளியீடு.
24. அண்ணாவின் நவமணிகள்; நாகை தருமன்: 1968: —:—:—.
25. அதிசயம் கண்ட அறிஞர்; சிவசங்கரன்; மு. ப. 1962: 100: சென்னை: மெர்க்குரி புத்தகக் கம்பெனி. (உரோனால்டு ராசு, வில்லியம் ஹார்வி, ஹம்ப்ரிடேவி)
26. அதிபர் இடி அமீன்; ஜே. எம். சாலி: மு. ப. ஆக. 1976: 76: சென்னை: நூர்பதிப்பகம்.
27. அந்தநாள் அனுபவங்கள்; கோமதி ஸ்வாமிநாதன்; மு. ப. டிச, 1965; 98; சென்னை; ராதா பதிப்பகம். (கணபதி, சேஷாத்திரி, எஸ். பார்த்தசாரதி ஐயங்கார்; யானை வைத்தியநாதய்யர், சிவபாதசுந்தரம், டி. எஸ். நாராயண

சாமி, சட்டநாதன், ராமச்சந்திரன், டி. கே. முத்துசாமி, சரஸ்வதிபாய், ராமய்யர்.)

28. **அந்த நாளில்;** அருண்; இ. ப. மார்ச் 1966; 342; சென்னை; மல்லிகைப்பதிப்பகம். (மகாத்மாகாந்தி, சுபாஷ் போஸ், எஸ். ராதாகிருஷ்ணன்; நேரு; ராசேந்திர பிரசாத், செயப் பிரகாசு, சத்தியமூர்த்தி, காமராசு, கோபாலகிருஷ்ண கோகலே, ரமணமகரிஷி, அரவிந்தர், ராஜாஜி, அன்னி பெசன்ட், சிரத்தானந்தர், வினோபா பாவே, வ. வே. சு., தாகூர், லெனின், ஐசன்ஹோவர், சர்ச்சில், பாரதியார், சுப்பிரமணியசிவம், வ. உ. சி., பி. வரதராஜலு நாயுடு, எஸ். சீனிவாச ஐயங்கார், டி. பிரகாசம், விஜய ராகவாச்சாரியார், ம. பொ. சி., பி. வி. ராஜமன்னார், சி. பி. ராமசாமி ஐயர், தேசிகவிநாயகம்பிள்ளை, வ. ரா., வி. எஸ். சீனிவாசசாஸ்திரி, டி. எஸ். எஸ். ராஜன், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டி. வி. சுந்தரம், முத்துலட்சுமி ரெட்டி, சுப்புலட்சுமி, எஸ். அம்புஜம்மாள், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, சோமசுந்தர பாரதி யார், கே. சந்தானம், ஐயாமுத்து, ருக்மணிதேவி, சிவசண் முகம் பிள்ளை, ஈ. வே. ரா, ரா. ராமகிருஷ்ண மூர்த்தி, உ. வே. சா., கே. பாஷ்யம், அன்னதானசிவன், திரு. வி. க., சம்பந்த முதலியார், கக்கன், திருப்புகழ்மணி, ஏ. எஸ். பி. ஐயர், குமாரசாமி ராஜா, ஜி. டி. நாயுடு, நெல்லையப்பர், பஷீர் அகமத் சையத், சதானந்தர், ராமுராமானுஜ, சேனா பதி, பக்தவத்சலம், ஆர். வெங்கட்ராமன், எஸ். ஆர். வெங்கட் ராமன், அப்துல்மஜீத், கா. அப்பாத்துரை, அம்மு சுவாமி நாதன், ஏ. எம். அல்லாபிச்சை, மேஜர் ஜெனரல் அழகப்பன், ஆக்கூர் அனந்தாச்சாரி, சி. பா. ஆதித்தன், சா. கணேசன், கே. ஆர். கல்யாணராமன், காஞ்சி மணிமொழியார், ஈ. கிருஷ்ணய்யர், மேரிகிளப்வாலா ஜாதவ், ஈ. வி. கே. சம்பத், சந்திர சேகர முதலியார், சரோஜினி வரதப்பன், வெ. சாமிநாத சர்மா, அ. சிதம்பரநாதன், ஸி. ஆர். சீனி வாசன், எஸ். டி. சுந்தரம், ச. து. சு. யோகி, டி. செங்கல்வ ராயன், எஸ். செல்லபாண்டியன், டி. எஸ். சொக்கலிங்கம், மீ. ப. சோமசுந்தரம், சௌந்தரா கைலாசம், திருகூட சுந்தரம், வி. கே. நரசிம்மன், பாரதிதாசன், பாலதண்டா யுதம், பிச்சமூர்த்தி, பூவராகவன், ஜோதிவெங்கடாசலம், முருகதாஸ், ராமகிருஷ்ண ஐயர், ஜி. வெங்கடாசலபதி)

29. **அப்பர் சுவாமிகள் சரித்திரம்;** கா. சுப்பிரமணியபிள்ளை; ஜூன் 1927; 164; சென்னை; கழகம்.

30. **அப்பர் (திருநாவுக்கரசர்);** நாக சண்முகம்; 1970; 64; சென்னை; அருள் நிலையம்.

31. அப்பர் பெருமான்; தண். கி. வேங்கடாசலம்; மு. ப. 1966; 103; பெங்களூர்; தண்டலை இல்லம்.

32. அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்; அரு. இலக்குவன் (பதி); 1980; —; மேலையூர்; பூம்புகார்ப்பேரவைக் கல்லூரி.

33. அப்பாவு கண்டர் ஜீவகால சரிதை; வி. கே. துரைசாமிபிள்ளை; அக். 1919; 26; வேலூர்: வாணி நிகேதன் அச்சுக்கூடம்.

34. அப்பாசிகள்-முதற்பகுதி; ஸையத் இப்ராஹீம், அக். 1963; 142; திருச்சி; வளர்மதி பதிப்பகம். (ஸப்பாஹ், மன்ஸூர், முஹமத் மஹ்தீ, ஹாதீ, ஹாரூனூர் ரஷீத், முஹமத் அமீன், மாமூன், முஃதஸிம், வாஸிக்)

35. அப்பாசிகள்–இரண்டாம் பகுதி; ஸையத் இப்ராஹீம்; ஆக. 1964; 276; திருச்சி; வளர்மதி பதிப்பகம். (முதவக்கில், முன் தஸிர், முஸ்த ஈன், முஃதஸ், முஹ்த்ததீ, முஃத்தமித், முஃத்தஸித் முக்த்தபீ, முக்ததிர், காஹிர், ராஸி, முத்தகீ, முஸ்தக்பீ, மூதிஃ, தாயிஃ, காதிர், காயிம், முக்ததீ, முஸ்தஸ் ஹிர், முஸ்தர்ஷித், ராஷித், முக்தபீ, முஸ்தன்ஜித், முஸ்தஸி, நாஸிர், ஜாஹிர், முஸ்தன்ஸிர், முஸ்தஃஸிம்.)

36. அபூபக்கர்; ஸையத் இப்ராஹீம்; மு. ப. 1955, இ. ப. 1959; 143; திருச்சி, வளர்மதி பதிப்பகம்.

37. அம்பேத்கார் வாழ்க; குத்தூசி குருசாமி; 1984; —; சென்னை; குத்தூசி குருசாமி பதிப்பகம்.

38. அம்மா (அன்னை சாரதாமணி தேவியின் வாழ்க்கைக் காவியம்) ரா. கணபதி; மு. பு. 1972, 16+652; சென்னை; கலைமகள் காரியாலயம்.

39. அமரகவி தாகூர்; சுத்தானந்த பாரதியார்; மு. ப. மார்ச் 1963; 156; சென்னை; பாரதி பதிப்பகம்.

40. அமரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவு மலர் வெளியீட்டு விழா; சியாமளா அருணாசலம்; 1984; —; சீர்காழி; வெள்ளை மாளிகை.

41. அமரர் சத்தியமூர்த்தி (வாழ்க்கைக் குறிப்புகள்); டி. பார்த்த சாரதி; —; 44; சென்னை; இண்டர் நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.

42. அமரர் நேரு; கல்வி கோபாலகிருஷ்ணன்; மு. ப. 1964; 63; சென்னை; என்சி பிஎச்.

43. அமரன் கதை; தங்கம்மாள் பாரதி; மு. ப. நவ. 1946, 1960, 50; திருச்சி; புதுப்புனல் பதிப்பகம். (பாரதி)

44. அமிர்தநாத சுவாமியார் சரித்திரம்; நரசிம்மலு நாயுடு; 1894; 32; திருச்சி; சூசையப்பர் மடத்து அச்சுக்கூடம்.

45. அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர்; அப்துற்றஹீம்; மு. ப. சன. 1954; 3+228; சென்னை; யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.

46. அமைச்சர் ஆதித்தனார் வாழ்க்கை வரலாறு; குரும்பூர் குப்பு சாமி; ஏப். 1969; 128; சென்னை; ராணிபதிப்பகம்.

47. அமைதியின் அழைப்பு; பிரான்சிஸ் முராயிஸ்; 1969; —; சென்னை; —.

48. அய்யாப்பிள்ளையின் மெய்யான சரிதம்; சாமிதாஸ் பிள்ளை; 1891; —; —; —.

49. அர்ச். பிலோமினா சரித்திரம்; —; மு. ப. ஆக. 1912; 2+96; திருச்சி; எஸ். ஜே. ஐ.ஸ்கூல் பிரஸ்.

50. அர்ச். பிலோமினா பத்திப் பொக்கிஷம்; —; மு. ப. ஆக. 1912; 40; திருச்சி; எஸ். ஜே. ஐ.ஸ்கூல் பிரஸ்.

51. அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் சரித்திரம்; —; 1906; 535; திருச்சி; ஜெயின்ட் ஜோசப் காலேஜ் பிரஸ்.

52. அர்ச். ஸதனிஸ்லாஸ் கோஸ்கா சரித்திரம்; ஜி. கோமேஸ்; 1909; 247; திருச்சி; எஸ். ஜே. காலேஜ் பிரஸ்.

53. அர்ச். ஜெர்மானம்மாளுடைய சரித்திரம்; —; மு. ப. 1915; ,28; திருச்சி; எஸ். ஜே. காலேஜ் பிரஸ்.

54. அரசஞ்சண்முகனார்; ச. சாம்பசிவன்; நவ. 1961; 176; சென்னை; கழகம்.

55. அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார்; ஆர். கிருஷ்ணமாச்சாரியார், —, —, சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி.

56. அரசியல் தலைவர் ஐவர்; அ. க. நவநீத கிருஷ்ணன் + அரசு, பிப். 1957: 88+90+80+33: சென்னை: கழகம். (இராசேந்திரப் பிரசாத், வல்லபாய் படேல், திலகர், கோகலே, சுபாஷ் சந்திரபோஸ்)

57. அரசியல் தலைவர்கள்; என். கே. வேலன்: 1975: 64: சென்னை: கழகம். (சவகர்லால் நேரு, இராசேந்திரப்பிரசாத், இராதா கிருஷ்ணன், சாகிர் உசேன், லால்பகதூர் சாத்திரி, வல்லபாய் படேல்)

58. அரசியல் மாவீரர் ஜான். எப். கென்னடி; இரா. பொன்னரசு: மு. ப. ஆக. 1964, இ. ப. நவ. 1967: 155: பாளையங் கோட்டை: இளங்கோ இல்லம்.

59. அரசியல் மேதை அண்ணா; பி. சி. கணேசன்: 1972: 135: சென்னை: மாதவி பதிப்பகம்.

60. அரசியல் மேதை காமராஜ்; எம். எஸ். சரசுவதி: 1966: —: சேலம்: —.

61. **அரவிந்தர் வரலாறு;** *ப. கோதண்டராமன்:* 1964: —: சென்னை: —.

62. **அரியக்குடி ராமானுஜதாசர் சரிதை:** *சா. கி. அரங்கநாதச் செட்டியார்:* 1910: —: *மதுரை: விவேகபாநு பிரஸ்.*

63. **அரியக்குடி (வரலாறு):** *எல்லார்வி: மு. ப. செப்.* 1956: 2+234 சென்னை: *அமுதநிலையம் (ராமானுஜ ஐயங்கார்)*

64. **அரிஜன ஐயங்கார்:** *கூ. சம்பந்தம்:* 1983: —: சென்னை: *கணேசர் பதிப்பகம்.*

65. **அருஞ்செயலிருவர்;** *தி. நீலாம்பிகையம்மையார்:* 1936: 45: சென்னை: *ஆசிரியர். (சிறுத்தொண்டர், திருநீலகண்டர்)*

66. **அருட்சுடர் வள்ளலார் (வரலாறும் அருட்பா விளக்கமும் உபதேசங்களும் அடங்கியது):** *சுத்தானந்த பாரதியார்: இ. ப.* 1960: 8+189: *இராமசந்திரபுரம்: அன்பு நிலையம்.*

67. **அருட்பெருஞ்சோதியார்** *அருண் மகிமை:* —: 1909: 13: —: *கலாடஸ்டன் அச்சுக்கூடம்.*

68. **அருணகிரிநாத அடிகளார் வரலாறு (ஆராய்ச்சி):** *பி. மா. சோமசுந்தரனார்:* 1978: 60: *இராணிப்பேட்டை: பாம்பனடிகளார் நூலகம்.*

69. **அருணகிரிநாதர் சரித்திர சங்கிரகம்:** *தி. மு. இராஜு முதலியார்+சை. தி. நடேச முதலியார்: மு. ப. சூலை* 1920: 31: சென்னை: *கலாரத்னாகரம் அச்சுக்கூடம்.*

70. **அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்:** *பாம்பன், குமரகுருதாச சுவாமிகள்: மு. ப. சூன்.* 1919: 31: சென்னை: *பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடம்.*

71. **அருணகிரிநாத சுவாமிகள் புராணம்:** *தண்டபாணி சுவாமிகள்:* 1871: —: *திருநெல்வேலி: முத்தமிழாகர அச்சுக்கூடம். (செய்யுள்)*

72. **அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்:** *சேக்கிழார் தாசன் + ஆர். இராமசேஷன் + ஆர். கிருஷ்ணன்*—: —: —: —.

73. **அருணகிரிநாதர் அற்புத சரிதம்:** *பி. மணமங்களர்: மு. ப.* 1905, *இ. ப.* 1928: 51: சென்னை: *க. மாணிக்கவேல் முதலியார்.*

74. **அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்:** *வ. சு. செங்கல்வராயப் பிள்ளை: டிச.* 1947: 18+302: சென்னை: *ஆசிரியர்.*

75. **அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு:** *பி. ஸ்ரீ.; மு. ப. ஆக.* 1964: 180: சென்னை: *அல்லயன்ஸ்.*

76. **அருணாசலக் கவிராயர் சரித்திரம்:** —: 1916: 32: சென்னை: *மினர்வா பிரஸ்.*

77. அருந்தமிழ் அடிகளார் செந்துரை முத்து: மு. ப. செப். 1962 இ. ப. சூன். 1979: 144: சென்னை: வள்ளுவர் பண்ணை (கவுந்தி அடிகள், இளங்கோ அடிகள், அறவண அடிகள், இராமலிங்க அடிகள், மறைமலை அடிகள், விபுலானந்த அடிகள்)

78. அருந்தமிழ் வளர்த்த ஐம்பெரும் புலவர்கள்; எம். ஏ. தேவராசன்; மு. ப. நவ. 1954, மறு. ப. சூன். 1955; 104; சென்னை; விசாலாட்சி பதிப்பகம். (கதிரேசன் செட்டியார், திரு. வி. கலியாண சுந்தரனார், மறைமலையடிகள், உ. வே. சாமிநாதையர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை.)

79. அருள் பெற்ற கவிஞர்கள்; ஆர். வி.; மு. ப. சன. 1966; 4+110; சென்னை; கலைமகள் காரியாலயம்.

80. அருள் மங்கை எழுவர்; சி. சுவாமிநாதன் + முகவை. இராசகோபால்; மு. ப. டிச. 1968; 85; சென்னை; அமுத நிலையம். (ஆதிமந்தி, வாசுகியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார், ஆதிரை, மண்டோதிரி.)

81. அருளரசு (புத்தர்); இராம. சிதம்பரம்; 1969; 64; சென்னை; அம்பாள் பதிப்பகம்.

82. அருளானந்தர் சரித்திரம்; இஞ்ஞாசியார் சுவாமிகள்; இ. ப. 1906, மூ. ப. நவ. 1912; 258; திருச்சி; எஸ். ஜே. ஐ.ஸ்கூல் பிரஸ்.

83. அல்போன்ஸ் ஜோசப்ஹாஸ் சுவாமி அவர்களின் சரித்திர சங்க்ஷேபம்; எம். பி. மஸ்கரன் ஹாஸ்; மு. ப. டிச. 1912; 30; தூத்துக்குடி; எஸ். ஜே. ஐ. ஸ்கூல் பிரஸ்.

84. அல்லாமா இக்பால்; ஆர். பி. எம். கனி; 1946; —;—;—.

85. அவ்வை தி. க. சண்முகம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்; —; 1972; 7; —;—.

86. அவ்வையார்; அனவரத விநாயகம் பிள்ளை; 1919; 146; சென்னை; ஸி. குமாரசாமி நாயுடு சன்ஸ்.

87. அவதானக் கலைஞர்; சி. குமரேசப்பிள்ளை; மு. ப. நவ. 1968; 6+110; சென்னை; கலைமகள் காரியாலயம். (கா. ப. செய்குத்தம்பிப் பாவலர்.)

88. அவள் பிரிவு; வெ. சாமிநாத சர்மா; 1957; —; புதுக்கோட்டை; —. (கடிதம்)

89. அழகப்பரின் அதிசய சாதனைகள்; பகீரதன்; மு. ப. ஏப். 1957; 80; சென்னை; கலைஞன் பதிப்பகம்.

90. அழகரடிகளார் வாழ்க்கை வரலாறு; ஆறுமுகம்; 1963; —; —; —.

91. அமுது அடியடைந்த அன்பர்—ஓர் ஆராய்ச்சி நூல்; அ. மு. சரவண முதலியார்; மு.ப. 1956; 145+4; அரியலூர்; மணி வாசக மன்றம் (மாணிக்க வாசகர்)

92. அற்புதப் பெண்மணி; சுத்தானந்த பாரதியார்; 1954;—; புதுக்கோட்டை;—. (ஹெலன் கெல்லர்)

93. அறநெறி அருளிய ஆன்றோர்; கல்வி கோபாலகிருஷ்ணன்; மு. ப. சூன். 1970; —; சென்னை; கல்வி நிலையம். (மகா வீரர், கௌதமபுத்தர், சங்கரர், இராமானுஜர், ஜயதேவர், மத்துவாச் சாரியார், ஞானதேவர், நாமதேவர், இராமா னந்தர், கபீர்தாஸ், போதனர், நரசிம்மமேதா, குரு நானக், புரந்தரதாசர், கிருஷ்ண சைதன்யர், துளசிதாசர், ஏகநாதர், தாதுதயாள், சமர்த்த இராமதாசர், வேமனா, இராமதாசர்)

94. அறநெறி பாடிய வீரகாவியம் (டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்); திலகவதிபால்; மு. ப. 1969; 156; சென்னை; சி. எல். எஸ்.

95. அறப்போர் ஆற்றிய ஆன்றோர்கள்; புலியூர்கேசிகன்; மு. ப. நவ. 1960: 7+136: சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ் (வெள்ளைக்குடி நாகனார்: பிசிராந்தையார், கோவூர் கிழார், பெருஞ்சித்திரனார், அகுதை, திதியன்)

96. அறம் உரைத்த அரசர்; கா. கோவிந்தன்: 1955: — : சென்னை:—.

97. அறம் வளர்த்த அடியார்கள்; சிவ. கன்னியப்பன்; மு.ப.சூன் 1982; 112; சென்னை; தமிழரசி பதிப்பகம். (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், தாயுமானவர், பட்டினத்தார், குமரகுருபரர், அருணகிரிநாதர், இராம லிங்கர்.)

98. அறவிளக்கு அரசர் முத்தையா; ஆறு. அழகப்பன்; 1983; —; சென்னை; வானதி.

99. அறிஞர் அண்ணா; பிரபா பங்காரு; 1970; 42; மதுரை; எழில் மன்றம்.

100. அறிஞர் அண்ணா; மா. ர. தமிழ்ச்செல்வன்; 1967;—; சென்னை;—.

101. அறிஞர் அண்ணா; கே. என். இராமச்சந்திரன்; 1970; 103; சென்னை; பாரி நிலையம்;

102. அறிஞர் அண்ணா (வாழ்க்கை வரலாறு); பாவலர் குயில்: மு: ப. சூன். 1967; 136; மீனாட்சிபுரம்; தமிழ்ச் செல்வி நிலையம்.

103. **அறிஞர் அண்ணாதுரை;** *நாகஷண்முகம்; மு. ப.* **ஆக.** 1967; *மூ. ப. பிப்.* 1970; 80; *சென்னை; வானதி பதிப்பகம்.*

104. **அறிஞர் அண்ணாதுரை;** *ந. பழனியப்பன்:* 1969: 63: *சென்னை: வள்ளுவர் பண்ணை.*

105. **அறிஞர் அண்ணாதுரை (தொகுப்பு)**: —: 1952:80: *சென்னை: சாந்தி நூலகம்.*

106. **அறிஞர் அண்ணா நாடறிந்த நல்லாசிரியர்:** *அ. சவரிமுத்து* 1975: 31: *திருநெல்வேலி: கதிரவன் பதிப்பகம்.*

107. **அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்:** *வெற்றிவீரன்:* 1969: 192: *சென்னை: பொது மேடைப் பதிப்பகம்.*

108. **அறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு:** *அ. மறைமலையான், மு. ப. செப்* 1967, *நா. ப. செப்.* 1973; 398; *சென்னை; வானதி பதிப்பகம்.*

109. **அறிஞர் ஆர். கே. எஸ்.;** *பி. எஸ். செட்டியார்; மு. ப. நவ.* 1953, *இ. ப. சூன்.* 1954; 112; *சென்னை; காமன் வெல்த் பப்ளிஷிங் கம்பெனி. (ஆர். கே. சண்முகம் செட்டியார்.)*

110. **அறிஞர் ஐன்ஸ்டீன்;**—; *மு. ப.* 1972; 116; *சென்னை; தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்.*

111. **அறிஞர் தந்த ஆக்கம்;** *மா. இராமநாதன்; மு. ப.* 1961 1965; 108; *சென்னை; சி. எல். எஸ்.* **(ஜேம்ஸ்குக், கோபால கிருஷ்ண கோகலே, ஸ. சுந்தரம் பிள்ளை, வித்தியாசாகரர், எம். விச்வேச்வரய்யா.)**

112. **அறிஞர் நால்வர்:** *பொ. திருகூட சுந்தரம்;* 1951: —: *சென்னை:* —.

113. **அறிஞர் பெர்னாட்ஷா:** *மு. வரதராசன்: நா. ப. சன.* 1955: 123: *சென்னை: பாரி நிலையம்.*

114. **அறிஞர் பெருமக்கள்:** *மே. பெ. அரங்கசாமிப் பிள்ளை:* 1952: —:—:—.

115. **அறிஞர் போற்றும் காமராஜ்:** *(தொகு)*: 1966: —: *சென்னை:* —:

116. **அறிஞர் மார்க்ஸ்:** *அரு. ராமநாதன்:* 1946: —: *சென்னை:* —.

117. **அறிஞர் வ. ரா. வின் வழி:** *நீ. சிவராமன்:* 1964 :—: —:—.

118. **அறிஞரும் தொண்டரும்;** *ம. இராமநாதன்:* 1958: —; *சென்னை;* —.

அறிவியல் அறிஞர் வரிசை; *(பழனியப்பா பிரதர்ஸ்) சென்னை.*

119. **அலெக்ஸாண்டர் பிளெமிங்:** *சந்தான லக்ஷ்மி: மு. ப.* 1973: 53

120. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்: தி. சு. கலியபெருமாள்: மு. ப. 1969, இ. ப. 1971; 54.

121. ஐசக் நியூட்டன்: லீலாதிரவியம்: மு.ப. 1970: இ.ப. 1975:63.

122. சர். சி. வி. ராமன்: தி. சு. கலியபெருமாள்: மு. ப. நவ. 1974: 46.

123. சார்லஸ் டார்வின்: சந்தான லக்ஷ்மி: மு. ப. நவ. 1977: 64.

124. தாமஸ் ஆல்வா எடிசன்: தி. சு. கலிய பெருமாள் மு. ப. 1969, மூ. ப. 1976: 53.

125. நிக்கோலா டெஸ்லா: தி. சு. கலிய பெருமாள்: மு. ப. 1971: 64.

126. பெஞ்சமின் பிராங்கலின்: தி. சு. கலிய பெருமாள்: மு. ப. 1969: 50.

127. மேரிகியூரி: தி. சு. கலிய பெருமாள்: மு. ப. 1969: இ. ப. 1972: 45.

128. ரூதர் போர்டு: சந்தான லக்ஷ்மி: மு. ப. 1971: 53.

129. ரைட் சகோதரர்கள்: சந்தான லக்ஷ்மி: மு. ப. நவ. 1971: 49.

130. லூயி பாஸ்டியர்: தி. சு. கலிய பெருமாள்: மு. ப. 1969: 47.

131. ஜகதீச சந்திர போஸ்: சந்தான லக்ஷ்மி: மு. ப. நவ. 1971, இ. ப. 1977: 46.

132. ஜேம்ஸ் வாட்: சந்தான லக்ஷ்மி: மு. ப. 1971: இ. ப. 1977: 59.

133. அறிவியல் அறிஞர் மூவர் (வரலாற்று நாடகங்கள்): பொன் முனியப்பன்: மு. ப. சன. 1979: 83: சென்னை: கழகம். (ஆர்க்கி மீடிசு: கலீலியோ: வில்லியம் ஆர்வி)

134. அறிவியல் முனைவர் ஐன்ஸ்டீன்: கா. அப்பாதுரை: செப். 1955: 129. சென்னை: கழகம்.

135. அறிவியல் மேதை என். எம். ராய்: சாம்பசிவம்: 1962:—: நாகப்பட்டினம்:—.

136. அறிவியல் மேதைகள் நால்வர்: என். கே. வேலன்: 1975: 55: சென்னை; கழகம்; (சி. வி. இராமன். ஜகதீச சந்திர போஸ்: பி. சி. ராய், விசுவேசுவரய்யா.)

137. அறிவியலறிஞர்: வேணுகோபாலப் பிள்ளை: 1961:—: சென்னை:—.

138. அறிவின் சிகரம் (அம்பேத்கார் வரலாறு); சு. ஜெகதீசன்: மு. ப. 1969: மூ. ப. 1970: 112: சென்னை: திலக்பப்ளிகேஷன்ஸ்.

139. அறிவுப் புனல் அண்ணா (ஓர் வரலாற்று ஓவியம்): ப. இள வழகன்: மு. ப. சன. 1980, 96: பெங்களூர்: செல்வராசன் பதிப்பகம்.

140. அறிவுலக மேதை அண்ணா: சேரன்: 1969: 196: —: கார்த்தி கேயன் பப்ளிகேசன்ஸ்.

141. அறிவுலகின் மேதை பெர்னார்டு ஷா: கா. அப்பாதுரை: ஏப். 1951: 208: சென்னை: கழகம்.

142. அறிவுலகின் குருதேவர்: மா. ரா. இளங்குமரன்: மு. ப. சன. 1981: 240: சென்னை: சேகர் பதிப்பகம். (தெ. பொ. மீனாட்சி சுந்தரம்.)

143. அறு பெரும் விஞ்ஞானிகள்: பி. எல். ராஜேந்திரன்: மு. ப. அக். 1977: 77: சென்னை: இலக்குமி நிலையம். (லூயிபாஸ்டியர், ஐசக் நியூட்டன், ரைட் சகோதரர்கள், பிரபுலச் சந்திரராய், சீனிவாச ராமானுசம், கலீலியோ.)

144. அறுமுகன் அடியவர் வரலாறு: தி. செ. முருகதாச அடிகள், மு. ப. அக். 1975: 72: சென்னை: கழகம். (அருணகிரி நாதா, திருப்போரூர் சிதம்பர அடிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் குமரகுருதாச அடிகள் மறைத்திரு ஞானியாரடிகள்.)

145. அன்பின் அருஞ்செயல்: சிவ. கன்னியப்பன்: 1981—: சென்னை: குவை பப்ளிகேஷன்ஸ்.

146. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா: கே. பி. நீலமணி: மு. ப. நவ. 1979: 139: சென்னை: காயத்திரி பப்ளிகேஷன்ஸ்.

147. அன்னாள் சத்தியநாதன் அம்மாளின் ஜீவிய விருத்தாந்தம்: கிருட்டிண மாச்சாரியார்: 1892: —:—:—.

148. அன்னி பெசண்ட் அம்மையார்: மு. ப. 1917: 93: சென்னை: சச்சிதானந்தம் பிரஸ்.

149. அன்னி பெசண்டு வரலாறு; கிருட்டிணமாச்சாரியார்; —;—;—;—.

150. அன்னிபெஸண்ட்: சு. லலிதாம்பாள்: மு. ப. செப். 1967 இ. ப. டிச. 1969: 108: சென்னை: வானதி.

151. அன்னி பெசன்ட் அம்மை: எஸ். ஆர். வேங்கடராமன்: 1947: 72: சென்னை: அல்லயன்ஸ்.

152. அன்னை கஸ்தூரி: எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்: 1944: 102: சென்னை: அல்லயன்ஸ்.

153. அன்னை கஸ்தூரி பா: ஆர். எஸ். ருக்மிணி: 1944: 99: சென்னை: தினமணி காரியாலயம்.

154. அன்னை சாரதாதேவி வரலாறு: அ. லெ. நடராஜன்: மு. ப. பிப். 1980: 440: வேதாரண்யம்: கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்.

155. அன்னை தெரசா; பழநி அரங்கசாமி: 1982: —: சென்னை: பெர்ல் வெளியீடு.

156. அன்னை தெரசா: ஹேமா சௌந்தரராஜன்: 1984: —: சென்னை: பூரம் பப்ளிகேஷன்ஸ்.

157. அஸ் ஹாபுஸ் ஸுஃப் ஃபா; ஸையித் இப்ராஹீம்: மு. ப. 1967: 4+28: திருச்சி: வளர்மதி.

158. அஜ்மீர் காஜா: ஸையித் இப்ராஹீம் —: 30: திருச்சி: வளர்மதி பதிப்பகம்.

159. ஆக்பர் சக்கரவர்த்தி: ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை: 1900: 176: சென்னை: வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடம்.

160. ஆங்கில சிரோமணிகள்: கே. பி. சண்முகம் பிள்ளை: —: 174: —:—: (வில்லியம் காக்ஸ்டன், சைமண்டி மாண்ட் போர்ட், ஆல்பர்ட், எட்வர்டு, ஜாண் மில்டன், அயிசாக் நியூடன், வில்லியம் பிட், ராபர்ட்ஸ் கிளைவ், ஹாரால்ட், ஜெப்பிரேசாசர், வால்டர்ரேலே, பிலிப்புசிட்னி, ஹொரே ஷயோநெல்சன்)

161. ஆங்கிலப் புலவர் வரலாறு (முதற்புத்தகம்): கா. அப்பாத் துரை பிள்ளை: மு. ப. ஏப். 1945, இ. ப. சூலை. 1949: 123: சென்னை: கழகம்.

162. ஆச்சார்ய நரேந்திரதேவா: ஜி. ஏ. வடிவேலு: 1984: —: —: சமுதாயம் பிரசுராலயம்.

163. ஆச்சார்ய வினோபா பாவே: T. D. திருமலை: மு. ப. மே. 1963: 6+81: சென்னை: உமாதேவன் கம்பெனி.

164. ஆசார்ய வினோபா பாவே: சம்பந்தன்: மு. ப. சூலை 1967: இ. ப. டிச. 1969: 103: சென்னை: வானதி.

165. ஆசிரியர் சொக்கலிங்கம்: ஒரு மாணவர்: 1943: 28: சென்னை; சிலம்பு வெளியீடு.

166. ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் வாழ்க்கை வரலாறு; வீ. சந்திரன்; மு. ப. பிப். 1981; 134; சென்னை: சொர்ணகுரு பதிப்பகம்.

167. ஆடொல்ப் ஹிட்லர் அல்லது திறமையின் வெற்றி; ஹ. பைதான் சாஸ்திரியார்; 1936; 4+114; சென்னை: தேசிய வித்தியா சங்கம்.

168. ஆண்டாள்: பி. ஸ்ரீ. 1944: —:—:—.

169. ஆத்தும ராமச் சரித்திரம்: இராமாநந்த அடிகள்:—:—:—.

170. ஆதிசங்கரர் வரலாறு: ஏ. ஆர். ரங்கநாதன்: 1966:—: சென்னை:—.

171. ஆதிசங்கரர் விஜயம் : துர்க்காதாஸ் எஸ். கே. சுவாமி: மு. ப. ஏப். 1966; 8+192; சென்னை; இன்ப நிலையம்.

172. ஆதிபகவனும் ஆச்சாரிய வினோபாஜியும்; டி. எஸ். ஸ்ரீபால்; 1952: 10+38: சென்னை: அறநூற்பதிப்பகம்.

173. ஆப்ரகாம் லிங்கன்; ஆர். கிருஷ்ண மூர்த்தி; 1956;—. சென்னை:—.

174. ஆப்ரகாம் லிங்கன்; அ. மெ. நடராஜன்; மு. ப. மார்ச்: 1984; 12+ 296; சிதம்பரம்; மணிவாசகர் நூலகம்.

175. ஆப்ரஹாம் லிங்கன்; அப்துற்றஹீம்; 1955;—; சென்னை;—.

176. ஆர். சத்தியநாத ஐயர் வாழ்க்கை; ஜே. வி. டேவிட் ஐயர்; மு. ப. 1893; 60; தரங்கம்பாடி; இ. எல். மிஷன் அச்சுக் கூடம்.

177. ஆல்பிரட் நோபல்; அ. சிங்காரவேலு; மு. ப. மார்ச் 1962; 148; நாகப்பட்டினம்; இமயப் பதிப்பகம்.

178. ஆல்பெர்ட் சுவைட்சர்; மா. சண்முகசுப்பிரமணியம்; மு. ப. அக். 1962, மூ. ப. மே. 1966; 6+128; சென்னை; கழகம்.

179. ஆழ்வார்கள் சரித்திரம்; வை. மு. சடகோப ராமானுஜா சாரியார்; மு. ப. 1898; 76; சென்னை; மிமோரியல் அச்சுக்கூடம்.

180. ஆழ்வார்கள் வரலாறு (முதற்புத்தகம்); கா. ர. கோவிந்த ராச முதலியார்; மு. ப. மே1949, மூ. ப. சூலை. 1967; 148; சென்னை; கழகம் (பொய்கையார், பூதத்தார், பேயார், திருமங்கை மன்னர், குலசேகரர், ஆண்டாள்).

181. ஆழ்வார்கள் வரலாறு (இரண்டாம் புத்தகம்) கா. ர. கோவிந்த ராச முதலியார்; மு. ப. மே. 1949, மூ. ப. சூலை 1967; 148; சென்னை; கழகம்.

182. ஆழ்வார்கள் வரலாறு; மாருதிதாசன்; 1983;—; சென்னை; நர்மதா பதிப்பகம். (பொய்கையாழ்வார், பூதத்தாழ் வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ் வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்.)

183. ஆழ்வார்கள் வழிக் குரவர் வரலாறு; கா. ர. கோவிந்த ராச முதலியார்; ஆக. 1950;154; சென்னை; கழகம்.

184. ஆழ்வார்கள் வழிக்குரவர் வரலாறு—2; கா. ர. கோவிந்த ராச முதலியார்; மு. ப. ஏப். 1975; சென்னை; கழகம்; (பெரிய நம்பிகள்; திருக்கச்சி நம்பிகள், மாறனேர் நம்பிகள், பிள்ளை உறங்கா வில்லிதாசர், அகளங்க நாட்டு ஆழ்வார், கூரத்து ஆண்டாள் அம்மையார், பெரிய திருமலை நம்பிகள், வேதாந்த தேசிகர்.)

185. ஆழ்வார் சரித்திரம்; பூ. ஆ. பாஷ்யம்; இ. ப. 1923;—; சென்னை; ரா. லோகநாதம் பிள்ளை. (பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், குலசேகரர், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், மதுர கவியாழ்வார்.)

186. ஆறுமுக நாவலர் சரித்திரம்; த. கைலாச பிள்ளை; மு. ப. 1918; 2+134; சென்னை; வித்தியானுபாலன யந்திர சாலை.

187. ஆறுமுக நாவலர் சரித்திரம்; அருணாசலக் கவிராயர்; —;—;—;—.

188. ஆறுமுக நாவலர் சரித்திரம்; கனகரத்தின உபாத்தியாயர்;—;—;—.

189. ஆறுமுக நாவலர் சரித்திரம்; சி. செல்லையாபிள்ளை; —;—;—;—.

190. ஆஜாத்; சரஸ்வதி ராம்நாத்; 1968; 44; சென்னை; தமிழ்ப் புத்தகாலயம்.

191 இக்பால் யார்; ஜேயெம்; சன. 1957; 229; சென்னை; அன்பு நிலையம்.

192. இசைமணிகள்; எல்லார்வி: மு. ப. டிச. 1967; 120; சென்னை; அமுதநிலையம் (அரியக்குடி இராமநுஜ ஐயங்கார், மைசூர் சௌடையா, பழனி சுப்பிரமணியபிள்ளை, திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை.)

193. இசையுலகில் மகா வைத்தியநாத சிவன்–1 : வி. எஸ். கோமதி சங்கர ஐயர், மு.ப டிச. 1970: 13+206;—;—.

194. இசையுலகில் மாக வைத்தியநாத சிவன்–2 ; வி. எஸ். கோமதி சங்கர ஐயர், மு. ப. செப். 1971; 6+253; சென்னை: இந்தியன் மியூசிக் பப்ளிஷிங் ஹவுஸ்.

195. இசைவளர்த்த தியாகராஜர் : ஆழி. வே. ராமசாமி; 1983; —; வேதாரண்யம்; கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்.

196. **இடைக்காடர் சரித்திரமும் திருவள்ளுவர் சரித்திரமும்:** *பு. க. ஸ்ரீநிவாஸாசாரியார்: 1917; 49: வேலூர்; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம்:*

197. **இந்திய அரசியலில் இந்திரா காந்தி** *: எம். ஜி. செல்வராஜ்: 1982: —: சென்னை; சக்ரவர்த்தி பதிப்பகம்.*

198. **இந்திய அறிவியல் மேதைகள்** *: இரா. தனசேகரன்: 1982: —; —; ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம்.*

199. **இந்திய இராஜ தந்திரி கோபால கிருஷ்ண கோகலே** *: நாரண துரைக்கண்ணன்: —; 28; சென்னை: ஸ்ரீராமுலு கம்பெனி*

200. **இந்தியக் கிருத்தவர்கள்: —** *; மு. ப. அக். 1897; 272: சென்னை: எஸ் பிசிகே பிரஸ்.*

201. **இந்திய கிறிஸ்தவர்களின் ஜீவிய சரித்திரச் சுருக்கம் : அன்னி.** *பீட்டர்; மு.ப. 1896; 86: சென்னை; எஸ்பிஸிகே பிரஸ்.*

202. **இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள்–1** *: சொ. பாரதி பித்தன்: மு.ப. மே 1974; 7+86; சென்னை; என் சி பி எச். (கன்யாலால் தத், குதிராம் போஸ், கோஷ் சகோதரர்கள், ஜதீந்திரர், டாக்டர் செண்பக ராமன், பாயிமேவாசிங், கர்த்தார்சிங், வ.வே.சு. ஐயர்)*

203. **இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள்–2** *: பாரதி பித்தன், மு.ப. மே 1974; 7+94: சென்னை; என்சிபிஎச். (எம்.என். ராய், விரேந்திரநாத் சட்டோபாத்யாயா, யதீந்திரநாத் தாஸ், இரவீந்திர மோகன், ராமராஜீ, ஷகீத் அஷ்பாக் உல்லாகான், அம்பிகா சக்ரவர்த்தி, சூரியா சென், துர்க்கா தேவி, சுசிலா தேவி, கல்பனாதத், பிரீதி)*

204. **இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள் –3** *: பாரதிப்பித்தன் மு.ப. மே 1974: 7+77: சென்னை, என்சிபிஎச். (பகத்சிங், பகத்சிங் தோழர்கள், அஜய்குமார் கோஷ், சௌதிரி ஷேர் ஜங், திவான்சிங்.)*

205. **இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி** *(வாழ்க்கை விளக்கம்) புரவலன்; மு.ப.1966; 170; சென்னை; புரவலன் பதிப்பகம்.*

206. **இந்தியப் பெரியோர்கள்** *: எழிலன்: 1982; —: சென்னை; சரசு பதிப்பகம்.*

207. **இந்தியப் பெரியோர்கள்:** *மயிலை சிவமுத்து; 1948; —; —; —;*

208. **இந்தியப் பெருந்தலைவர்கள்** *: மயில் வாகனன்: 1979; 64: சென்னை; முத்தையா நிலையம்; (காந்தி, நேரு, இராஜாஜி, காமராஜ், வல்லபாய் படேல், லால்பகதூர் சாத்திரி, இராசேந்திரப் பிரசாத், மொரார்ஜி தேசாய்)*

209. இந்தியராம் ஆன்றோர் சரித்திரச் சுருக்கம்: எம். வி. ஈசுவர ஐயர். 1923; 58; சென்னை; டெம்பிள் அண்ட் கம்பெனி. (மகாதேவ கோவிந்தரனதேவ், ஜே.என். டாடா, டிலாங், பூண்டி அரங்கநாத முதலியார், விவேகானந்தர், தி. முத்து சாமி ஐயர்.)

210. இந்திய விஞ்ஞானிகள் : பெ. நா. அப்புசுவாமி; மு. ப. பிப். 1967: 103; சென்னை: என்சிபிஎச். (ஜே. பி. எஸ். ஹால்டேன், ராமானுசன், சி.வி. ராமன், ஜகதீச சந்திர போஸ்)

211. இந்திய விஞ்ஞானிகள் ஐவர் (நெல்லை விஞ்ஞானி விழாவின் சொற்பொழிவுகள்) : ம.வி. இராசேந்திரன் + எஸ். சீனிவாசன் + கு. அருணாசலக் கவுண்டர் + த. வே. ஆறுமுகம் பிள்ளை + கணபதியா பிள்ளை: மு.ப. 1954, 4+135, சென்னை: அலைய்டு பப்ளிஷிங் கம்பெனி (ஜெகதீச சந்திர போஸ், ஸி.வி. இராமன், டி. எஸ். வேங்கடராமன்; டாக்டர் பிரபுல சந்திரராய், சீனிவாச ராமானுசம்.)

212. இந்திய ஸ்திரீ ரத்னங்கள்; வி. குப்புசாமி, இ. ப. சன. 1920, —; சென்னை; கபாலி பிரஸ் (சம்யுக்தா, ஆர்காவ் ராணி, ஐயா, பத்மினி, தாராபாய், கனூர் ராணி, ரூபவதி, அகல்யாபாய், லாலாபன்னா.)

213. இந்தியா தேசத்து இணையிலா மஹான்கள் : டி. பக்தவத்சலம்: மு.ப. ஆக. 1913: 49; சென்னை: விவேகானந்தா பிரஸ்.

214. இந்தியாவின் தவப்புதல்வர் பண்டித ஜவஹர்லால் நேரு, —;—; 46; சென்னை; எம். எஸ். ராமுலுகம்பெனி.

215. இந்திரா காந்தி : ர. சண்முகம்; 1966; —; சென்னை;—.

216. இந்திராகாந்தி : கே. எஸ். லட்சுமணன்: மு.ப. 1967: 107, சென்னை; அன்னை நிலையம்.

217. இந்திரா காந்தி; ஆ. வேதாசலம்: 1969: -- சென்னை--,

218. இந்துதேசாபிமானிகள் சரித்திரம்–1: —: இ.ப. 1916: 203; சென்னை: கேம்பிரிட்ஜ் பிரஸ். (தாதாபாய் நௌரோஜி, ஆனந்த மோகன் போஸ், சுரேந்திரநாத் பானர்ஜி பிரோஜிஷாமிர்வான், ஜிமேடா, கோகலே, கயக்வார்ராஜ் விஹாரி கோஷ், லஜபதிராய், விவேகானந்தர், திலகர், பாபு பெயின் சத்திரபால், ஜி. சுப்பிரமணிய ஐயர்.)

219. இந்துஸ்தானத்து வீரர்கள் : எம். எஸ். அருணகிரிநாதர். 1939: 63: சென்னை: எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, (பத்மினி, ராணி கருணாவதி, பிருதிவிராஜன், ஷாஜஹான்.)

220. இப்னுகல்தூன்; ஸையித் இப்ராஹீம்: அக். 1961. 68: திருச்சி: வளர்மதி.

221. இமாம் அஃலம் அபூஹனீபா: ஸையித் இப்ராஹீம்: மு. ப 1956, மு.ப. சன. 1967: 89: திருச்சி: வளர்மதி.

222. இமாம்கள் சரிதை; ஆர்.பி.எம். கனி: 1958- --: சென்னை,--

223. இயேசு காவியம்: கண்ணதாசன்: 1982: 399: திருச்சி; கலைக் காவிரி.

224. இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை சுவிசேஷகருடைய வார்த்தையின் பிரகாரமாய்ச் சொல்வது: — 1882: 320—; —.

225. இயேசு நாதர் (வாழ்க்கை வரலாறு) அ. லெ. நடராஜன்: ஆக. 1967: 16+368: சென்னை, பாரிபுத்தகப் பண்ணை.

226. இயேசுவின் வரலாறு: பிலோ இருதயநாத்: மு.ப. சன. 1981; 144; வளவனூர்; முத்துப்பதிப்பகம்.

227. இரட்டைப் புலவர் சரிதம்; சி.கு. நாராயணசாமி முதலியார்; 1913; 6+32; சென்னை; ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி.

228. இரத்ன முகமது கவன சரித்திரம்; அப்துல் காதிர்—;—;—;—.

229. இரமணரும் காந்தியும்; அ. இராமசாமி; 1981;—; வேதாரண்யம், கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்.

230. இரவிவர்மா; வித்தகன்; — 132; சென்னை; வித்தகன் வெளியீடு.

231. இராச குடும்ப வரலாறு; மு. பொ. ஈசுவர மூர்த்தியா பிள்ளை; —; —; —; —.

232. இராசாராம் கண்ட பெரியார்; எஸ். எஸ். தமிழ்த்துரை (தொகுப்பு); 1978; 54; சென்னை; சிந்தனையாளர் பதிப்பகம்.

233. இராணி மங்கம்மாள் சரித்திரம்; என். ஆர். சுப்ரமணிய சர்மா; மு.ப. 1916; 16; மதுரை; இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்.

234. இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும்; பி. ஸ்ரீ.; மு.ப. செப். 1970; மு.ப. ஆக. 1981; 92; சென்னை; ஸ்டார் பிரசுரம்.

235. இராம நாடகக் கீர்த்தனை இயற்றிய அருணாசலக் கவிராயர் சரித்திரம்; —; 1915; 32; சென்னை; லாங்மென்ஸ் கிரீன் அன்கோ.

236. இராமலிங்க அடிகள் வரலாறு; ஊரன் அடிகள்; மு. ப. 1971; 24+550+47; வடலூர்; சமரசசன்மார்க்கஆராய்ச்சி நிலையம்.

237. **இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்;** *பாலசுந்தரம் பிள்ளை;* 1930;—;—;—.

238. **இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை;** *ச. மு. கந்தசாமிபிள்ளை;* 1923;—;—;—.

239. **இராமலிங்க சுவாமிகள் சரித்திரம்;** *அசலாம்பிகை அம்மாள்;* 1934;—;—;—.

240. **இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திர வசனச் சுருக்கம்;** *ச. மு. கந்தசாமி பிள்ளை;* 1922; 64; சென்னை; சன் ஆப் இந்தியா பிரஸ்.

241. **இராமாநுஜர் வரலாறு;** *சுவாமி ராம கிருஷ்ணாநந்தா:* —; —; சென்னை; ராம கிருஷ்ணாமடம்.

242. **இராமானந்த அடிகள் வரலாறு;** *செந்தில் நாயக அடிகள்* —;—;—;—.

243. **இராமானுஜர்;** —; மு. ப. சன. 1920; 16; சென்னை; காக்ஸ்டன் பிரஸ்.

244. **இராமானுஜாசார்ய திவ்ய சரிதை;** *திருவேங்கடாசாரியார்.* —; —; —; —.

245. **இராஜா தேசிங்கின் கதை;** *வலம்புரி அண்ணாமலை;* மு. ப. சூலை 1981; 52; சென்னை; அன்பு பப்ளிகேஷன்ஸ்.

246. **இராஜாஜி என் தந்தை;** *கோவை. அய்யாமுத்து;* மு. ப. 1970; 176; சிங்காரம் பாளையம்; ஆசிரியர்.

247. **இராஜாஜி சரிதம்;** *நாரண துரைக் கண்ணன்;* 1937; 100; சென்னை; சக்தி பிரசுராலயம்.

248. **இராஜாஜி 100/100 (2 பகுதிகள்);** *பரந்தாமன்;* மு. ப. டிச 1981; 64; சென்னை; பரந்தாமன் பதிப்பகம்.

249. **இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்கள்;** *மா. இராசமாணிக்கனார்;* 1947; —; —; —.

250. **இரும்பு மனிதர் வல்லபாய் படேல்;** *என். ஆர். பத்மநாபன்;* மு. ப. சூலை. 1951; 116; இராமச்சந்திர புரம்; கார்த்திகேயினி பிரசுரம்.

251. **இருபதாம் நூற்றாண்டு மேதைகள்;** *டி. எம். காளியப்பா.* 1958; மூ. ப. 1965; —; சென்னை; —.

252. **இருவர் கண்ட பாரதி;** *எதிரொலி விசுவநாதன்;* மு. ப, 1982; 152, சென்னை; அசோகன் பதிப்பகம் (வ. ரா; நெல்லையப்பர்)

253. **இலக்கியத்தில் பெரியவர் கதைகள்;** *செந்துறை முத்து;* 1978; 159; சென்னை; அருணோதயம். (நக்கீரர், திருவள்ளு-

வர், பாரி, பாண்டியன், நெடுஞ்செழியன், அதியமான், சேரமான் கணைக்காலிரும்பொறை, நள்ளி, கபிலர், பெருந்சித்திரனார், ஔவையார், கரிகாலன், பிசிராந்தையார், கோவூர் கிழார்.)

254. இலக்கிய மாலை; கா. சுப்பிரமணியபிள்ளை;...; 110; --; --.

255. இலக்கிய மாலை–2 (ஆண்டாள் வரலாறும் நூலாராய்ச்சியும்); கா. சுப்பிரமணிய பிள்ளை; 1934; 25; பாளையங் கோட்டை; சாரதா பிரஸ்.

256. இலக்கிய ஜோதி (ஒரு மோகன வாழ்வின் முழு நோக்கு) மது. ச. விமலானந்தம்; மு. ப. மார்ச் 1981; 560+16; சென்னை; மோகனப் பதிப்பகம்.

257. இலட்சிய வாதி அழகிரிசாமி; காஞ்சி கல்யாண சுந்தரன்; 1950; 32; சென்னை; பகுத்தறிவுப் பாசறை.

258. இவர்கள் உயர்ந்த விதம் (ஊக்கத்தை அளிக்க வல்ல உயரிய வாழ்க்கை வரலாறுகள்) ; எஸ். எஸ். அருணகிரி நாதர்; மு. ப. நவ. 1952, ...; சென்னை; இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட் (சேலம் இராமசாமி முதலியார், களமூர் வீரவல்லி, அரங்கநாத சாஸ்திரிகள், சுவாமிக் கண்ணுப் பிள்ளை.)

259. இவான்ஜிலிக்கா சுருக்கம்; எச். ஸன் ஐயர்; மு. ப. ஆக. 1968; 37; தரங்கம்பாடி இவான்ஜிலிகல் லுத்தரன் மிஷன் அச்சுக்கூடம்.

260. இளைஞர் நெஞ்சில் திரு. வி. க; எதிரொலி விசுவநாதன்; மு. ப. சூலை 1983; 144; சென்னை; அசோகன் பதிப்பகம்.

261. இறை தூதர்; ஸையித் இப்ராஹீம்; மு. ப. 1962, இ. ப. டிச. 1964; 32; திருச்சி; வளர்மதி (ஆதம்நபீ, நூஹ்நபீ, ஹூத் நபீ, ஸாலிஹ் நபீ, இப்ராஹீம் நபீ, இஸ்மாயீல் நபீ, யூஸுப் நபீ, மூஸா நபீ, இல்யாஸ் நபீ, யூனுஸ் நபீ தாவூத்நபீ, ஸுலைமான் நபீ, ஜக்கரியா நபீ, அய்யூப் நபீ இத்ரீஸ் நபீ, ஈஸா நபீ.)

262. இறை நேசர் (வலிமார்கள்) முதல்பாகம்; ஸையித் இப்ராஹீம், மு. ப. சன. 1963, இ. ப. டிச. 1965; 48; திருச்சி; வளர்மதி; (ஹஸ்ரத்-ஹஸன் பஸ்ரீ, மாலிக்பின் தீனர், புனலல்பின் அயாஸ், ஹபீப் அஜமீ, இப்ராஹீம் பின் அத்ஹம், பிஷ்ர் ஹாபி, துன்னூன் மிஸ்ரீ, பாயஜீத்பூஸ்தாமீ, அஹ்மத்பின் அஷ்காப், அப்துல் லாஹ்பின் முபராக், ஸுப்யான்ஸவ்ரீ.)

263. **இறைநேசர் (வலிமார்கள்) இரண்டாம்பாகம்**; ஸையித் இப்ராஹீம். மு. ப. டிச. 1963; இ. ப. டிச. 1975; —; திருச்சி; வளர்மதி. (ஹஸ்ரத் ஷபீக்பல் கீ, இமாம் ஷாபியி, தாவூத் தாயீ, மஅரூப்கர்கீ, ஸிர்ரீஸ்கதீ, ஜுன்னத் பக்தாதீ, ஹாரிஸ் மு. ஹாஸபீ, முஹம்மத் பின் அஸ்லம் தூஸி, அஹமத்பின்ஹரப், ஹாத்திம்அஸம், பத் ஹீல் முஸ்லீ, அஹ்மத் கிஸ்ரவியா, ராபியத்துல் அதவிய்யா, ஹஸன் பஸ்ரீ.)

264. **இன்குலாப் ஜிந்தாபாத் (பகத்சிங் வரலாறு)** ; அறந்தை நாராயணன்; மு. ப. டிச. 1974; 131; சென்னை; கல்பனா பதிப்பகம்.

265. **இஸ்லாமிய வரலாற்றில் இனிய நிகழ்ச்சிகள்** ; எம். ஆர். எம், பாத்திமா; மு. ப. மே 1980; 52; சென்னை; யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.

266. **ஈசாக்கு ஆபிரஹாம் ஐயரவர்கள் ஜீவிய விருத்தாந்தம்** ; டி. பி. பாண்டியன்; 1906; 169; பாளையங்கோட்டை; சர்ச் மிஷன் பிரஸ்.

267. **ஈதலறம் பேணிய சீதக்காதி**; முகம்மது முஸ்தபா; மு. ப. செப். 1968, இ. ப. ஆக. 1971; 32; சென்னை; யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.

268. **ஈழத்துச் சித்தர்கள்**; நா. முத்தையா; 1980; —; நாவலப்பிட்டி; ஆத்ம ஜோதி நிலைய வெளியீடு.

269. **ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்** ; மு. கணபதிப்பிள்ளை; மு. ப. டிச. 1967; 7+242; சென்னை; பாரி நிலையம்; (231 பேர்.)

270. **ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்** ; சி. கணேசையர்; 1939; 15+235; ஈழம்; நா. பொன்னையா. (ஈழத்துப் பூதந்தேவனார், பரராச சேகரன், செகராச சேகரன், அரசகேசரி, பண்டிதராசர், கவிராஜர், வரதபண்டிதர், சிற்றம்பலப்புலவர், சின்னத்தம்பிப்புலவர், மயில்வாகனப் புலவர், இணுவைச் சின்னத்தம்பிப் புலவர், நெல்லைநாத முதலியார், சேனாதிராய முதலியார், சந்திர சேகர பண்டிதர், சுவாமிநாதர், சரவண முத்துப் புலவர், ஏகாம்பரப் புலவர், கார்த்திகேய ஐயர், சம்பந்தப் புலவர், கார்த்திகேயப்புலவர், முத்துக்குமார கவிராயர், சிதம்பரப் பிள்ளை (உவில்லியம்நெவின்ஸ்), அம்பலவாண பண்டிதர், பீதாம்பரப் புலவர், ஆறுமுக நாவலர், நாக நாதபண்டிதர், சங்கர பண்டிதர், கனகசபைப்புலவர், குமாரசுவாமி முதலியார், தாமோதரம் பிள்ளை, பொன்னம்பலப்

பிள்ளை, முருகேச பண்டிதர், வல்வை வைத்தியலிங்கம், கணேசபண்டிதர், திருஞானசம்பந்த உபாத்தியாயர், கணபதிப்பிள்ளை, கதிரை வேற்பிள்ளை, வேற் பிள்ளை, சபாபதி நாவலர், அம்பிகைபாகர், கதிர்காமையர், நடராசையர், திருஞான சம்பந்தப் பிள்ளை, சிவசம்புப் புலவர், வேன்மயில் வாகனப் புலவர், நமச்சிவாயப் புலவர், கந்தப்பிள்ளை ஏரம்பையர், சிவப்பிரகாச பண்டிதர், சரவண முத்துப் பிள்ளை, சிற். கைலாச பிள்ளை, வித்துவான் சிவானந் தையர், குமார சுவாமிப் புலவர், சபாரத்தின முதலியார், தி. த. கனக சுந்தரம் பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், வ. குமார சாமிப் புலவர், அம்பலவாண நாவலர், பேரம் பலப் புலவர், முத்துக் குமாரசாமிக் குருக்கள், சுவாமிநாத பண்டிதர், செவ்வந்திநாத தேசிகர், த. கைலாச பிள்ளை, ஞானப்பிரகாசர், விசுவநாத சாஸ்திரியார், கந்தப் பிள்ளை, அப்புக்குட்டி ஐயர், அருணாசலப் பிள்ளை, இராமசாமி ஐயர், இராமலிங்கையர், இராமலிங்கப் பிள்ளை, க. ஏகாம்பரம், நா. ஏகாம்பரம், கணபதி ஐயர், சின்னத்தம்பி, சந்திரசேகர பண்டிதர், சின்னக் குட்டிப் புலவர், சண்முகச் சட்டம்பியார், தொம்பிலிப்பு, நமச்சி வாயப் புலவர், நாகேச ஐயர், பிரான்சீஸ் பிள்ளை, பூலோக சிங்க முதலியார், மாப்பாண முதலியார், முத்துக் குமாரர், முருகேசையர், வெற்றிவேலர், வைத்தியநாதச் செட்டியார், வைத்தியநாத தம்பிரான், சுப்பையர், சதா சிவம் பிள்ளை, பூபால பிள்ளை, ஆறுமுகத் தம்பிரான், அருணாசல ஐயர், தாமோதரம் பிள்ளை, பொன்னுத் துரை ஐயர், சதாசிவ பண்டிதர், சோமாஸ்கந்த பண்டிதர், நாகமணிப் புலவர், மயில்வாகனப் புலவர்.)

271. **ஈழமண்டலப் புலவர் சரித்திரம்**; ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை; 1922; —; —; —.

272. **உண்மைக்கு ஓர் அபூபகர்** (றலி); முகம்மது முஸ்தபா; மார்ச் 1973, 248, சென்னை, யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ்.

273. **உத்தமர் உமர்**; ஸையித் இப்ராஹீம்; மு. ப. 1953; மூ. ப. அச். 1961; 61; திருச்சி; வளர்மதி.

274. **உமறுப்புலவர் சரிதை**; சோம சுந்தரமணியக்காரர்; 1957; —; —; —.

275. **உயர் கல்வி தந்த உத்தமர்கள்** ; அரு. சோம சுந்தரம், திரு. ப. 1975, 6+114; சென்னை; அருணா பப்ளிகேஷன்ஸ்.

(அண்ணாமலை அரசர், அழகப்ப வள்ளல், பச்சையப்பர், அவினாசி லிங்கர், தியாகராசர், எத்திராசர், இராமசாமி, சமால் முகமது, மகாலிங்கம், வீரய்யா.)

276. உயர்திரு டி.வி. சுந்தரம் அய்யங்கார் ; —; —; 16; —; —.

277. உயிர்த்த சரித்திரம் ; வேதநாயகம் சாஸ்திரியார்; —; —; —; —.

278. உரிமைக் கவிஞர் பாரதியார் ; அரசு, மு.ப. செப். 1951; 88; சென்னை; கழகம்.

279. உரை நடை வளர்த்த மூவர் ; சுவாமிநாதன்; மு.ப. ஆக. 1970; 94, சென்னை; அமுத நிலையம் லிமிடெட். (மறை மலையடிகள், திரு.வி.க, அண்ணாதுரை.)

280. உரையாசிரியர்கள் - 1 ; சு. அ. இராமசாமிப் புலவர்; 1946; 4+99; சென்னை; ஒற்றுமை ஆபீஸ் (நக்கீரர், கல்லாடர், மதுரையாசிரியர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், மயிலை நாதர், மயிலேறும் பெருமாள் பிள்ளை, சாமிநாத தேசிகர், சங்கர நமச்சிவாயப் புலவர், வைத்தியநாத தேசிகர், சிவஞான முனிவர், இராமாநுசக் கவிராயர், ஆறுமுக நாவலர்.)

281. உரைவேந்தர் பெரும் பேராசிரியர், ஔவை துரைசாமியவர் களின் வாழ்க்கைக் குறிப்பு; தி.நா. அறிவொளி;—; 20—;—.

282. உலக அறிஞர்கள்; பால்வண்ணனார், 1961 ; — ; சென்னை; —.

283. உலக இலக்கிய மேதைகள் ; செல்வ சாமிநாதன்; 1983; —;—; ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம்.

284. உலக உத்தமர்கள் ; டி. எஸ். ஜெயராமன், மு.ப. செப். 1966; இ. ப. ஆக. 1968; 88; மதுரை ; சோமு புத்தக நிலையம். (இரவீந்திரநாத் தாகூர், சி.வி. இராமன், ஆல்பர்ட் சுவைட்சர், டியூனன்ட், தியோடர் ரூஸ்வெல்ட், மேரி கியூரி, ரால்ப் பஞ்ச், உட்ரோ வில்சன்.)

285. உலக ஓவியர்கள், ஓவியங்கள்; ஆழி; 1982; —; —; சித்ரகலா.

286. உலக குத்துச் சண்டை வீரர்கள் ; ஜே. எம். சாலி, மு. ப. மார்ச் 1978; 64; சென்னை, நூர் பதிப்பகம் (ராக்கி மார் சியானோ, பிளாய்டு பேட்டர்சன், சோனிலிஸ்டன், ஜோ பிரேசியர், ஜார்ஜ்ஃபோர்மன், முகம்மது அலி, லியோன்ஸ் பிங்க்ஸ், ஜோ லூயி, ஜேம்ஸ் பிரட்டாக், ஜோ வால்காட், எஸ்ஸார்ட் சார்லஸ், ஜாக்டெம்ப்ஸி, இங்மார் ஜோஹன் சன், ஜென்னி டென்னி, கார்ல் மில்டன் பர்க்கர், மாக்ஸ்

ஷெமிலிங், சுர்னி டெரல், ஜாக் ஹார்க்கி, ஜிம்மி எல்லிஸ், ஆஸ்கார் மோனவினா, கென்நார்ட்டன்.

287. உலக சன்மார்க்கப் பெரியார்கள் ; செந்துறை முத்து; 1979; 152; சென்னை; செல்வ நிலையம். (புத்தர், இயேசு, முகம்மது நபி, இராமலிங்கர், சாரதாமணி தேவியார், காந்தி அடிகள்.)

288. உலகத் தத்துவ ஞானியர் ; வை. தட்சிணாமூர்த்தி; 1981; —; மதுரை; நாவலர் புத்தக நிலையம்.

289. உலகத் தமிழ் அறிஞர் ; வே. அண்ணாமலை; --; 95; சென்னை; அல்லயன்ஸ்.

290. உலகப் புகழ்பெற்ற பெருமக்கள் ; மா. பாலசுப்பிரமணியம்; சன 1964; 83; சென்னை; கழகம்.

291. உலகப் புகழ்பெற்ற பெருமக்கள் ; கா. சு. பிள்ளை + கா. அப்பாத்துரை; மு.ப. 1964; கழகம் (ஆகாகான், திவாலரா, ஹாவெலாக் எல்லிஸ், ஸ்டாலின், டேவிட் லாயிட், ஜியார்ஜ், ராம்சே மாக்டனால்ட், முசோலினி, காந்தி, பிராங்கிளின் டி. ரூஸ் வெல்ட், முஸ்தபா கெமால், ஆலிவர் லாட்ச், ரூதர் போர்டு, பால் இண்டன் பர்க், பெர்னாட்டு ஷா.)

